தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை—56

# பித்தரின் உள்ளம்

(THE PSYCHOLOGY OF INSANITY)

ஆசிரியர் :

**பெர்னாடு ஹார்ட்,**

C.B.E., M.D. (LOND.), F.R.C.P. (LOND.),

இலண்டன் பல்கலைக் கழகப் பேராசிரியர்,

கல்லூரி மருத்துவ மனை, தேசீய மருத்துவ மனை

என்பவற்றின் உள மருத்துவத் துறை ஆலோசகர்.

தமிழாக்கம் :

**அ. பெசன்ட் கிரீப்பர் ராஜ்,**

M.A., (PHIL.), M.A. (PSY.),

உளவியல் துறைத் தலைவர்,

அரசினர் கலைக் கல்லூரி, கோயம்புத்தூர்.

**தமிழ் வெளியீட்டுக் கழகம்**

தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—January 1965

B.T.P. No. 56

THE PSYCHOLOGY OF INSANITY

BERNARD HART

Translation

A. BESANT GREEPER RAJ

© BUREAU OF TAMIL PUBLICATIONS.

**Price Rs. 3-00**

This translation of 'THE PSYCHOLOGY OF INSANITY' by Bernard Hart, Fifth Edition is published by Arrangement with the Cambridge University Press, England.

Printed by
C. H. S. PRESS,
Madras-2.

# அணிந்துரை

(திரு. எம். பக்தவத்ஸலம், தமிழக முதலமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கி நான்கு ஆண்டுகள் ஆகி விட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ., வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவருகின்றனர். தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் மெல்ல மெல்ல மறைந்துவருகின்றன. நாடு முழுவதும் பரந்துள்ள மாணவர்களின் ஆர்வம் 'தமிழிலேயே கற்பிப்போம்' என முன் வந்துள்ள கல்வி ஆசிரியர்களின் ஊக்கம், பிறபல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி, இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே திருப்திகரமாக நடைபெற்றுவருகிறது.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக் கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல், வேதியியல் உயிரியல், வானியல், புள்ளியியல், தத்துவம் ஆகிய பல துறைகளில் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இருவகையிலும் தமிழ் வெளியீட்டுக் கழகம் நூல்களை வெளியிட்டுவருகிறது.

இவற்றுள் ஒன்றான **பித்தரின் உள்ளம்** என்ற இந்நூல் தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் **56** ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான **35** நூல்களையும் சேர்த்து இதுவரை **91** நூல்கள் வெளிவந்துள்ளன.

கணக்கிலடங்காத் தடைகளை எல்லாம் அகற்றித் தமிழன்னை கல்லூரிக் கலையாசனத்தில் அமர்ந்துள்ளாள். எனவே, இவ்வன்னையை வாழ்த்துவோமாக. 'உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை ; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெற வேண்டும் ; அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தின் பலவகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரித்தாகுக.

**எம். பக்தவத்ஸலம்**

## உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| தமிழாக்கியவரின் முன்னுரை | ... | iii |
| முதல் பதிப்பிற்கு மூல ஆசிரியரின் முகவுரை | ... | v |
| ஐந்தாம் பதிப்பிற்கு மூல ஆசிரியரின் முகவுரை | .... | vii |
| ஐந்தாம் பதிப்பிற்கு முன்னுரை | .... | xi |
| 1. உளக்கோளாற்றின் வரலாறு | .... | 15 |
| 2. உளக்கோளாறுபற்றிய உளவியல் கருத்து | ... | 22 |
| 3. உளக்கோளாற்று நிகழ்ச்சிகள் | .... | 29 |
| 4. உளச்சிதைவு | .... | 41 |
| 5. உளச் சிக்கல்கள் | .... | 54 |
| 6. உளப் போராட்டம் | ... | 68 |
| 7. ஒடுக்குதல் | .... | 76 |
| 8. ஒடுக்குண்ட சிக்கல்கள் தம்மை வெளியிடல் | .... | 82 |
| 9. புறத்தெறிதல் | ... | 94 |
| 10. பித்தரின் பேதமை | ... | 101 |
| 11. உருவெளித் தோற்றம் | .... | 112 |
| 12. போராட்டத்தின் முக்கியத்துவம் | .... | 126 |
| கலைச்சொற்கள் (ஆங்கிலம் - தமிழ்) | ... | 132 |
| (தமிழ் - ஆங்கிலம்) | .... | 141 |
| பொருட் குறிப்பகராதி | .... | 150 |
| குறிப்பகராதி | ... | 156 |

# பித்தரின் உள்ளம்

# தமிழாக்கியவரின் முன்னுரை

பேராசிரியர் பெர்னுடு ஹார்ட்டின் மூல நூல் உலகப் புகழ்வாய்ந்தது. இந் நூல் முதன்முதலாக இங்கிலாந்து நாட்டில் 1912ஆம் ஆண்டில் வெளியிடப் பட்டது. இதுவரையிலும் ஐந்து பதிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன; மொத்தம் இருபத்திரண்டு முறை இந் நூல் அச்சிடப்பட்டுள்ளது. அமெரிக்காவில்மட்டும் 50,000 பிரதிகள் விற்பனையாகி உள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உளக்கோளாறுகள் என்பது மிக நுணுக்கம்வாய்ந்த ஒரு துறையாகும். இத் தகைய கருத்துகளைப் பாமரரும் புரிந்துகொள்ளும்வண்ணம் மூலநூல் ஆசிரியர் விளக்க முன்வந்துள்ளார். இத்துணைப் புகழ்வாய்ந்த இந்த அரிய நூலைத் தமிழாக்கும் வாய்ப்புக் கிடைத்தது நான் பெற்ற பெரும்பேறு எனக் கருதுகிறேன்.

மொழிபெயர்ப்பைக் கூடியவரையிலும் பழகு தமிழில் தர முயன்றுள்ளேன். ஆயினும், பிறமொழி அறிஞரின் கருத்துகளைத் தமிழில் இயல்பான முறையில் தருவது கடினமான செயலாகும். இதில் நான் எத்துணைத்தூரம் வெற்றி பெற் றுள்ளேன் என்பதை நீங்களே முடிவு செய்யவேண்டும். மொழிபெயர்ப்பிலுள்ள குறைகளைச் சுட்டிக் காட்டுவீர்களாயின், நான் பெரிதும் கடப்பாடுடையவ னுவேன்.

இந் நூலில், நான் பயன்படுத்தியுள்ள கலைச்சொற்களைப்பற்றி ஒன்று கூற வேண்டும். கூடியவரையிலும் ஏற்கப்பட்டுள்ள சொற்களையே பயன்படுத்தி யுள்ளேன். பிற இடங்களில் பொருளின் அடிப்படையில் புதிய சொற்களைப் புனைந்துள்ளேன். கலைச்சொற்களைப் பயன்படுத்துவதில் மற்றொரு பிரச்சினையும் எழுந்தது. வழக்கிலுள்ள ஒரு சொல்லைக் கலைச்சொல்லாகப் பயன்படுத்தும்போது, பிற இடங்களில் சாதாரணப் பொருளில் அதைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டியதிருக்கிறது. உதாரணமாக, இந் நூலில், சிக்கல் என்ற சொல்லை 'Complex' என்று பொருள்படும் வகையில்மட்டுமே பயன்படுத்தியிருக்கிறேன். எனவே, 'Problem', 'Complexity' என்ற சொற்களுக்கும் 'சிக்கல்' என்பது பொருந்திவரினுங்கூட, 'பிரச்சினை', 'நுணுக்கம்' என்ற சொற்களையே பயன் படுத்தியுள்ளேன்.

பிற நோய்களைப் போன்றே பித்து என்பதும் ஒரு நோய்மட்டுமே எனவும் பித்து—சித்து நிலைகள் திட்டவட்டமாக வேறுபடுத்த முடியாத வகையில் ஒரு தொடராக அமைவன எனவும் இந் நூல் காட்ட முனைகிறது. இந் நூல் உளக் கோளாறுகளைப் பொதுவான முறையில்மட்டுமே ஆராய முற்படுகிறது. தனி நோய்களைப்பற்றி விவரமாகத் தெரிந்துகொள்ள விரும்புபவர்கள், நான் மொழி பெயர்த்து, தமிழ்நாட்டு அரசினரின் தமிழ் வெளியீட்டுக் கழகம் வெளியிட்டுள்ள 'உளநோய்கள்' என்ற நூலைப் படிக்கலாம்.

இந் நூலைத் தமிழில் உருவாக்குவதில் பலர் உதவினர். எனது முன்னாள் மாணவரும், இந்நாள் என்னுடன் உளவியல் துறையில் பணிபுரிபவருமான திரு. N. K. ஆடம், B.A., அவர்கள் பிரதியைப் படித்து, உரைநடையைச் செம்மைப்படுத்தி உதவினர். கலைச்சொல் அகராதிகளைத் தயாரித்தலிலும், அகர வரிசையை அமைத்துத் தருதலிலும் என் மனைவி திருமதி அமிர்தா பெசன்ட், M.A., M.Ed. அவர்களும், எனது உறவினர் குமாரி வசந்தா வின்ஃபிரடும் உதவினர்.

இம் முயற்சிக்குத் தமிழ் அறிஞர்களும் தமிழ் மக்களும் ஆதரவு தரவேண்டும் என்று வேண்டுகிறேன். தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு ஒன்றுமட்டுமே, பிற நாட்டு அறிஞர்களின் நூல்களைத் தமிழாக்கும் பெரு முயற்சியை வெற்றி பெறச்செய்யும் என நான் உறுதியாக நம்புகிறேன்.

அ. பெசன்ட் கிரீப்பர் ராஜ்

# முதல் பதிப்பிற்கு மூல ஆசிரியரின் முகவுரை

பித்து நோயின் உளவியல் உண்மைகளை முழுமையாக வெளியிடுவது என இந்நூல் உரிமை கொண்டாடவில்லை. இந்நாளில், பல கோட்பாட்டு மரபுகள் இருப்பதாலும், அவை தம் ஆராய்ச்சி முறைகளில் பெரிதும் வேறுபட்டு இருப்பதாலும், இதுபோன்ற ஒரு சிறு நூலில் அவற்றை அடக்கிவிட முடியாது. எனவே, பிறழ்வு உளவியல் துறையில் அண்மையில் தோன்றி, அடிப்படை முக்கியத்துவம்வாய்ந்த முடிவுகளை ஏற்கெனவே தந்துள்ளனவாகவும், இன்னும் ஆராய்வதற்கு மிகச் சிறந்த களமாக விளங்குவனபோன்று தோன்றுவனவுமான சில முன்னேற்றமான கருத்துகளை விளக்கமட்டுமே நாம் முயன்றுள்ளோம்.

இந்நூல் நிலைநிறுத்த முயலும் பொது நியதிகளைக் கூடியவரையிலும் தெளிவாகத் தரவேண்டும் என்பதற்காக, இந்நூலின் பொருளை ஓர் ஒழுங்கான முறையில் படிப்படியாகத் தர முயன்றுள்ளோம். ஆனால், ஒரு சிறு நூலில் இத்தகைய ஒழுங்கான முறையைப் பயன்படுத்துவது, விவரங்களைக் கோட்பாட்டு வடிவாகத் தரச் செய்துவிடுகிறது. எனவே, இந்நூலில் வாசகர் படிக்க இருக்கும் கொள்கைகளில் பல இன்னும் திட்டவட்டமாக நிரூபிக்கப்படாதிருக்கின்றன என்பதை வாசகர் தெரிந்துகொள்ளவேண்டியதுடன், அவற்றைப் பல மாற்றங்களுக்கும் திருத்தங்களுக்கும் இறுதியில் உள்ளாகக்கூடிய கருத்தேற்றும் கருதுகோள்கள் (Suggestive Hypotheses) என்றே கொள்ளல் வேண்டும்.

மேலும், பித்து நோய்கள் அனைத்தின் களத்தையும் இந்நூல் ஆராய முற்படுவதில்லை என்பதையும் வாசகர் தெளிவுறப் புரிந்துகொள்ள வேண்டும். மாறாக, இவற்றுள் சில மட்டுமே ஓரளவு தாறுமாறாகத் தெரிந்துகொள்ளப்பட்டுள்ளன. உளவியல் ஆராய்ச்சிகளில் அவை நல்ல பயனைத் தருகின்றன என்னும் காரணத்தைக் கொண்டே அவை பெரும்பாலும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. வருங்காலத்தில் இந்த உளவியல் முறைகள் இன்னும் அதிகமாகப் பயன்படுத்தப்படும் என்று நான் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறேன். ஆனால், ஒன்று, நாம் பெற்றுள்ள அறிவு நிலையில், இம்முறைகள் பல பித்து நோய்களில் மிகக் குறைந்த பயனுடையனவாக இருக்கின்றன என்பதை நாம் திறந்த மனத்துடன் ஏற்றாக வேண்டும். அண்மையில் பல ஆராய்ச்சியாளர்கள் தமது நூல்களில் இவற்றை அளவுமீறிப் பொதுமைக் கருத்தாகப் பயன்படுத்த முற்படுவதால், நாம் வெளியிட்ட கருத்தை இன்னும் வலிந்து கூறுகிறோம். உளச் செயல்கள் பெருமளவில் நுணுக்கம் பெற்றனவாக இருப்பதாலும், உளவியல் இன்னும் இளமைப் பருவத்திலேயே இருப்பதாலும், முன்னேற்றம் மெதுவாக மட்டுமே ஏற்படும் என்பதை நாம் உணர்ந்திருப்பது நன்று. நாளைய அறிவியல் விதிகளை நாடிச் செல்கிறோம் என்பதில் இப்பொழுது நாம் மனநிறைவு பெற வேண்டும்.

இந்நூலில், வெளியிடப்பட்டுள்ள பெருவாரியான பொது நியதிகள் வியன்னு மேதை பேராசிரியர் ஃபிராய்டிடமிருந்து பெறப்பட்டனவாகும். புதிய தனிக் கருத்துகளை வெளியிட்டதுடன், வளமிக்க சிந்தனையைப் பெற்றிருந்த இவரைப் போன்ற மற்றொருவர் பிறழ்வு உளவியல் துறையில் இதுவரையிலும் இடம் பெற்றதில்லை எனலாம். ஆயினும், நான் எந்த அளவில் அவருக்குக் கடமைப் பட்டிருக்கிறேன் என்பதை என்னுல் எளிதில் கூறிவிட முடியாது. ஃபிராயிடும், அவரைப் பின்பற்றுபவர்களும் இப்பொழுது மிகப்பெருமளவில் வெளியிட்டுள்ள கோட்பாடுகளை முழுமையாக ஏற்றுக்கொள்ள நான் முன்வரவில்லை. இவற்றுள் பல இதுவரையிலும் நிரூபிக்கப்படாதன என்றும், சரியான அடிப்படைகளின்றி எழுப்பப்பட்டன என்றும் நான் எண்ணுகிறேன். மாருக, ஃபிராயிடின் அடிப்படை யான நியதிகள் வரவரப் பெரும்பாலோரால் ஏற்கப்படுவதுடன், அவற்றிற்குச் சாதகமான ஆதாரங்களும் விரைவாகப் பெருகியவண்ண மிருக்கின்றன. இவ்வாறு போதுமான அளவில் ஏற்கப்பட்டுள்ள அவரது நியதிகளைமட்டுமே இந்நூலில் புகுத்த நான் முற்பட்டுள்ளேன்.

இந்நூலை எழுதுவதில் பல மேதைகளுடைய நூல்களை நான் பயன்படுத்தி யுள்ளேன். அவருள் சூரிச் நகர் டாக்டர் யூங், பாரிஸ் பட்டணப் பேராசிரியர் சானே, பேராசிரியர் கார்ல் பியர்சன், காலஞ்சென்ற பேராசிரியர் கிராஃப்ட் எபின் என்போரைத் தனிப்பட்ட முறையில் குறிப்பிட விரும்புகிறேன். இறுதியாக, 1908, 1909ஆம் ஆண்டுகளில் சமூகவியல் சஞ்சிகையில் வெளியான திரு. டிராட்டர் அவர்களின் 'குழு இயல்பூக்கம்' பற்றிய இரு கட்டுரை களுக்கும் நான் பெருமளவில் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல் பிரதியைத் தயாரிப்பதிலும், அச்சுப் பிரதிகளைத் திருத்துவதிலும் பெருமளவில் உதவிய டாக்டர் எட்வர்டு மபோதர் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

செப்டம்பர், 1912. பெர்னுடு ஹார்ட்

## ஐந்தாம் பதிப்பிற்கு மூல ஆசிரியரின் முகவுரை

இந்நூல் 1912ஆம் ஆண்டில் முதலாவதாக வெளியிடப்பட்டது. அதன் பின்னர், பலமுறை இந்நூல் அச்சிடப்பட்டதாயினும், மூல நூலில் தரப்பட்டிருந்த விவரங்கள் மாற்றப்படவில்லை. இப்பதிப்பிலும் அவ்விவரங்கள் மாற்றப்படவில்லை. சிறு மாற்றங்கள் புகுத்தப்பட்டிருக்கின்றன; அவையும் சில சொற்களை மாற்றுவதாக மட்டுமே அமைந்துள்ளன. எனவே, இந்நூல் 1912 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட நிலையிலேயே இன்னும் இருக்கிறது; வாசகர்களும் அந்த ரீதியில்மட்டுமே இந்நூலை மதிப்பிட வேண்டும்.

ஒவ்வோர் அறிவியல் துறையிலும் துரிதமான முன்னேற்றங்கள் ஏற்படும் இந்நாளில், இத்தகைய கொள்கையைப் பயன்படுத்துவதற்கு ஏதேனும் காரணம் இருந்தாகவேண்டும். குறிப்பாக, இந்நூற்றுண்டில் தனது தன்மையிலும் பரப்பிலும் புரட்சிகரமான வகையில் வளர்ந்துள்ள உளவியல் துறையில் இவ்வாறு செய்வதற்கு நாம் காரணம் காட்டியே ஆகவேண்டும். இந்நூலை அதன் மூல நிலையிலேயே விட்டுவைக்கத் தீர்மானித்ததற்கு மூன்று காரணங்கள் உள. முதலாவதாக, இந்நூல் எளியனவும் பொதுவானவுமான நியதிகளை மட்டுமே விளக்க முற்படுகிறது. பின்னுளில் எழுந்த முன்னேற்றங்கள் பழைய கட்டடத்தின்மேல் புதிய புதிய மாடிகளை எழுப்புவனவாக இருந்தனவேயன்றி, அடித்தளத்தைப் புதுப்பிப்பனவாக இல்லை. இதன் காரணமாக, இந்நூல் பயன்படுத்தியுள்ள நியதிகள் பாதிக்கப்படவில்லை எனலாம். இரண்டாவதாக, இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மிகச் செழுமையானதாக இருப்பதுடன், இதில் இடம்பெறும் கோட்பாட்டு மரபுகளின் எண்ணங்களில் பெரு வேறுபாடுகளும் அதிக நுட்பமும் காணப்படுவதால், நாற்பது ஆண்டுகள் சென்ற பின்னர் இந்நூலின் விவரங்களை மனநிறைவு தரும் வகையில் இன்றைய நிலைக்குச் செப்பனிடுவது இயலாத ஒன்று எனலாம். இவ்வாறு செய்ய முற்படின், ஒரு புதுப்பதிப்பை வெளியிடாது, ஒரு புது நூலையே எழுதவேண்டியதிருக்கும். மூன்றாவதாக, மூல நூலை அடிப்படையான திருத்தம் எதுவுமின்றி வெளியிட நாம் செய்த முடிவைப் பெரிதும் ஆதரிப்பதாக அமைவது, இந்நூல் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் மீண்டும் மீண்டும் அச்சிடப்பட்டுக்கொண்டிருப்பதாகும். 1912 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாயினும், இந்நூல் தனது கவர்ச்சியை இன்னும் இழந்துவிடவில்லை என்பதை இது காட்டுகிறது.

ஆயினும், மேலே நாம் தந்துள்ள காரணங்களை இன்னும் விவரமாகக் கூறுவது நன்று. 1912ஆம் ஆண்டு இந்நூல் வெளியிடப்பட்டபோது இது கொண்டிருந்த அடிப்படையான நோக்கம், பத்தொன்பதாம் நூற்றுண்டின் துவக்கத்தில் சானேயின் நூல்களிலிருந்து ஃபிராயிடு, யூங் என்பவர்களது நியதிகள்

வரையிலுமாகப் படிப்படியாக வளர்ச்சி பெற்றிருந்த 'உளவியல் கருத்து', இயல்பான உள்ளம், உளக்கோளாறு என்னும் நிகழ்ச்சிகளை விளக்க எவ்வாறு உதவிற்று என்பதைச் சித்திரிப்பதாகும். முன்னுளில் ஓரளவு வறண்ட நிலையில் உளவியலைக் கண்டிருந்த உளவியல் மாணவனுக்கு, இக்காட்சி மிக அருமையாக வும் தெளிவாகவும் புரிந்தது. இக்கருத்து, அமைப்பில் ஓரளவு எளியதாக இருந்த கருத்துகளைத் தழுவி நின்றிருந்ததுடன், சாதாரணமாகக் காணக் கிடைப்பதாகவும் மாறியிருந்தது. மேலும், ஃபிராயிடின் மேதைத்தனத்தினின்று பிறந்திருந்த அந்த இயக்க நியதிகளை, அவ்வேளையில் பகுப்பாய்வுக் கோட்பாட்டு மரபினர் அனைவரும் ஓரளவு ஒருமித்து ஏற்றிருந்தனர். ஆனுல், இந்நூல் வெளி வந்த 1912 ஆம் ஆண்டில், அக்கோட்பாட்டு மரபில் பெரிய கருத்து வேறு பாடுகள் தோன்றின. இதுவரையிலும் ஃபிராயிடின் கருத்துகளை உற்சாகத்தோடு விளக்கி வந்த யூங்கும் ஆட்லரும், அக்கருத்துகளினின்று முற்றிலும் வேறுபட்ட துடன், தமது கருத்துகளிலும் ஒருவரிடமிருந்து மற்றெருவர் வேறுபட்டனர். இறுதியில் இவ்விருவரும் முற்றிலும் வேருன தனித்தனிக் கோட்பாட்டு மரபுகளைத் தோற்றுவித்துக்கொண்டனர். ஆயினும், இவ்வேறுபாடுகள், இந்நூல் விளக்கும் எளியனவும் மேல்வாரியானவுமான கருத்துகளைவிட, ஆழ்ந்த கருத்துகளைக் காண முனைவதில் தம்முள் அடிப்படையாகச் சார்புகொண்டிருந்தன. இதனுல் இந்நூல் விளக்க முற்பட்ட கருத்துகள் குறிப்பிடத்தக்க முறையில் பாதிக்கப்படவில்லை.

மூல நூல் விவரங்களில் அடிப்படையான மாற்றம் எதுவும் செய்யப்பட வில்லையாயினும், பின்னர் வெளிவந்த பதிப்புகளில் சில சொற்கள்மட்டும் மாற்றப்பட்டுள்ளன. 'காப்பகம்' என்பதற்குப் பதில் 'உள மருத்துவ மனை,' 'பைத்தியக்காரன்' (lunatic) என்பதற்குப் பதில் 'பித்து நோயினன்' என்பதும், பல இடங்களில் 'பித்து' என்பதற்குப் பதிலாக 'உளக்கோளாறு' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதும் இந்த மாற்றங்களில் முக்கியமானவை யாகும். இந்த மாற்றங்கள் ஏன் செய்யப்பட்டன என்பதை விளக்குவது அவசியமாகிறது. முதலாவதாக, முதலாம் அதிகாரத்தில் 'அரசியல் கருத்து' என நான் ஓரளவு வலிந்து கூறியிருப்பது, 'சமூகவியல் கருத்து' என்றிருக்க லாம். இக்கருத்து 1912ஆம் ஆண்டிலேயே ஓரளவு நல்ல வளர்ச்சி பெற்றிருந்தது. இன்று அக்கருத்து இன்னும் அதிக வளர்ச்சி பெற்றுள்ளது. பிற நோயாளிகளைப்போன்றே, பித்தர்களும் ஒருவகை நோயால் வருந்துபவர்கள் என்பதும், முன்னுளில் அவர்களைப்பற்றி மக்கள் கொண்டிருந்த சார்பெண்ணங் களுக்கு ஆதாரம் எதுவும் இல்லை என்பதும் இன்று உலகெங்கனும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மக்களிடையே தோன்றியுள்ள இப்புதிய மனப்பான்மையை வலியுறுத்தும்பொருட்டே, 'காப்பகம்' என்னும் பழைய சொல்லுக்குப் பதில், பித்துநோய்பற்றிய புதிய மனப்பான்மையைத் தெளிவாகக் காட்டும் 'உள மருத்துவமனை' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளோம். காப்பகம் என்ற சொல் முதலில் நல்ல பொருளுடையதாகவே இருந்தது. ஆனுல், பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றுண்டுகளில் இச்சொல், தீய தொடர்பினைப் பெற்றது. பெருவாரியான நோயாளிகள் (பெரும்பான்மையினர்) இன்றைய உள மருத்துவ

மனைகளில் சட்டத்தால் காவலிடப்படாது, தாமாகவே விரும்பி வந்து சேருகின்றனர் என்ற உண்மை, மக்களிடையே தோன்றியுள்ள இம்மாற்றத்தை நன்கு வெளியிடுவதாக உள்ளது.

பித்தனும் நம்மைப் போன்ற மனிதனே என்பதையும், அவனிடமுள்ள உளச் செயல்கள் முற்றிலும் கோளாறடைந்தனவும், விளக்க முடியாதனவும் அல்ல; மாறாக, அவை இயல்பான உள்ளத்தின் செயல்களின் மாற்று நிலைகள் அல்லது மிகையான நிலைகள் மட்டுமே என்ற கருத்தையும் வெளியிடுவது இந்நூலின் ஒரு நோக்கமாக இருந்தது. இந்த நோக்கத்தை வெளியிடும்பொருட்டே 'பைத்தியக்காரன்' என்ற சொல்லை, அது 1912ஆம் ஆண்டில் வழக்கில் பெரும்பாலும் இல்லாதிருந்தும்கூட, நமது 1912ஆம் ஆண்டுப் பதிப்பில் அதனை வேண்டும் என்றே வலிந்து பயன்படுத்தினோம். இச்சொல் ஒரு மூட நம்பிக்கையினின்று பிறந்தது; இந்நூல் கடுமையாகச் சாட முனைந்த ஒரு பழைய மனப்பான்மையைக் கோடிட்டுக்காட்டுவது. ஆனால், பித்துப் பற்றிய எண்ணம் மிகத் தெளிவாகப் போய்விட்ட இந்நாளில், அப்பழைய கருத்தைத் தாக்கவேண்டிய அவசியமில்லாமல் போகிறது. எனவே, 'பைத்தியக்காரன்' என்ற சொல் முற்றிலும் பொருந்தாதது என்பதால், அதைப் பயன்படுத்து வதைக் கைவிட்டுள்ளோம்.

இறுதியாக, இந்நூலில் பல இடங்களில், 'பித்துநோய்' என்பதற்குப் பதில் 'உளக்கோளாறு' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளோம். நாம் ஏற்கெனவே கூறியதுபோன்று, பித்தனின் உளச்செயல்கள் இயல்பான உள்ளத்தின் செயல் களையும், சிறுதிற உளக்கோளாறுகளில் இடம் பெறும் உளச்செயல்களையும் போன்றனவே எனக் காட்டுவது—அதாவது 'பித்தில் சித்த நிலை' உண்டெனக் காட்டுவது—இந்நூலின் மூல நோக்கமாகும். இதனால், அந்நிலையில் இடம் பெறும் உளச் செயல்கள், இயல்பான உள்ளத்தில் இடம் பெறுவனவற்றி லிருந்து, சிறுதிறத்து உளக்கோளாறுகள், தீவிர வகையான பித்துநிலை என்பன வற்றில் இடம் பெறுவன வரையிலுமாகத் தொடர்ச்சியாக இருப்பினும், 'பித்து' என்ற சொல் அளவுமீறி இடம்பெறத் தலைப்பட்டது. மேலும், இந்நூலின் கருத்து களை இயல்பான உள்ளம், சிறுதிற உளக்கோளாறுகள் என்பனவற்றிற்குப் பொருத்திக் காணும்போதும் சிறப்பாக அமைகின்றன என்று பலர் சுட்டிக் காட்டினர். எனவே, பின்னர் வெளிவந்த பதிப்புகளில், பல இடங்களில் 'பித்து' என்பதற்குப் பதில் 'உளக்கோளாறு' என்னும் பொதுவான சொல்லைப் பயன்படுத்தினோம். இயல்பான நிலை, சிறுதிற உளக்கோளாறு நிலை என்பனவற் றிற்கும், பித்துநிலை திட்டவட்டமான பித்துநோய்நிலை என்பனவற்றிற்கும் இடையே வேறுபாடுகளைத் திட்டவட்டமாக வரையறுத்துக் காட்ட இயலாது என்பதையும், இயல்பான நிலை ஒருபுறமும், பித்துநிலை என்பது மறுபுறமுமாகத் தொடர்ச்சியாகமட்டுமே அமைகின்றன என்பதையும் வலியுறுத்திக் காட்டவே இவ்வாறு செய்துள்ளோம். இதனை இப்புதிய பதிப்பிலும் பின்பற்றியுள்ளோம்.

அது தோன்றிய காலத்தினின்று, இந்நூல் 1912ஆம் ஆண்டு முதலில் வெளியிடப்பட்டிருந்த நிலை வரையிலும் உளநோய்க்கூறு இயலின் வரலாற்று வளர்ச்சியை விளக்குவதை நோக்கமாகக் கொண்ட முன்னுரையை நான்காம் பதிப்பில் சேர்த்திருந்தோம். இந்நூல் எந்த அடிப்படைகளைக் கொண்டு எழுதப் பட்ட என்பதைக் காட்டும்பொருட்டே அதனைச் சேர்த்தோம். அந்த முன்னுரையின் பெரும் பகுதி, ஒருசில மாற்றங்களோடும், இந்நூல் வெளியான பின்னர், இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப்பற்றிய சில கருத்துகளை அதிகமாகக் கொண்டும் இந்தப் பதிப்பிலும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஜூன், 1956. பெர்னுடு ஹார்ட்

# ஐந்தாம் பதிப்பிற்கு முன்னுரை

உளநோய்க்கூற்றியலின் (Psychopathology) வரலாற்றினை, அதன் துவக்க காலத்தினின்று 1912ஆம் ஆண்டில் அது வகித்த நிலை வரையிலும், பொதுவான முறையில் இம்முன்னுரை தர முற்படுகிறது. இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ள விதிகள், உளவியலில் வகிக்கும் பங்கினை உரிய இடங்களில் வாசகர் அறிந்து கொள்ள உதவும் நோக்குடன் இம் முன்னுரையைத் தருகிறோம். இதன் காரணமாக, ஒரு முன்னுரையில் அடங்க வேண்டியதைவிட, அதிகப்படியான பல விவரங்களை இம் முன்னுரை தர முற்படுகிறது. எனவே, உளவியலில் பயிற்சியில்லாத வாசகர்கள், இதனை முதலில் படிப்பதைவிட, நூலைப்படித்து முடித்த பின்னர் படித்தால், அது பயனுடையதாகவும் இன்னும் நன்றாக விளங்குவதாகவும் இருக்கக்கூடும்.

### சானேக்கு முன்னர் உளநோய்க்கூற்றியலின் வளர்ச்சி

உளநோய்க்கூற்றியல் என்பது உளவியல் விதிகளையும் நியதிகளையும் கொண்டு உளக்கோளாற்றுப் பிரச்சினைகளை விளக்க முற்படும் அறிவியலாகும். பிற அறிவியல்களோடு ஒப்பிடுமிடத்து, இஃது அண்மைக்காலத்தில் தோன்றியது எனலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அஃது இருக்கவில்லை எனலாம். மெஸ்மரும் (Mesmer) பிற கவர்ச்சியாளரும் தோற்றுவித்த குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சி, இதற்கு நூறு ஆண்டுகட்கு முன்னரே பெருமளவில் இத்துறையில் ஆர்வமூட்டியிருந்தது. ஆனால், பின்னர் தோன்றிய ஆராய்ச்சியாளர்கள், இந்நிகழ்ச்சிகள் காந்தங்களால் (magnets) தோன்றுவன அல்ல எனவும், அவை இயக்குநர் (operator) தரும் கருத்தேற்றங்களால் (suggestions) மட்டுமே தோன்றுகின்றன எனவும் நிரூபித்தனர். இக்கருத்தேற்றங்கள் ஓர் உளநிலையைத் தோற்றுவிக்கும் காரணிகள் என்பது தெளிவாயிற்று. இதன் மூலமாக உளவியல் காரணங்கள் திட்டவட்டமான மாற்றங்களை உடலிலும் உள்ளத்திலும் தோற்றுவிக்கக்கூடியன என்பது தெரியவந்தது. ஆயினும், சார்கோட்டின் (Charcot) காலம் (1825-93) வரையிலும் இக்கருத்தினை நோய்பற்றிய பிரச்சினைகளுக்குப் பயன்படுத்தமுடியும் என்பது அறியப்பட்டிருக்கவில்லை. சில கோளாறுகள், எண்ணங்களின் (ideas) செயல்களால்மட்டுமே எழுகின்றன என்னும் கருத்தை முதலில் வெளியிட்ட பெருமை சார்கோட்டையே சாரும். அவரது இக்கூற்றே இன்றைய உளநோய்க்கூற்றியலின் அடிப்படை எனலாம். இவரது கூற்றைத் தொடர்ந்து பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. அவை, ஹிஸ்டீரியா (Hysteria), உடல் உளமீச்சோர்வு நிலை (Neurasthenia), இன்னும் இதை ஒத்த நிலைகள் என்பனவற்றை உள்ளடக்கும் செயல் சார்ந்த நரம்புக்கோளாறுகள் (functional nervous disorders) எனப்படுபவைபற்றிய நமது அறிவை மிக வேகமாக விரிவடையச் செய்தன.

இவ்வகை நோய்களைத் தோற்றுவிப்பதில் பல்வேறு வகையினவான உளக்காரணிகள் தலையாய பங்கு வகிக்கின்றன என்பது விரைவில் தெரிந்துகொள்ளப் பட்டபோது, அவற்றின் பங்கினைத் திட்டவட்டமாகக் குறிப்பிடும் முயற்சி ஒன்று தோன்றியது. பங்குபெறும் உளக்காரணிகளுள், கருத்தேற்றத்திற்கு முக்கியமான இடம் தரப்பட வேண்டும் என்பது தெளிவாயிற்று. அதாவது, நோயாளியின் உள்ளத்தில் சில எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் வேரூன்றச்செய்வதிலும், அதன் விளைவாகப் பல்வேறு அறிகுறிகள் (symptoms), உலைவுகள்(disturbances) என்பனவற்றைத் தோற்றுவிப்பதிலும் கருத்தேற்றம் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஆயினும், கருத்தேற்றம் என்பது மிகவும் தெளிவற்றதும் பொதுமையானதுமான செயலாகையால், நுணுக்கமிக்க கோளாறுகளை நல்ல முறையில் அதனுல் விளக்க முடிவதில்லை. எனவே, இக்கோளாறுகளின் நிகழ்வு (incidence), தன்மை (nature) என்பனவற்றை இன்னும் தெளிவுபடுத்தக்கூடியதும், கருத்தேற்றம் எவ்வாறு பலன் தருகிறது என்பதை விளக்குவனவுமான புதிய உளவியல் விதிகளைக் காண ஆராய்ச்சியாளர்கள் முனைந்தனர்.

## சானேயின் சாதனை

'உளச்சிதைவு'(dissociation) பற்றிய தமது கருத்தினைக்கொண்டு, சானே (Janet) முதன் முதலில் இவ்வகையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காட்டினுர். இந்நூலின் நான்காம் அதிகாரத்தில் இக்கருத்து விளக்கப்பட்டுள்ளது. சென்ற நூற்றுண்டின் இறுதியில் நடத்தப்பட்ட சிறப்பான பல ஆராய்ச்சிகளினின்று, இக் கருத்துத் தோற்றுவிக்கப்பட்டது. உளநோய்க்கூற்றியலின் வளர்ச்சியில், இக் கருத்து அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த ஓர் எல்லைக்கல்லாக அமைகிறது. நனவுநிலை (consciousness) என்பது எப்பொழுதும் சீரானதாக ஒரே ஓடையாக மட்டுமே இருக்கவேண்டியதில்லை எனவும், சில வேளைகளில் அது தனித்தனியாகச் சுயமாக இயங்கும் பல பகுதிகளாகச் சிதைவுற முடியும் எனவும், இவ்வாறு தோற்றுவிக்கப்படும் உளச்சிதைவு எண்ணிறந்த நிகழ்ச்சிகளை விளக்கக்கூடியது எனவும் சானே காட்டினுர். மேலும், ஹிஸ்டீரியா, பிற கோளாறுகள் என்பனவற்றில் மட்டுமன்றி, நமது அன்றுட உளவாழ்விலுள்ள பல செயல்களையும் அதைக் கொண்டு விளக்க முடியும் எனவும் அவர் காட்டினுர். பல நிகழ்ச்சிகளைப் புரிந்து கொள்ள மிகப்பெருமளவில் உதவும் ஒரு கருவியாக இக்கருத்து அமைந்தாலும், இக்கருத்தால் நம்மை ஓரளவு அதிகதூரம் மட்டுமே இட்டுச்செல்ல முடியும். இந்த உளச்சிதைவுகள் ஏன் எழுகின்றன என்ற மற்றெரு கேள்வி இக்கருத்தினின்று இயல்பாக எழுகிறது. உளச்சிதைவுபற்றிய இக்கருத்து அக் கேள்விக்குப் பதிலிறுப்பதில்லை. உள்ளத்தின் இயக்கச்சக்திகளை நாம் அறிந்தால் மட்டுமே இக்கேள்விக்கு விடை காணமுடியும். அஃதாவது, உளச்செயல்கள் என்னும் பல நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கும் சக்திகளையும், அவை செயலுறுவதற்குக் காரணமான விதிகளையும் நாம் அறியும்போது மட்டுமே இக்கேள்விக்கு விடை காணமுடியும்.

## ஃபிராயிடின் பங்கு

உள இயக்கக் கண்ணோட்டத்தினின்று தொடர்ச்சியான கருத்தை வெளியிட முதன் முதலாக முயன்றவர் ஃபிராயிடு (Freud) ஆவர். ஆயினும், இவர் வெளியிட்டுள்ள பெருவாரியான கருத்துகளின் திட்டவட்டமான பயனும் நம்பிக்கையும் இன்னும் ஐயத்திற்கு உரியனவாகவும், விவாதத்திற்கு இடமளிப்பனவாகவும் விளங்கினும், இன்றைய உளநோய்க்கூற்றியலில் இவர் தன்னிகரற்றஅறிஞராகவே விளங்குகிறார். இந்நூலின் இறுதி அதிகாரங்களில் விளக்கப்பட்டுள்ள நியதிகளில் (principles) பெரும்பான்மையானவை இவரால் வெளியிடப்பட்டனவாகும். எஞ்சியுள்ள நியதிகளும், இம்மேதையின் புதிய கருத்துகளினின்று தோற்றுவிக்கப்பட்டனவே. ஆயினும், இந்நூலில் அடங்கியுள்ள பொருளைக் காணும் வகையிலும், நோயைக் குணப்படுத்தும் முறையிலும், இந்நூல் அது முதலில் வெளியிடப்பட்ட காலத்திலேயே, ஃபிராயிடு பின்பற்றிய வழியினின்று பல முக்கியமான நிலைகளில் வேறுபட்டிருக்கிறது. ஃபிராயிடு பின்னர் எழுதிய நூல்களில் இன்னும் புதிய கருத்துகள் வெளியிடப்பட்டு, இன்னும் புதிய கொள்கைகள் அவரது பழைய படைப்பினோடு சேர்க்கப்பட்டிருப்பினும், அந்நூல்கள் இவ்வேறுபாடுகளையும் வலியுறுத்தத் தலைப்பட்டுள்ளன. இன்றைய உளவியலில் ஃபிராயிடின் கோட்பாடுகள் (doctrines) மிக முக்கியமான பங்கு வகிக்கின்றன. மேலும், உளக்கோளாற்றைப்பற்றி அறிய அவரது கருத்துகள் நமக்கு உதவும் என்பதோடுகூட, உளக்கோளாறு பற்றிய பிற கருத்துகளினின்று தனித்து நிற்கும் தன்மை வாய்ந்தனவாகவும், தனது சொந்த முற்கோள்களையும் (postulates) விதிகளையும் கொண்டமையும் ஒரு முழு சிந்தனை அமைப்பாகவும் அவை இருப்பதால் அவற்றை அறிந்திருப்பது தேவையாகும். மேலும் 1912ஆம் ஆண்டில் இந்நூல் எந்த வகையிலும், அளவிலும் ஃபிராயிடின் கருத்துகளினின்று வேறுபட்டிருந்தது என்பதையும், 1912ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஃபிராயிடின் கருத்துகள் அடைந்துள்ள வளர்ச்சியையும் வாசகர் தெரிந்திருக்கவேண்டும். வாசகர் இவற்றை அறியும் பொருட்டு, ஃபிராயிடின் கருத்துகளை அவற்றின் வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இங்குச் சுருக்கமாகத் தொகுத்துத் தர முற்படுகிறோம். ஆனால், நாம் தரும் விவரம் போதியதாக இருக்கமுடியாது என்பது திண்ணம். எனவே, ஃபிராயிடின் கருத்துகள்பற்றிய பிற நூல்களைப் பயின்று இத்துறைபற்றிய தமது அறிவை வாசகர் பெருக்கிக்கொள்வர் என நம்புகிறோம்.

## ஃபிராயிடின் கருத்துகளின் தோற்றம்

1880ஆம் ஆண்டில் வியன்னவைச் சார்ந்த ஜோசப் புருவர் (Joseph Breuer) என்பார் ஒரு ஹிஸ்டீரியா (Hysteria) நோயாளியை ஆராய்ந்தார். அந்நோயாளிக்கே தெரியாதிருந்த சில நினைவுகளின் காரணமாகவே அவரிடம் காணப்பட்ட அறிகுறிகள் தோன்றியிருந்தன எனவும், இந்நினைவுகளை மீண்டும் நோயாளியின் நனவில் இடம்பெறச் செய்தபோது அவரது நோய் நீங்கிற்று எனவும் புருவர் அறிந்தார். தம் கண்டுபிடிப்பில் தொடர்ந்து ஆராய்ச்சி செய்ய

முற்பட்ட புருவரோடு, ஃபிராயிடு கூட்டுச்சேர்ந்தார். அந்த வேளையிலிருந்து, ஃபிராயிடு தமது பெயரோடு இன்று தொடர்புபடுத்திக் காணப்படும் கொள்கைகள் - நடைமுறைப் பயன்கள் - என்னும் பெரு மாளிகையைப் படிப்படியாக, ஆனால் தொடர்ச்சியாக எழுப்பினர்.

தொடக்கத்திலிருந்தே சில அடிப்படை நியதிகள் வெளிப்படையாகவே காணப்பட்டன என்பதை நாம் காணலாம். உள்ளத்தில் நனவினைத் தவிர பிறவும் இடம் பெற்றன என்பதும், நனவினின்று பிரிந்தும் நனவுக்கு எட்டாத நிலையிலும் சில நினைவுகள் தனியாக நின்று விளைவுகளைத் தொடர்ச்சியாகத் தோற்றுவிக்க முடியும் என்பதும் இவற்றுள் முதல் நியதியாகும். எனவே, உள்ளத்தில் நனவுச் செயல்களோடு நனவிலிச் செயல்களும் இடம் பெறுகின்றன. இரண்டாவதாக, நனவிற்குப் புறமாக நிற்கும் நினைவுகளின்மேல் அவை நனவில் தோன்றிவிடாவண்ணம் சிறப்புறத் தடைசெய்யும் ஏதேனும் சக்தி பயன்படுத்தப் படுதல் வேண்டும். ஏனெனில், சாதாரணமான முறைகளின்மூலமாக அவற்றினை நினைவுகூர முடிவதில்லை. இவ்வாறு திறம்பட இயங்கும் சக்தி, தடை (resistance) எனப்பட்டது. ஒதுக்கப்பட்ட நினைவுகள் நனவில் நுழைந்துவிடாவண்ணம் தடுக்கும் சக்தியே, நினைவுகள் அவ்வாறு தடுக்கப்படுவதற்கு மூலகாரணமாக இருந்திருக்கவேண்டும் என்ற ஊகம் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே இருக்கிறது.

இவ்வாறு நினைவுகள் ஒடுக்கப்படுவதை 'ஒடுக்குதல்' (repression) என்பர். இஃது எவ்வாறு தோன்றுகிறது என்பதையும், எவ்வாறு நிலைநிறுத்தப் படுகிறது என்பதையும் நிர்ணயிப்பது அடுத்தபடியாக அமைந்தது. உள்ளத்தில் முரணான இரண்டு விழைவுகள் (strivings) இடம் பெறுவதாலும், இந்தப் பொறுக்கமாட்டாத நிலையை நீக்க, உள்ளம் இவற்றில் ஒன்றை நனவினின்று நீக்க முற்படுவதாலுமே ஒடுக்குதல் தோன்றுகிறது என ஆராய்ச்சிகளின் வாயிலாக ஃபிராயிடு கண்டார். வெளியேற்றப்படும் விழைவு பின்னர் உள்ளத்தின் நனவிலிப் பகுதிகளில் இடம்பெறுகிறது. அங்கும் அது செயல் திறன்கொண்டே இருக்கிறது. ஆயினும், அது நனவு நிலையில் நேரடியாகத் தோன்றமுடியாது. எனவே, ஹிஸ்டீரியாவில் காணப்படும் நிலையைக் கீழ்வரும் வழியில் நாம் சித்திரிக்கலாம். ஹிஸ்டீரியா அறிகுறிகளான வாதம் (paralyses), உடலின் உணர்விழப்பு (anaesthesia) என்பன நனவிலிநிலையில் நிற்கும்; ஆனால் செயல் திறனுடைய உளக்காரணிகளால் தோற்றுவிக்கப்படுகின்றன. இக்காரணிகள் உள்ளத்திலுள்ள பிற சக்திகளோடு முரண்பட்டு இருந்ததன் காரணமாகவே அவை நனவிலி நிலையை அடைந்தன. இதன் காரணமாகக் கட்டாயமாகத் தோன்றியிருக்கக்கூடிய போராட்டத்தைத் தவிர்க்கும் ஓர் உபாயமாக அவை நனவினின்று ஒடுக்கப்பட்டன. நோயில் காணப்படும் அறிகுறிகள், உள்ளத்தில் இடம்பெற்றிருந்தும் நனவினுள் அனுமதிக்கப்படாதிருந்த ஒரு விழைவினை மறைமுகமாகவும் திரிக்கப்பட்ட முறையில் வெளியிடுவனவாகவும் அமைகின்றன. ஒடுக்கும் சக்திகளின் காரணமாகவே விழைவு திரிக்கப்படுகிறது. எனவே, ஒடுக்கப்பட்டதற்கும், ஒடுக்கும் சக்திகளுக்கும் இடையேயான இடைவினையின் (interaction) முடிவாக அறிகுறிகள் தோன்றுகின்றன எனலாம்.

இந்த இடைவினை பல வழிகளில் நடைபெறுவது விவரமாக ஆராயப்பட்டு அதினின்று பல உளநுட்பச் செயல்கள் (mechanisms) தோற்றுவித்துக் கொள்ளப்பட்டன. இவை உளச்சக்திகள் எவ்வாறு அறிகுறிகளைத் தோற்று விக்கக் காரணமாகின்றன என்பதை விளக்கும். இந்நூலில் எட்டாம், ஒன்பதாம் அதிகாரங்களில் இவற்றுள் பல உளநுட்பச் செயல்கள் விளக்கப்பட்டுள்ளன.

மேலும் தாம் ஹிஸ்டீரியாவில் கண்ட உளச்செயல்கள், பலவகையான நரம்புக்கோளாறுகள், உளக்கோளாறுகள் என்பனவற்றில் காணப்படும் அறிகுறி களுக்கும் காரணமாக அமைகின்றன எனவும், அவற்றைக் கொண்டு அன்றாட வாழ்வில் இடம்பெறும் பல உளநிகழ்ச்சிகளை விளக்கமுடியும் எனவும் ஃபிராயிடு கண்டார். குறிப்பாக, கனவுபற்றிய ஆராய்ச்சிகள் இவ்வகையில் குறிப்பிடத் தக்க பயன் தருவனவாக இருந்ததுடன், அவற்றின் அமைப்பும் வளர்கின்ற முறையும் நரம்புநோய் அறிகுறிகள் தோன்றுவதையே மிக ஒத்து அமைகின்றன எனக் கண்டுகொள்ளவும் உதவின. இந்தக் கண்டுபிடிப்பு நடைமுறையில் அதிகப் பயனுடையதாக இருந்தது. ஒரு நோயாளியின் கனவுகளை ஆராய்வதன் மூலம், அவன் உள்ளத்தில் இயங்கும் சக்திகளின் தன்மையை ஆராய்ச்சி யாளரால் கண்டுகொள்ள முடிகிறது. எனவே, நோயாளியைக் குணப்படுத்து வதற்குத் தேவையாகும் உண்மைகளைக் கண்டுகொள்ள இம்முறையைப் பயன் படுத்தமுடியும்.

மனித உள்ளத்தில் நனவுமட்டுமே இடம்பெறுவதில்லை எனவும், அம் மனிதனுக்கு முற்றிலும் தெரியாத உளச் செயல்களும் இடம்பெறுகின்றன எனவும், நனவிலுள்ள பிற செயல்கள் இவற்றிலும் உண்டு எனவும் ஃபிராயிடின் கொள்கைகள் துணிபுகொள்கின்றன என நாம் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். நனவிலி உள்ளம் இருக்கிறது என்ற தமது துணிபை ஃபிராயிடு விரிவுபடுத்தி, உள அமைப்புப்பற்றிய ஒரு புதுக்கருத்தையே அவர் தோற்றுவித்தார். மனித உள்ளத்தில், நனவு, பின் நனவு (fore-conscious), நனவிலி என்னும் மூன்று பகுதிகள் உள்ளன என்று அவர் கருதினார். நனவு உள்ளத்தில் இடம் பெறுகின்றவற்றையே நனவு என்றசொல் சாதாரணமாகக் குறிப்பிடுகின்றது. பின் நனவுப்பகுதியில் இடம்பெறும் செயல்கள் அவ்வேளையில் நனவில் இடம் பெறாவிடினும், நினைவுகூர்தல் என்ற எளிய செயலைப்புரிந்த உடனே நனவில் தோன்றிவிடும். நனவிலியில் இடம் பெறும் உளச்செயல்கள் அவ்வேளையில் நனவில் இடம்பெறாதிருப்பதுடன், சாதாரண முறைகளைப் பயன்படுத்தி அவற்றை நனவில் கொண்டுவிடமுடியாது. நனவிற்கும் பிற பகுதிகளுக்கும் இடையே ஒரு தடுப்பு (barrier) உண்டு. இதன் காரணமாகப் பிறபகுதிகளில் உள்ளன நேரடியாக நனவில் புகமுடியாது. ஆனால், அவை மாற்றமும் திரிபும் பெறுமாயின் நனவிலிச் செயல்கள் அத்தடுப்பின் மூலமாக நனவில் புகுந்துவிட முடியும். பிற பகுதிகளிலுள்ளவை நனவிலியில் புகுவதுவே ஒடுக்குதலாகும். நாம் சிறிது முன்னர் விவரித்த தடுப்பு, எதிர்க்கும் சக்தியாகவும், உளச்செயல்களைத் திரிக்கும் ஊடகமாகவும் (medium) விளங்குகிறது. அறிகுறிகள் தோன்றும் விதத்தை நாம் விளக்கியபோது, இதனைப்பற்றியும் அறிந்துள்ளோம்.

கனவுகள், நரம்புக்கோளாற்று அறிகுறிகள் என்னும் நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கும் வகையில் உள்ளத்தில் இடைவினை நிகழ்த்தும் சக்திகள் இயங்கும்வகைகளைக் காணமுற்பட்ட ஃபிராயிடு, இச்சக்திகள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதையும் அவற்றின் தன்மையையும் ஆராய வேண்டியதாயிற்று. பால் இயல் பூக்கங்களினின்று (sex instincts) பிறக்கும் சக்திகள் அங்கு இப்பொழுதும் இடம்பெற்றிருத்தலைக் கண்டார். அந்த உண்மைகளை விளக்கும்பொருட்டு அவர் தமது விரிவான பால் கொள்கையைப் படிப்படியாகத் தோற்றுவித்தார். இறுதியில் இக்கொள்கையே அவரது பிற கொள்கைகளுக்கும் மையமாயிற்று.

முதிர்ந்தவரிடம் நாம் காணும் பால்தன்மை என்பது ஒரு நீண்ட பரிணமச் செயலினது (process of evolution) கடைசி நிலை எனவும், இப் பால்தன்மை உண்மையில் குழவிப் பருவத்திலிருந்தே ஆரம்பமாகிறது எனவும் ஃபிராயிடு கருதினர். பரிணமச்செயலின்போது இப் பால்தன்மை பெரு மாற்றங்களுக்கு உள்ளாவதன் காரணமாகவே, அடிப்படையில் உந்து சக்தி அல்லது லிபிடோ (libido) ஒரே மாதிரியாகவே எப்பொழுதும் இருப்பினும், முதிர்ச்சிப் பருவத்துப் பால் வெளியீடுகள் குழந்தைப்பருவப் பால் வெளியீடுகளினின்று முற்றிலும் வேறுபட்டு அமைகின்றன. துவக்க நிலைகளில் லிபிடோ தனியவனை நோக்கியே திருப்பி விடப்பட்டுள்ளது. பின்னர் அது வெளிப் பொருள்களிடமும் திருப்பி விடத்தக்கதாக இருக்கிறது. பொதுவாக, பெற்றோரில் ஒருவரே இத்தகைய முதல் வெளிப்பொருளாக விளங்குகிறர். அதுவும் எதிர்பாலினரான பெற்றோரே பெரிதும் இவ்வாறு இடம்பெறுகின்றனர். இன்னும் சிறிது நாட்கள் சென்ற பின்னர்அம்மனிதனது பாலினரான வேறு ஒருவரிடம் லிபிடோ செலுத்தப்படுகிறது. இறுதிக்கட்டத்தில் மட்டுமே வேற்றுப்பாலினர் ஒருவரிடம் லிபிடோ செலுத்தப்படும் முதிர்ச்சிபெற்ற இயல்பான மனிதனிடம் காணப்படும் தன்மை தோன்றுகிறது. இவ்வாறு ஒரு மனிதரின் லிபிடோ பல நிலைகளைத் தொடர்ச்சியாகக் கடந்து செல்கிறது என ஃபிராயிடு கருதினர். அந்நிலைகளை முறையே தற்காலநிலை (Autoerotic Stage), பெற்றோர்நிலை (Parental Stage), தற்பால் நிலை (Homo) sexual Stage), எதிர்பால் நிலை (Heterosexual Stage) என்பர். அம்மனிதனிடம் லிபிடோ இவ்வாறு வளர்ச்சிபெற்ற வேளையில், அவ்வளர்ச்சி நிலைகளோடு தொடர்புகொண்ட உடற்பகுதிகளில் லிபிடோ மாறிமாறி அமைந்தவண்ணமாக இருக்கிறது.

இந்த ரீதியில் லிபிடோ விரைவான வளர்ச்சி அடைவது பல வழிகளில் பாதிக்கப்படலாம் என ஃபிராயிடு நம்பினர். லிபிடோவின் வளர்ச்சி பாதிக்கப்படுமாயின், நெறிக்கோணலும் (perversion), கோளாறுகளும் தோன்றும் எனவும் அவர் நம்பினர். தற்பால் பருவத்திற்கு மேற்பட்டு இவ்வளர்ச்சி ஏற்படாதிருக்குமாயின் ஒருவகையான பால் நெறிக்கோணல் காணப்படும். லிபிடோ ஒரு நிலையினின்று அடுத்த நிலைக்குச் செல்வது முழுமையாக நிறைவேருது, லிபிடோ முந்தைய பொருளோடு ஓரளவு தொடர்புகொண்டு அல்லது 'நிலைத்து' (fixated) நின்றும், ஓரளவு இயல்பான முதிர்ச்சி பெற்ற மனிதனது பயனை

நோக்கி முன்னேறவும் செய்யுமாயின், ஒரு போராட்ட நிலை (state of conflict) தோன்றும். இப்போராட்ட நிலையில் லிபிடோவின் ஓரளவே வளர்ச்சி பெற்ற பகுதிகள் நனவிலியினுள் ஒடுக்கப்படும்; இதன் காரணமாக நரம்புக் கோளாறு தோன்றும்.

பால் இயல்பூக்கங்களினின்று தோன்றும் சக்திகள் போராட்டங்களிலும் கனவுகள், நரம்புக் கோளாறுகள் என்னும் நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கும் இடைவினைகளிலும் கண்டிப்பாக இடம்பெறுகின்றன என ஃபிராயிடு கண்டார் என நாம் கூறியுள்ளோம். லிபிடோவின் செயல் அந்நிகழ்ச்சிகளில் எல்லாம் இடம் பெறுகிறது என நாம் அதனை இப்பொழுது மாற்றிக் கூறலாம். ஆனால், வெளிப்படையாக முற்றிலும் வேறானவையாகத் தோன்றும் சக்திகளும் அவற்றில் இடம் பெறுகின்றன என்பதையும் ஃபிராயிடு கண்டார். இச்சக்திகள் உயிரியைக் (organism) கட்டிக்காக்கும் பகுதியை அல்லது ஆளுமையைச் (personality) சார்ந்தவையாகும். இவற்றின் மொத்த தொகுப்பையே 'அகம்' (ego) என்பர். அகத்தின் முக்கியமான செயல் தனியவனை அவனது சூழ்நிலைக்கும் (environment) உண்மை நிலைக்கும் (reality) ஏற்பத் தக அமைத்து (adapt) ஒழுகச் செய்வதாகும். இது நடைபெற வேண்டுமாயின் கட்டுப்பாடும், உள்தடைகளும் (inhibitions) தேவையாகிறது. இதனால் அகம் லிபிடோவைத் தடையின்றி இயங்க அனுமதிப்பதில்லை. நரம்புக்கோளாறு அறிகுறிகளுக்கு உள்ளீடாக அமையும் போராட்டங்கள், உண்மையில் அகம், லிபிடோ என்பனவற்றிற்கிடையே நிகழும் போரின் விளைவாகவே அடிப்படையில் எழுகின்றன என ஆராய்ச்சிகள் காட்டின. லிபிடோவை ஏதேனும் ஒரு வகையில் கட்டுப்படுத்தும் திறனை அகம் இழக்கும்போதே நரம்புக்கோளாறுகள் தோன்றுகின்றன என ஃபிராயிடு மற்றொரு வேளையில் விளக்கியுள்ளார். இந்த நிலை எழுமாயின், அப்போது போராட்டமும் கண்டிப்பாகத் தோன்றும். இப்போராட்டத்தைத் தவிர்ப்பதற்காக, அம்மனிதன் ஒடுக்குதலில் ஈடுபடுவான். இதனால் நாம் ஏற்கெனவே வர்ணித்துள்ளபடி 'அறிகுறிகள்' தோன்றும்.

தன் கொள்கைகளை உண்டுபண்ணுவதற்கு ஃபிராயிடு பயன்படுத்திய ஆராய்ச்சி முறையைப்பற்றி நாம் சிறிது தெரிந்து கொள்ளவேண்டும். அவரது முழுப்படைப்பிற்கும் அடிப்படையாக அமைவதனை 'உளப்பகுப்பாய்வு' (Psychoanalysis) முறை என்பர். தம் நோயாளிகளிடம் காணப்பட்ட அறிகுறிகளுக்கு நனவிலி உளச்செயல்களே காரணம் என ஃபிராயிடு நம்பினர். அவ்வுளச் செயல்களைக் கண்டுகொள்ளப் பயன்படுவதற்காகவே இம்முறை தோற்றுவிக்கப்பட்டது. இவ்வுளச்செயல்களை நனவிலி என்னும் கருதுகோளால் அவர் தோற்றுவித்திருந்தால், இவற்றை ஆராய்ச்சி அல்லது உற்றுநோக்கல் (observation) என்னும் முறைகளால் கண்டுகொள்ள இயலாது. இதற்கென ஒரு தனி முறை உண்டுபண்ணப்படுவது தேவையாயிற்று. தன் முன்னைய ஆராய்ச்சிகளில் இதற்கென ஃபிராயிடு அறிதுயிலைப் (hypnotism)பயன்படுத்தினர். தனியவனுக்கு முற்றிலும் தெரிந்திராத உளச்சாதனங்களை அறிதுயிலால் காணமுடியும் என்பது

நெடுநாட்களாகவே தெரிந்திருந்தது. ஆயினும், அறிதுயிலைவிட இன்னும் பரவலாகப் பயன்படுவதும் அதைவிட வளமிகுந்ததுமான ஒரு முறையைக் கொண்டு நனவிலிச் செயல்களைக் காணமுடியும் எனப் பின்னர் தெரிந்துகொள்ளப் பட்டது. தன் சிந்தனைகளைக் கட்டுப்படுத்தவோ அல்லது அவற்றின் போக்கினை வழிப்படுத்தவோ முயலாது,நோயாளி தடையின்றிப் பேசவேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்படுவாரெனின், அவரது பேச்சை நனவிலிக் காரணிகள் ஓரளவு நிர்ணயிக்கும் எனவும், அச்சிந்தனைகளின் தன்மையினின்று அவற்றிற்குக் காரண மான நனவிலிச் செயல்களைத் தேர்ச்சியுடைய ஆராய்ச்சியாளர் தெரிந்துகொள்ள முடியும் எனவும் ஃபிராயிடு கண்டார். இம்முறையினையே ஃபிராயிடு ‘ உளப்பகுப் பாய்வு’ என்றார். இம்முறையை அவர் படிப்படியாக விரிவுபடுத்தி, உளக் கோளாறுகளை ஆராயவும் குணப்படுத்தவும் உதவும் ஒரு கருவியாக அதனை மாற்றினார். அதைப் பயன்படுத்துவதையும் அதன் மூலம் பெறப்பட்ட உண்மை களைத் தழுவியுமே அவரது முழுச்சாதனையும், பின்னாளில் அவர் வெளியிட்ட எல்லாக் கொள்கைகளும் அமைகின்றன.

ஃபிராயிடின் முன்னைய ஆராய்ச்சிகள் அனைத்தும் பெரும்பாலும் நரம்புக் கோளாறுகளைப்பற்றியனவாகவே இருந்தன. ஆனால், அக்கோளாறுகளில் காணப்படுவதை நெருங்கி ஒத்தவையும் உளச்செயல்கள் சிலவகையான பித்து களிலும் (insanity) காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார். அப்போது ஃபிராயிடின் சீடராக இருந்து, பின்னாளில் முற்றிலும் வேறான ஒரு சிந்தனைக்கோட்பாட்டு மரபினைத் தோற்றுவித்தவரான யூங் (Jung) இத்துறையில் தொடர்ந்து ஆராய்ச்சி செய்தார். குறிப்பாக, உளக்கோளாறுகளில் மிகச் சாதாரண வகையாகக் காணப்படும் உணர்ச்சி விண்டநிலை (dementia praecox) பற்றிய இவரது ஆராய்ச்சிகள் இவ்வகையில் முதல்தரமான முடிவுகளை அளித்தன. ஹிஸ்டீரியா, உணர்ச்சிவிண்டநிலை நோய் என்னும் இரு கோளாறுகளுள்ளும் அடிப் படையான வேறுபாடுகள் இருப்பினுங்கூட, ஹிஸ்டீரியா ஆராய்ச்சிகளில் ஃபிராயிடு கண்ட உளவிதிகள் உணர்ச்சிவிண்டநிலை நோயிலும் முக்கியமான பங்கு வகிக்கின்றன என யூங் காட்டினார்.

### ஃபிராயிடும் இந்நூலின் கண்ணோட்டமும்

நாம் இப்பொழுது அடைந்துள்ள நிலை, இந்நூல் வெளியிடப்பட்ட வேளையில் ஃபிராயிடின் கருத்துகள் இருந்த வளர்ச்சிநிலையை ஏறத்தாழ ஒத்தமை கிறது. ஃபிராயிடின் கொள்கைகளின் அடிப்படையான அமைப்பினைச் சுருக்க மாகவும் போதாதவகையிலும் மட்டுமே இந்நூலில் விளக்க முடிந்தது. ஆனால், இந்நூல் வெளியிடப்பட்ட வேளையிலேயே அவை பெருமளவில் நுணுக்கம் (complexity) பெற்றிருந்தன. ஆயினும், ஃபிராயிடு தம் ஆராய்ச்சிகளில் மேற் கொண்ட முயற்சிகளைப் போதிய அளவில் தெளிவாகவே காட்டியுள்ளோம் என நம்புகிறோம். எமது இந்த நோக்கம் வெற்றிபெற்றிருப்பின், உளக்கோளாறு பற்றிய கருத்துகளில் இந்நூல் எவ்வகையில் ஃபிராயிடின் கருத்துகளினின்று வேறுபடுகிறது என்பதை வாசகர் புரிந்துகொள்வதில் தடை எதுவும் இராது.

முதலாவதாக உளக்கோளாற்றினை எந்தக் கோணத்திலிருந்து காண்பது என்பதில் இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளுக்கும் ஃபிராயிடின் கருத்துகளுக்கும் இடையே குறிப்பிடத்தக்க வேறுபாடு உண்டு. ஃபிராயிடு கொள்கை சார்ந்து அமையும் தமது கருத்துகளைச் சிறிது சிறிதாகவும் தோராயமாகவும் தோற்றுவித்தார். தமது நோயாளிகளைத் தொடர்ந்து ஆராயும்போது பெற்ற உண்மைகளுக்கு ஏற்ப, அவர் தமது கருத்துகளை உருவாக்கினர். உளக்கோளாறு என்பதுபற்றி, முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் விளக்க அவர் முற்படவில்லை. அதாவது, உளக்கோளாறுபற்றிய நூல்களை வெளியிடாது, அவைபற்றிய கட்டுரைத் தொடர்களையே அவர் வெளியிட்டார். இதற்கு மாருக இந்நூல் உளக்கோளாறுபற்றி முறையாக விளக்க முற்படுகிறது. இதனல் இந்நூலில் விளக்கப்பட்டுள்ள நியதிகள் அவற்றின் வரலாற்று அடிப்படையில் விளக்கப்படாது. இவ்விளக்கத்தில் அவைபெறும் இடத்திற்கு ஏற்பவே விளக்கப்பட்டுள்ளன, மேலும், உளநோய்க்கூற்றியலின் கருத்துகள் அறிவியல்கள் அனைத்தின் முன்னேற்றத்தையும் கட்டிக்காக்கும் விதிகளுக்கு ஏற்பவே அமைந்துள்ளன என்று தொடர்ச்சியாக எடுத்துக்காட்டும் வகையில் - அதாவது உளநோய்க்கூற்றியல் கருத்துகள் அறிவியல் முறையின் விதிகளுக்கு ஏற்பவே அமைகின்றன எனக்காட்டும் வகையிலேயே - உளக்கோளாறு என்பது விளக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக ஃபிராயிடின் பலகருத்துகள் அவற்றின் தத்துவ நிலையினின்று காணப்பட்டுள்ளன. அவரது கண்ணோட்டத்தினின்று இது வேறுபடுகிறது என்பதோடு, இவற்றுள் சில அக்கண்ணோட்டத்துடன் முற்றிலும் பொருந்தியும் அமைவதில்லை.

இரண்டாவதாக, ஃபிராயிடின் கொள்கைகளை விளக்குவதையே நோக்கமாகக் கொண்டு இந்நூல் அமையவில்லை. ஃபிராயிடு ஆராய்ந்த பலவற்றுள் ஒரு சிறு பகுதியைமட்டுமே இந்நூல் விளக்குகிறது. அவரது பல முக்கியமான ஆராய்ச்சிகளைப்பற்றி இந்நூல் குறிப்பிடுவதுகூட இல்லை. மேலும் அவரது ஆராய்ச்சிகளைச் சாராத, அல்லது அவரது ஆராய்ச்சிகளில் அதிக முக்கியத்துவம் பெருதனவும் சிறியனவுமான, உளச்சிதைவு (dissociation) போன்ற கருத்துகளையும் இந்நூல் விளக்க முற்படுகிறது.

மேற்கூறிய இருவகை வேறுபாடுகளின் காரணமாக, ஃபிராயிடின் சில கருத்துகள் அவரது சிந்தனை அமைப்பில் பெற்றிருந்த இடத்தையும் முக்கியத்துவத்தினையும் பெருத வகையில் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. உதாரணமாக, ஃபிராயிடு மனித உள்ளத்தை நனவு, பின்நனவு, நனவிலி என்ற பகுதிகளாக வேறுபடுத்தி யிருப்பதை இந்நூலில் ஏற்கப்படவில்லை. நனவு நிகழ்ச்சிகளைப் போதியவண்ணம் விளக்கப் பயன்படும் ஒரு கருத்தாக மட்டுமே நனவிலிச் செயல்கள் இருப்பது துணிபாகக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவற்றை உள்ளத்தின் ஒரு பகுதியாகக் கருதாது அவற்றின் செயலின் அடிப்படையிலேயே காண முற்பட்டுள்ளோம். எனவே, ஃபிராயிடு தமது நனவிலிக்குத் தந்த திட்டவட்டமானதும் புதுமையானதுமான தன்மை, நமது நனவிலிக் கருத்திற்கு இல்லை.

பால் இயல்பூக்கங்களை விரிவாக ஆராயாது இந்நூலில் விட்டிருப்பது இரு கண்ணோட்டங்களிலும் காணப்படும் வேறுபாட்டிற்கு மற்றோர் உதாரணமாகும். பல்வேறு கோளாறுகளைத் தோற்றுவிக்கும் போராட்டங்களில் பால் இயல்பூக்கங்கள் ஆதாரமான பங்கு வகிக்கின்றன என்னும் ஃபிராயிடின் கருத்தை நாம் குறிப்பிட்டுள்ளோம். ஆனால், அதனை அடிப்படைக் காரணிகளின் (factors) தன்மையை விளக்குவதாக இருக்கக்கூடிய ஒரு கருதுகோள் என்றே நாம் கூறத் தலைப்பட்டுள்ளோம். மாறாக, ஃபிராயிடின் நூல்களில் துவக்கத்தினின்றே இக் கருதுகோள் காணப்படுவதுடன், லிபிடோவின் தோற்றம், வளர்ச்சி என்பன வற்றை மையமாகக்கொண்டே அவரது கொள்கைகள் அனைத்தும் தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

எனவே, ஃபிராயிடின் கொள்கைகளின் வரலாற்று அமைப்பில் இந்நூல் திட்டவட்டமான இடத்தை வகிப்பதில்லை என்பதை வாசகர் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். இந்நூல் தனது நோக்கில் ஒரே வேளையில் சுருங்கியும் பரந்தும் காணப்படுகிறது. ஃபிராயிடினது கொள்கைகளில் ஒருசிலவற்றை மட்டுமே இந்நூல் எடுத்தாளுகிறது என்பதில், இந்நூலின் நோக்கம் சுருங்கிக் காணப்படுகிறது. அதனால் அவ்வாறு எடுத்தாளும் கருத்துகளைப் பிற ஆராய்ச்சி யாளர்கள் தந்துள்ள புதுக்கருத்துகளோடு ஒப்பிட்டுக் காண்கிறது என்பதில் இந்நூலின் நோக்கம் பரந்து அமைகிறது.

## 1912 ஆம் ஆண்டிற்குப் பின்னர் உளநோய்க் கூற்றியலின் வளர்ச்சி

இந்நூலில் தரப்பட்டுள்ள விவரங்களைத் திருத்தி அமைப்பதன்மூலமோ அல்லது சென்ற நாற்பது ஆண்டுகளில் உளக்கோளாறு பற்றிய கருத்துகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் வளர்ச்சியையும் சுருக்கமாக விவரிப்பதன்மூலமோ இந்நூலை இன்றைய நிலையானதாக மாற்றுவது இச்சிறுநூலில் செய்யமுடியாத ஒன்று என்பதுடன், அத்தகைய முயற்சி இந்நூல் தன் நோக்கமாகக் கொண்டுள்ள சிறு சாதனையையும் இல்லாமற் செய்துவிடும் என்பது திண்ணம். இதனை நாம் முகவுரையிலேயே எடுத்துக்கூறியுள்ளோம். எனவே, இங்கு நாம் அத்தகைய முயற்சியிலே இறங்கமாட்டோம். ஆனால், இந்நூல் விளக்க முற்பட்டுள்ள நியதி களுக்குப் பிற்காலத்தில் நேர்ந்ததென்ன என்பதுபற்றிய சில பொதுவான கருத்துகளைமட்டும் கூறி இம்முன்னுரையை முடிக்கிறோம்.

இந்நூற்றாண்டின் முதற்பகுதியில் உளக்கோளாற்று வரலாற்றில் காணப்படும் தலையாய நிகழ்ச்சி ஃபிராயிடின் நூல்கள் இத்துறையில் வரவர அதிகமான அளவில் தம் செல்வாக்கைச் செலுத்தின என்பதாகும். இச்செல்வாக்கு, பழைய உளப் பகுப்பாய்வுக் கோட்பாட்டு மரபின் எல்லைகளைப் பெருமளவில் தாண்டி அமைந்தது. ஏறத்தாழ, உளநோய்க்கூற்றியலின் இன்றைய ஆராய்ச்சிகள் அனைத்தின் போக்கையும் அவரது கருத்துகள் மிகப் பெருமளவில் பாதித் துள்ளன என்றால் அது மிகையாகாது. இதினின்று, ஃபிராயிடு தோற்றுவித்த பெரும்கொள்கை அமைப்பும், அவர் காட்டிய வழிமுறையும் பொதுவாக

எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்ற முடிவுக்கு வரலாகாது. உண்மையில், அவரது கொள்கையமைப்பு சரியானதுதானா என்பது இன்னும் காரசாரமான விவாதங்களுக்கு இடமளிப்பதாகவே இருக்கிறது. பிராயிடினது கொள்கைகளை முழுமையாக ஏற்றுக்கொள்பவர்கள் சிறுபான்மையினர் மட்டுமே; இவர்கள் அவரை உடனடியாகப் பின்பற்றும் பழைய உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டு மரபினரேயாவர் ஆயினும் உளவியல் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்கு பிராயிடு முதலில் காட்டிய திக்குகள், இந்த ஆராய்ச்சிகளில் அவர் பயன்படுத்திய கருவிகள் இயக்கக் கண்ணோட்டத்தோடு ஆராய்ச்சிகளில் ஈடுபடவேண்டும் என்று அவர் கொண்டிருந்த அரிய நிலை என்பன உளநோய்க் கூறு இயலின் பின்னைய வரலாற்றை அடிப்படையாக மாற்றி அமைத்துள்ளன. மேலும் பிராயிடின் முன்னைய கருத்துக்களில் பல - குறிப்பாக போராட்டம் பற்றிய கருத்து, போராட்டம் நரம்புக்கோளாறு நிகழ்ச்சிகளைத் தோற்றுவிக்கப் பயன் படுத்தும் பல உளநுட்பச் செயல்கள் பற்றிய கருத்து ஆகியன - பெரிதும் புகழ்வாய்ந்து விளங்குவதுடன், ஓரளவு பெரும்பாலானவராலும் ஏற்கப் பட்டுள்ளன.

அதனைத் தோற்றுவித்த பிராயிடின் ஓரளவு நேரடியான கண்காணிப்பின் கீழ், பழைய உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டு மரபு, உளப்பகுப்பாய்வு முறையை ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தத்தக்க வகையில் விரிவானதும் நுட்பம் வாய்ந்ததுமான ஒரு கருவியாக அமைந்துள்ளது. மேலும் தனது ஆராய்ச்சிகளை விரிவடைந்து கொண்டேயிருக்கும் பல களங்களில் நடத்தியுள்ளது. பிராயிடின் முதல் நூல்கள் நரம்புக்கோளாறு துறையைச் சார்ந்தனவாக மட்டுமே இருந்தன. ஆனால், இதைத் தவிர, இயல்பினரது உளவியல் (psychology), சமூகவியல் (Sociolgy), மனித இனநூல் (anthropology), கல்வி இயல் என்னும் துறைகளி லுள்ள பிரச்சினைகளையும் வெற்றிகரமாகச் சமாளித்துள்ளது. பிராயிடின் கொள் கைகள் ஓரளவு தனித்து நிற்பதும் தன்னுள்ளேயே அடங்கக்கூடியதுமான ஒரு சிந்தனை அமைப்பாகத் துலங்குகிறது; வாழ்வு, உள்ளம் பற்றிய பிரச்சினைகளைத் தன் வழியில் நின்று, பிற முறைகளின் தொடர்பு, ஒத்துழைப்பு என்பன இல்லாம லேயே சமாளிக்க முற்படுகிறது.

உள்க்கோளாறு கருத்துகளின் வளர்ச்சியில் பிராயிடின் முன்னைய கருத்துக் கள் பெரும்பாலும் நிலைநிறுத்தப் பெற்றுள்ளன; அவை பெருமளவில் விரிவாக்கப் பட்டும் உள்ளன. லிபிடோவின் தோற்றம், அதில் ஏற்படும் மாற்றங்கள் என்பன பற்றிய கருத்துகள் மிக விரிவாகக் காணப்பட்டுள்ளன. முன்னர் ‘அகம்’ (ego) என்ற தலைப்பின் கீழ் சுமாராகத் தொகுக்கப்பட்ட காரணிகள், தனித்தனி தன்மை களும் செயல்களும் கொண்டமையும் பல பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. அகத்தின் பகுதிகளுக்கும் லிபிடோவிற்கும் இடையே எழும் இடைவினைகளைக் கொண்டு, இயல்பான உளவாழ்வு நிகழ்ச்சிகள் என்பனவற்றை விளக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ எல்லா உள-உடலியல் செயல்களையும் இவ்விளக் கத்தின் அடிப்படையில் காணவும் முயலப்பட்டுள்ளது.

பிராயிடின் சாதனைகளின் செல்வாக்கு பழைய உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டு மரபின் எல்லையை மிஞ்சியாகத் தாண்டி அமைந்துள்ளது எனவும் பிராயிடின் கருத்துக்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளச் சம்மதியாத பல உள நோய்க்கற்றியல் அறிஞர்களின் நூல்களிலும் பிராயிடின் கருத்துகள் சில இடம் பெற்றுள்ளன எனவும் கூறியுள்ளோம். இந்த இடத்தில் யூங் **(Jung)** ஆட்லர் **(Adler)** என்பவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இரு கோட்பாட்டு மரபுகளை நாம் விசேடமாகக் குறிப்பிட வேண்டியுள்ளது. இந்த அறிஞர்கள் முதலில் பிராயிடைப் பின்பற்றுபவர்களாகவே இருந்துள்ளனர், ஆனால், அவர்களது ஆராய்ச்சியின் போக்கு, பழைய உளப்பகுப்பாய்வின் போக்கினின்று பெரிதும் வேறுபட்டுள்ளது, யூங்கும், ஆட்லரும் பிராயிடு காட்டிய புதிய வழிகளைப் பயன்படுத்தி இருப்பதுடன், அவரது சில கருத்துகளையும் ஓரளவு தழுவிப் பயன் படுத்தியுள்ளனர்.ஆனல், இவர்கள் இருவரும் தத்தம் வழியே சென்றிருப்பதுடன் பிராயிடமிருந்து முற்றிலும் வேறுபடுவன என்று சொல்லத்தக்கவகையான கோட்பாடுகளையும், வழிமுறைகளையும் தோற்றுவித்துள்ளனர்.

இந்த இரு கோட்பாட்டுமரபுகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளும், இன்று உளநோய்க்கூறு இயலில் போட்டியிடும் பிற கோட்பாட்டு மரபுகளில் உள்ளவேறு பாடுகளும், அடிப்படையாக உளக்கோளாற்றில் இன்னும் ஆழமான கருத்துகளைக் காண்பதிலுள்ள வேறுபாடுகளாகவே உள்ளன. அவற்றோடு ஒப்பிடுமிடத்து எளியவையாகவும், மேலெழுந்தவாரியாகவுமுள்ள கருத்துகளை விளக்குவதாகவே, இந்நூல் அமைந்துள்ளது. எனவே, இந்நூல்விளக்க முற்படும் கருத்துகள் அதிக அளவில் இன்றும் பாதிக்கப்படவில்லை எனலாம். ஆழ்ந்த கருத்துகளை உருவாக்க முனையும்போது வேறுபாடுகள் கண்டிப்பாக எழுந்தே யாகும் என்னும் கூற்றிற்கு உளவியல் முறை சிறந்த எடுத்துக்காட்டாகத் துலங்கு கிறது எனலாம். குறிப்பாக, பௌதிகம் போன்ற பிற அறிவியல்கள் பயன்படுத் தும் அணுகு முறையோடு உளவியல் அணுகு முறையை ஒப்பிட்டுக்காணும்போது இந்த அடிப்படையான குறைபாடு தெள்ளெனத் தெரிகிறது. அறிவியல் முறை—முதலாவதாக நிகழ்ச்சிகளைச் சேகரித்துப் பதிவு செய்தல், இரண்டாவதாக அந் நிகழ்ச்சிகளை வரிசைக் கிரமமாகவோ அல்லது தொடராகவோ வகைப்படுத்தல், மூன்றுவதாக இத்தொடர்களை முழுமையாகவும், வசதியாகவும் வர்ணிக்க உதவும் ஒரு குறுகிய சூத்திரத்தைக் கண்டுபிடித்தல் என்னும் மூன்று படிகளைக்கொண்டு அமையும் என இரண்டாம் அதிகாரத்தில் விளக்கப்பட்டுள்ளது. இந்த மூன்றும் படி நாம் கண்ட உண்மைகளைத் தொகுத்துக் கூற உதவும் சூத்திரம் ஒன்றினைத் தருவதோடு கூட, அந்நிகழ்ச்சிகளினின்று பிறப்பனவற்றையும் முன்னறிவிக்க நமக்கு உதவுவதாக இருத்தல் வேண்டும். குறிப்பாக, கட்டுப்படுத்தப்பட்ட பரிசோதனைகளினின்று பிறக்கும் நிகழ்ச்சித்தொடர்களில் இது உண்மையாக இருத்தல் வேண்டும். இந்த மூன்றும்படியை முழுமையாக நிறைவேற்ற முனையும் போதே, உளவியல் கருத்தின் குறைபாடு தெரியவருகிறது. காணப்பட்ட உண்மைகளைத் தொகுத்துக் கூறவும், பரிசோதனை வாயிலாகக் கட்டுப்படுத்தபட்ட பிற விளைவுகளின் போக்கைத் தவறின்றி முன்னறிவிக்கவும் திறனில்லாததாக

கொள்கை அமைப்பு, பௌதிகத்தில் உண்மையானது என ஏற்றுக் கொள்ளப் படுவதில்லை. காணப்பட்ட உண்மைகளை விளக்குவனவாகவும், தொகுத்துக் கூறுவனவாகவும் இருக்கும் வகையில் உளவியல் கொள்கைகளையும் அமைக்க முடியும். ஆனால், ஒரு சில எளிய செயல்களில் தவிர, பிறவற்றில் பின்னர் வரும் விளைவுகளைப் பரிசோதனைகள் வாயிலாகப் பெறக்கூடிய முடிவுகளை முன்னறிவிக்க முடியாது. எனவே, உளவியல் கருத்துகள் அறிவியலின் மூன்றாவது படியிலுள்ள நிர்ணயிக்கும் பகுதியைப்பெற்றிருக்கவில்லை எனலாம். இதன் காரணமாகவே வெவ்வேறு உளநோய்க்கூறு இயல் அறிஞர்கள் வெவ்வேறு கொள்கை அமைப்பு களை உருவாக்கிக்கொள்ள முடியாது. இந்தக்கொள்கை அமைப்புக்கள் ஒவ் வொன்றும் காணப்பட்ட நிகழ்ச்சிகளைத் தொகுத்துக் கூறக்கூடியனவாகவும், விளக்குவனவாகவும் இருந்தும், தம்முள் முரணானவையாகவும் இருக்கமுடிகிறது. நிகழ்ச்சிகளிலுள்ள விளைவுகளின் போக்கை, குறிப்பாக பரிசோதனை வாயிலாகக் கட்டுப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் போக்கினை உறுதியாக முன்னறிவிக்கும் திறன் என்னும் தீர்மானிக்கும் சோதனைகொண்டு அவற்றுள் சிறந்ததைத் தேர்ந் தெடுப்பது என்பது இங்கு பெருமளவில் முடியாததாகஉள்ளது. குறிப்பாக, இந்நூலில் விளக்கப்படும் நிகழ்ச்சிகளில் இச்சோதனைக்கு இடமில்லை. இதன் காரணமாகவே, வேறுபாடான கருத்துகளைத் தெரிவிக்கும் கோட்பாட்டு மரபுகள் தோன்றியுள்ளன. வேறுபாடான இக்கோட்பாட்டு மரபுகள் இருப்பது வருந்தத் தக்கதாயினும். தவிர்க்க முடியாததாகும்.

உளக்கோளாறு பற்றிய பிரச்சினைகள் இன்று பல கோணங்களிலிருந்து தவிர்க்கப்படுகின்றன. இவற்றுள் பிராயிடின் ஆராய்ச்சிகளினின்று முழுமை யாகவோ ஓரளவாகவோ எழுந்துள்ள அணுகுமுறைகளைத் தவிர, கணிதம், புள்ளியல் (Statistics), பரிசோதனை முறைகளைப் பயன்படுத்தும் பல ஆராய்ச்சி களையும் உளவியலார் பயன்படுத்தி வருகின்றனர். இந்த ஆராய்ச்சிகள், அறிவியல் ஆராய்ச்சி விதிகளுக்கு கண்டிப்பாக உட்படும்வகையில் இருக்கத் தலைப்படுகின்றன. இயல்பான மனிதர்கள், நோய் நிலையிலுள்ளவர்கள் என்பவர் களது நடத்தைப் பிரச்சினைகளைப் பல நிபுணர்கள், பகுப்பாய்வு உளநோய்க்கூறு இயல் கருத்துக்களினின்று வேறுவகையில் உருவாக்கப்பட்ட கருத்துக்களைக் கொண்டும் ஆராய்ந்து வருகின்றனர். குறிப்பாக, உளவியலோடு தொடர்புடைய அறிவியல்களான சமூகவியல், மனித இன இயல் என்பனவற்றினின்று பெற்ற விவரங்களின் துணைகொண்டு இத்தகைய ஆராய்ச்சி மேற்கொள்ளப்படுகிறது.

இறுதியாக, இரண்டாம் அதிகாரத்தில் ‘உடலியல் கருத்து’ எனப்பட்ட துறையிலும் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மூளையிலும், பிற உறுப்புக்களிலும் எழும் செயல்களின் வெளியீடுகளே உள நிகழ்ச்சிகள் என்னும் கருத்தைக் கொண்டமைவதே உடலியல் கருத்தாகும். உளக்கோளாறு பற்றிய ஆதாரக்காரணங்களைக்காண அந்த உடலியல் செயல்களையே ஆராயவேண்டும் என்பது இக்கருத்தினின்று பிறக்கும் துணைவிதியாகும். ஆயினும் பித்து நிலைக்கு உள்ளீடாக அமையும் உடலமைப்பு, உடலியல் இரசாயன மாறுதல்கள் என்பனவற்றை இத்துறை இன்னும் சரிவர விளக்கவில்லை. இத்துறையில்

ஓரளவு ஏற்பட்டுள்ள முன்னேற்றமும், சிகிச்சை செய்வதுபற்றியதாகவே இருக்கிறது. அண்மை ஆண்டுகளில் சில கோளாறுகளைக் குணப்படுத்துவதற்கென மின்சாரம், அறுவை (Operation) முறைகள் பயன்படுத்தப்பட்டிருப்பது மிகப் பயனுள்ளவையாக இருந்துள்ளன. இந்த நல்ல முடிவுகளைத் தருவதற்குக் காரணமாகும் உடலியல் மாற்றங்களும், பிற மாற்றங்களும் கண்டு கொள்ளப் படும்போது, அவை உளவியல் கருத்தினை விட, உடலியல் கருத்தினுள்ளேயே இடம் பெறுவனவாக அமையும் என்று நாம் கருதலாம்.

# 1. உளக்கோளாற்றின் வரலாறு

சரித்திரம் தோன்றிய காலத்திலிருந்தே பிறழ்வான உள நிகழ்ச்சிகளும் இருந்துள்ளன. கீழைய மேலைய நாடுகளின் பழங்கால நூல்களில் இந்நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, பழைய ஏற்பாட்டில் (Old Testament), 'கர்த்தரிடமிருந்து வந்த ஒரு பொல்லாத ஆவி' சவுலின் (Saul) மீது இறங்கியபோதெல்லாம் அவனிடம் ஒரு சோர்வுநிலை தோன்றியது எனக் காண்கிறோம். மேலும் நேபுசாத்நேசார் (Nebuchadnezzar) தனது சன்னி நிலையில் தான் ஒரு விலங்காக மாறிவிட்டதாக நம்பினான் எனவும் காண்கிறோம். அவன் 'மாடுகளைப்போல் புல்லை மேய்ந்தான்; அவனுடைய தலைமயிர் கழுகு களுடைய இறகுகளைப் போலவும், அவனுடைய நகங்கள் பட்சிகளுடைய நகங்களைப் போலவும் வளரும்வரை அவன் சரீரம் ஆகாயத்துப் பனியிலே நனைந்தது.' ஹோமரின் (Homer) நூல்களில் பிறழ்வு உள நிகழ்ச்சிகள் அடிக்கடி குறிப்பிடப் பட்டுள்ளன. அஜாக்ஸ் (Ajax) தன் கத்தியால் தன்னைத்தான் கொல்லும்வரை குட்டிப் பிசாசுகள் (Furies) அவனைத் துன்புறுத்தின எனவும், தான் டிரோஜன் (Trojan) போரில் பங்கு பெருதது சரியே எனக் காட்டும் வகையில் யுலீசஸ் (Ulysses) தனக்குப் பைத்தியம் பிடித்திருப்பது போன்று நடித்ததையும் காண்கிறோம். புகழ் வாய்ந்த தெய்வக் கூற்றுகளை (oracles) முழுவதுமாகப் பித்தலாட்டம் என்று கூறிவிடுவதற்கில்லை. அவை இன்று நாம் காணும் 'ஆவியுலக ஊடாடுபவரை' (medium) ஒத்தமையும் ஹிஸ்டீரியா நோய் வெளியீடுகளாக இருக்கக்கூடும்.

இப் பிறழ்வான நிகழ்ச்சிகள் காணப்பட்டபோதெல்லாம் அவற்றை விளக்கும் முயற்சியும் தவருது இடம் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம். ஏனெனில், விளக்கம் பெறவேண்டுமென்பது, மனித உள்ளத்தின் அடிப்படையான ஒரு பண்பாகும். உளக்கோளாறறின் வரலாறு அனைத்திலும், குறிப்பாக 'பித்து' (insanity) என்ற பதத்தின்கீழ் அமையும் தீவிர வகையான உளக்கோளாற்றில், விளக்கம் பெறவேண்டும் என்னும் தேவை தொடர்ந்து காணப்பட்டுள்ளது. அக்காலத்தில் நிலவிய பொதுவான எண்ணம், அறிவுநிலை என்பனவற்றிற்கு ஒவ்வும் வகையில் விளக்கங்களை உருவாக்கி மனநிறைவு பெற மனிதன் முயன்றுள்ளான். இவ்வாறு தரப்பட்ட விளக்கங்களை, 'உளக்கோளாறு பற்றி

கருதுகள்' என்போம். இந்நூல் முக்கியமாக ஆராயும் 'உளக்கோளாறு பற்றிய உளவியல் கருத்து' என்னும் இன்றைய நிலையை அடையும் வரையிலும் இக் கருத்துகளின் வரலாற்று வளர்ச்சியை விளக்குவதை நோக்கமாகக்கொண்டு இந்த அதிகாரம் அமைகிறது.

பழங்கால ஏடுகளில் காணப்படுவன என நாம் குறிப்பிட்ட உளக் கோளாறுகள் பற்றி அன்று நிலவி வந்த கருத்தினை, 'பேய் சார்வன' (demonological) என வர்ணிக்கலாம். இப் பிறழ்வு நிகழ்ச்சிகள் கடவுள் அல்லது பேய் போன்ற ஏதேனும் ஆவிகளின் வெளியீடுகள் எனக் கருதப்பட்டன. இந்த ஆவிகள் நோயாளியின் உடலில் தங்கியிருந்தன என்றோ அல்லது வெளியே இருந்துகொண்டு அம் மனிதனிடம் திருவிளையாடல்கள் புரிந்தன என்றோ நம்பப் பட்டன. வெளியிடப்பட்ட நிகழ்ச்சி அன்றைய சமயக் கருத்துகளுக்கு இசைவாக இருப்பின் அம்மனிதனை ஆட்கொண்டுள்ள ஆவி நன்மை பயப்பது எனக்கருதி, அத்தகைய சிறந்த ஆவியைக் கொண்டிருப்பவன் மிகவும் புனிதத் தன்மை வாய்ந்தவனாக மதிக்கப்பெற்றான். மாறாக, அம்மனிதனின் நடத்தை அன்றைய ஒழுக்க விதிகளுக்கு முரணாக இருப்பின், அவனிடம் தீமையைப் பயக்கும் பேய் இடம் பெற்றுள்ளது என அக்கால மக்கள் நம்பினர். இந் நம்பிக்கை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்த நிலையில், இவற்றைக் குணப்படுத்தும் முறையாக மந்திரம் ஓதுவதும், சமயச் சடங்குகளும் இடம் பெற்றிருந்தது இயல்பேயாகும்.

சுமார் கி. மு. 460-ஆம் ஆண்டின்போது, ஹிப்போக்கிரேட்டஸின் (Hippocrates) தோற்றத்துடன், பித்துநோய் பற்றிய கருத்து கிரேக்க நாட்டில் பெரு மாற்றத்திற்கு உள்ளாயிற்று. இன்றைய மருத்துவத்தின் தந்தை எனக் கருதப்படும் ஹிப்போக்கிரேட்டஸ், மூளையே உள்ளத்தின் உறுப்பு எனவும், இவ் வுறுப்பு ஏதேனும் ஒரு வகையில் உலைவுறுவதன் காரணமாகத் தோன்றுவதே பித்துநோய் எனவும் தமது கொள்கையை வகுத்தார். இதனால் இவர் 'ஏஸ்குலாப்பியஸ் (Æsculapius) கோவிலில் அடைக்கப்பட்டிருந்த இந் நோயாளிகளை வெளியே அழைத்துவந்து, சாதாரண மருத்துவ முறைகளைக் கொண்டு அவர்களுக்குச் சிகிச்சை செய்ய முனைந்தார்.'

ஆனால் அறிவியல் முறை கொண்டே பித்துநோயினைக் குணப்படுத்த வேண்டும் என்ற கருத்தும், முதல் முயற்சியும் அன்று பெரும் பயன் தருவனவாக அமைய முடியவில்லை. இருண்ட காலத்தில் (Dark ages) தோன்றிய அறிவின் வளர்ச்சியில்லாதபோது இக்கருத்து முற்றிலும் மறைந்தது. ஐரோப்பாவில் (Europe) இடைக்காலத்தின்போது (medieval age) சிந்தனை, இலக்கியம், கலை என்பன அன்று சர்வசக்தி வாய்ந்திருந்த சமயத்திற்கு அடிமைப்பட்டிருந்தன. தத்துவத்திற்குப் பதில் பழமைக் கருத்துகளும், அறிவியலுக்குப் பதில் இறைமை இணைவுப் பண்பும் (mysticism) இடம் பெற்றன.

இதன் காரணமாக, பித்து நோயின் தோற்றக்காரணம், தன்மை என்பன பற்றி முன்னர் இருந்த கருத்துகள் மறைந்து, மீண்டும் பழம் மனிதன் கொண்டிருந்த பேய்சார்ந்த கருத்துகள் இடம் பெற்றன. புனிதமான அல்லது தீய ஆவிகளின் செயலின் காரணமாகவே பிறழ்வான அறிகுறிகள் தோன்றுகின்றன என்ற கொள்கை மீண்டும் தலையெடுத்து, இடைக்காலத்தின்போது மிகையான முறையில் வளர்ச்சி பெற்றது.

அந்நாளில் பெருமளவில் வாழ்ந்திருந்த துறவிகள் (ascetics), களிபேரு வகையினர் (ecstatics) செய்துள்ள பதிவுகளில் (records) இப்பிறழ்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து விவரிக்கப்பட்டிருத்தலைக் காண்கிறோம். உதாரணமாக, உளக்கோளாறுடைய நோயாளிகளிடம் இன்று அடிக்கடி காணக்கிடைக்கும் உருவெளித் தோற்றங்கள் (visions), மெய்மறந்த நிலைகள் (trances) என்பன அன்றும் இருந்தன என இப்பதிவுகள் காட்டுகின்றன. ஆனால், கடவுளோடு அம்மனிதர் நேரடியாகத் தொடர்பு கொண்டிருப்பதால் இந்நிகழ்ச்சிகள் அவரிடம் எழுகின்றன என்று அன்று நம்பியதுடன், அத்தகைய நிகழ்ச்சிகளைக் கொண்டிருந்த மனிதர்களையும் போற்றிப் பணிந்தனர்.

மேலும் இடைக்காலத்தின்போது 'சூன்யவித்தை' (witchcraft) பெருமளவில் இடம் பெற்றிருந்தது. பிற பலவகையான பிறழ்வான உள நிகழ்ச்சிகளை அக்கருத்தினைக் கொண்டு விளக்க முற்பட்டனர். இன்றைய நிலையிலும் விளக்க முடியாதனவாக அமையும் பல பிரச்சினை கொண்டு, மனித வரலாற்றில் சுவையான பங்குபெறும் சூன்ய வித்தைக்காலம் அமைந்திருந்தது. சூன்ய வித்தையிலிருந்த, சூன்யக்காரரின் ஓய்வு நாள் பிற விருந்துகள் என்னும் சடங்குகள், வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் ஐரோப்பாவில் நிலவியிருந்த சமயத்தின் அடிச்சுவடுகளாக இருக்கக்கூடும். அதாவது, ஜெர்மானியரது இதிகாசங்களிலிருந்து பிறந்த சமயத்தின் அடிச்சுவடுகளாக இவை இருக்கலாம். எனவே, இடைக்காலத்தில் இருந்த சமயத்தோடு, இந்த அடிச்சுவடுகளும் ஒரு வழிபாட்டு மரபாகத் (Cult) தனித்து நின்றிருக்கின்றன. இத்தகைய வழிபாட்டு மரபுகள் திடமற்ற உளமுடையவர்களைக் கவர்கின்றமையை இன்றும் காணலாம். எனவே, அச் சூன்யக்காரருள் பலர், இன்று திட்டவட்டமாக நரம்பு நோயினர் (neurotic) அல்லது பித்தர் எனக் கூறத் தக்கவராக இருந்திருப்பது நமக்கு வியப்பூட்டுவதாக இல்லை. இன்றைய மருத்துவர் ஹிஸ்டீரியாவின் அறிகுறிகள் (symptoms) எனக் கருதும் சில குறியீடுகளை அன்று ஒருவர் பெற்றிருப்பின் அவர் சூன்யக்காரர் என்பதற்கு மறுக்கமுடியாத ஆதாரங்களாகக் கொண்டனர். புகழ்வாய்ந்த 'பேயின் நகம்' (devil's claw) என்னும் அறிகுறி இவற்றுள் ஒன்றாகும். சூன்யக்காரர் எனக் கருதப்பட்டவரின் உடலில் எங்கேனும் தோலில் ஒரு பகுதி உணர்ச்சியற்றதாக இருப்பதையே இவ்வாறு குறிப்பிட்டனர். இன்றைய மருத்துவ மனைகளிலும் இந்த அறிகுறி அடிக்கடி காணப்படுவதுண்டு. ஆனால், இதனை 'ஹிஸ்டீரியா சாரும் உணர்விழப்பு' (hysterical anaesthesia) என்பர். ஒருவரிடம் 'பேய் நகம்' பட்டிருப்பதைக்கொண்டும், இன்ன பிற விநோதமான சோதனைகளைக் கொண்டும் அந்நாளில் மனிதர்களை சூன்யக்காரர்கள் என முடிவு கட்டினர்.

இக்கொடுமையான வழக்கம் ஐரோப்பிய நாடுகளில் திடமாக நிலவியிருந்ததுடன் பதினெட்டாம் நூற்றாண்டிலும்கூடக் காணப்பட்டது. டிரீவியஸ் (Treves) என்னும் ஒரு சிற்றரசில் மட்டும் ஒரு சில ஆண்டுகளில் ஆறுயிரத்து ஐந்நூறு மக்கள் சூன்யக்காரர்கள் என்பதன் காரணமாகக் கொல்லப்பட்டனர். மேற்கூறிய எண்ணம் எந்த அளவில் அன்று இடம் பெற்றிருந்தது என்பதனை இது காட்டும்.

பரிசுத்தத்தின் காரணமாகவும், சூன்யவித்தையின் காரணமாகவும் எழுவன் என்று விளக்க முடியாதிருந்த பிறழ்வான உளநிகழ்ச்சிகள், தீய பேய்களால் எழுகின்றன என்றே அன்று பெரிதும் நம்பினர். இந்த நிகழ்ச்சிகளைக் கொண்டிருந்த பரிதாபத்திற்குரிய மக்கள் பேயோட்டப்படுதல் (exorcism), இன்னபிற சடங்குகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இம்முறையால் குணம் பெருதவரை இருண்ட குகைகளில் தள்ளினர்; இல்லையேல் அவர்களைச் சமூகத்திலின்றும் தள்ளி வைத்தனர்.

இந்த அவலமான நிலையில் சீர்திருத்தம் ஏற்படுவதற்கு இருவகை எண்ணங்களின் வளர்ச்சி காரணமாயிற்று. அவை அறிவியல், மனிதாபிமானம் (humanitarianism) என்னும் கருத்துகளாகும். பின்னுளில், மனித அறிவில் மாபெரும் புரட்சியைச் செய்யவிருந்த அறிவியல்முறை அப்பொழுதுதான் தோன்றியிருந்ததுடன், சட உலகை ஆராய்வதில் மட்டுமே கவனம் செலுத்துவ தாகவும் இருந்தது. ஆயினும் புறவயமாக (objective) நின்று சிந்தனையில் ஈடுபடுவதான இம்முறை மிகச்சிறந்த விளைவுகளை ஏற்படுத்தலாயிற்று. பழமைக் கருத்துகள் அழிய ஆரம்பித்தபோது, பித்து நிலை பேயால் எழுவது என்னும் கருத்தும் மறைந்தது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஹிப்போக்கிரேட்டஸ் அடைந்திருந்த அறிவு நிலையை, இறுதியில் இன்றைய ஐரோப்பா பெற்றது. அந்நிலையில், மூளையில் ஏற்படும் செயல்களின் வெளியீடுகளாகவே உள நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன என நம்பப்பட்டதுடன், எவ்வாறு நிமோனியா (pneumonia) என்பது சுவாசப் பைகளில் (lungs) எழும் நோயாக இருக்கிறதோ, அதேபோன்று மூளையில் எழும் ஒரு நோயே பித்துநிலை என்ற நியதியும் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு, பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் பித்துநோய் பற்றிய இன்றைய 'உடலியல் கருத்து' திட்டவட்டமாக நிலைநிறுத்தப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம்.

இந்நிலை தோன்றுவதற்கு முன்னர் இருந்த நிலைபெயர்வுப் பருவத்தில் (transition period) ஒரு கருத்து தலையோங்கி இருந்தது. அதனை 'அரசியல் கருத்து' (Political conception) எனலாம். இந் நிலையில் பித்துப்பிடித்திருப் பவர்கள் பேய் பிடித்தவர்கள் என்று கருதப்படவில்லை. ஆனால், அவர்களைப் பற்றிச் சமூகம் அக்கறை கொள்ளவேண்டியதில்லை என்று எண்ணப்பட்டது. பைத்தியம் பிடித்தவனைப் பிறருக்குத் தொல்லை தராவண்ணம் தடுப்பதுடன், தன் கடமை முடிந்துவிட்டது என அன்றைய சமூகம் எண்ணிற்று. இந் நாட்களிலேயே பித்தர்களை இருட்குகைகளில் அடைத்து வைப்பதும், சங்கிலிகளால் பிணைத்து வைப்பதும் அதிக அளவில் இடம் பெற்றுள்ளன.

அழுக்கு மண்டிய மனிதர்கள் இவ்வறைகளின் மூலையில் முடங்கிக் கிடந்தனர். கற்களாலாகிய இந்த அறைகளில் ஈரம் கசிந்ததுடன் குளிரும் மிகுந்து காணப்பட்டது. அறைகளில் வெளிச்சமும் காற்றும் இல்லை. இவர்களுக்கு வைக்கோலாலான படுக்கைகள் தரப்பட்டிருந்தன. வைக்கோல் அடிக்கடி மாற்றப்படாததால் அவை நோயூட்டும் தன்மையுடையவனவாய் இருந்தன. பயங்கரமான அந்த இருட் குகைகளில், கொடிய விலங்குகளைக்கூட நாம் அடைத்து வைக்கமாட்டோம். இத்தகைய அறைகளுள் பித்தர்கள் தள்ளப் பட்டிருந்தனர். அங்கிருந்த பணியாட்களின் தயவில் அவர்கள் வாழ வேண்டியிருந்தது. சிறையிடப்பட்டிருந்த கைதிகளே அங்குப் பணியாட்களாக இருந்தனர். இத்தகைய வருந்தத்தக்க நிலையிலிருந்த நோயாளிகள் பெரும் சங்கிலிகளால் பிணைக்கப்பட்டு அவற்றின் பளுவைச் சுமந்தவண்ணமிருந்தனர்.

பித்து நோயினர் அந்நாளில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சீர்கேடான வெறுப்பூட்டும் நிலையை ஹோகார்த் (Hogarth) வர்ணித்துள்ளார். அதன் கொடுமையைச் சொற்களால் விளக்குவது என்பது இயலாததாகும்.

பித்துநோய்த் துறையில் மனிதாபிமானப் பணியை முதன்முதலில் துவக்கிய பெருமை இங்கிலாந்து நாட்டைச் சாரும். இலண்டனிலுள்ள செயின்ட் லூக்கில் (St. Luke) செய்யப்பட்ட புனரமைப்பிலும், யார்க்கில் (York) பித்து நோயினர் விடுதி தோற்றுவிக்கப்பட்டதிலும், பித்து நோயினரது சுற்றுப்புற சூழ்நிலையைத் திருத்தியமைக்க உண்மையாகச் செய்யப்பட்ட முதல் முயற்சிகளைக் காண்கிறோம். ஒவ்வொரு பித்துநோயினர் காப்பகத்திலும் (asylum) இதுவரையிலும் மிகத் தேவையானவை எனக் கருதப்பட்ட சங்கிலிகளை, ஹான்வெல் (Hanwell) என்னும் இடத்தில் டாக்டர் கனேலி (Dr. Conolly) அகற்றினார். இத்தகைய சீர்திருத்தங்கள் பிரஞ்சு நாட்டில் பீனல் (Pinel), எஸ்கிரோல் (Esquirol) என்பவர்களின் தலைமையின்கீழ் நடந்தேறியது. அந்நாட்களிலிருந்து மனிதாபிமான இயக்கம் தொடர்ந்து முன்னேறியுள்ளது. பித்தர்களும் மனிதர்களாக நடத்தப்படவேண்டிய உரிமை பெற்றவர்கள்தாம் என்பது இன்று உலகெங்கணும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. இன்றைய உள மருத்துவமனைகள் ஒழுங்கான அமைப்பிற்கும் வசதிகளுக்கும் எடுத்துக்காட்டுகளாகத் துலங்குகின்றன.

இந்நோயாளிகளை வைத்துப்பேணுதல், சிகிச்சை செய்தல் என்னும் முறைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தின் ஒவ்வொரு படியிலும், அதற்குகந்த வகையில் அறிவியலில் ஏற்பட்டிருந்த வளர்ச்சி உதவிற்று. பிற எல்லாத் துறைகளிலும் சிறப்பான அறிவுபெற உதவிய வழிகளின் வாயிலாகவே பிறழ்வான உள நிகழ்ச்சிகளும் ஆராயப்படுதல் வேண்டும் என்னும் கருத்து பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் உறுதி பெற்றுக் காணப்பட்டது. பித்துநோயினை உண்மையான அறிவியல் ஆராய்ச்சிகள் மூலமே காணவேண்டும் என்பதற்கு அப்பொழுது அடிப்படைகள் ஏற்படுத்தப்பட்டன. இந்த ஆராய்ச்சிகள், 'உள

மருத்துவ இயல்' (psychiatry) எனப்படும் அறிவியல் துறையாக அமைந்தன. கடந்த நூருண்டுகளில் உள மருத்துவ இயலில் பெரிதும் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதுடன், அத்துறை பற்றிய அறிவும் பெருமளவில் பெருகியுள்ளது.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் துவக்கத்தில் உடலியல் கருத்து, ஏறத்தாழ எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும் நிலையைப் பெற்றிருந்தது எனக் கண்டோம். இதன் காரணமாக, மூளையின் அமைப்பு, அதன் உடலியல் தன்மைகள் என்பன பற்றியே பெருமளவில் ஆராய்ச்சிகள் துவக்கப்பெற்று இவை பற்றிய நமது அறிவு மிக வேகமாக வளர்ந்தேறலாயிற்று. நுண்ணோக்காடியின் (microscope) துணைகொண்டு, மூளையின் அமைப்பு நன்கு ஆராயப்பெற்றது. புறணி உடலியலில் (cerebral physiology) பரிசோதனை முறைகளைப் பயன் படுத்தியதால் இந்த ஆராய்ச்சியில் இன்னும் முன்னேற்றம் ஏற்படலாயிற்று. 'புறணிக் கிடக்கை' (cerebral topography) பற்றிய உண்மைகளைப் புறணி உடலியல் துறை விளக்கியது ஒரு தலையாய முன்னேற்றமாகும். இதன் மூலம் திட்டவட்டமான மூளைப் பகுதிகள், திட்டவட்டமான உடற் செயல்களைக் கட்டுப்படுத்துகின்றன என்பது கண்டுகொள்ளப்பட்டது. உதாரணமாக, இப்பொழுது 'இயக்கப் பகுதி' (motor area) எனப்படும் மூளைப்பகுதி தலை கை கால்கள் என்பனவற்றின் எல்லா அசைவுகளையும் கட்டுப்படுத்துகிறது என்பதும், இப்பகுதியில் ஒரு பகுதி அழிக்கப்படுமாயின், அதனுல் கட்டுப்படுத்தப்படும் உறுப்பு உடனடியாக முழுமையாக செயலிழந்து போகிறது எனவும் கண்டுள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்புக்களால் எழுந்த உற்சாகத்தின் காரணமாக, உளக்கோளாற்றின் தோற்றக் காரணங்களும் தன்மையும் விரைவில் கண்டுகொள்ளப்படும் என்று நம்பிக்கையோடு எதிர்பார்க்கப்பட்டது. ஆனுல், இன்று வரையிலும் இந் நம்பிக்கைகள் நிறைவேறவில்லை. உடலியல் முறையின் பயனில் ஐயுறவு கொள்ளமுடியாதெனினும் இப்பிரச்சினையை வேறு ஏதேனும் முறையில் காண நிறைய இடமுண்டு என்ற எண்ணம் விரைவாகத் தோன்றி வருகிறது. 'உளவியல் கருத்து' வளர்ச்சியே இம்மாற்று முறையாக இடம் பெற்றுள்ளது.

மூளையில் நோய் நிலையில் இடம் பெறுவதாகக் கருதப்படும் மாற்றங்களை ஆராயாமலேயே, நோய் நிலையில் எழும் உளச்செயல்களை நேரடியாக ஆராய முடியும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு உளவியல் கருத்து அமைகின்றது. எனவே, உளக்கோளாறு பிரச்சினைக்கு உளவியல் கண்ணோட்டத்தினின்று சரிவர முடிவு காணமுடியும் என இக்கருத்து நம்புகிறது. உளவியலை அடிப்படை மெய்யுணர்வு (metaphysics) சமயவியல் (theology), ஒழுக்கவியல் (ethics) என்பனவற்றோடு தவருக இணைத்துக்காண முற்பட்டதின் காரணமாக, இவ்வகையில் எழுந்த முதன் முயற்சிகள் பெருமளவில் பலனற்றுப் போயின. உதாரணமாக, ஹெயின்ராத் (Heinroth) என்னும் அறிஞர், பித்துநோய் என்பது பாவத்தின் (sin) பயனுகு எழுவது என்றும், சமய நம்பிக்கையின் மூலமே இந்நோயினைக் குணப்படுத்தமுடியும் எனவும் கருத்துத் தெரிவித்திருப்பதைக்

காண்கிறோம். ஆயினும் இறுதியில் இவ்வேற்றுத் தோழர்களிடம் இருந்து தனியாகப் பிரிந்து நிற்கும் முயற்சியில் உளவியல் வெற்றி பெற்றது. உளக் கோளாற்றை ஆராய்வதற்கு அதைப் பயன்படுத்துவதிலிருந்த தடைகளும் இவ்வாறு மறைந்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற்பாதியின்போது பிரஞ்சு நாட்டு உளவியல் அறிஞர்கள் முதலாவதாக இவ்வகையில் பெரும் சாதனைகளை ஆற்றினர். இவ்வாறு தோன்றிய பிரஞ்சு நாட்டு முயற்சி சானேயின் (Janet) பெரும் புகழ்வாய்ந்த சாதனைகளோடு நின்றது. அண்மை ஆண்டு களில் இத்துறையில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. கிரேப்ளின் (Kraepelin), பிராயிடு, யூங் என்பவர்களின் ஆராய்ச்சிகளின் காரணமாக, உளக்கோளாற்றை விளக்கவும், தீர்க்கவும் கூடியது என ஏற்கப்படுவதாக உளவியல் கருத்து மாறிற்று.

ஆகவே, இன்றைய நிலையில், உளவியல் உடலியல் சார்ந்த இரு தலையாய கருத்துகள் உள்ளன. உளக்கோளாற்றை ஆராயும் வழிமுறையில் இவை பெரிதும் வேறுபட்டாலும், இவ்விரு கருத்துகளும் அறிவியல் முறையைப் பயன் படுத்துவதையே அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன.

# 2. உளக்கோளாறுபற்றிய உளவியல் கருத்து

## (The psychological conception of mental disorder)

உளக்கோளாறு பற்றிய உளவியல் கருத்து என்ன என்பதையும், அக் கருத்து உளக்கோளாறு பற்றிய உடலியல் (physiology) கருத்துடன் என்ன தொடர்புடையது என்பதையும், உளவியல் கருத்தின் நோக்கங்கள், அது பயன் படுத்தும் முறைகள் என்பனவற்றையும் தெளிவாகப் புரிந்துகொள்வது இன்றி யமையாதது. ஆனால், மேற்கூறியவற்றினை நாம் ஆராயவேண்டுமெனின், இன்றைய அறிவியலுக்கு (modern science) அடிப்படையாக விளங்கும் ஆதார உண்மைகளை (fundamental propositions) நாம் ஓரளவு அறிந்திருத்தல் வேண்டும். சரிவரக்கூறினால், அவற்றை அறிய முற்படுவது, இந்நூலின் பொருளுக்குப் புறம்பானவற்றை ஆராய்வதாக அமையும். ஆயினும் இந்த ஆதாரமானவை பற்றிய திட்டவட்டமான கருத்துகளை நாம் முதலில் அறியா திருப்பின், தெளிவான முறையில் உளவியல் கருத்துகளை நாம் எடுத்தாள முடியாது என்பதால், இப்போது தற்காலிகமாகத் தத்துவத்தின் கோட்டையினுள் புகுவதை வாசகர்கள் பொறுப்பீர்கள் என நம்புகிறோம்.

இன்றைய அறிவியல் உளக்கோளாறு பிரச்சினையை இரு முகங்களில் தவிர்க்க முற்படுகிறது என ஏற்கனவே கூறியுள்ளோம். அவற்றுள் ஒன்றான உளவியல் கருத்து, உளக்கோளாறு நிகழ்ச்சியை உள்ளத்தின் பல்வேறு நிலைகள் எனக்கொள்கிறது; மாறாக, மூளையில் ஏற்படும் மாற்றங்களின் வெளியீடுகளே உளக்கோளாறு என உடலியல் கருத்து கொள்கிறது. மேற் கூறியவற்றில் 'அறிவியல்,' 'உள்ளம்,' 'மூளை,' 'உடலியல்,' 'உளவியல்' என்னும் பதங்கள் (terms) பயன் படுத்தப்பட்டிருப்பதை நாம் காண்போம். இச்சொற்களை சாதாரண உரையாடல்களில் சாதாரணமாகவும், தவறாகவும் பயன்படுத்துகிறோம். ஆனால், அப்பதங்கள் தெளிவானதும், திட்டவட்டமானதுமான பொருளுடையவை யாகும்.

அறிவைப்பெற பயன்படுத்தப்படும் ஒரு முறையே அறிவியல் என்பதை எவரும் அறிவர். ஆனால், துறை எதுவாக இருப்பினும் இதே முறையே பயன் படுத்தப்படுகிறது என்பதை நம்மில் பலர் அறிந்திருப்பதில்லை. இரசாயனத் துறையில் (chemistry) ஈடுபட்டுள்ள விஞ்ஞானி ஆராய்வது போன்றே

உளவியலில் ஈடுபடும் விஞ்ஞானியும் (scientist) ஆராய்கிறுன். இவ்வாறு அறிவியல் அனைத்திற்கும் பொதுவான முறை சில திட்டவட்டமான படிகள் (steps) கொண்டது. ஒரு எளிய உதாரணத்தின் மூலம் அதன் தன்மையை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.[1]

வான்கோள் அமைப்பின் (planetary system) இயக்கம் பற்றிய அறிவை நாம் பெற்ற வகையினை எடுத்துக்கொள்வோம். வானநூல் (Astronomy) தோன்றிய துவக்க நாட்களில் கோளங்களின் இயக்கத்தை விளக்குவதற்கென எண்ணிறந்த வினோதமான கருதுகோட்கள் (hypothesis) புனைந்து கொள்ளப் பட்டன. ஆனல், கோப்பர்நிக்கஸ் (Copernicus), டைக்கோபிராகி (Tycho Brahe), கெப்ளர் (Kepler) என்னும் அறிஞர்களின் தோற்றத்திற்குப் பின்னர் இக்கருதுகோட்கள் கைவிடப்பட்டதுடன், மெதுவாக இயங்கினும் சரிவர இயங்கும் அறிவியல் முறையைக்கொண்டு கோள்களின் இயக்கம் ஆராயப் பட்டது. பெரிதும் முயன்று தேவையான உண்மைகளைச் சேகரிப்பதுதான் இம் முறையின் முதற்படி ஆகும். ஒரு குறிப்பிட்ட நாளில் ஒரு குறிப்பிட்ட கோள் வானத்தில் இருக்குமிடம் கவனமாக ஆராயப்பட்டது. அதற்குப் பின்னர் பல நாட்களாக இடைவெளிகளில் இந்த ஆராய்ச்சி மீண்டும் மீண்டும் திருப்பிச் செய்யப்பட்டது. இதன் மூலம் கிடைக்கப்பெற்ற விவரங்கள் ஒழுங்காக வகைப் படுத்தப்பட்டன. இதன் மூலமாக, அக்கோள் தன் இயக்கத்தின்போது அடுத் தடுத்து இருந்த இடங்கள் பற்றிய பதிவு (record) இறுதியில் கிட்டியது. இனி அக்கோள் அடுத்தடுத்து இருந்த இடங்களைச் சுருக்கமாகவும், ஆனல், போதிய தெளிவுடனும் வெளியிடக்கூடிய ஒரு வசதியான சூத்திரத்தைக் (formula) கண்டுபிடிப்பதுதான் அடுத்த படியாகும். ஒவ்வொருகோளும் கதிரவனைச்சுற்றி ஒரு குறிப்பிட்ட வளைகோட்டில் (curve) பயணம் செய்கின்றது எனக் கொள்வோமாயின், நாம் முன்னர் சேகரித்துள்ள விவரங்களுக்கு முற்றிலும் பொருந்தியதாக நம் துணிபு (assumption) அமையுமென கெப்ளர் கண்டார். இவ் வளைகோட்டினை கணக்கியலார் (mathematicians) நீள்வட்டம் (Ellipse) என்பர். உதாரணமாக, ஒரு கோள் ஜனவரி மாதம் முதல் தேதியில் எங்கிருந்தது என்பதும், அதனுடைய இயக்கத்தரமும் நமக்குத் தெரிந்திருப்பின், ஜனவரி மாதம் பதினன்காம் தேதியில் அக்கோள் நீள்வட்டத்தில் எவ்வளவு தூரம் சென்றிருக்கும் என்பதைக் கணக்கிட்டுக் கண்டுகொள்ளலாம். இப்பொழுது நமது பதிவேட்டில் ஜனவரி பதினன்காம் தேதியன்று அக்கோள் இருந்த இடத்தைக் காண்போ மாயின், நாம் கணக்கிட்டறிந்த அதன் இருக்கை நிலையும் (position), உண்மை யாகக் கண்டுதெரிந்த இருக்கை நிலையும் முற்றிலும் பொருந்தி இருக்கக் காண்போம். இத்தகைய சோதனை எப்பொழுதும் இதே முடிவினையே தருவதால், கெப்ளரின் சூத்திரம் ஒரு அறிவியல்விதி (Scientific Law) என ஏற்கப் பட்டுள்ளது.

---

1 இந்த அதிகாரத்தில் தரப்படும் அறிவியலின் முறை பற்றிய கருத்திற்கு, இந்நூலாசிரியர் பேராசிரியர் கார்ல் பியர்சனின் 'அறிவியலின் இலக்கணம்' (Grammar of Science) என்ற நூலிற்கு முக்கியமாகக் கடமைப்பட்டிருக்கிறுர்.

இவ் விதியை இறுதியில் நாம் அடைந்த வகையினைப் பகுத்தாராய்வோமாயின் (analyse) அது அடுத்தடுத்து அமையும் மூன்று படிகள் கொண்டதாக இருக்கும். அவையாவன: (1) உண்மைகளைச் சேகரித்துப் பதிவுசெய்தல் (2) ஒரு தொடராகவோ அல்லது கிரமப்படி அமைவனவாகவோ இவ்வுண்மைகளை வகைப்படுத்தல் (3) கிரமமாக அமையும் இந்த உண்மைகளை மிகச் சுருக்கமாகவும் வசதியாகவும் வெளியிட உதவும் ஒரு சுருக்கமான சூத்திரம் அல்லது 'அறிவியல்விதி'யைக் கண்டுபிடித்தல். இதுவே அறிவியல் பயன்படுத்தும் முறையாகும். பொருள் எதுவாக இருப்பினும் அறிவியல் எப்பொழுதும் பயன்படுத்தும் ஒரே முறை இதுவே.

இப்பொழுது நாம் அறிவியல் முறைக்கு மற்றொரு உதாரணத்தைக் காண்போம். அணுக்கொள்கை (Atomic theory) தோன்றிய நிலையில், அதனை உருவாக்கிய பல்வேறு விதிகள் கண்டுபிடிக்கப்பட்ட முறையை நாம் காணலாம். கெப்ளரின் விண்கோள் விதியில் நாம் கண்ட அதே மூன்று படிகளையும் இரசாயன அறிஞனும் இங்கு பயன்படுத்தினான் என்பது கண்கூடு. முதலாவதாக, உண்மைகளைச்சேகரிக்க வேண்டும் என்று கூறினோம். இரசாயன அறிஞன் இரசாயனப் பொருட்கள் எவ்வாறு சிதைவுறுகின்றன என்பதையும், எவ்வாறு இணைந்து பெரும் பகுதிகளாக மாறுகின்றன என்பதையும் ஆராய்ந்தான். இரண்டாவது படி, கிடைக்கப்பெற்ற உண்மைகளைத் தொடர்களாக வகைப்படுத்துதலாம். சிதைவுறுவதிலும் இணைவதிலும், பங்குபெறும் பொருட்களின் விகிதம் எப்பொழுதும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன என இரசாயன அறிஞன் கண்டான். மூன்றாவது படி, அந்த உண்மைகளை விளக்கும் அறிவியல் விதியை உண்டுபண்ணுதலாகும். இதனை டால்ட்டன் (Dalton) செய்தார். இரசாயனப் பொருட்கள் நுண்ணிய தனிமங்கள் (elements) அல்லது 'அணுக்கள்' இணைவதால் உண்டாகின்றன. இந்த அணுக்கள் சில எளிய விதிகளை ஒட்டியே இணைகின்றன என்னும் கருதுகோளைத் தம் கருத்தில் கொண்டார். இவ்வாறு அவர் பெற்ற சூத்திரங்களின் தொகுப்பே பிரபலமான 'அணுக் கொள்கையாகும்.' அவற்றின் மூலமாக இரசாயனக் கலப்பு, இரசாயனச் சிதைவு என்பனபற்றிய எல்லா உண்மைகளையும் (ஏற்கெனவே பரிசோதனைகள் (experiments) மூலமாகப் பெறப்பட்டவை) விளக்க முடிந்ததுடன், மேற்கொண்டு இவ்வகையான பரிசோதனைகள் நடத்தப்படின் என்ன நேரும் எனவும் அவரால் முன்னறிவிக்கவும் (predict) முடிந்தது. டால்ட்டனின் கொள்கை எண்ணிறந்த சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, அனுபவ உண்மைகளுக்கு ஏற்பவே அது அமைகிறது என ஒவ்வொரு முறையும் நிரூபிக்கப்பட்டுள்ளது. கெப்ளரின் நீள்வட்டங்களைப் போன்றே, அணுக்கொள்கையில் அடங்கியுள்ள விதிகளும் நிலை நிறுத்தப்பெற்ற அறிவியல் விதிகள் என இப்பொழுது கருதப்படுகின்றன. உண்மையில், உலகெங்கணும் உள்ளோர் அக்கொள்கையை ஏற்று அதனைக் கற்பிக்கின்றனர். மிகப் பெருமளவில் பயன் தருவதாக இக்கொள்கை உள்ளது; எண்ணிறந்தனவற்றை விளக்குவதாகவும் உள்ளது. ஆனால், இதே காரணங்களால், ஒரு சாதாரண மனிதர் அக்கொள்கையின் தன்மையைத் தவருகப் புரிந்துகொள்கிறார்.

கெப்ளரின் நீள்வட்டக்கொள்கையும், டால்ட்டனின் அணுக்கொள்கையும், அறிவியல் முறையைப் பயன்படுத்தியே பெறப்பட்டிருப்பினும், அவற்றினிடையே ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. இரண்டாவது, உதாரணத்தில் ஒரு புதிய காரணி (factor) தலைகாட்டுகிறது. டால்ட்டன் ஒரு அறிவியல் விதியைத் தோற்றிவித்ததோடு, அவ்விதிகள் எவற்றைப்பற்றிக் கூறுகின்றனவோ அப் பொருட்களையும் புனைந்துள்ளார். அணுக்கள் என்பன உண்மையில் இருக்கின்றனவா, இல்லையா என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. அவரது அறிவியல் சார்ந்த கற்பனையில் அணுக்களை அவர் தோற்றுவித்துக்கொண்டார். ஒளியின் அலைவுக்கொள்கைக்கும் (Wave theory of light) மேற்கூறிய கூற்று பொருந்தும். ஈதர் (Ether) என்பதையும் அதனுடைய அலைவுகளையும் யாரும் உண்மையில் கண்டதில்லை. ஒளி, வெப்பம் என்பனவற்றின் உண்மைகளை விளக்கும் பொருட்டு அறிவியல் அறிஞன் அவற்றைப் புனைந்துகொண்டான். ஆனால், அவை உண்மையில் இடம் பெறவில்லை என்பது அறிவியலில் அவை கொண்டுள்ள பயனை ஒரு சிறிதும் பாதிக்கவில்லை. எண்ணிறந்த உண்மைகளை மீள் ஆராயவும், முன்னறிவிக்கவும் அவை நமக்கு உதவியுள்ளன. அறிவியல் விதியிடம் இருக்கவேண்டிய ஒரே தன்மையும் இதுவே.

மேற்கூறிய கூற்றுக்களில் அடங்கியுள்ள வேறுபாட்டினை 'நிகழ்ச்சிசாருவது (phenomenal), 'கருத்துசாருவது' (conceptual) என்னும் பதங்களைக்கொண்டு வெளியிடலாம். 'நிகழ்ச்சிகள்' (phenomena) என்பன அனுபவ உண்மைகளாகும். இவற்றை உண்மையில் ஆராயமுடியும். 'கருத்துகள்' (concepts) என்பன மீள் ஆராய்ச்சி செய்வதற்காக—அதாவது அனுபவ உண்மைகளை விளக்குவதற்காக—அறிவியல் அறிஞரால் புனையப்படுவனவாகும். இரசாயனப் பொருட்களும், சாயமேறிய பொருட்களும் (Coloured objects) நிகழ்ச்சிகளுக்கு உதாரணங்களாகும். மாறாக, அணுக்களையும், ஈதர் அலைகளையும் கருத்து களுக்கு உதாரணமாகக்கூறலாம்.

இப்பொழுது நாம் அறிவியல் முறையின் வர்ணனையை முடிக்கும் நிலையில் உள்ளோம். அறிவியல் முறை கீழ்வருவனவற்றைக் கொண்டமைவதாகும். (1) நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பதிவு செய்தல் (2) பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளை குழுக்களாகவோ அல்லது தொடர்களாகவோ வகைப்படுத்தல் (3) இத் தொடர்களைத் தொகுப்பான வகையிலும், வசதியான முறையிலும் வெளியிட உதவும் ஒரு சூத்திரத்தைக் கண்டு பிடித்தல். இந்தச் சூத்திரம் முற்றிலும் கருத்து சாரும் தன்மையுடையதாக இருக்கலாம். அதாவது, அவை இயற்கையில் உண்மையில் இடம் பெற்றிருப்பதை நிரூபிக்க முடியாத கற்பனைப் பொருட்கள் பற்றியதாக இருக்கலாம். சூத்திரம் பயனுடையதாக இருக்கவேண்டும் என்பது மட்டுமே அதனிடமிருந்து எதிர் பார்க்கப்படுவதாகும். நாம் நடைமுறையில் காணும் உண்மைகளை அது விளக்க வேண்டும் என்பதுடன், வருங்காலத்தில் எழக்கூடிய உண்மைகளையும் முன்னறிவிக்க அது நமக்கு உதவவேண்டும். எனவே, உளக் கோளாறு பற்றிய ஆராய்ச்சி அறிவியல் ஆராய்ச்சியே என ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமெனின், நாம் இந்த முறையையே பயன்படுத்த வேண்டும். நமது பணியி

லுள்ள பொதுவான படிகள் எப்படிப்பட்டன என்பதும் இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது. ஆயினும், நாம் தவிர்க்க வேண்டிய மற்றொரு தொல்லை உண்டு. அதாவது, ஆராய்ச்சிக்குப் பயன்படுத்த ஒரேயொரு முறை மட்டும் தான் உண்டெனின், உடலியல் கருத்திற்கும் உளவியல் கருத்திற்கும் இடையேயுள்ள வேறுபாடுதான் என்ன?

உளக்கோளாறு நிகழ்ச்சிகள் என்பன நனவின் (Consciousness) நிகழ்ச்சிகளே என்பதை உடலியல் கருத்து ஏற்றுக்கொள்கிறது. ஆனால், அந்த உளச் செயல்களுக்கு ஒத்த மாற்றங்கள் மூளையில் உளச்செயல்கள் தோன்றும்போதே தோன்றிவிடுகின்றன என இக் கருத்து துணிபு கொள்வதுடன், தனது ஆராய்ச்சிகளையெல்லாம் இந்த மூளை மாற்றங்களிலேயே செலவிடுகிறது. நனவு உண்மை பற்றிய நிகழ்ச்சிகள் அதற்கு நேரடியாக முக்கியத்துவம் வாய்ந்தன அல்ல. உளக் கோளாறின்போது மூளையில் ஏற்படும் உண்மையான மாற்றங்களைக் காண்பதும், ஒவ்வொரு உளநோய் நிலையோடும் அதற்குரிய மூளை மாற்றத்தைத் தொடர்புபடுத்திக்காண்பதுவுமே உடலியல் கருத்தின் முதல் குறிக்கோளாகும். இம்மூளைச் செயல்களைச் சுருக்கமாகவும் தொகுப்பான முறையிலும் வசதியாக வெளியிடும் 'விதிகளைக்' கண்டு பிடிப்பதே அதனது இறுதி நோக்கமாகும். இவ்விதிகளில் உடலியல் பதங்களைத் தவிர, வேறு எதுவும் இடம் பெறுது என்பது திண்ணம். நனவுபற்றிய பதங்களுக்கு அங்கு இடமே இல்லை.

இதற்கு மாறாக, உளவியல் கருத்தானது முதலிலிருந்தே முற்றிலும் வேறான் வழிச்செல்கிறது. உளக்கோளாறில் காணப்படும் நனவுச்செயல்களையே, தான் ஆராயவேண்டிய உண்மையான நிகழ்ச்சிகள்என அது கொள்கிறது. இந்த நனவுச் செயல்களைச் சுருக்கமாகவும் முழுமையாகவும் விவரிக்கத்தக்க வசதியான 'விதிகளைக்' காண்பதையே அது தனது இறுதி நோக்கமாகக் கொள்கிறது. இவ் விதிகளில் இடம் பெறும் பதங்கள் அனைத்தும் உளவியல் பதங்களாக மட்டுமே இருக்கும். மூளைபற்றிய பதங்களுக்கு அவற்றில் இடமிராது.

உடலியல் கருத்து அல்லது உளவியல் கருத்து என்பனவற்றால் பெறப்படும் இறுதி 'விதிகளில்' இவற்றின் பதங்களைக் கலக்கக்கூடாது என்பது மிகவும் முக்கியமானது. உடலியல் விதிகளில் உளவியல் பதங்களும், உளவியல் விதிகளில் உடலியல் பதங்களும் இடம் பெறுதல் கூடாது. உதாரணமாக, மூளை அணுக்கள் (brain cells), 'எண்ணங்கள்' (ideas) என்னும் பதங்கள் கலக்கப்படுமாயின் வெறும் குழப்பமே தோன்றும். நமது இக்கூற்றை வாசகர் ஒரு சித்தந்தமாகவே (dogma) ஏற்றுகவேண்டும். இந்த உண்மையைப் போதிய அளவில் நிரூபித்துக் காட்ட இச்சிறு நூலில் இடமில்லை.[1]

---

1 அறிவியல் முறையின் மூன்றாவது படியான கருத்து விளக்கங்களில் மட்டுமே 'மூளை அணுக்கள்', எண்ணங்கள் என்பனவற்றைக் கலக்கக்கூடாது என்பது சரிவரப்பொருந்தும். நிகழ்ச்சிகளின் அடுத்தடுத்த நிலைகளை மட்டுமே பதிவு செய்யும் முன்னைய நிலைகளில் இவ்விரு வகைப் பதங்களையும் கலப்பதற்குத் தடை எதுவுமில்லை. உடலியல், உளவியல் கருத்துகளின் தன்மையையும் அவற்றிவிடையேயுள்ள தொடர்பினையும் இன்னும் விவரமாகக்காண மாக்மில்லன் கம்பெனியாரால் 1927 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள இந்நூலாசிரியரின் உளநோய்க்கூறு இயல் (Psycho pathology) என்ற நூலைக்காண்க.

உடலியல் கருத்திற்கும் உளவியல் கருத்திற்கும் இடையேயுள்ள உறவினைக் காணவேண்டுமாயின், உள்ளம் (mind), மூளை என்பனவற்றிற் கிடையேயுள்ள தொடர்பினைக் காணவேண்டியதாகிறது. இத்தொடர்பு பற்றிய ஆய்வுகளில் பெருமளவில் கருத்து வேறுபாடுகள் இருப்பதுடன், அந்த ஆய்வுகள் தத்துவத் துறையைச் சார்ந்தனவுமாகும். எனவே, அவற்றை நாம் இங்கு விவரிப்பதற்கில்லை அறிவியல் கண்ணோட்டத்தினின்று காணுமிடத்து, நாம் ஏற்கெனவே இவற்றிடையே காட்டியுள்ள எளிய வேற்றுமையைத் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்பதே போதுமானது.

இந் நூலில் அடங்கியுள்ள விவரங்களை, அறிவியல் முறையின் மூன்று படிகளுக்கு ஏற்பக் கிரமமாக அமைத்துத் தர நாம் முயன்றுள்ளோம். மூன்றும் அதிகாரம், நாம் நோயாளிகளிடம் காணக்கூடிய உளக்கோளாறு நிகழ்ச்சிகளை விவரிக்கிறது. நான்காம் அதிகாரத்தில் இவற்றைக் குழுக்களாகச் சேகரித்து, ஒழுங்குபடுத்திப் பின்னர் வகைப்படுத்தியுள்ளோம். ஐந்தாம் அதிகாரத்திலும் அதற்குப் பின்வரும் அதிகாரங்களிலும் இந்த உண்மைகளை, அதாவது நாம் காணும் நிகழ்ச்சிகளைத் தம்முள் அடக்கும் பல்வேறு உளவியல்விதிகளை விளக்க முற்பட்டுள்ளோம். இந்த நிலையில் கருத்துசார் உளவியல் புகுத்தப்பட்டுள்ளது. நிகழ்ச்சி சாருவன, கருத்தில் எழுவன என்பனவற்றிற் கிடையே உள்ளது என நாம் ஏற்கெனவே விளக்கியுள்ள வேறுபாட்டை வாசகர் போதிய அளவில் புரிந்து கொண்டிருப்பாரெனின், அக்கடினமான பகுதியை ஓரளவு தெளிவாகவே புரிந்து கொள்ள முடியும். உண்மையான நிகழ்ச்சிகளில் இடம் பெறுவன என நிரூபிக்க முடியாத கருத்துகளைக்கூட, இன்றைய உளவியல் பயன்படுத்துகிறது என்பதை வாசகர் தெரிந்து கொள்வர். பௌதீக நூலில் இயக்கம் (motion) என்ற நிகழ்ச்சியை விளக்குவதற்காக வலிமை (force), ஆற்றல் (energy) என்னும் கருத்துகள் பயன்படுத்தப்படுவதைப்போன்றே, காணக்கிடைக்கும் சில நிகழ்ச்சிகளை விளக்குவதற்காகச் சிக்கல்கள் (complexes), 'ஒடுக்குதல்' (repression) என்னும் கருத்துகளை உளவியல் பயன்படுத்துகிறது, மேலும் நனவிலி உளச் செயல்கள் (unconscious mental processes) போன்ற அருவக் (abstract) கருத்துகளையும் உளவியல் பயன்படுத்துவதை வாசகர் காண்பர். மேலே குறிப்பிடப்பட்ட கருத்தில், தனியவனுக்கு முற்றிலும் தெரியாத உளச் செயல்கள் அவனிடம் உள்ளன என நாம் துணிபுகொள்ள வேண்டியிருக்கிறது. இது உளவியல் அடிப்படையில் இருக்கமுடியாத ஒன்றுபற்றிய துணிபுபோல முதலில் தோன்றலாம். ஒரு உளச்செயல் இருக்குமாயின், அது நனவில் (consciousness) இடம்பெற்றே யாகவேண்டும் என்பது போலவும் தோன்றலாம். உண்மை நிகழ்ச்சியில் இடம் பெறுகிறது என்று உறுதியாகக்கூற முடியாத ஒரு கருத்தையே நாம் எடுத்தாளுகிறோம் என்பதனையும், அக் கருத்து பௌதீக அறிஞன் ஈதர் பற்றிக் கொள்ளும் கருத்தைப்போன்ற ஒரு பொதுமைக் கருத்தே

(generic) என்பதையும் வாசகர் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும், எவ்வாறு பளுவற்றதும், உராயும் தன்மையற்றதுமான ஈதர் என்பது நிகழ்ச்சியில் இடம் பெற முடியாதோ அதேபோன்றுதான் நனவிலி உளச்செயல் என்பதும் இருக்கமுடியாத ஒரு நிகழ்ச்சி என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும். மேற்கூறிய இரு உதாரணங்களிலும், பயன்படுத்தப்பட்டுள்ள கருத்து நமது அனுபவ உண்மைகளை முழுமையாகவும் வசதியான முறையிலும் தொகுத்து விளக்க உதவுவதாலும், அறிவியலில் தலையாய முறையில் இருக்கவேண்டிய பயனுடைய தன்மையைப் பெற்றிருக்கிறது எனக் காணப்படுவதாலும், அறிவியல் கொள்கை என அவை கருதப்படுவதற்கு உரிமை பெறுகின்றன.

1 நனவிலி உளச்செயல்கள், கருத்து நிலையில் தோற்றுவிக்கப்படுவன என்ற கருத்தை உளப் பகுப்பாய்வுக் கோட்பாட்டு மரபினர் (Psychoanalytic School) ஏற்பதில்லை. பிறரது நனவுச் செயல்களை நாம் எவ்வாறு உய்த்துணர்கிறோமோ (inference) அவ்வாறே நனவிலி உளச்செயல்களும் உய்த்துணரப்படுகின்றன என அவர்கள் கருதுகின்றனர். இதனைப்பற்றி விவரமாகக்காண எமது 'உளநோய்க்கூறு இயல்' (Psycho pathology) என்ற நூலின் 57-ஆம் பக்கத்திலுள்ள குறிப்பைக் காண்க.

# 3. உளக்கோளாற்று நிகழ்ச்சிகள்

உளக்கோளாற்று நிகழ்ச்சிகளில் உளவியல் கருத்துகள் எவ்வாறு பொருந்துகின்றன என விளக்குவதும், அந்நிகழ்ச்சிகள், திட்டவட்டமான உளவியல் விதிகளுக்கேற்ப இயங்கும் திட்டவட்டமான உளவியல் காரணங்களினுலே ஏற்படுகின்றன எனக்காட்டுவதுமே இப்பொழுது நம்முன் உள்ள கடனுகும்.

ஆனல், துவக்கத்திலேயே நாம் ஒரு தடையைக் காண்கிறேம். இது நாம் விவரிக்கத் தேர்ந்தெடுத்துக்கொண்டுள்ள பொருளிற்குத் தனிப்பட்ட முறையில் சார்ந்ததல்ல. என்ருலும், அப்பொருளை நாம் விவரிக்கவேண்டியிருக்கும் நிலையின் காரணமாக அதிக அளவில் தொல்லை தருகிறது. உளக்கோளாற்று நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் விதிகளை மட்டுமின்றி, பெருமளவில் அந்நிகழ்ச்சிகளையே நமது வாசகர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர் என நாம் துணிபு கொள்ள வேண்டியதிருக்கிறது. 'நரம்பு நோய்கள்' (Neuroses) எனப்படும் சிறுதிறவகை உளக்கோளாறுகளில் காணப்படும் அறிகுறிகளைப் பெரும்பாலான வாசகர்கள் ஓரளவேனும் தெரிந்துகொண்டிருப்பர். ஆனல், 'பித்து' (Insanity) என்பதன் கீழ் அடங்கும் தீவிரவகையான உளக்கோளாறுகளில் காணப்படும் அறிகுறிகளை நடைமுறையான வகையில் ஒரு சிலர் மட்டுமே தெரிந்துகொண்டிருப்பர். பித்து நோயாளியைப்பற்றி பொதுமக்களுள் பெரும்பாலானவர் கொண்டுள்ள கருத்து மிகைப்படுத்தப்பட்டதாகவும், தவருனதாகவுமே உள்ளது. எனவே, பித்துநோயாளியிடம் காணப்படும் அறிகுறிகளை நாம் விளக்க முற்படுவதற்கு முன்னர், இத் தவருன கருத்தைத் திருத்துவது அவசியமாகும். மேலும் உண்மையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப்பற்றி மேலெழுந்தவாரியாகவேனும் நம் வாசகர்கள் தெரிந்து கொண்டிருக்கிருர்கள் என்பதை நாம் உறுதி செய்துகொள்ளவேண்டும். இந்த ஆயத்தப் பணியைச் செய்வதை நோக்கமாகக்கொண்டே இந்த அதிகாரம் அமைகிறது.

இச்சிறு நூலின்கண் எண்ணிறந்த பித்துவகைகளின் அறிகுறிகளை முழுமையாகவும், ஒழுங்காகவும் விளக்குவது அரிது எனக் கூறத் தேவையில்லை. எல்லா உளமருத்துவ மனைகளிலும் காணக்கிடைக்கும் முக்கியமான சில வெளியீடுகளை மட்டும் விளக்குவதில் நம் கருத்தைச் செலுத்துவதுடன் நாம் மனநிறைவு பெற வேண்டியதுதான். எனவே, நமது விளக்கம் விரிவாக இருக்காது என்பதுடன்

அவற்றை ஒழுங்காக்கவும் சீரானவகையில் குழுமைப்படுத்தவும் நாம் அதிக அளவில் முயலமாட்டோம். உள மருத்துவ மனைக்குச்செல்லும் ஒருவர் பெறுவது போன்றே, குழப்பமான தோற்றத்தைத் தருவதே, நமது முயற்சியின் முடிவாக இருக்கக்கூடும். ஆனால், பித்துநோய்பற்றிய சில நடைமுறை உண்மைகளையும், அவற்றை விளக்கப் பயன்படுத்தப்படும் கலைச்சொற்களையும் (technical terms) வாசகருக்குத் தெரிவிப்பது போதுமானது. மேலும் பின்வரும் அதிகாரங்களுக்கு வாசகர் வரும்போது அவரிடமுள்ள குழப்பமான கருத்தும் படிப்படியாக நீங்கும் என நம்பப்படுகிறது. அங்கு ஒவ்வொரு அறிகுறியும் அதற்குரிய பின்னணியைப் பெறுவதால், இன்னும் ஒழுங்கான தோற்றத்தை நாம் பெறுவோம்.

உள்ளத்தை முழுவதாகப் பாதிப்பன எனக் கருதப்படும் சில பொதுவான மாற்றங்களை முதலில் விரித்துரைக்கிறோம். அதன் பின்னர் தனி அறிகுறிகளை எடுத்துரைப்போம். இவ்வாறு விவரிக்கத் தேர்ந்தெடுக்கப்படும் அறிகுறிகள் அவை அடிக்கடி தோன்றுவன என்ற காரணத்தினாலோ அல்லது அவற்றில் சிறப்புறக் காணப்படும் விநோதமான தன்மையின் காரணமாகவோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இங்கு வர்ணிக்கப்படும் நிகழ்ச்சிகள் தம்முளே தனித்து நிற்பன அல்ல என்பதையும், ஒரே நோய் வரலாற்றில் அவற்றுள் பல இணைந்து காணப்படக்கூடும் என்பதையும் வாசகர்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நாம் முதலில் விளக்கப்போகும் பொதுவான மாற்றம், அளவு சார்ந்து நிற்கும் (Quantitative) ஒரு உளக்குறையாகும். இந்நிலையில், உள்ளத்தின் எல்லா செயல்களிலும் உளத்திறன் குன்றுதல் ஏற்படுகிறது. நோயாளி சிந்திக்க முடியாதவனாகவும், செயல்பட முடியாதவனாகவும், திறம்பட நினைவுகூர முடியாதவனாகவும் இருப்பதுடன், அவனது நுண்ணறிவும் (intelligence) சராசரியை விடக் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாக உள்ளது. அவன் பிறழ்வான வகையில் மதியீனனாகக் காணப்படுகிறான். அளவுசார்ந்து அமையும் இக்குறைபாடு தனியவனது பிறப்பு சார்ந்து வருவதாகவும் (congenital), அவனால் பெறப்பட்டதாகவும் (acquired) இருவகைகளில் தோன்றக்கூடும். பிறப்பு சார்ந்து வருவதை உளப்பற்றுக்குறை (mental deficiency) எனவும், தனியவனால் பெறப்படுவதை மனத்திறக்கேடு (dementia) எனவும் கூறுவர்.

உளப்பற்றுக்குறையில் நோயாளி தனது பிறப்பின்போது இயல்பான உளத்திறன்கள் பெறாதவனாக இருப்பதுடன், அவனது உளச்சக்திகளும் ஒருபோதும் முழு வளர்ச்சி பெறுவதில்லை. இவ் வளர்ச்சியற்ற நிலை, உளச்சக்திகள் ஒரு சிறிதும் இல்லாததுபோன்ற நிலையினின்று, சராசரிக்கு ஒரு சிறிது மட்டுமே குறைந்த நுண்ணறிவு உடைய நிலை வரையிலும் பலவாறான படிகளில் (grades) அமையலாம். மிகக் கடைநிலையிலுள்ள நோயாளிகள் ஒரு குழந்தையின் உளத்திறனுக்குமேல் பெற்றிருப்பதில்லை. மொழித்திறனற்றோராகவும், தம் சூழ்நிலையோடு மிக எளிய வகையான பொருத்தப்பாடுகளை (adaptation) மட்டுமே

செய்து கொள்ளக்கூடியவர்களாகவும் இருப்பதுடன், இவர்களது வாழ்நாளெல்லாம் ஒரு குழந்தைக்கு வழக்கமாகத்தரப்படும் பராமரிப்பும் கவனிப்பும் தேவையாகிறது. வேறு சிலர் பேசக் கற்றுக்கொள்கின்றனர்; ஆனால், அவர்களால் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொள்ள முடிவதில்லை. இன்னும் சிலர் இந்நிலையையும் தாண்டி இருப்பதுண்டு. ஆனால், இவர்களது அறிவும் மிக எளிய நிலையில் அமைகிறது. பொதுவான எண்ணங்கள் எதையும் இவர்கள் பெற முடிவதில்லை. தம் வாழ்விற்கு வேண்டிய வருவாயைத் தாமே ஈட்ட முடியாதவர்களாகவும், ஒரு நாட்டின் குடிமக்களாக (citizens) வாழமுடியாதவர்களாகவும் இவர்கள் இருக்கின்றனர். உளப்பற்றுக்குறை என்பது மூளை வளர்ச்சி குன்றுவதன் காரணமாகவே தோன்றுகிறது என எளிதில் காட்டக்கூடியதாக இருக்கிறது.

உளத்திறன் கேட்டில் உளத்திறன் குறைபாடு தனியவனால் பெறப்படுகிறது. இந்நோயாளிகள் ஒரு காலத்தில் இயல்பான திறமைகளைப் பெற்றிருந்து, பின்னர் இத்திறமைகள் சிரழிவுக்கு உள்ளாகப் பெற்றுள்ளனர். மூப்புப் பருவத்தில் இயல்பாக நுண்ணறிவு படிப்படியாகக் குன்றுதலை இச்செயலுக்கு மூலவகையாகக் (prototype) கூறலாம். மூப்பில் ஏற்படும் உளச்சீரழிவு மிகையான அளவில் அமையும் வரலாறுகள், உளத்திறன்கேட்டிற்குச் சிறந்த உதாரணங்களாகத் துலங்குகின்றன. இத்தகைய நோய் வரலாறுகளைக் ‘கிழப் பருவ உளத்திறன்கேடு’ (Senile dementia) என்பர்.

இவ்விநோத நிகழ்ச்சிகள் அடங்கிய வரலாற்றை முடிக்கும், எல்லாவற்றிற்கும் இறுதியான காட்சி, இரண்டாம் குழந்தைப் பருவமாகும். இது வெறும் சூன்ய நிலையேயாம். பொக்கை வாய், குருட்டுக் கண்கள், சுவை உணர முடியாத நிலை, எல்லாம் வெறும் பொய்மை என்பனவே இப்பருவத்தில் காணக்கிடைப்பனவாம் என ஷேக்ஸ்பியர் மிக அழகாக விவரித்துள்ளார்.

ஆனால், மேற்கூறியதுபோன்ற அளவு சாரும் உள இழப்பு எந்த வயது நிலையிலும் தோன்றலாம். உளக்கூர்மை எளிய முறையில் மழுங்குவதினின்று நோயாளி ஒரு மிக எளிய செயலைப் புரிய முடியாது அமையும் தீவிரமான உளத்திறன்கேடு வரையிலுமாகப் பல தரங்களில் இது அமையலாம். பெறப்படும் இந்த உளத்திறன்கேடுகளும் உளப்பற்றுக்குறையைப் போன்றே, மூளையில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களுடனேயே தொடர்புடையனவாகக் கருதப்படுகின்றன.

பித்துநோய்களில் காணப்படும் மற்றொரு வகையான பொது உளமாற்றம் அளவு சாராது, தன்மை மாறி அமைவதாக உள்ளது. இதனைத் தனது தற்காலிகமான அல்லது ஓரளவு நிரந்தரமான அனுபவம் பற்றி உள்ளத்தின் பொதுவான போக்கில் ஏற்படும் மாற்றம் என நாம் கருதலாம். கிளர்ச்சி (excitement), சோர்வு (depression), உணர்விழப்பு (apathy) என்பன இவ்வகையினுள் அடங்கும்.

கிளர்ச்சி என்பதன் பொருளை நாம் ஒவ்வொருவரும் அறிவோம். எனவே, அப் பதத்தை நாம் மீண்டும் வரையறுக்கத் தேவையில்லை. பித்துநோயில் இந்த அறிகுறி அடிக்கடிக் காணக்கிடைக்கிறது. இதே நிகழ்ச்சியை இயல்பான உள வாழ்விலும் காணலாம். ஆனால், மிஞ்சிய வகையில் வெளியாதல், போதிய காரணம் இன்றித் தோன்றுவதுபோலக் காணப்படுதல், நோயாளியின் உண்மையான நிலை, சூழ்நிலை என்பனவற்றிற்குப் பொருத்தமில்லாது அமைதல் என்பனவற்றில் இயல்பான உளவாழ்வில் காணப்படுவதினின்று வேறுபடுகிறது. பித்துநோயில் ஒரு அறிகுறியாகக் காணப்படும் கிளர்ச்சி பல வகைகளில் அமைவதுண்டு. ஒவ்வொரு வகையும் மற்ற வகைகளினின்று ஏறத்தாழ எல்லா வகைகளிலும் வேறுபடினும், இந்நிலையில் உள்ளம் பிறழ்வான அளவில் சக்தியை வெளியிடுகிறது என்பது, இவை எல்லாவற்றிற்கும் பொதுவான அடிப்படை உண்மையாகும். இவற்றுள் மிகச் சாதாரணமாகக் காணக்கிடைக்கும் ஒரு வகையை வீறுக்கிளர்ச்சி (manic excitement) என்பர். ஒரு உண்மையான நோய் வரலாற்றைக் கூறுவதின் மூலம் இவ்வகையைத் திறம்பட விளக்கலாம்.

இந்நிலையில் நோயாளி தொடர்ந்து இயங்கிய வண்ணமாக இருக்கிறார். ஒவ்வொரு வினாடியும் ஒரு புதிய செயலில் ஈடுபடும் நோயாளி, மறு வினாடியே அதனைக் கைவிடுகிறார். அவர் செயலுறாது இருப்பதே இல்லை. இவரிடம் தொடர்ச்சியாக ஒரு செயல் அழுத்தம் (Press of activity) காணப்படுகிறது. இடைவெளி எதுவுமின்றி வேகமாகப் பேசுகிறார். ஒரு பொருளினின்று மற்றொரு பொருளுக்குத் தொடர்பு எதுவுமின்றித் தாவிய வண்ணமாக இருக்கிறார். தொடர்புடைய வகையில் சிந்தனையில் ஈடுபட முடியாதவர் போன்று காணப்படுகிறார். தற்செயலாக நிகழும் எல்லா நிகழ்ச்சிகளும் அவரது கவனத்தைக் கவர்கின்றன. ஆனால், விரைவில் அவற்றினின்று அவரது கவனம் கலைந்து விடுகிறது. பொதுவாகத் தன்னைக் குறித்தும் தனது சூழ்நிலையைக் குறித்தும் பிறழ்வான முறையில் மகிழ்ச்சியுடையவராகவும் மதியீனமான வகையில் மனநிறைவு உடையவராகவும் காணப்படுகிறார். அவரது உளப்போக்கும் (mood) அவரது கவனத்தைப் போன்றே விரைவில் மாறும் தன்மை கொண்டு காணப்படுகிறது. சிறிது சீண்டப்பட்டால் கூட சினம் கொள்கிறார்.

இத்தகைய நடத்தை மிகையானதாகவும், சீரற்றதாகவும் இருப்பினும், சில சூழ்நிலைகளில் இதனை நாம் மன்னிக்கத்தக்க நடத்தை எனக் கருதக்கூடும். ஆனால், அந்நோயாளி உடல் நலிந்து மோசமான உடல் நிலையில் உள்ளான் என்பதையும், அண்மையில் பயங்கரமான அழுத்தங்களுக்குத் தொடர்ச்சியாக ஆட்பட்டுள்ளான் என்பதையும் அவனும் அவனது குடும்பத்தினரும் செல்வநிலையில் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ளனர் என்பதையும், இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் தற்போது அவன் உளமருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்படும் நிலையில் உள்ளான் என்பதையும் நாம் காணும்போது, அவனது அப்போதைய நடத்தை நம்மால் முற்றிலும் புரிந்து கொள்ளமுடியாததாக மாறிக் காணப்படுகிறது, அவனது வாழ்வின் நடைமுறை உண்மைகளுக்கு அவனது நடத்தை சிறிதும்

பொருத்தமற்றுக் காணப்படுகிறது, எனவேதான், அவனது நடத்தை திட்டவட்டமாகப் பித்துநிலையானது எனத் தயக்கமின்றி நாம் முடிவு செய்து விடுகிறோம்.

பிற வகைகளில் கிளர்ச்சி மிதமிஞ்சியதாக இருக்கிறது. அவனிடம் காணப் படும் மகிழ்ச்சி, திடீரெனக் கடுஞ்சினமாக மாறிவிடக்கூடும். நோயாளி தன்னைச் சுற்றிலுமுள்ளவர்களைத் தாக்குகிறான். அவனோடு வாதாடுவதும் அவனது அறி வைப் பயன்படுத்துமாறு வேண்டுவதும் பயனற்றவை. 'வெறியன்' (maniac) என்ற பொதுக்கருத்திற்கு ஏறத்தாழ ஏற்ற முறையில் அவன் காணப்படுகிறான்.

கிளர்ச்சி நிலைக்கு நேர் எதிர்மாறானது எனச் சோர்வு நிலையினை (depression) நாம் கருதலாம். நோயாளி ஆமை வேகத்தில் செயல் புரிகிறான். சிந்தனை செய்வது அவனுக்குக் கடினமாக இருக்கிறது; மகிழ்வற்றவனாகவும் துயரார்ந்தவனாகவும் அவன் காணப்படுகிறான்.

தன்மை சார்ந்து அமையும் மூன்றாவது பொதுமாற்றம் உணர்விழப்பாகும். இந்நிலையில் நோயாளியிடம் கிளர்ச்சியோ அல்லது சோர்வோ காணப்படுவதில்லை. இவை எதனாலும் அவன் முற்றிலும் பாதிக்கப்படாதவனாக உள்ளான். அக்கறைகள், விருப்பங்கள், பேரவாக்கள் என்பன எவையும் இல்லாதவன் போன்று காணப்படுகிறான். 'மனவெழுச்சி சாரும் உளத்திறக்கேடு (emotional dementia) எனப்படும் நிலையில் உணர்விழப்பு மிகச்சிறப்புறக் காணப்படுகிறது. மருத்துவ மனைகளில் நிரந்தரமாகத் தங்கும் பல நெடுநாளைய நோயாளிகளிடம் இந்நிலை காணப்படுகிறது. உணர்ச்சியற்ற முகத்துடனும், தலையைத் தொங்க விட்டவண்ணமும் மருத்துவ மனை அறை மூலையில் உட்கார்ந்திருக்கிறான். அவன் எந்தவிதமான செயல்களிலும் ஈடுபட முனைவதில்லை. அவனைச் சுற்றிலும் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் அவன் அக்கரை காட்டுவதில்லை. அவன் எதையும் கவனியாதவன் போன்று காணப்படுகிறான், அவனிடம் நாம் பேச முற்படின் பெரும்பாலும் அவன் பதிலிறுப்பதில்லை; பதிலிறுப்பினும் ஒரு சொல்லில் பதில் தருகிறான்; அதுவும் நமது கேள்விக்கு முற்றிலும் பொருத்தமற்றதாக இருக்கிறது.

இந்நோயாளியை முதலில் காணும்போது, இந்த அதிகாரத்தில் முன்னர் விவரிக்கப்பட்டது போன்று, உளத்திறன் அளவில் குறைவுபடும் உண்மையான உளத்திறன்கேடு போன்று தோன்றும். ஆனால், அந்நோயாளியின் உள்ளம் பற்றிய உட்காட்சியை (insight) நாம் பெறும்போது, அவனிடம் காணப்படும் உளத்திறன்கேடு பெரும்பாலும் வெளிப்படையாய் மட்டும் அமைவதே என்று காண்போம். நாம் உரிய முறையில் அவனைத் தூண்டுவோமாயின், அந்நோயாளியால் கவனிக்கவும், நினைவுகூரவும், நுணுக்கமான சிந்தனைத் தொடர்களில் ஈடுபடவும் முடிகிறது. ஆழ்ந்த மனவெழுச்சிசார் உணர்விழப்பு இருப்பதன் காரணமாகவே நோயாளி அந்நிலையில் உள்ளான். நோயாளியிடம் எந்தவிதமான அக்கரைகளும் விருப்பங்களும் இல்லாததன் காரணமாகவே அவன் முற்றிலும் செயலிழந்து இருப்பதுடன், தன் உளப்பொறிகளையும் (mental faculties) பயன்படுத்தாது

இருக்கிறன். நமது வாழ்வில் ஒவ்வொரு வினடியும் எண்ணிறந்த அற்பமான காரியங்களைக் கவனியாதும் காணுதும் நாம் இருப்பதில்லையா ? அதுபோன்றே வெளி உலகு அனைத்தும், உளச்சக்தியைச் செலவிடத் தகுதியற்ற ஒன்றுகவே நோயாளிக்குப் படுகிறது.

மனவெழுச்சிசார் உணர்விழப்பு தீவிரமாக இல்லாத வகைகளில், நோயாளி நமது கேள்விகளுக்குப் பதிலிறுப்பார். வழக்கமான செயல்களை இயந்திர நிலையில் செய்யவும் கூடும். ஆயினும் அவர்களிடம் அக்கறைகள், நம்பிக்கைகள் திட்டங்கள், பேரவாக்கள் என்பன இடம் பெறுவதில்லை. மருத்துவமனை என்னும் சிறு உலகில் நிரந்தரமாகத் தங்கி இருப்பதில் அவர்கள் மன நிறைவு பெறுகின்றனர்.

இதுவரையிலும் நாம் விவரித்துள்ள பொதுவான மாற்றங்களைத் தவிர, எண்ணிறந்த வகைகளில் அமையும் எண்ணிறந்த தனி அறிகுறிகள் உளக் கோளாறில் உண்டு. இப்பொழுது அவற்றுள் சிலவற்றைக் காணப் போகிறோம், அவற்றை வகைப்படுத்தியோ அல்லது ஒழுங்கான முறையிலோ தரமுயற்சிக்காது, கண்டபிடி தேர்ந்தெடுத்துக் காணப்போகிறோம்.

விளக்குவதற்கென நாம் முதலில் தேர்ந்தெடுக்கும் அறிகுறி 'துயில் நடத்தையாகும் (Somnambulism). சரியாக வரையறை செய்யப்படாத, சித்த நிலை பித்துநிலை என்பனவற்றின் எல்லைக் கோட்டில் நிற்கும் 'நரம்புநோயினர்' (Neurotics) எனப்படுபவரிடம் இந் நிகழ்ச்சியினை அதிகமாகக் காணலாம். 'ஐரீன்' (Irene) என்ற தலைப்பின் கீழ் பேராசிரியர் சானே (Janet) விவரித்துள்ள வரலாற்றைக் கொண்டு இதனை விளக்கலாம்.

ஐரீனது தாய் நீண்ட நாளாக நோயுற்றிருந்து இறந்தாள். அவள் நோயுற்றிருந்தபோது, ஐரீன் அவளுக்குப் பணிவிடை செய்தாள். அவளது தாய் இறந்த சூழ்நிலை வேதனை பயப்பதாக இருந்ததுடன், ஐரீனது உள்ளத்தில் அந்நிகழ்ச்சி பெரும் அதிர்ச்சி ஊட்டியிருந்தது. இதன் காரணமாக அவளிடம் பிறழ்வான ஒரு உளநிலை தோன்றியது. சாதாரணமாகத் தம் துயிலில் நடப்பவரிடம் காணப் படுவதை ஒத்த அறிகுறிகள் அவளிடம் அடிக்கடித் தோன்றலாயின. தையல் வேலையிலோ அல்லது உரையாடுவதிலோ ஈடுபட்டிருக்கும் ஐரீன் அவற்றைத் திடீ ரெனக் கைவிட்டு, அவளது தாயின் சாவின்போது நேர்ந்த நிகழ்ச்சிகளில் ஈடுபடு வாள். ஒரு தேர்ந்த நடிகை செய்யக்கூடிய வண்ணம் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியை யும் கூட நடித்துக் காட்டுவாள். இவ்வாறு நடிப்பதில் அவள் ஈடுபட்டிருக்கும் போது, அவளைச் சுற்றிலும் உண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை அவள் முற்றி லும் அறியாதிருந்தாள். அவளிடம் பிறர் பேசுவதை அவள் அறிவதில்லை; அவ் வேளையில் அவள் ஈடுபட்டிருந்த கற்பனையான காட்சியைத் தவிர, வேறு எதை யும் காண்பதுவுமில்லை. இந்நிகழ்ச்சியினை உளவியலார் 'துயில் நடத்தை' என்பர். அந்நிகழ்ச்சி திடீரெனத் தோன்றியது போன்றே, திடீரென மறையும். தான் முன்பு

ஈடுபட்டிருந்த செயலில் ஜரின் மீண்டும் ஈடுபடுவாள். நடுவில் அச்செயல் தடை பட்டிருந்ததை அவள் அறியமாட்டாள். சில நாட்கள் இடைவெளிக்குப் பின்னர் இரண்டாவது முறையாகத் துயில் நடத்தை தோன்றும். எல்லா வகையிலும் அது முதன் முறை ஏற்பட்ட துயில் நடத்தையை ஒத்திருக்கும். முதன் முறை ஏற் பட்டது போன்றே, இரண்டாம் முறையிலும் திடீரென்றே அந் நிகழ்ச்சி தோன்றும். இயல்பானவள் போன்று அவள் தோன்றும் இடைவெளிகளின்போது அவளை நாம் வினவுவோமாயின், துயில் நடத்தையில் நடைபெற்ற எல்லாவற்றையும் அவள் முற்றிலுமாக மறந்திருப்பதுடன், அவளது தாயின் மரணத்தோடு தொடர்புடைய எண்ணங்களின் முழு அமைப்பும் அவள் உள்ளத்தினின்று முற்றிலும் மறைந்திருப்பதைக் காண்போம். தனது தாய் நோய்வாய்பட்டிருந் ததையோ அல்லது அதன் காரணமாக ஏற்பட்ட துயரார்ந்த முடிவினையோ அவள் நினைவு கூரவில்லை; தனது தாயைப்பற்றி மனவெழுச்சிகள் எதுவுமின்றி அவள் பேசினுள்; தனது தாயின் மரணம் பற்றி இவள் அவ்வளவு அலட்சியமாக இருக் கிருளே என அவளது உறவினர் அவளைக் கடிந்து கொண்டனர். ஒரு பகுதியில் மட்டும் ஏற்படும் இந்த விநோதமான நினைவு இழைப்பை அல்லது மறதி நோயைப் பற்றி (amnesia) அடுத்த அதிகாரத்தில் முழுவதாக விவரிப்போம். அப்பொழுது அதனுடைய திட்டவட்டமான தன்மையும் அது எவ்வாறு தோன்றுகிறது என்பதும் விளங்கும்.

நாம் அடுத்ததாகக் காணக்கூடிய அறிகுறிகள் குழு, இல்பொருட்காட்சிகளை யும் (hallucinations) திரிபுணர்ச்சிகளையும் (delusions) கொண்டு அமைகிறது. பித்துநிலையின் வெளியீடுகளில் இந்நிகழ்ச்சிகள் முக்கியமான இடம் பெறுவதுடன், பெரும்பாலான நோயாளிகளிடமும் காணக்கிடைக்கின்றன.

இப்பொருட்களைத் தவருன புலன் - பதிவுகள் (Sense impressions) எனச் சுமாராக வரையறுக்கலாம். உதாரணமாக, நோயாளி, இல்லாத ஒரு பொருளைக் காணவோ அல்லது கற்பனையான ஒரு குரலைக் கேட்கவோ செய்கிருர். இத்தவ ருனப் பதிவுகள் எந்தப் புலன் உறுப்பைச்சார்ந்து அமைகின்றன என்பதைப் பொறுத்து இல்பொருட் காட்சிகளை, கண்சார்வு, செவிசார்வு, தோல்சார்வு இல் பொருட்காட்சிகள் என்பர். செவிசார்வு இல்பொருட்காட்சிகளே மிகச் சாதாரண மாகக் காணக் கிடைப்பனவாகும். அக் 'குரல்கள்' மகிழ்ச்சியூட்டுவனவாகவோ அல்லது துன்பம் பயப்பனவாகவோ அமையும் கருத்துகளைக் கூறலாம். ஆனுல், பெரும்பாலும் அவை நோயாளியின் மிக அந்தரங்கமான வாழ்வோடு நெருங்கிய தொடர்புடைய நிகழ்ச்சிகளைப் பற்றியனவாகவே இருக்கின்றன. பெரும்பாலும் அவை நோயாளியைப்பற்றி இழிவாகப் பேசுவதாகவோ அல்லது அவனைக் கண்டிப்பதாகவோ இருப்பதுடன், படிவார்ப்பான (stereotype) முறையில் தொடர்ந்தமைவதாகவும் இருக்கின்றன. உதாரணமாக அவன் இதுவரையிலும் இழைத்துள்ள பாவங்களின் காரணமாக அவன் விரைவில் கொல்லப்படுவான் என்று தொடர்ந்து கூறிக்கொண்டே இருக்கும் குரலை நோயாளி செவியுறலாம். இந்த விநோதமான நிகழ்ச்சிகளை விளக்குவதற்காகப், பல வேளைகளில், நம்ப

முடியாத கருதுகோட்களைத் (hypotheses) தோற்றுவித்து அவை உண்மையென நம்புமாறு தன்னைத்தான் தூண்டிக் கொள்வதுண்டு. உதாரணமாகத் தான் கேட்கும் குரல்கள் 'கம்பியில்லாத் தொலைபேசிகள்' (wireless telephones) அல்லது ஆவி உலகினின்று வருகின்றன என அவன் கூறலாம்.

திரிபுணர்ச்சிகள் என்பன இல்பொருட்காட்சிகளை மிக நெருங்கி ஒத்தமைவதுடன், பொதுவாக அவற்றுடனேயே காணப்படுகின்றன. ஆனால், இவற்றிடையே உள்ள வேறுபாடு, திரிபுணர்ச்சிகள் என்பன தவறான புலன் உணர்வுகள் அல்ல; ஆனால், தவறான நம்பிக்கைகள் என்பதாகும். உதாரணமாக, உண்மையில் இல்லாத ஒரு பொருளைக்காணும் நோயாளி இல்பொருட்காட்சி யுடையவன்; ஆனால் அவன் தானே இந்த உலகின் சக்கிரவர்த்தி என நம்புவானாயின் அவனிடமுள்ளது திரிபுணர்ச்சியாகும். திரிபுணர்ச்சிகள் பல வகையினவாக இருக்கலாம். ஆனால், இவற்றுள் இரண்டு வகைகள் அடிக்கடித் தோன்றுவதால், அவற்றை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். அவை பெருமிதத் திரிபுணர்ச்சிகள் (grandiose), துன்புறு (persecutory) திரிபுணர்ச்சிகள் என்பனவாம். பெருமிதத் திரிபுணர்ச்சியில், நோயாளி தான் புகழ்வாய்ந்த ஒரு மனிதர் எனவோ அல்லது பிற மனிதர்களிடமிருந்து தன்னை மிகவும் மேம்படுத்தும் வகையில் ஏதோ சிறப்பான தன்மை (attribute) பெற்றவன் எனவோ நம்புகிறார். உதாரணமாக, அவர் தான் ஒரு அரசன் என்றோ, கோடீசுவரன் என்றோ, புதுவன புனையும் மேதை (inventor) என்றோ நம்பலாம். சில வரலாறுகளில் திரிபுணர்ச்சி அப்படியே வெளியிடப்படுவதில்லை. மாறாக, அவரது செயற்கையான நடையுடை பாவனைகள், கடுமையான பண்டித மொழியை அவர் பயன்படுத்துதல், இன்ன பிற வெளியீடுகளில் அவரிடமுள்ள, 'தான் முக்கியமானவன்' என்ற மிகையான நம்பிக்கை காணக்கிடைக்கிறது.

இரண்டாவது வகையான துன்புறு திரிபுணர்ச்சிகளை வெளியிடும் நோயாளி, தனக்குக் கேடு விளைவிப்பதற்காகப் பிறர் திட்டமிட்டுச் செயல்படுகிறார்கள் என நம்புகிறான். உதாரணமாக, தன்னைக் கொல்வதற்குப் பிறர் சதி செய்கிறார்கள் என அவன் நம்பலாம். பெருமிதத் திரிபுணர்ச்சிகளும், துன்புறு திரிபுணர்ச்சிகளும் பெரும்பாலும் இல்பொருட்காட்சிகளுடன் இயைபுடையனவாகக் காணப்படுகின்றன. அரச பீடத்திற்கு அவனே உண்மையில் உரிமையுடையவன் என குரல்கள் நோயாளிக்குக் கூறலாம். இல்லையேல் அக்குரல்கள் அவன்மேல் வசைபாடி, அவனுக்குப் பெருங்கேடு நேரப்போகிறது என எச்சரிக்கை விடுக்கலாம். இவ் விருவகையான திரிபுணர்ச்சிகளும் பல வேளைகளில் இணைந்தும் காணப்படுவதுண்டு. உதாரணமாக, நோயாளி தானே அரசன் எனவும், ஆனால், தனது பிறப்புரிமையைத் தன்னிடமிருந்து அபகரிப்பதற்கு திட்டமிட்டுச் சதி நடத்தப்படுகிறது எனவும் கூறலாம். இவ்வாறு சில வேளைகளில் திரிபுணர்ச்சிகள் மிக நுணுக்கம் மிகுந்த ஒரு அமைப்பாக விரிவாக்கப்படுவதுண்டு. மேலும் நோயாளியின் அனுபவங்கள் அனைத்தும் அவனது திரிபுணர்ச்சி அமைப்பில் இடம் பெறும்வகையில் பிரிக்கப்படுவதுண்டு.

துன்புறுவகை திரிபுணர்ச்சிகளில் முக்கியமான ஒரு வகை 'சுட்டுத் திரிபுணர்ச்சிகள்' (delusions of reference) எனப்படும். நோயாளி தனது சூழ் நிலையில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும், அவை என்னதான் அற்ப மானவையாக இருப்பினும், தனது தலைவிதியோடு நேரடியாகத் தொடர்புடையன எனவும், தனக்கு ஏதேனும் வகையில் கேடு பயப்பதற்காகவே உண்டுபண்ணப் படுகிறது எனவும் தவருகப் புரிந்து கொள்ளத் தலைப்படுகிருன். அவனுக்குத் தெரிந்த இருவர் பேசிக்கொண்டிருப்பதை அவன் கண்டால், அவர்கள் தன்னைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பதாக அவன் உடனடியாக முடிவு செய்துகொள் கிருன். தற்செயலாக அவனுக்கு நேரும் கேடுகளை எல்லாம், பிறர் தனக்குத் தொல்லைதரும் பொருட்டு வேண்டுமென்றே செய்கிருர்கள் எனக்கொள்வான். இவ்வாறு அவன் தவருக எடுத்துக்கொள்வது சில வேளைகளில் வியப்பூட்டும் வகையில் மதியீனமானதாக அமைவதுண்டு. நோயாளியினது அறையிலுள்ள மரச்சாமான்கள் அவற்றின் இடத்தினின்று சிறிது நகர்த்தப்பட்டிருப்பதை, தனது எதிரிகள் பயன்படுத்தும் ஒரு சமிக்ஞை (signal) எனக் கொள்கிருன். அவனது சாப்பாட்டுத் தட்டில் ஒரு தூசுள் அழுக்குப்படிந்திருப்பதை, தனது உணவில் நஞ்சிடப்படுகிறது என்பதற்குத் திட்டவட்டமான ஆதாரமாக அவன் கொள்கிருன்.

அதனது நிலைத்த தன்மையும் (fixity), எந்தவிதமான விவாதத்தாலும் அதனை நீக்க முடியாதிருப்பதும் திரிபுணர்ச்சிகளிலுள்ள மிகச்சிறப்பான தன்மைக ளாகும். திரிபுணர்ச்சிகளை நீக்குமாறு நோயாளியைத் தூண்டுவதும், அவனது அறிவை விழிப்படையச்செய்வதும் பயன் தருவதில்லை. அவை தவருனவை எனத் திறம்பட நாம் நிரூபிக்கும்போதும்கூட நோயாளி தமது நம்பிக்கையில் தொடர்ந்து நிற்கிருர்.

திரிபுணர்ச்சிகள் இருப்பதால் ஒருவரது நடத்தை எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்பது மனிதருக்கு மனிதர் பெரிதும் வேறுபட்டு அமையும். துன்புறு எண்ணங்களின் செல்வாக்கிற்கு உட்படும் சில நோயாளிகள் தமது கற்பனையில் அமையும் எதிரிகளைக் கடுமையாகத் தாக்குவதால், தமது சமுதாயத் திற்குப் பெரிதும் அபாயகரமானவர்களாக விளங்குவர். மாருக, பெருவாரியான நோயாளிகளிடம் அவர்களது நடத்தையில் நேரடியான விளைவுகள் எதனையும் ஏற்படுத்தாதவையாகவே திரிபுணர்ச்சிகள் காணப்படுகின்றன. ஆனல், பல வேளைகளில் நோயாளியின் நடத்தையும் நம்பிக்கையும் ஒன்றினின்று மற்றென்று முற்றிலும் தனித்து நிற்பதாகவும், பெருமளவில் முரண்பட்டதாகவும் இருக் கின்றன. உதாரணமாக, தானே இவ்வுலகின் ராணி என நம்பும் நோயாளி, மருத்துவ மனையைத் துடைத்துச் சுத்தப்படுத்தும் தனது தினசரி வேலையை மனநிறைவோடு செய்கிருள். அதேபோன்று, தன்னைச் சர்வ சக்தி வாய்ந்த கோடீசுவரன் என்பவன், தனக்குக் கொஞ்சம் புகையிலை தருமாறு இரங்கத்தக்க வகையில் கெஞ்சுகிருன்.

அடுத்தபடியாக, பிடிப்புகள் (obsessions) என்னும் சொல்லின் கீழ் அடங்கும் நிகழ்ச்சிகளின் குழுவை ஆராயப்போகின்றோம். இவை திரிபுணர்ச்சிகளை மிகவும் ஒத்தவை என மேலெழுந்தவாரியாகக் காணப்படினும், அவற்றை நாம் கவனமாக வேறுபடுத்தி அறிதல் வேண்டும். உண்மையான பித்துநோய்களில் பிடிப்புகள் காணப்படுவது அருமையாகும். ஆனால், சிலவகை நரம்புக் கோளாறுகளில் அவை சிறப்புறக் காணப்படுகின்றன. நனவிலுள்ள குறிப்பிட்ட மூலப்பொருள் (element) ஒன்று 'மிகையான அழுத்தம்' பெற்றிருப்பதுவே பிடிப்பு என வரையறுக்கலாம். அதை நீக்குவதற்குத் தான் என்னதான் முயன்ற போதிலும், ஒரு எண்ணம் தன் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் தோன்றிய வண்ணமாகவே இருக்கிறது என நோயாளி கூறுகிறான்; இல்லையேல் பொருளற்றதும், பொருத்தமற்றதுமான செயலைச் செய்யுமாறு அவன் தொடர்ந்து கட்டாயப்படுத்தப்படுகிறான். உதாரணமாகத் தனக்குப் புற்றுநோய் (Cancer) இருக்கிறது என்ற எண்ணம் அவனை வாட்டலாம். இந்த ஐயத்திற்கு ஆதாரம் எதுவுமில்லை என்பதும், அந்த அச்சம் பயக்கும் நோய்க்குரிய அறிகுறிகள் ஒன்றும் தன்னிடம் இல்லை என்பதையும் அவன் நன்றாகத் தெரிந்துகொண்டே இருக்கிறான். உண்மையில் தனக்கு அந் நோய் இருப்பதாக அவன் நம்பவில்லை. ஆனாலும் அந்த எண்ணத்தைத் தனது உள்ளத்தினின்று நீக்க முடியாதவனாக அவன் இருக்கிறான். அந்த எண்ணம் பொய்யானது எனத் தொடர்ந்து அவன் தன்னைத் தேற்றிக்கொள்ள வேண்டியதிருக்கிறது. திட்டவட்டமான தவறான நம்பிக்கை இல்லாமல் இருப்பதுவே, ஒரு பிடிப்பிற்கும் திரிபுணர்ச்சிக்கும் இடையேயுள்ள அடிப்படையான வேறுபாடாகும்.

இல்லையேல், பயனற்றதும் தேவையற்றதுமான ஏதேனும் ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்யுமாறு நோயாளி தூண்டப்படுகிறான். உதாரணமாக, தன் கைவசம் வரும் ஒவ்வொரு பண நோட்டிலுமுள்ள எண்ணை மிக கவனமாகக் குறித்துக்கொள்ளவேண்டும் என்ற கட்டுக்கடங்காத் தேவை கொண்டிருந்த ஒரு பெண்ணின் வரலாற்றைப் ப்ராயிடு (Freud) வர்ணித்துள்ளார். 'கை கழுவும் வெறி' (washing mania) எனப்படும் பிடிப்பு, சாதாரணமாகக் காணக் கிடைக்கும் மற்றொரு பிடிப்பாகும். இதில் ஒரு நாளில் ஏறத்தாழ எல்லா வேளைகளிலும் தன் கைகளைக் கழுவவேண்டும் என்று நோயாளி தூண்டப்படுகிறான். இச்செயலைப் புரிவது மதியீனமானது என நோயாளி நன்கு அறிந்திருக்கிறான். ஆனால், அதைப் புரியவேண்டும் என்ற கட்டாயம் அடக்கவொண்ணாததாக இருக்கிறது. தனது நேரத்தையும் சக்தியையும் இப்பிடிப்பை நீக்கப் பயன்தரா போராட்டங்களில் அவன் வீணாக விரையம் செய்கிறான்.

தீவிரமான நிலையில் நெடு நாட்களாகப் பித்து நோயுற்றிருக்கும் நோயாளிகளிடம் பெரும்பாலும் காணக்கிடைப்பதான ஒரு விநோதமான நிகழ்ச்சியினை இப்பொழுது நாம் காண முற்படுவோம். இதனைப் படிவார்ப்பான செயல் (Stereotype action) என்பர். ஏதேனும் ஒரு செயலைச் சலிப்பூட்டும் வகையில் நாள் தவறாது நோயாளி மீண்டும் மீண்டும் செய்தவண்ணமாக இருக்கிறார்.

பெரும்பாலும் நோயாளியின் உளச்சக்தி அனைத்தும் அச்செயலைப் புரிவதிலேயே செலவிடப்பட்டுவிடுகிறது. எனவே, ஆண்டாண்டுகளாக வேறு எந்தவிதமான அக்கறை, விருப்பம் அல்லது பேரவா என்பன இல்லாதவனாக அவன் தோற்றமளிக்கிறான். இப்படி வார்ப்பான செயல்கள் எல்லாவகைகள் சார்ந்தனவாகவும் நுணுக்கத்தில் எல்லாவிதமான தரங்களிலும் அமைவதாகவும் இருக்கலாம். ரககளையோ அல்லது தலையையோ எளிய சந்தம் (Rhythmic) பொருந்திய அசைவுகளில் ஈடுபடுத்துவதினின்று தொழில் திறனுடைய ஒருவன் தன் தொழிலைச் செய்வதுபோன்ற வகையில் விரிவாக அமையும் அசைவுகளாகவும் படிவார்ப்புச் செயல்கள் அமையக்கூடும். சில வேளைகளில், நோயாளி ஒரு சொற்றொடரையோ அல்லது வாக்கியத்தையோ, முன்னர் கூறியதுபோன்றே சலிப்பூட்டும் வகையில் மீண்டும் மீண்டும் தொடர்ந்து கூறிக்கொண்டிருப்பதுண்டு. உதாரணமாக, எனது நோயாளிகளில் ஒருவன் அவன் விழித்திருக்கும் முழுவேளையும் 'அது எல்லாம் தவறானதென நான் உனக்குச் சொல்கிறேன்' என்று கூறுவதிலேயே பல ஆண்டுகளாக ஈடுபட்டுருந்தான்.

பேச்சிலும், பயன்படுத்தப்படும் சொற்றொடர்களில் மாற்றங்கள் ஏற்படுவது பித்து நோய் அறிகுறிகளில் முக்கிய பங்கு வகிக்கிறது. வீறுக் கிளர்ச்சியின் போது தொடர்பற்ற பேச்சு தங்குதடையின்றி வெளியிடப்படுவதை ஏற்கனவே கூறியுள்ளோம். ஆனால், பெரும்பாலான வேளைகளில் பேச்சில் ஏற்படும் மாற்றம் இன்னும் தீவிரமானதாக இருக்கிறது. சொற்றொடர்கள் விநோதமான முறையில் திரிக்கப்படுகின்றன; தனிச்சொற்கள் மாற்றப்படுகின்றன அல்லது நீக்கப்படுகின்றன; இலக்கணம் அறவே இல்லாததுபோலத் தோன்றுகிறது; நோயாளியினது முழு உரையாடலும் தொடர்பற்றதும் பொருளற்றதுமான வார்த்தைத் தொகுப்பாக இருக்கிறது. அத்தகைய குழம்பிய பேச்சுக்குக் கீழ்வருவது ஒரு சிறந்த உதாரணமாகும். 'அங்கு உங்களிடம் என்ன கூட்டு எழுத்துகள் உள்ளன? அவற்றைக் கிரேக்க மொழியில் நீங்கள் எழுதுவீர்களா, வலிமை என்று எழுதுவீர்களா, புகைப்படம் தொல்லை பயப்பது என்பீர்களா, ஒரு சார்பானது, எனக்குப் புரிகிறது, திருவாளர் ஜான் மக்களுடைய படிவார்ப்புத் தட்டெழுத்தர், உடலியல் அமைப்பு, அது நீல வரியின்மீது கிடைக்கும் முடிபு, கடமையின் வலிமை காரணமாக அது உன்னிடம் வருகிறது...'

சில வேளைகளில் மிகைப்படுத்தப்பட்டவகையில் பண்டித நடையில் அமையும் சொற்றொடர்கள் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பாலான வேளைகளில் அவற்றின் உண்மையான பொருளைக் கவனியாது, எழுத்துக்கள் நிரம்பிய சொற்கள் பயன்படுத்தப்படுவது உண்டு. உதாரணமாக, ஒரு நோயாளி தமது உடல் நலம் 'தடம் புரண்டுவிட்டது' எனவும், தான் 'சட்ட விரோதமான சூழ்நிலைகளாலும் கொடுமையான மரபுகளாலும்' கொடுமைப்படுத்தப்படுபவன் என்கிறார். தான் முக்கியம் வாய்ந்தவன் என்றோ அல்லது தான் வெளியிடும் கூற்று முக்கியமானது என்றோ காட்டுவதற்காகவே, பொதுவாக, இத்தகைய பண்டித நடையில்

அமையும் சொற்றெடர்கள் பயன்படுத்தப் படுகின்றன என பின்னர் காண்போம். முன்னர் நாம் விளக்கியுள்ள பெருமிதத் திரிபுணர்ச்சிகள், செயற்கையான நடையுடை பாவனைகள் என்பனவற்றேடு இது நெருங்கிய தொடர்புடையது என நாம் ஏற்கெனவே கூறியுள்ளோம்.

பித்துநிலையில் காணப்படக்கூடிய சில அறிகுறிகள் பற்றிய தெளிவான இந்த விளக்கம் இப்போதைக்குப் போதுமானது. இந்த விளக்கத்திலுள்ள குறைபாடுகளை நாம் ஏற்கனவே குறிப்பிட்டோம். உளநோயாளிகளோடு நேரடியாக நடைமுறையில் பழகுவதால்மட்டுமே பெறக்கூடிய தெளிவான கண்ணேட்டத்தை இந்த விளக்கத்தினின்று வாசகர் பெற்றிருப்பர் என நம்புவதற்கு இடமில்லை. பின்னர் வரும் அதிகாரங்களில் தேவை எழுவதைப் பொறுத்து பிற அறிகுறிகள் விளக்கப்படும். மேலும் அவற்றில் விரிவாகத் தரப்பட்டுள்ள தனியார் நோய் வரலாறுகள், பல நிகழ்ச்சிகள் எவ்வாறு ஒன்ருக இணைகின்றன என்பதையும் அவை எவ்வாறு வளர்ச்சியடைகின்றன என்பதையும் இன்னும் தெளிவாக விளக்கும்.

# 4. உளச் சிதைவு

முக்கியமான உளக்கோளாற்று நிகழ்ச்சிகளில் சிலவற்றைத் தொகுத்து சென்ற அதிகாரத்தில் பார்த்தோம். இத்துறையில் பயிற்சி இல்லாத ஒருவருக்கு அவை ஏதோ தொடர்பற்ற உண்மைகளின் கலப்படம் போன்றும் அவை ஒவ்வொன்றும் மற்றவற்றினின்று தனித்து நிற்பது போன்றும் காணப்படும். ஆயினும் அவற்றைக் கவனமாக ஆராய்வோமாயின், அந்நோயாளிகள் வெளியிட்ட பல அறிகுறிகள் சில பொதுவான தன்மை கொண்டனவாக இருத்தலைக் காண்போம். அப்பொதுவான தன்மைகளின் துணை கொண்டு அந்நிகழ்ச்சிகளை சில குழுவினவாக (groups) வகைப்படுத்த முடியும். அவ்வாறு செய்வதன் மூலம் அக்குழப்பத்தைப் போக்கி, ஓரளவு ஒழுங்கை நாம் தோற்றுவிக்க முடியும்.

முதலாவதாக, உளப்பற்றுக்குறை (mental deficiency), கிறுக்கு (dementia) என விவரிக்கப்பட்ட நிலைகளை ஒரு தனிக் குழுவினுள் அடக்கக் கூடும். உளத்திறன் இயல்பான அளவினின்று குறைவாக அமைவதையே அடிப்படையாகக்கொண்டு அவை எழுகின்றன எனக் கண்டோம். இவ்வகையில் அவை, மூன்றும் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட பிற எல்லா உள நிகழ்ச்சி களின்றும் அடிப்படையாகவே வேறுபடுகின்றன. பெரும்பாலும் இந்நிலைகள், மூளையின் அமைப்பிலுள்ள குறைபாடுகளோடு தொடர்புடைய வகையில் இணைந்து காணப்படுகின்றன. இன்று நாம் பெற்றுள்ள அறிவு நிலையில், அவை ஏன் தோன்றுகின்றன என்பதை ஆராய்வதில் உளவியல் கருத்து அவ் வளவாகப் பயனுடையதாக இல்லை. இந்த ஆராய்ச்சியில் உளவியல் கருத்தை விட உடலியல் கருத்து அதிகப்பயன் தருவது என்பதை நாம் ஒளிவின்றி ஏற்றுக வேண்டும். உளத்திறன் அளவில் காணப்படும் குறைகளை உளவியல் ஆராய்ச்சி களில் கணக்கிட்டேயாகவேண்டும் என்ற கட்டாயநிலை ஒருபுறமிருக்க, பிற பல பித்து நிகழ்ச்சிகளோடு அவை கொண்டுள்ள தொடர்பினையும் உளவியலால் விளக்கமுடிகிறது. இங்கு எழும் சில கேள்விகள் கடினமானவையாகவும் ஆழமானவையாகவும் இருப்பதால், நடைமுறையில் குறிப்பிடத்தக்க அளவில் அவற்றோடு தொடர்பு இல்லாத நிலையில் அவற்றிற்குச் சரிவர பதிலிறுக்கமுடியாது. எனவே, உளப்பற்றுக்குறை, கிறுக்கு என்பனவற்றை இனியும் இந் நூலில் ஆராய முற்படமாட்டோம். மாறாக, சென்ற அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட பெரும்பாலான நிகழ்ச்சிகளில் உள இயக்கத்தில் ஏற்படும் தன்மை மாற்றங் களில் (qualitative changes) நம் முழுக் கவனத்தையும் செலுத்துவோம்.

இவற்றுள் பல அறிகுறிகள் நமக்கு ஏற்கெனவே பழக்கமான உளச் செயல்களின் மிகையான வடிவங்களாக இருத்தலை நாம் உடனடியாகக் கண்டு கொள்வோம். உதாரணமாக, கிளர்ச்சி, சோர்வு என விவரிக்கப்பட்ட அறிகுறிகள் அவற்றின் செறிவிலும் (intensity), போதிய காரணமின்றித் தோன்றியிருப்பனபோலக் காணப்படுவதிலும் மட்டுமே இயல்பான மக்களிடம் காணப்படும் அத்தகைய நிலைகளினின்று வேறுபடுகின்றன. அதைப் போன்றே 'மனவெழுச்சிக்கிறுக்கு' எனப்பட்ட எழுச்சிசார் உலேவும், நடைமுறை வாழ்வில் அடிக்கடிக் காணப்படும் உணர்வின்மை (apathy) முடிவெடுக்கும் திறனின்மை (lack of volition) என்பன மிகைப்படுத்தப்படுவதாகும்.

ஆனால் பிற எழுச்சிசார் அறிகுறிகள் இயல்பான நிலையினின்று இன்னும் அதிகமாக வேறுபட்டு அமைகின்றன. இங்கு மனவெழுச்சிகள் மிகைப்படுத்தப்பட்டிருப்பதுடன், திரிக்கப்பட்டும் பொருளற்றும் காணப்படுகின்றன. அதைப் போன்றே, நாம் விவரித்த நோயாளிகளில் சிலர் வெளியிட்டனவும் வெளிப்படையாக பொருளற்றனவாகவும் ஏறுமாறாகவும் காணப்படும் சொற்றொடர்கள், நம்மிடமுள்ள மொழி, சிந்தனை என்பனவற்றோடு வெளிப்படையாக ஒரு சிறிதும் தொடர்பற்றனவாகவே இருக்கின்றன. இறுதியாக, இப் பொருட்காட்சிகள், திரிபுணர்ச்சிகள் போன்ற முற்றிலும் விநோதமான, புரிந்துகொள்ளமுடியாத அறிகுறிகளைக் காண்கிறோம். இவற்றை இயல்பான மனிதர்களிடம் உள்ள எவற்றோடும் ஒரு சிறிதும் ஒப்பிட முடிவதில்லை. அத்தகைய நிலையில், அவ்வறிகுறிகளை உடைய மனிதன் ஒரு கிறுக்கன் எனவும் அதைப்பற்றி அவ்வளவுதான் கூற முடியும் எனவும் எளிய முறையில் விளக்குவதோடு நின்றுவிட முற்படுகிறோம்.

**'உண்மையான கிறுக்கை வரையறுக்க,**
**கிறுக்கு என்பதைத் தவிர வேறென்ன கூற இயலும் ?'**

ஆயினும், இன்னும் தொடர்ந்து படிக்கும்போது, மிக விகற்பமான அறிகுறிகளும் கூட, நமது உள்ளங்களில் நாம் காணும் செயல்களினின்று பெரிதும் வேறுபடுவன அன்று என்பதையும், பித்து நோயாளியை துன்புறுத்தும் மறைவிடங்களை நாம் கண்டுகொள்ள இயலும்போது, அவன் இன்னும் மேன்மேலும் நம்மைப் போலவே இருப்பதையும் நாம் காண்போம்.

நமது வாசகர் இந்த அறிவைப்பெற வேண்டுமாயின், பிறழ்வு உளவியல் (Abnormal Psychology) முழுவதிலும் முக்கியமான பங்குவகிக்கும் ஒரு கருத்தை அவர் தெரிந்திருக்க வேண்டுவது அவசியமாகிறது. இதனை 'நனவின் சிதைவு' (dissociation of consciousness) எனலாம்.

நம் உளக்கண்கொண்டு, ஒரு குறிப்பிட்ட வேளையில் நம் உள்ளத்தில் இடம் பெறுவனவற்றைக் (இதனை உளவியலார், அவ்வேளையின் 'நனவுக்களம்' (field of consciousness) என்பர்) காண்போமாயின், அந்நிலை பகுக்க முடியாதபடி முழுமையானது எனவும், திட்டவட்டமான, முடிவை நோக்கி

முன்னேறும் சீரான சிந்தனை ஓடை எனவும் நாம் விவரிக்க முற்படுவோம். அது பிறவற்றினின்று தனித்து இயங்கும் தனித்தனிப் பகுதிகளால் ஆக்கப்பட்டது போன்று காணப்படுவதில்லை. மாருக, ஏதோ ஒரு பொதுவான இலட்சியத்தோடு புலனுணர்வுகள் (sensations), எண்ணங்கள் (ideas), முடிவெடுக்கும் திறன்கள் (volitions) எல்லாம் ஒன்ருக இணைந்து இருப்பதுபோலக் காணப்படுகிறது. நான் ஒரு கணக்கைப் போட்டுக்கொண்டிருக்கும்போது, அதற்கு முடிவு காண்பதற்கு அவ்வேளையில் வேண்டியதாகும் பல்வேறு உளச்செயல்களாக மட்டுமே எனது நனவின் களம் அமையும். சில விஞடிகளுக்குப் பின்னர் வரப்போகும் விடுமுறையை எவ்வாறு செலவிடுவது என்று திட்டமிடுவதில் எனது கவனம் செல்லலாம். ஆனுல், அந்த வேளையில் நனவின் களத்தினின்று அந்தக் கணிதப் புதிர் தற்காலிகமாக நீங்கியிருக்கும். இவை இரண்டிற்குமிடையே நமது கவனம் வேகமாக ஊசலாடினும், கணிதப்புதிர், விடுமுறைத் திட்டங்கள் என்ற இரண்டும் ஒரே வேளையில் உள்ளத்தில் இடம் பெறுவதில்லை. கணக்கு, விடுமுறை என்பனவற்றிற்கு இடையே பொதுவாக எவையும் வெளிப்படையாகக் காணப்படாவிடினும், அவை இரண்டிற்கும் இடையேயுள்ள இடைவெளியை உள்ளம் தாண்டும் வகையில் ஏதோ ஒரு தொடர்பு இருந்தது. உண்மையில், நினைவின் தொடரில் முறிவு எதுவும் ஏற்படவில்லை.

ஆயினும் இக்கூற்று இயல்பான உள்ளத்தைப் பொறுத்தவரையில் ஓரளவு மட்டுமே உண்மையானது; முன்னர் நாம் விவரித்துள்ள சில நோயாளிகளுக்கு இது ஒரு சிறிதும் பொருந்துவதில்லை. இவர்களது உள்ளங்கள் திட்டவட்டமான முடிவை நாடி முன்னேறும் சீரான சிந்தனை ஓடைகளைக்கொண்டு அமைவதில்லை மாருக, தத்தம் வழியில் செல்வனவும், தனித்து நிற்பனவுமான உளச் செயல்களைக் கொண்டதாக இவர்களது உள்ளங்கள் அமைகின்றன. ஒரு பொதுமுடிவை அடையும் வகையில் இணைந்து இயங்கமுடியா தனித்தனிப் பகுதிகளாக உள்ளம் பிளவுபட்டிருப்பதை 'நனவின் சிதைவு' என்பர். சிதைவின் பல நிலைகளில் சில உதாரணங்களை ஆராய்வோமாயின் இதன் பொருள் தெளிவாகும்.

இயல்பான உள்ளம் முதலில் காணும்போது பிளவுபடாத நனவின் களத்தைப் பெற்றிருப்பதுபோன்று தோன்றினும், எல்லா வேளைகளிலும் இயல்பான உள்ளத்தில்கூட நனவின் களம் பிளவுபடாது இருப்பதில்லை. உதாரணமாக, நான் பியானோ (Piano) அருகில் அமர்ந்து அதில் ஒரு பாட்டை வாசிக்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். நான் பியானோவை இசைப்பதில் போதிய திறமை பெற்றிருப்பேனுயின், அதே வேளையில் இசையோடு தொடர்பு இல்லாத மற்றொரு கடினமான சிந்தனையிலும் நான் ஈடுபடமுடியும். இச் சிந்தனை ஒரு நடத்தைப் பிரச்சினைக்கு முடிவு காணுவது என்போம். மேற்கூறிய நிலையில் எனது நனவின் களம் ஒரே வகையானதாக இருப்பதில்லை. மாருக, அது இரு பிரிவுகளாகப் பிரிந்து நிற்பதாகவோ அல்லது இரு செயல்களில் ஈடுபட்டதாகவோ காணப்படுகிறது. இந்த ஒவ்வொரு செயலும் பெருமளவில் உளச் சக்தியைச் செலவிடுவதாக இருக்கிறது. நான் இசைக்கும் பாட்டு எனக்குப் புதியதாக

4

இருக்கலாம். அதை உரிய வகையிலும் அடிக்கடி மாறி அமையும் முறைகளிலும் இசைக்க வேண்டியதிருக்கலாம். அதே வேளையில் அந்த நடத்தைப்பற்றிய பிரச்சினையும் அதேபோன்று நுணுக்கம் மிகுந்ததாக இருக்கலாம். இந்த இரு செயல்களும் ஒன்றினின்று மற்றொன்று ஏறத்தாழ முற்றிலும் வேறுபட்டனவாக இருப்பினும் ஒரே வேளையில் இவ்விரண்டையும் செய்யமுடிகிறது. எனவே, நனவின் களம் இரு பகுதிகளாகப் பிரிந்திருக்கவேண்டும். அதாவது நனவில் ஒரு குறிப்பிட்ட அளவில் சிதைவு இருத்தல் வேண்டும். ஒரே வேளையில் ஈடுபடக்கூடிய வேறுபல செயல்களுக்கும் இக்கூற்றுக்கள் பொருந்தும். திறமை மிக்க வணிகன் விற்பனை செய்துகொண்டிருக்கும்போதே, பல பிற செயல்களையும் புரிந்து கொண்டிருப்பதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

ஆயினும் மேற்கூறிய வரலாறுகளிலெல்லாம் நனவில் ஏற்படும் சிதைவு தற்காலிகமானதாகவும், ஓரளவில் மட்டுமே அமையும் தன்மை கொண்டதாகவும் இருக்கிறது. இரண்டு செயல்களும் அம்மனிதனின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருப்பதுடன், அவர் விரும்பும்போது அவை இரண்டையும் செய்வதைக் கைவிடமுடியும். நமது நோயாளிகளிடம் இச்சிதைவு குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாக இருந்ததுடன், தமது செயல்களின்மீது இத்தகைய கட்டுப்பாடும் அவர்களிடம் இருக்கவில்லை.

'எண்ணுதெழுதுதல்' (Automatic writing) என்னும் நிகழ்ச்சியினை, உதாரணமாக எடுத்துக்கொள்வோம். இவ்விநோதமான நிலை ஓரளவு இயல்பானவராகவே உள்ள மக்களிடமும் சில வேளைகளில் காணப்படினும், முழுமை பெற்ற நிலையில் 'ஹிஸ்டீரியா' (hysteria) எனப்படும் உளக்கோளாறில் காணப்படுகிறது. ஒரு ஹிஸ்டீரியா நோயாளியோடு நாம் உரையாடுவதில் ஈடுபட்டு, அவரது கவனம் (attention) இவ்வாறு உரையாடுவதில் திரும்பியுள்ளபோது, அவரது வலது கை விரல்களின் நடுவில் ஒரு பென்சிலை (pencil) செருகுகிறோம் என்போம். இந் நிலையில் மற்றொரு மனிதர் அவரது காதில் சில கேள்விகளை முணுமுணுப்பாரெனின், அக்கேள்விகளுக்கு விடை எழுதுமாறு அவர் தூண்டப்படலாம். முற்றிலும் வேறுபட்ட ஒரு பொருளைப்பற்றி நம்மோடு தொடர்ந்து உரையாடுவதில் ஈடுபட்டிருக்கும்போதே, அவர் அக்கேள்விகளுக்கு விடை எழுதவும் செய்கிறார். இத்தகைய நிலைகளில் தனது கை என்ன செய்கிறது என்பதை நோயாளி ஒரு சிறிதும் அறியாதவராக இருப்பதுடன், தாம் எழுதுவதில் விவரிக்கப்படும் நிகழ்ச்சிகளையும், பெரும்பாலும், ஒரு சிறிதும் அறியாதவராகவும் இருக்கிறார். இவ்வாறு வெளிவரும் நிகழ்ச்சிகள், அவரது பழங்கால வாழ்வோடு பெரும்பாலும் தொடர்பு உடையனவாக இருக்கின்றன. அவற்றை முற்றிலுமாக மறந்துவிட்டவர்போன்று நோயாளி காணப்படுகிறார். நோயாளியின் உள்ளத்தில் புதையுண்டிருக்கும் நினைவுகளை வெளிவரச் செய்வதை நோக்கமாகக்கொண்டு இச்சோதனையை அவ்வப்போது நடத்துவது உண்டு. நோயாளியின் பழைய அனுபவத்தில் ஒரு திட்டவட்டமான பகுதியைப்பற்றியதான நினைவிழப்பு பெரும்

பாலும் நீண்ட காலத்திற்கு தொடர்ந்திருப்பதாகவும், பெரும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகள் பற்றியதாகக் கூட இருப்பதாகவும் அமைவது, ஹிஸ்டீரி யாவின் குறிப்பிடத்தக்க ஒரு அறிகுறியாகும்.

ஆன்மீகத்துறையின் (spiritualism) வரலாற்றில் எண்ணுதெழுதுதல் பெரும் பங்கு வகித்துள்ளது. மற்றொரு ஆன்மா தன்னுடைய விருப்பங்களையும் கருத்துகளையும் உலகிற்கு வெளியிடுவதற்கென நோயாளியின் கையைப் பயன் படுத்திக்கொள்கிறது என ஆன்மீகக் கோட்பாட்டினர் கூறத்தலைப்பட்டுள்ளனர். ஆயினும், இந்நிகழ்ச்சியைப் பொறுத்தவரையிலும், அதற்குரிய விளக்கம் ஓரளவு எளிதாகவே உள்ளது. இந்நிலையில் ஒரு சிதைவு இடம் பெற்றுள்ளது. இச்சிதைவு நாம் இதுவரையிலும் விவரித்துள்ளதைவிட இன்னும் முற்றியதாக இருக்கிறது. இங்கு நனவின் களம் இரண்டு தனிப்பகுதிகளாகப் பிரிந்து நிற்கிறது. ஒரு பகுதி உரையாடுவதிலும் மற்றொரு பகுதி எண்ணுதெழுதுவதின் மூலம் தன்னை வெளியிடும் எண்ணங்களின் அமைப்பாகவும் இருக்கின்றது. ஒவ்வொரு பகுதியும் நுணுக்கமான உளச்செயல்களில் ஈடுபட்டுள்ளது. அவை ஒவ்வொன்றும் மற்றதினின்று முழுமையாகத் தனித்து இயங்குவதுடன், மற் றொன்று இருப்பதைப்பற்றியும் ஒரு சிறிதும் அறிந்திருப்பதில்லை. உண்மையில் நோயாளியின் உள்ளம் இரண்டு சிறு உள்ளங்களாகப் பிரிந்து நிற்பதுபோன்று தோன்றுவதுடன், அவை ஒன்றொடொன்று எந்தவிதமான தொடர்பும் இல்லாத, இரண்டு தனித்தனி நினைவுகளின் அமைப்புகளைப் பயன்படுத்தி, இரு வேறான செயல்களிலும் ஈடுபடுகின்றது. எனவே, நனவு சிதைவுறுவதற்கு இத்தகைய வரலாறு மிகச்சிறந்த உதாரணமாக அமைகிறது. இத்தகைய முற்றிய சிதைவு கள் முதலில் காணும்போது என்னதான் விநோதமானவையாகவும் புரிந்து கொள்ள முடியாதனவாகவும் தோன்றினும், ஒவ்வொரு இயல்பான மனிதனிடமும் காணக்கிடைப்பன என நாம் கண்ட சிதைவுகளின் மிகையான வகைகளே தவிர வேறொன்றுமில்லை என்பதை நாம் எப்பொழுதும் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டும்.

நாம் இப்பொழுது விவரித்த வகையான சிதைவினின்று ஓரளவு மட்டுமே வேறுபட்டு அமையும் மற்றொருவகைச் சிதைவினை நாம் இப்பொழுது ஆராய முற் படுவோம். இயல்பான உள்ளத்தின் பண்பாக அமையும் சீரான எண்ணஓடை யில், எண்ணங்களின் ஓட்டத்தில் தடையோ அல்லது பிளவுகளோ இருப்பதில்லை எனக்கண்டோம். ஆயினும், புதிய எண்ணம் ஒன்று நனவில் திடீரெனத் தோன் றக்கூடும். ஆனல், இவ்வாறு தோன்றும் பிளவு ஏதேனும் இயைபுடையதொடர் பால், இப்பிளவு இட்டு நிரப்பக்கூடிய ஒன்றே என எப்பொழுதும் நிரூபிக்கவும் முடிந்தது. மேலும், எந்த ஒரு வேளையிலுள்ள நனவும், அதற்கு முந்தைய வேளையில் இடம் பெற்றிருந்த உளச்செயல்களைப்பற்றி எப்பொழுதும் முற்றிலும் உணர்ந்திருப்பதாகவே அமைகிறது. இந்த நனவுஓடையின் தொடர்ச்சி திடீ ரென நீங்கி, அந்த ஓடையின் நடுவே ஒரு பிளவு தோன்றியிருப்பதாக இப்பொழுது கற்பனை செய்துகொள்ளுங்கள். இப்பிளவு தோன்றியவுடன் நனவில் இடம்

பெறுவன, பிளவு ஏற்படுவதற்கு முன்னைய வேளையில் நனவில் இடம் பெற்றிருந் தனவற்றினின்று முற்றிலும் தனித்து நிற்குமன்றோ? இவ் விரண்டிற்கும் இடையே யுள்ள எல்லா தொடர்புகளும் அறுபட்டுப் போவதுடன், இரண்டாம் நிலையிலுள்ள நனவு முதல் நிலையில் நனவில் இடம் பெற்றிருந்தனவற்றை ஒரு சிறிதும் உணராது இருக்கும். உண்மையில், இம்மனிதனது உள்ளம் ஒரு புதிய எண்ணத் தொடரால் நிரப்பப்பட்டிருக்கும். அதேவேளையில் அதற்கு முந்திய வேளையில் தன்னில் இடம் பெற்றிருந்த எண்ணங்களையும் ஒரு சிறிதும் அறியாதிருக்கும். இங்கு நனவில் ஏற்படும் சிதைவு ஒரே வேளையில் இடம் பெறும் இரு தனிப்பகுதிகளாக இராது, ஒரு வேளையில் உள்ள நனவு அதற்கு முன்னைய வேளையிலிருந்த நனவினின்று சிதைவுறுவதாக அமையும். இவ்வகையான சிதைவே துயில் நடத்தையில் (Somnambulism) இடம் பெறுகிறது. சென்ற அதிகாரத்தில் கூறப்பட்ட ஐரீனின் வரலாற்றில், துயில் நடத்தை ஆரம்பமானபோது நோயாளியின் உள்ளத்தில் இடம் பெற்றிருந்த சிந்தனைத்தொடர் திடீரென அறுபட்டு, முற்றிலும் வேறான மற்றொரு எண்ணத் தொடர் அவரது உள்ளத்தில் இடம் பெறுகிறது எனக் கண்டோம். அவள் அதற்குமுன் எதைச் செய்துகொண்டிருப்பினும், அவளிடம் துயில்நடத்தை தோன்றியவுடன் அவளது தாயாரது மரணத்தோடு தொடர்புடைய எண்ணங்களும் நினைவுகளும் அவளது நனவில் திடுமெனப் பண்டயெடுத்தன. இந்நிலையில் அவள் மீண்டும் மீண்டும் அம்மரணக் காட்சிகளில் ஈடுபடுவாள்; அவளது முழு உள்ளமும் அந்த உருவெளித் தோற்றத்தில் (Phantasy) ஈடுபடும்; தன்னைச் சுற்றிலும் உண்மையில் நடைபெறுவனவற்றையும் அவள் சிறிதும் அறியாதிருப்பாள். பிறகு திடீரென துயில்நடத்தை நீங்கி அவள் 'தன்னிலைக்கு' வருவாள். அதாவது துயில் நடத்தையில் அடங்கியுள்ள எண்ணங்களின் தொடர் திடீரென நனவினின்று மறையும். துயில்நடத்தை துவங்குவதற்கு முன்னர் அவள் உள்ளத்தில் இடம் பெற்றிருந்த எண்ணங்கள், செயல்கள் என்பன அதே வேகத்துடன் மீண்டும் அவள் உள்ளத்தில் இடம் பெறும். அவள் இவ்வாறு மீண்டும் 'தன்னிலைக்கு' வந்த பின்னர் அவள் அதற்கு முன்னர் செய்தனவற்றைப்பற்றிக் கேட்போமாயின், துயில் நடத்தையில் நடந்தன அனைத்தையும் அவள் முற்றிலும் அறியாதிருப்பதைக் காண்போம். துயில் நடத்தை தோன்றிய விநாடிமுதல் அது நீங்கிய விநாடிவரையிலும் அவள் நினைவில் ஓர் இடைவெளி காணப்படும். உண்மையில், அவளது தொடர்ந்து அமையும் சிந்தனை ஓடையை 'சிதைவுற்ற எண்ணங்களின் அமைப்பு' ஒன்று திடீரெனத் தோன்றி தடை செய்ததையும், அச்சிதைவுற்ற எண்ணங்களின் அமைப்பு ஒரு குறிப்பிட்ட காலம் வரையிலும் நனவின் களம் முழுவதிலும் இடம் பெற்றிருந்ததையும், பின்னர் அது தோன்றிய அதே வேகத்துடன் மறைந்ததையும் கண்டோம். இயல்பான உள்ளத்தில் சிந்தனையின்போது ஏற்படும் எண்ணமாற்றம் முன்னைய நிலையோடு அமைகிறது. ஆனால், மேற்கூறிய நிலைகளில், ஒரு எண்ணத்தொடரினின்று அதனோடு ஒரு தொடர்பும் இல்லாத எண்ணத் தொடருக்குச் சிந்தனை திடீரென மாறுகிறது. நனவின் களத்தை ஒரு திரைப்படக்காட்சிக்கு ஒப்பிடுவோமாயின், இயல்பான உள்ளத்தின் செயல், ஒரே படம் தொடர்ச்சியாக ஏற்

படுத்தும் மாற்றங்களைப்போன்றிருக்கிறது. மாறாக, ஓடும் படத்தைத் திடீரென நிறுத்திவிட்டு, முற்றிலும் வேறான மற்றொரு திரைப்படத்தை ஓடவிடுவது போன்றுதான், துயில் நடத்தையில் எழும் சிதைவுச் செயல்கள் இருக்கின்றன. இரண்டு படங்களை ஒரே வேளையில் ஓடவிட்டு ஒரே திரையில் தனித்தனிப் பகுதிகளில் அவற்றின் படங்கள் தோன்றிக்கொண்டிருப்பது போன்றது தான் எண்ணுதெழுதுதலில் காணப்படும் சிதைவு வகையாகும்.

நனவின் களத்தில் அது புகுவதால் துயில் நடத்தை தோன்றுவதற்குக் காரணமாகும் சிதைவுற்ற எண்ணங்களின் அமைப்பு, பல நிலைகளில் நுணுக்கமும் (Complexity) வளர்ச்சியும் பெற்று அமையக்கூடும். ஐரினது வரலாற்றில் அதன் அமைப்பு ஓரளவு எளிய வகையானதாகவே இருந்தது. அவளது தாயின் உடல்நலமின்மை, இறப்பு என்பனவற்றைப் பற்றிய எண்ணங்கள் மட்டுமே அதில் இடம் பெற்றிருந்தன. எனவே, அவளிடம் துயில் நடத்தை இயங்கியபோது, அவளது உளவாழ்வு அந்த எண்ணங்களை மட்டுமே வெளியிடுவதாகக் குறுகித் தோன்றியது. மற்றெல்லாத் தோற்றங்களாலும் அவள் சிறிதும் பாதிக்கப்படவில்லை. தன் சூழ்நிலையில் உண்மையில் இடம் பெற்றனவற்றிற்கு ஏற்ற முறையிலும் அவளால் தன்னைத் தக அமைத்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், வேறு சில வரலாறுகளில், சிதைவுற்ற அமைப்பு இன்னும் மிக அதிகப் பரப்புடையதாகவும், இன்னும் முழுமையாக வளர்ச்சி பெற்றதாகவும் இருப்பதுண்டு. நோயாளியின் உள வாழ்வின் முழுப்பகுதிகளைத் தன்னுள் அடக்கியதாகவும் அது இருப்பதுண்டு. அத்தகைய நிலைகளில் சிதைவுற்ற அமைப்பு நனவின் முழுக்களத்திலும் இடம்பெற்றுள்ளபோதும்கூட அந் நோயாளியின் நடத்தை ஓரளவு இயல்பானதாகவும், சூழ்நிலைக்கு ஏற்ப அமைவதாகவும் இருக்கக்கூடும். அத்தகைய நோய் வரலாறுகள் தமது அடிப்படையான குணங்களில் துயில் நடத்தைகளைப் போன்றே திட்டவட்டமாகக் காணப்படினும்கூட, பொதுவாக அவற்றைத் துயில்நடத்தைகள் என்பதில்லை மாறாக, அவை 'இரட்டை ஆளுமைக்கு' (double personality) உதாரணங்கள் என்றே கொள்ளப்படுகின்றன.

அது நாடக நிலையில் நிகழ்வதால், இரட்டைஆளுமை நிகழ்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் பொதுமக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. இந்த சுவையான நிகழ்ச்சியைக்கொண்டு பல நவீனங்கள் படைக்கப்பட்டுள்ளன. R. L. ஸ்டீவன்சனின் (Stevenson) புகழ்வாய்ந்த 'டாக்டர் ஜேக்கைலும் மிஸ்டர் ஹைடும்' (Dr. Jekyll and Mr. Hyde) என்ற நவீனம் இவற்றுள் தலையாயது. ஆனால், இன்று உண்மையான பல வரலாறுகள் விவரிக்கப்பட்டுள்ளன. இவை காணக்கிடைப்பதற்கு அருமையானவை எனப் பொதுவாக நம்பப்படினும், ஓரளவு முற்றாத நிலையில் இரட்டைஆளுமை நிகழ்ச்சி காணக்கிடைக்கவே செய்கிறது. இதை எடுத்துக்காட்டும் ஓர் உதாரணமாக ஆன்சல் போர்ன் பாதிரியாரின் (Rev. Ansel Bourne) வரலாற்றைக் கீழே தருகிறேம். இவ் வரலாற்றினை முதலில் வில்லியம் ஜேம்ஸ் (William James) விவரித்துள்ளார்.

ஆன்சல் போர்ன் பாதிரியார் பல இடங்கள் சென்று போதிப்பவராவர். 1887 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் தேதி இவர் பிராவிடன்ஸ் (**Providence**) நகர் பாங்கு (**Bank**) ஒன்றிலிருந்து தம் கணக்கினின்று பெருமளவில் பணம் பெற்றார். பணம் பெற்றபின் டிராம் (**tram**) வண்டி ஒன்றில் ஏறி அமர்ந்தார். இதுவே அவர் நினைவிலிருந்த கடைசி நிகழ்ச்சியாகும்.

'அன்று அவர் தம் வீடு திருப்பவில்லை. இரண்டு மாதங்களுக்கு அவர் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், மார்ச் மாதம் 14 ஆம் தேதி காலையில் பென்சில்வேனியாவிலுள்ள நாரிஸ் டவுன் (**Norris town**) என்ற ஊரில் **A. J.** பிரவுன் (**Brown**) என்ற பெயரில் வாழ்ந்த மனிதர் ஒருவர், தம் தூக்கத்தினின்று திடீரென பயந்து எழுந்து அவ்வீட்டில் இருந்தவர்களை அழைத்து, தாம் யார் என்று கூறுமாறு வேண்டினார். இவர் ஆறு வாரங்களுக்கு முன்னர் அவ்வூருக்கு வந்து ஒரு சிறிய கடையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, நோட்டுப்புத்தகங்கள், தின்பண்டங்கள், பழம், வேறு சிறு பொருட்கள் என்பன வற்றை விற்று அமைதியான முறையில் வாழ்க்கை நடத்தினார். இவரது வாழ்வு முரணானதாகவோ அன்றி கோட்டித்தனமானதாகவோ (**eccentric**) யாருக்கும் தோன்றவில்லை. வீட்டினரை அழைத்த இவர் தமது பெயர் ஆன்சல் போர்ன் என்றும், தமக்குக் கடையில் வியாபாரம் செய்வதுபற்றி ஒன்றும் தெரியாது என்றும் கூறினார். பிராவிடன்ஸ் நகர் பாங்கு ஒன்றிலிருந்து பணம் பெற்றது மட்டுமே தனக்குக் கடைசியாக நினைவிருக்கிறது எனவும் அதுவும் நேற்று நடந்ததுபோன்றே தமக்குத் தோன்றுகிறது எனவும் அவர் கூறினார்.'

இந்த வரலாற்றில் ஆழ்ந்த சிதைவு ஏற்பட்டிருந்தது வாசகர்களுக்கு உடனே தெளிவாகத்தெரியும். இங்கு, இயல்பான நனவு ஓட்டம் திடீரெனத் தடுக்கப்பட்டு, முற்றிலும் வேறுபட்ட உளச்செயல் தொடர்கள் அங்கு இடம் பெறுகின்றன. நோயாளி ஓர் ஒழுங்கான வகையில் வாழ்க்கை நடத்த அனுமதிக்கும் அளவிற்கும் போதிய நுணுக்கம் பெற்றிருந்த இப்புதிய அமைப்பு இரண்டு மாதங்களுக்கு அங்கு தொடர்ந்திருந்தது. வந்த வேகத்துடனேயே அது நீங்கியபோது, பழைய சிந்தனைத்தொடர் தன் வழியில் தொடர்ந்து இயங்க ஆரம்பித்தது. இத்தகைய வரலாறு துயில் நடத்தையினின்று, அங்கு இடம் பெறும் எண்ண அமைப்புகள் இன்னும் விரிவான வளர்ச்சி பெற்றிருப்பதில் மட்டுமே வேறுபடுகின்றது.

நனவின் பிற பகுதியினின்று அறுபட்டு நிற்கும் எண்ணங்களின் அமைப்புகள் அல்லது சிந்தனைத் தொடர்கள் தனித்து வாழ்கின்றன என இதுவரையிலும் சிதைவிற்காக தரப்பட்டுள்ள எல்லா உதாரணங்களும் காட்டுகின்றன. எண்ணங்களின் அமைப்பு 'அறுபட்டு நிற்றல்' என்றால் என்ன என்பதைச் சரிவர நிர்ணயிக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த உதாரணங்களை நாம் கவனமாக ஆராய்வோம். எண்ணுதெழுதுதல், துயில் நடத்தை என்பவற்றில் இரு பண்புகள் சிறப்புற அமைகின்றன. முதலாவதாக, நனவின் முக்கிய பகுதி

(இதனை ஆளுமை (personality) அல்லது அகம் (ego) என்றே பொதுவாகக் குறிப்பிடுவர்) சிதைவுற்ற அமைப்பு இருப்பதைத் தெரிந்துகொண்டு இருப்பதில்லை. இதன் காரணமாகவே ஜரீன் தனது இயல்பான நிலையின்போது, துயில் நடத்தை வேளையில் இடம் பெறும் செயல்களையும் எண்ணங்களையும் மறந்திருந்தாள். இரண்டாவதாக, சிதைவுற்ற அமைப்பு சுயேச்சையாக வளர்கிறது. அதாவது, நனவின் முக்கிய பகுதியை ஒரு சிறிதும் சாராது, அது தன் வழியில் செல்கிறது. உண்மையில், அது ஆளுமையின் கட்டுப்பாட்டினின்று முற்றிலும் விடுபட்டு நிற்கிறது. தன் துயில் நடத்தையின்போது என்ன செயல்களில் ஈடுபடவேண்டும் என ஜரீனால் முன்கூட்டியே முடிவுசெய்துகொள்ள முடியவில்லை. அவளது தாயின் மரணத்தோடு தொடர்புடைய எண்ணங்கள், தன்னுள் மட்டுமே அடங்கும் ஓர் அமைப்பாகத் தோன்றியிருந்தது. அதன்மேல் அவளது ஆளுமை எத்தகைய செல்வாக்கையும் பெற்றிருக்க முடியவில்லை.

இதே பண்புகளே எண்ணுதெழுதுதல் நிகழ்ச்சியிலும் சிறப்புறக் காணப்படுகின்றன. முதலாவதாக, அந்நோயாளி தனது கை என்ன எழுதுகிறது என்பதைத் தெரிந்து கொண்டிருப்பதில்லை. உண்மையில், தன் கையும் அசைந்து கொண்டிருப்பதையே அவன் தெரிந்திருப்பதில்லை. இரண்டாவதாக, கை எதை எழுதவேண்டும் என்று தீர்மானிக்கவோ அல்லது அது வெளியிடும் எண்ணங்களின் தொடரை ஒரு சிறிதும் மாற்றவோ ஆளுமைக்குத் திறனில்லை.

மேலே கூறப்பட்ட இரு பண்புகளையும், சிதைவுற்ற அல்லது 'அறுபட்டு நிற்கும்' எண்ணங்களின் அமைப்பில் இருக்கவேண்டிய அடிப்படையான அறிகுறிகள் என்பதா அல்லது இவற்றுள் ஒரு பண்பு இருக்கும்போதே சிதைவு ஏற்படும் என்று கருதமுடியுமா என்னும் கேள்வி இப்பொழுது எழுகிறது. இவற்றுள் ஒன்று மட்டும் இருந்தால் போதுமாயின், எதை அடிப்படையானது என்று கூறுவது? சிதைவுற்ற அமைப்பு இருப்பதை ஆளுமை தெரிந்து கொண்டிருப்பதில்லை என்ற உண்மையையா அல்லது அந்த சிதைவுற்ற அமைப்பு தனியாக வளர்கிறது, ஆளுமையின் கட்டுப்பாட்டினின்று விடுபட்டு நிற்கிறது என்ற உண்மையையா?

இன்னும் சிறிது ஆராய்வோமாயின், முதல் பண்பாட்டைக் கொண்டமையும் எல்லா வரலாறுகளிலும் இரண்டாம் பண்பும் இருந்தே யாகவேண்டும் என்பது புலனாகும். ஒரு நோயாளியின் உள்ளத்தில் ஆளுமைக்கு ஒரு சிறிதும் தெரியாத வகையில் ஓர் எண்ணங்களின் அமைப்பு இருக்குமாயின், அந்த அமைப்பு சுதந்திரமானது என்பதும் ஆளுமையின் கட்டுப்பாட்டினின்று விடுபட்டது என்பதும் தெளிவு. ஆகவே, முதற் பண்பு இரண்டாவது பண்பினை உள்ளடக்குகிறது. உண்மையில், இரண்டாம் பண்பின் மிகைப்படுத்தப்பட்ட நிலையே முதல் பண்பாகும். இதைக் கொண்டமையும் எல்லா நோய்வரலாறுகளும் தனித்ததும் சுதந்திரமானதும் தன்னியக்கம் கொண்டதுமான எண்ணங்களின் அமைப்பைப் பெற்றிருப்பதுடன், அது இருப்பதையும் ஆளுமை தெரிந்து கொண்டிருப்பதில்லை. இந்த 'உணராத தன்மை' (unawareness) என்பது, 'சுதந்திர நிலைக்கு' (independence) ஒரு சிறப்பான உதாரணம் என்பதையும் ஆகவே சுதந்திர நிலை என்பதுவே மிக ஆதாரமானதும் உள்ளடக்குவதுமான தன்மை கொண்டது

என்ற முடிவினையும் நாம் பெறுகிறேம். 'சிதைவு' என்ற சொல் அடிப்படையான தன்மை கொண்ட சுதந்திர நிலையை மட்டுமே குறிப்பிடுகிறது எனவும், ஆளுமையில் உள்ள உணராத்தன்மை சிதைவில் சில தனி வகைகளில் மட்டுமே காணப்படுவது எனக்கொள்வதே நலம் பயக்கும். இப்பொழுது நாம் எய்தியுள்ள நிலையினைக் கீழ்வரும் வரையறை (definition) மூலம் வெளியிடலாம். எண்ணங்களின் ஓர் அமைப்பு ஆளுமையினின்று பிரிந்து, அதனுடைய வழியும் வளர்ச்சியும் ஆளுமையின் கட்டுப்பாட்டினின்று விடுபட்டு நிற்குமாயின், அவ் வெண்ணங்களின் அமைப்பு சிதைவுற்றுள்ளது எனப்படும்.

எண்ணுதெழுதுதல், துயில் நடத்தை, இரட்டை ஆளுமை என்பன தவிர நாம் கண்ட நோயாளிகளிடம் சிதைவு என்னும் வரையறைக்குள் அடங்கத்தக்க வேறு அறிகுறிகள் ஏதேனும் காணப்படுகின்கிறனவா என்று ஆராயும் நிலையில் நாம் இப்பொழுது இருக்கிறேம். உதாரணமாக, பீடிப்புகளின் (Obsessions) வரலாற்றை எடுத்துக் கொள்ளுங்கள். மூன்றும் அதிகாரத்தில் விவரிக்கப்பட்ட பீடிப்புடைய பெண்நோயாளியிடம் ஏன் அவள் தன்னிடம் வரும் பணநோட்டுகளிலுள்ள எண்களை யெல்லாம் அத்துணை கருத்தோடு ஆராய்கிறள் என்போ மாயின், 'நான் ஏன் இவ்வாறு செய்கிறேன் என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனல், அவ்வாறு செய்யாதிருக்க என்னல் முடிவதில்லை. நான் ஒரு பணநோட்டைக் காணும்போதெல்லாம், அதிலுள்ள எண்ணை ஆராயுமாறு ஏதோ ஒன்று என்னைக் கட்டாயப்படுத்துகிறது. என்னுடைய இந்த மதியீனமான நடத்தையை எண்ணி நான் வேதனைப்படவே செய்கிறேன். ஆனல், அந்த உந்தல் ஒரு சிறிதும் என்னல் கட்டுப்படுத்த முடியாததாக இருக்கிறது' என்று அவள் பதில் கூறுவாள், அதாவது, பணநோட்டைக் கண்ட அளவில் எண்ணங்களின் ஓர் அமைப்பு கிளர்ந்தெழுகிறது. இவ்வாறு அது கிளர்ந்தெழுவதை நோயாளியின் ஆளுமையால் ஒரு சிறிதும் கட்டுப்படுத்த முடிவதில்லை. அவள் வேறு எதைத் தான் செய்ய விரும்பினலும், தான் விரும்புவதை அடையும் வரையிலும் அவ் வமைப்புத் தொடர்ந்து தன் வழியில் செல்லவே செய்யும். இதன் காரணமாக, அந் நோட்டிலுள்ள எண்ணைக் கவனிக்குமாறு அவள் கட்டாயப்படுத்தப்படுவாள். தனது செயலைப்பற்றி அவள் முழுவதாக அறிந்தே இருக்கிறள். ஆனல், அதைத் தடுக்கவோ அல்லது மாற்றவோ அவளால் முடியாது. இங்கு நாம் காணும் எண்ணங்களின் அமைப்பு ஆளுமையினின்று தனித்து நிற்பதாகவும், அதனைச்சாராது வளர்வதாகவும் உள்ளது. எனவே நமது வரையறையின்படி அதனைச் சிதைவுற்றது என நாம் கூறலாம். இங்கு சிதைவுற்ற அமைப்பு இருப்பதை ஆளுமை தெரிந்து கொண்டிருக்கிறது. இது இவ்வகையான சிதைவிற்கும் எண்ணுதெழுதுதலில் காணப்படும் சிதைவிற்கும் இடையே உள்ள ஒரு வேறுபாடாகும். ஆனல், சிதைவுற்ற அமைப்பு சுயேச்சையாக இயங்குவது இவ்விருவகை சிதைவுகளுக்கும் பொதுவானதாகும்.

நோயாளிகள் சிலரிடம் நாம் கண்ட பல்வேறன பிற பீடிப்பு வகைகளுக்கும் [உ-ம். கை கழுவும் வெறி (washing mania)] இக்கூற்றுகள் பொருந்தும்.

பீடிப்பு அறிகுறிகளை ஒத்தமையும் நிகழ்ச்சிகள், இயல்பான மனிதனின் அன்றாட அனுபவங்களில் அடிக்கடிக் காணப்படுகிறது எனலாம். நாம் என்னதான் முயன்றும் நம்மை விட்டு நீங்க மறுத்து நம் தலையில் ரீங்காரமிடும் இன்னிசை; அறிவியலுக்கு முற்றிலும் பொருந்தாததும், மதியீனமானதும் ஒவ்வாததுமான ஓர் எண்ணம் மீண்டும் மீண்டும் தொடர்ந்து உள்ளத்தில் தோன்றுதல்; நாம் கடந்து செல்லும் ஒவ்வொரு விளக்குக் கம்பத்தையும் தொட வேண்டும் என்னும் அடக்கமாட்டா உந்தல் என்பன போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூற லாம். நாம் ஆராய்ந்த நோயாளிகளிடம் பீடிப்பு மிஞ்சிய நிலையில் இருந்தது போன்றே, இந்நிலைகளில் நாம் உள்ளத்தினின்று சிதைவுற்ற துணுக்குகளைப் பெற்றிருக்கிறோம். அவை, ஆளுமை நனவு நிலையில் கொண்டுள்ள நோக்கங்கள், விருப்பங்கள் என்பனவற்றோடு தொடர்பில்லாமல், தம் வழியே இயங்குகின்றன. சிதைவுற்ற அமைப்பு இருப்பது ஆளுமைக்குத் தெரிந்தே இருக்கிறது. ஆனால், அச்சிதைவான அமைப்புத் தனக்குப் புறம்பானது போன்றும், தன்னோடு தொடர் பில்லாத ஒன்று போன்றுமே உள்ளத்திற்குப் படுகிறது, இந் நோயாளிகள் கூறு வது போன்று 'அந்த எண்ணம் என் உள்ளத்தில் வலுவந்தமாகப் புகுந்துகொள் கிறது', 'இச்செயலைப் புரியுமாறு ஏதோ ஒன்று என்னைக் கட்டுப்படுத்துகிறது.'

இந்தப் பீடிப்பு வரலாறுகளில், சிதைவுற்ற அமைப்பு தனக்குப் புறம்பான ஒன்று போன்றும், அது உள்ளத்தில் திருட்டுத்தனமாகப் புகுந்துகொண் டிருப் பது போன்றும் ஆளுமைக்குத் தோன்றுகிறது. மேற்கூறிய வகையான வரலாறு கள் வேறொரு வகையான சிதைவிற்கு நம்மை இட்டுச் செல்கின்றன. பல்வேறு வகையான இல்பொருட்காட்சிகள் இடம் பெற்றிருந்தன என சென்ற அதிகாரத் தில் நாம் விவரித்த உதாரணங்களை நினைவுகூருங்கள். உதாரணமாக, தான் புரிந்திருந்த தீமைகளின் காரணமாக விரைவில் அவன் கொல்லப்படுவான் என்று அறிவித்த குரல்களைத் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்த ஒரு நோயாளியைக் கண்டோம். அவன் கேட்ட இக்குரல்கள் உண்மையில் இடம் பெற்றிருக்கவில்லை என நாம் இப்பொழுது அறிவோம். அந்நோயாளிக்கு அவை மிக உண்மையானவை யாகத் தோன்றினும், அவனது அருகிலுள்ள மற்றொருவருக்கு அவை அவனது கற்பனையில் எழும் கட்டுக்கதைகளாக மட்டுமே தோன்றுகின்றன. அதாவது அவை நோயாளியின் உள்ளத்தில் மட்டுமே இடம் பெற்றிருந்தன. உண்மையில் அவை நோயாளியின் நனவின் ஒரு பகுதியேயாம். அக்குரல்கள் நோயாளியின் உள்ளத்தின் ஒரு பகுதியாக இருப்பினும் கூட, அவை அவனது ஆளுமையின் ஒரு பகுதியாக அமையவில்லை என்பது தெளிவு. எனவே, அக்குரல்களையும் அவை வெளியிடும் எண்ணங்களின் அமைப்பையும் நோயாளியின் நனவினின்று சிதைவுற்ற பகுதிகளாகவே கொள்ளவேண்டும் என்பது தெளிவாகும். சரிவரக் கூறுவதாயின், அங்கிருந்த எண்ணங்களின் அமைப்பு ஆளுமையினின்று சிதைவுற்றிருந்தது எனவும் அவர் இல்பொருட்காட்சியாகக் கேட்ட 'குரல்' இந்தச் சிதைவுற்ற எண்ண அமைப்பு தான் இருப்பதை ஆளுமைக்கு அறிவிக்கும் வழி முறையாகும் எனவுமே கூறுவது நன்று. இவ்வாறு நோயாளியின் நனவு இரு

பகுதிகளாகப் பிரிந்து, அவற்றுள் ஒன்று இதர பகுதியுடன் பேசுவது என்பது எல்லா உளமருத்துவ மனைகளிலும் சாதாரணமாகக் காணக்கிடைக்கும் நிகழ்ச்சி களாகும்.

மேலும் சிதைவுபற்றிய கருத்து, ஒரு திரிபுணர்ச்சியால் (delusion) வருந்தும் நோயாளியின் உளநிலையையும் இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. ஒரு திரிபுணர்ச்சி என்பது அது இருக்க முடியாத ஒன்று என எந்த விதமான அறிவியல் ஆதாரங்களைக் கொண்டு காட்டப்படினும் அவற்றால் பாதிக்கப்படாத ஒரு தவறான நம்பிக்கை என்பதையும் அதற்குப் பொருந்தாத அல்லது வெளிப்படையாகவே முரணாக அமையும் உண்மைகள் இருப்பதால் சிறிதும் பாதிக்கப்படாதது என்பதையும் வாசகர்கள் நினைவுகூருவீர்கள். எனவே, ஒருநோயாளி தாமே அரசர் என நம்புவாராயின், அவரது முடிவு முற்றிலும் தவறானது என நிரூபிப்பதால் பயன் எதுவுமில்லை ; அவர் தம் நம்பிக்கையில் பின்னரும் ஆழ்ந்தே இருப்பர். தனது பழங்கால வரலாற்றையும் தன் குடும்பத்தினரின் வரலாற்றையும் அவர் ஒருக்கால் நன்கு தெரிந்துகொண்டிருக்கலாம். ஆயினும் அவ்வரலாறுகளில் அடங்கியுள்ள உண்மைகள், தாம் மூன்றும் ஜார்ஜ் மன்னரின் மைந்தன் என்ற தமது நம்பிக்கைக்கு முரணாக இருப்பது அவருக்குத் தெரிவதில்லை. தான் சர்வசக்தி வாய்ந்தவன் எனவும் தன்னால் ஒரு புதிய அண்டத்தையே (Universe) தோற்றுவிக்கமுடியும் எனவும் அவர் நம்மிடம் உறுதி மொழியலாம். ஆனால், மறு வினாடியே, தன்னை மருத்துவ மனையினின்று வெளியேற அனுமதிக்குமாறு இறைஞ்சலாம்; கொஞ்சம் புகையிலை தருமாறு கெஞ்சலாம். இம் முரண்பாடுகள், முதலில் விவரிக்கக் கூடாதனவாகவும், புரிந்துகொள்ள முடியாதனவாகவும் தோன்றலாம். ஆனால், நோயாளியின் உள்ளம் சிதைவுற்ற நிலையிலிருக்கிறது என்று நாம் அறிந்து கொண்ட அளவில் இப்புதிர் விடுபட்டுப் போகிறது. ஒரு முடிவை நோக்கித் திட்டவட்டமாக முன்னேறும் சீரான ஓடையாக உள்ளம் இந்நிலையில் காணப்படுவதில்லை. மாறாக ஓரளவு தனித்தனியாகப் பிரிந்து நிற்கும் உளச்செயல்களால் அது ஆக்கப்பட்டுள்ளது. இந்த ஒவ்வொரு உளச்செயலும் தத்தம் வழியே செல்வதுடன், தன்னுடன் இருக்கும் பிற உளச் செயல்களாலும் பாதிக்கப்படுவதில்லை. நோயாளி தாம் அரசர் என நம்புகிறார்; ஆனால், அந்நம்பிக்கையை முற்றிலும் மறுப்பனவாக உண்மைகள் இருத்தலையும் தெரிந்து கொண்டிருக்கிறார். இவை இரண்டும் அவர் உள்ளத்தில் உடனுறைந்தாலும் கூட, அவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்வது அனுமதிக்கப்படுவதில்லை. ஏனையதின் முக்கியத்துவத்தினாலும் அவை பாதிக்கப்படுவதில்லை. அவை தாளிட்ட தனியறைகளில் அடைபட்டனவாகத் தத்தம் வழியில் இயங்குகின்றன. அவற்றின் இடையேயுள்ள தடையின் வழியே செல்ல, அவற்றினிடையே தொடர்பு ஏற்படுத்தத்தக்க எண்ணங்களோ அல்லது காரணங்களோ அனுமதிக்கப்படுவதில்லை. நோயாளியின் நம்பிக்கை இருக்கமுடியாத ஒன்று என அறிவியல் ஆதாரங்கள் கொண்டு நாம் வாதிட முற்படுவதும் பயன் தருவதில்லை. நமது வாதங்கள் ஒவ்வொன்றினையும் அவர் சரிவரப்புரிந்துகொள்ளவே செய்கிறார். ஆனால், அவற்றுள் அடங்கியுள்ள உண்மைகள், அவரது திரிபுணர்ச்சியைத்

தாங்கி நிற்கும் பகுதியினுள் அனுமதிக்கப்படுவதில்லை. வாத்தின் மீது விழும் தண்ணீர் நழுவி ஓடுவதுபோன்று, அவரைப் பொறுத்தமட்டிலும் நமது விவாதங்களும் அவ்வாறே நழுவி ஓடுகின்றன.

நாம் இதுகாறும் விவரித்த சிதைவு என்னும் நிகழ்ச்சி மிக விகற்பமானதாகவும், பித்தரது குணம் போலவே தோன்றினும், உள்ளம் தாவிட்ட தனியறைகளாகச் சிதைவுறுவது உள மருத்துவ மனைகளில் உள்ளோரிடம் மட்டுமே காணக் கிடைப்பதன்று. ஒவ்வொரு சாதாரண மனிதனது வாழ்விலும் அவை சாதாரணமாக இடம் பெறுகின்றன. அவை இடம் பெறுமல் இருக்க முடியாது என்று கூடக் கூறலாம். உதாரணமாக, நமது அரசியல் நம்பிக்கைகள் பிறரது விவாதங்களால் ஒரு சிறிதும் பாதிக்கப்படுவதில்லை ; நமது அனுபவம் முற்றிலும் மாறுன உண்மைகளைத் தொடர்ந்து காட்டும்போதுங் கூட, நாம் நமது குழந்தைப்பருவத்தில் ஏற்பட்ட பழைய நம்பிக்கைகளைத் துறந்துவிடுவதில்லை. உள்ளத்தில் ஓரளவு சிதைவு காணப்படுவதைக் கொண்டு மட்டுமே இந்நிகழ்ச்சிகளை நாம் விளக்கமுடியும். இவை தமது தரத்தில் குறைந்திருப்பினும், தான் ராணி எனக் கூறினும் மருத்துவ மனையைத் துடைத்துச் சுத்தப்படுத்திய பெண்ணிடம் காணப்பட்ட சிதைவையே ஒத்திருந்து. அச்சிதைவின் காரணமாகவே, தனது உயர்ந்த பதவிக்கும் தான் புரிந்த கூலிவேலைக்கும் இடையேயிருந்த முரண்பாட்டை அவள் தெரிந்து கொள்ளாமலிருந்தாள்.

# 5. உளச் சிக்கல்கள்

உள்ளத்தின் பல்வேறு நோய்நிலைகளில் காணக்கிடப்பனவற்றுள் சில நிகழ்ச்சிகளை மூன்றும் அதிகாரத்தில் விளக்கியுள்ளோம். மேலும் நான்காம் அதிகாரத்தில் இந்த நிகழ்ச்சிகளைக் குழுக்களாக வகைப்படுத்தி வரிசை செய்யவும் முயற்சி செய்துள்ளோம். இவ்வகைப்படுத்துதல் முதலில் இருந்த குழப்பத்தை நீக்கி, ஓரளவு ஒழுங்கைத் தந்திருப்பதுடன், நாம் ஆராய முற்பட்டிருக்கும் பொருள் பற்றிய உண்மைகளைப்பற்றி முழுமையான கண்ணேட்டத்தைப் பெறவும் உதவியுள்ளது. உதாரணமாக, காணக்கிடக்கும் பல உளக்கோளாறு களை, நனவின் சிதைந்த நிலைகளாகக் கருதவேண்டும் எனத் தெரிந்துகொண்டுள் ளோம். இந்நிலைகளில், நனவு என்பது சீரான முழுமையான ஒன்றுக இயங்காது, தனித்தனியே இயங்கும் சிற்றருவிகளாகப் பிரிக்கப்பட்டு நிற்கிறது. ஆயினும், இதுவரையிலும் மேற்கூறிய நிகழ்ச்சி ஏன் ஏற்படுகிறது என்பதை விளக்கும் முயற்சிகளில் நாம் ஈடுபடவில்லை. இல்பொருட்காட்சியால் (Hallucination) வருந்தும் நோயாளியைத் துன்புறுத்தும் கற்பனைக் குரல்கள், அவனது நனவினின்று சிதைவுண்டு நிற்கும் பகுதிகளேயன்றி வேறென்றுமில்லை என நாம் கண்டோம். ஆனல் அவனது நனவின் ஒரு பகுதி ஏன் இவ்வாறு பிறழ்வான நிலையில் சிதைவுண்டு நிற்கிறது என்பதற்கு நாம் இதுவரையிலும் காரணம் எதுவும் கூறவில்லை. அதைப்போன்றே இம்மாயக்குரல் ஏன் ஒரு குறிப்பிட்ட வகையான கூற்றுக்களில் மட்டும் ஈடுபடுகிறது என்பதையும் நாம் விளக்கவில்லை. உண்மையில், சில உளநிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன என்பதைமட்டும் நாம் தெரிந்துகொண்டிருக்கிறேம். ஆனல், அவை ஏன் ஏற்படுகின்றன என்பது நமக்கு இன்னும் புதிராகவே உள்ளது.

இரண்டாம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பொது உண்மைகளைத் தெளி வாகப் புரிந்துகொண்டுள்ள வாசகர், இதுவரையிலும் நாம் அறிவியலின் முதல் இரண்டு படிகளைமட்டும் செய்து முடித்துள்ளோம் என்பதையும், மூன்றும் படிக்குச்செல்ல நாம் எத்தகைய முயற்சியையும் இதுவரையிலும் மேற்கொள்ள வில்லை என்பதையும் உடனடியாகக் கண்டுகொள்வர். நிகழ்ச்சிகளைத் தொகுத்து அவற்றினை நாம் வகைப்படுத்தியுள்ளோம். இந்நிகழ்ச்சிகளைப் புரிந்து பின் பற்றவும், விளக்கவும் போதுமான கருதுகோள்களை (conceptions) நாம் இனிமேல்தான் காணவேண்டும்.

தேவையாகும் இம்மூன்றும் படி மிகவும் சிக்கல் வாய்ந்த ஒன்ருகும். உள மருத்துவம் (Psychiatry) சில காலமே இருந்துவரும் துறையாகும். இத்துறையில் இன்னும் கண்டுபிடிக்கப்படவேண்டிய உண்மைகள் பல உள்ளன. இந்நிலையில், இத்துறையில் இன்று நாம் விரும்பும் வகையில் ஒரு சிறிது மட்டுமே முன்னேறிக் காணமுடியும். மேலும் நாம் முன்னேறிச் செல்லக்கூடிய இச்சிறிய பகுதியிலும் முரண்பட்ட கருத்துகள் மலிந்துள்ளன. இதைத் தவிர்ப்பதற்கில்லை. இளம் அறிவியல் தொடர்ந்து போராட்டம் நடைபெறும் களமாகவே இருக்கிறது. எனவே, நம் பொருளைத் தெளிவாக எடுத்துக்கூறுவதற்காக ஓரளவு கொள்கைப் பிடிவாதமான (dogmatic) மனப்பான்மையை நாம் மேற்கொள்வது தேவையாகலாம். ஆயினும் இந்த அதிகாரத்திலும், பின்வரும் அதிகாரங்களிலும் நாம் பெறும் பல முடிவுகளை வாசகர்கள் தற்காலிகமானவை எனக் கருதவேண்டுமேயன்றி, ஆணித்தரமாக நிலைநிறுத்தப்பெற்றவை எனக்கொள்ளுதலாகாது. அண்மை ஆண்டுகளில் வியன்னவைச் சார்ந்த பேராசிரியர் ஃப்ராயிடு (Freud), சூரிச்சைச்சார்ந்த டாக்டர் யூங் (Jung) என்பவர்கள் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சிகளின் பயனுகவே இம்முடிவுகள் பெருமளவில் தோன்றியுள்ளன.

நோய்நிலையான உளநிகழ்ச்சிகளில் உள்ளடங்கிக்கிடக்கும் காரணங்களை நாம் தெரிந்துகொள்ள முற்படும் முன்னர், நமது முயற்சி பயனுடையதுதான் என்பதில் நாம் உறுதிகொண்டிருத்தல்வேண்டும். மேலும் இத்தகைய காரணங்கள் உள்ளன என்பதையும் நாம் உறுதியாக நம்பவேண்டும். இந்த நம்பிக்கையில் உள நிர்ணயிப்பு (Psychological determination) என்பதை நாம் ஏற்க வேண்டியிருக்கிறது. அதாவது சட உலகில் உள்ளது போன்று, உள உலகிலும் ஒவ்வொரு விளைவிற்கும் ஒரு காரணம் உண்டு. தேவையாகும் முன்காரணிகள் இருக்குமாயின், அவற்றின் விளைவும் கண்டிப்பாகக் காணப்படுதல் வேண்டும். நாம் விளைவைக் காண்போமாயின், இவ்விளைவைத் தோற்றுவிப்பதற்கெனக் குறிப்பிட்ட திட்டவட்டமான காரணங்கள் இணைந்திருக்கவேண்டும் என நாம் அறிந்துகொள்வோம். பௌதீகத்தில் (Physics) தற்செயலாக நிகழ்வன என்பன எவ்வாறு கிடையாதோ, அதேபோன்று உளவியலிலும் அவற்றிற்கு இடம் இல்லை. உள்ளத்தில் மின்னிட்டுச்செல்லும் ஒவ்வொரு எண்ணமும், அது என்னதான் பொருளற்றதுபோன்றும் அல்லது தற்செயலானது போலவும் தோன்றினும், அதற்கு முற்பட்ட பல்வேறு உளச் செயல்களினின்று தோன்றத்தக்க எண்ணமாகத்தான் இருத்தல்வேண்டும். ஓர் எண்ணை நான் நினைக்கவேண்டும் என நான் கேட்டுக்கொள்ளப்படுவேனுயின், நான் எந்த எண்ணை இதற்கெனத் தேர்ந்தெடுப்பேன் என்பது கவலைப்படவேண்டிய ஒன்றல்ல என்பதுபோலத்தோன்றும். ஆனுல், உண்மையில் அவ் வேளையிலுள்ள மனநிலைக்கு ஏற்ற முறையினுலேயே அந்த எண் திட்டவட்டமாகவும் முழுவதாகவும் நிர்ணயிக்கப்படும். தவிர்க்க முடியாத வகையில் ஒரு குறிப்பிட்ட எண் மட்டுமே உள்ளத்தில் தோன்றும். வேறு எண்ணங்கள் தோன்றுவது முடியாததாகும். இது உண்மையற்றது

போன்றும், நாமாக வலிந்து தோற்றுவித்துள்ள முடிவு போன்றும் வாசகருக்குத் தோன்றக்கூடும். ஆனால், இதனை ஒரு முதல் அடிப்படை உண்மை (preliminary axiom) என நாம் ஏற்காத வரையிலும், உளவியல் என்னும் அறிவியல் நிலைக்க வழியில்லை. நம்முடைய சொந்தக் கருத்துகள் வேறாக இருக்கலாம். ஆனால், உளவியல் அடிப்படையிலும், அறிவியல் அடிப்படையிலும் சிந்திக்க முற்படும்போதெல்லாம் காரணவிதியில் (law of causation) அடங்கியுள்ள எல்லா உட்பொருட்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது.

நமது நனவின் ஓட்டத்தை நிர்ணயிக்கும் காரணங்களை அறிந்துகொள்வதே உளவியலின் இறுதி இலட்சியமாகும். நாம் இவ்வாறு காணும் விதிகள் இயல்பான மனிதர்களுக்கும் பித்தர்களுக்கும் (insane) பொருந்தும் ஒன்றாகவே இருக்கவேண்டும் என நாம் நிச்சயமாக எதிர்பார்ப்போம். ஏனெனில் நோயுற்ற உடல்பகுதியின் செயல்களை நிர்ணயிக்கப் பயன்படும் உடலியல் விதிகளும், ஆரோக்கியமான உடல் பகுதியின் செயல்களை நிர்ணயிக்கப்பயன்படும் விதிகளும் ஒன்றே. ஓரளவு தரத்திலும், காரணிகளின் சேர்க்கையிலும்மட்டுமே வேறுபாடு காணப்படுகிறது.

நிர்ணயிக்கும் இக்காரணிகளை எந்தத்திக்கில் நின்று நாம் காணவேண்டும் என்பதை சில எளிய உதாரணங்களின் மூலம் ஆராய்வோம். நான் புகைப்படம் பிடிப்பதில் அதிக ஆர்வம் உடையவன் என வைத்துக்கொள்வோம். எனக்கு இத்தகைய பொழுதுபோக்குச்செயல் (hobby) இருப்பது எனது நனவு ஓட்டத்தைத் தொடர்ந்து பாதித்த வண்ணமாகவே இருக்கும் என்பது தெளிவு. சாதாரண நிலையில் நான் புறக்கணித்திருக்கக்கூடிய பல காட்சிகள், புகைப்படம் எடுக்கத்தக்கன என்ற முறையில் என்னைப் பெரும்பாலும் கவருகின்றன. நான் செய்திப் பத்திரிகையைக் கண்ணோட்டமிடும்போது, புகைப்படக்கலை பற்றிய கட்டுரை என் கவனத்தை உடனடியாகக் கவர்கிறது. என் நண்பர்களைக் கண்டு அளவளாவும்போதெல்லாம் பேச்சை எனது விருப்பமான பொழுதுபோக்குச் செயல் பற்றியதாக மாற்ற, எல்லா வாய்ப்புக்களையும் பயன்படுத்த முயற்சி செய்யக் கூடும். இவ்வாறு எனது சிந்தனையின் திசையை நிர்ணயிக்கும் ஒரு காரணியாக எனது பொழுதுபோக்குச் செயல் இருப்பதை நாம் காண்போம். ஒரு பொழுதுபோக்குச் செயலின் திட்டவட்டமான தன்மையைத் தெரிந்துகொள்ள நாம் முற்படுவோமாயின், அது தொடர்புடைய எண்ணங்கள் கொண்ட ஒரு அமைப்பு என்பதையும் ஒரு தீவிரமான மனவெழுச்சிக் கிளர்ச்சி கொண்டது என்பதையும், திட்டவட்டமான தன்மைகொண்ட குறிப்பிட்ட செயல்களைத் தோற்றுவிக்கும் போக்குடையது என்பதையும் காண்போம். மனவெழுச்சிக் கிளர்ச்சியுடைய எண்ணங்களின் இத்தகைய ஓர் அமைப்பினை, கலைச்சொல்லாகக் கூறுமிடத்து ஒரு 'சிக்கல்' (Complex) என்பர். பொழுதுபோக்குச்செயலும் இவ்வகையில் ஒரு குறிப்பிட்ட வகையான சிக்கலேயாம். மேலே நாம் விவரித்துள்ள எளிய

வரலாற்றில் எனது நனவு ஓட்டத்தை நிர்ணயிக்கும் ஒரு காரணி, தீவிரமான 'புகைப்படச் சிக்கலாகும்'.1

சிக்கல்கள் எண்ணிறந்த வகையினதாகவும் பலவகைத் தன்மை கொண்டனவாகவும் இருக்கலாம். இவற்றை உண்டுபண்ணும் எண்ணங்கள் எல்லாவகையைச் சார்ந்தனவாகவும் இருக்கலாம். இவற்றோடு தோன்றும் மன வெழுச்சிக் கிளர்ச்சி இன்பம் தருவதாகவோ அல்லது துன்பம் பயப்பதாகவோ இருப்பதுடன், மிகத் தீவிரமானதாகவோ அல்லது ஒப்பீடாகக் காணுமிடத்து வன்மை குறைந்ததாகவோ காணப்படலாம்.

ஒரு சிக்கலின் மனவெழுச்சிக் கிளர்ச்சித்தன்மை மிகத் தீவிரமாக உள்ளபோது, அச்சிக்கல் நனவில் திணிக்கும் செயலின் தன்மையும் அதற்கேற்ப அதிகமாக இருக்கும். உதாரணமாக, அண்மையில் காமனின் கடைக்கண் வீச்சிற்குப் பலியாகியுள்ள இளைஞனிடம் தோன்றியுள்ள மிக வன்மை வாய்ந்த சிக்கலை எடுத்துக்கொள்வோம். அவனது நனவில் சிக்கலைப்பற்றிய எண்ணங்கள் இடையறாது தோன்றிய வண்ணமாக இருக்கின்றன. மிகச்சிறு இயைபுடைய தொடர்புகளும் (Associative connections) இந்த எண்ணங்களைத் தூண்டப் போதுமானவையாக இருக்கின்றன. தன் காதலியைப்பற்றிய எண்ணங்களைச் சமைப்பதிலேயே அவனது உளச்சக்தி அனைத்தும் ஈடுபட்டிருக்கிறது. எனவே, தனது அன்றைய கடமைகளில் தன் மனத்தைத்திருப்பிவிட முடியாதவனாக அவன் இருக்கிறான். நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் அவனது வேட்கையோடு தொடர்புபடுத்தப்படுகிறது. அவனைப் பொறுத்தவரையிலும், இந்த அண்டம் அனைத்தும் அவனிடம் முனைப்பாகக் காணப்படும் சிக்கலின் பின்னணியே தவிர, வேறொன்றுமில்லை.

எனவே சிக்கல்கள் என்பன நனவு ஓடையின் நடத்தையை நிர்ணயிக்கும் காரணங்களாகும். அவை நனவின்மேல் ஏவும் செயலினை, பௌதீகத்தில் 'விசை' (force) என்னும் கருதுகோளை ஒத்த உளவியல் கருதுகோள் எனலாம். இந்தச் சிக்கல்கள் இடையறாது இயங்கிக்கொண்டிருப்பதில்லை. சில குறிப்பிட்ட நிலைகளில் மட்டுமே அவை இயங்குகின்றன. 'தூண்டுதல்' (stimulus) இருக்கும் போது மட்டுமே இந்நிலைகள் உள்ளன. சிக்கலில் இடம் பெறும் ஓர் எண்ணமோ அல்லது அதிகமான எண்ணங்களோ, ஏதேனும் வெளி நிகழ்ச்சியாலோ அல்லது உள்ளத்தினுள்ளே ஏற்படும் இயைபுச்செயலாலோ (Process of association) செயலில் ஈடுபடுமாறு தூண்டப்படும்போதுமட்டுமே இச்சிக்கல்கள்

1 'சிக்கல்' என்னும் சொல்லை முதலில் யூங் புனைந்தார். இந்நூலில் பயன் படுத்தப்பட்டுள்ள வகையில் பொதுவான பொருளில் அவர் இச்சொல்லைப் பயன் படுத்தினார். ஒடுக்குண்ட எண்ணங்களின் (ஏழாம் அதிகாரம் காண்க) அமைப்புக்களைக் குறிப்பதாக மட்டுமே அது இப்பொழுது பயன்படுகிறது. இவ்வகையில் ஏறத்தாழ நோய்த் தன்மையானவற்றையே இச்சொல் குறிப்பிடுகிறது. இந்த அதிகாரத்தில் பயன்படும் பொதுவரன கருதுகோள், ஷாண்டு, மக்டுகல் என்பவர்களது 'பற்றுகளை' (sentiments) நெருங்கி அமையும்.

இயங்குகின்றன. நாம் கூறிய எளிய உதாரணத்தில், பேச்சின் நடுவே புகைப்படம் பற்றிய எதேனும் கருத்துகள் புகுத்தப்படுவதனுலோ அல்லது தொடர்பற்ற எண்ணம் ஒன்றிலிருந்து புகைப்படத்துறையோடு திட்டவட்டமாகத் தொடர்புடைய எண்ணத்திற்கு ஏற்படும் கோவையான இயைபினுலோ, 'புகைப்படச்சிக்கல்' தூண்டப்படலாம். தேவையாகும் தூண்டுதல் ஏற்பட்டவுடன், சிக்கலானது நனவில் தனது செல்வாக்கைக் காட்டுகிறது. சிக்கலில் பங்குடைய எண்ணங்கள், மனவெழுச்சிகள், தொடர்செயல்கள் என்பனவற்றை நனவில் புகுத்துவதே பெரும்பாலும் இச்செல்வாக்காக அமைகிறது. தனியவன் பெறும் பிற எண்ணங்கள், விவாதங்கள் என்பனவற்றுள், சிக்கலோடு ஒத்து அமைவன வலுப்படுத்தப்படுகின்றன. சிக்கலோடு ஒவ்வாதன தமது கோர்வையான தன்மையை இழப்பதுடன், தடுத்தும் நிறுத்தப்படுகின்றன.

ஒரு சிக்கல் இயங்குவதால் தோற்றுவிக்கப்படும் இவ்வகையான எண்ணச்சுழல்கள், அறிவியல் அடிப்படையில் சிந்திக்கும்போது எழும் எண்ணச் சுழல்களினின்று முற்றிலும் மாறுபட்டு அமைகின்றன. அறிவியல் சாரும் சிந்தனையின் ஒவ்வொரு படியும் முன்னைய படியின் விளைவாக அமைகின்றது ; பெறப்படும் ஆதாரங்கள் நடுநிலைமையில் ஆராயப்படுகின்றன; நல்ல முடிவுகள்போலத் தோன்றும் ஒவ்வொன்றின் உண்மையும் நடுநிலையினின்று காணப்படுகின்றது. சாதாரண நடைமுறை வாழ்வில் இத்தகைய தூய அறிவியல் சிந்தனை இருப்பது அருமையே ஆகும். பெரும்பாலான சிந்தனைகள், சிக்கல் சார்ந்து நிற்பது வெளிப்படையாகவே காணப்படுகிறது. நடுநிலையினின்று பிறழாதும், உணர்ச்சிக்கு இடம் கொடாதும் சிந்திக்கும் விநோதமான துறை எனப் பாமரமக்களால் கருதப்படும் விஞ்ஞான உலகிலும் கூட சிக்கல்கள் பெரும்பங்கு வகிக்கின்றன. அறிஞர் பேரவைகளில் நடைபெறும் விவாதங்கள், இவ்வகையில் மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் துலங்குகின்றன.

மனவெழுச்சிக் கிளர்ச்சி கொண்ட எண்ணங்களின் இந்த அமைப்புகளில், நம் எண்ணங்கள் செயல்கள் என்பனவற்றின் போக்கை நிர்ணயிப்பதில் (ஓரளவேனும்) பொறுப்பு வகிக்கும் வன்மைமிக்க காரணங்களை நாம் காண்கிறோம். இனி நாம் இன்னும் ஒரு படி முன்னேறிச்செல்லலாம். நாம் அந்த புகைப்படக்காரரிடம் அவர் ஏன் எப்பொழுதும் குறிப்பிட்ட முறைகளில் மட்டும் சிந்திக்கவும், செயல் புரியவும் முற்படுகிறார் எனக் கேட்போமாயின் அவர் பெரும்பாலும் உடனடியாக 'நான் புகைப்படக்கலையில் ஆர்வம் கொண்டிருப்பதால்' எனக்கூறக்கூடும். அதாவது புகைப்படச்சிக்கல் தம்மிடம் இருப்பதை அவரே அறிந்துகொண்டிருப்பதுடன் அது எந்த முறையில் தன்னிடம் அதன் விளைவுகளைத் தோற்றுவிக்கிறது என்பதையும் தெரிந்துகொண்டிருப்பர். ஆனால், சிக்கல் இருப்பதையும் அதன் செயலையும் பற்றிய அகவய (subjective) உணர்வு எல்லா நிலைகளிலும் இருப்பதில்லை. ஒரு சிக்கல் தனது விளைவுகளை நனவில் தீவிரமாகத் தோற்றுவிக்கும்போதும் அதனால் பாதிக்கப்படும் மனிதர்

சிக்கல் இயங்குவதை தெரிந்துகொள்ளாமலேயே இருக்கலாம். அதாவது தனது உளச்செயல்களை உண்மையில் நிர்ணயிக்கும் காரணங்களைப்பற்றி அம் மனிதன் ஒரு சிறிதும் அறியாமல் இருக்கலாம். ஓர் உதாரணம் தந்து, இக் கூற்றினைத் தெளிவுபடுத்தலாம். ஒரு புதிய சீர்திருத்தம் பற்றித் தமது கருத்தை வெளிப்படுத்துமாறு ஒரு கட்சியைச் சேர்ந்த அரசியல்வாதி கேட்டுக் கொள்ளப்படுகிறார் என்போம். அவர் தரும் முடிவு அவரது 'கட்சிக்கருத்தை' ஒட்டியதாகவே பெரும்பாலும் இருக்கும். குறிப்பிட்ட எண்ண அமைப்புகளையும் சிந்தனைப் போக்குகளையுமே கட்சிக்கருத்து எனப் பொதுவாகக் கொள்கிறோம். நாம் புதிதாகக் கருதும் முறையில் இவற்றை அவரது 'அரசியல் சிக்கல்' (Political Complex) என்போம். இச் சிக்கலின் காரணமாக அச் சீர்திருத்தத்தால் எழும் அடிப்படை நன்மையைச் சிந்தியாது, சிக்கலின் அடிப்படைக்கேற்ற மனப்பான்மையை (attitude) கொள்ளும் கட்டாயத்திற்கு அவர் உள்ளாகிறார். அச் சீர்திருத்தம் பற்றி இந்த அரசியல்வாதியுடன் நாம் வாதம் புரிவோமாயின், தன் கட்சியின் கருத்துகளை ஆதரிக்கும் காரணங்களை மட்டும் அச் சிக்கல் அவர் உள்ளத்தில் வலுப்படுத்துவதையும், எதிர்க்கட்சியினரது வாதங்களில் பொதிந்து கிடக்கும் உண்மைகளை ஏற்க முடியாதவாறு அச் சிக்கல் தூண்டுவதையும் நாம் காண்போம். இம்மனிதர், தன் உள்ளம் ஏன் அவ்வாறு இயங்குகிறது என்பதைச் சரிவர உணராமல் இருப்பதை நாம் காணக்கூடும். தாம் அச்சீர்திருத்தம் பற்றிய நன்மை தீமைகளை அறிவியல் அடிப்படையில் ஆராய்ந்ததன் மூலம் மட்டுமே தம் முடிவைப் பெற்றதாக அவர் கற்பனை செய்து கொள்கிறார். அவர் எச் சிக்கலின் செயலைப் புரிந்துகொள்ளாது இருக்கிறாரோ, அதுவே அவரது சிந்தனையை இங்கு நிர்ணயிக்கிறது என்பது ஒரு புறமிருக்க, வேறு காரணங்களினாலேயே தமது எண்ணங்கள் தோன்றின எனவும் அவர் நம்புகிறார். உண்மையில் அவர் நம்பும் இந்த காரணங்களால் அவர் செயலை முழுவதாக விளக்க முடியாதென,வும் இக் காரணங்கள் அவர் கற்பனையில் மட்டுமே இடம் பெறுவன எனவும் நாம் அறிவோம். தன் சிந்தனைகளின் உண்மையான ஆதாரங்களை தனிபவன் மறைத்து, தற்செயல் நிகழ்ச்சிகளைக் கோவையாக அடுக்கித் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் செயலினை 'காரணம் கற்பித்தல்' (Rationalization) என்பர்.

அரசியல் வாதியைப்பற்றிய உதாரணத்தில், நம்பிக்கைகளும் செயல்களும் நனவிலியிலிருந்து (unconcious) தோன்றுதல், பின்னர் அவை காரணங் கற்பித்தலாக மாறி இயங்குதல் என்னும் இரு உள நுட்பச் செயல்களைக் (Mental mechanisms) கண்டோம். இவை உளவியலில் ஆதார முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். இவற்றை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மனிதனிடமும் நாம் காணமுடியும். ஒரு மனிதன் தான் ஏன் குறிப்பிட்ட வகையில் சிந்திக்கிறான் என்பதையும், குறிப்பிட்ட செயல்களில் ஏன் ஈடுபடுகிறான் என்பதையும் பெரும்பாலும் தெரிந்து கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கை மனித இனத்தினிடம் நிரம்பி வழிகிறது. ஆனால், இது பெரும்பாலும் தவறான நம்பிக்கையாகும். அறிவுக்கு ஏற்ற முறையில் மட்டுமே செயல்புரிகிறோம்

என்ற நம்பிக்கையில் நிலைக்க நாம் மிகவும் துடிப்பாய் இருக்கிறோம். சில சிந்தனைகளிலும் செயல்களிலும் அவற்றின் உண்மையான நோக்கங்களை அறியாது ஈடுபடுகிறோம் என்று ஏற்கவேண்டியிருப்பதை வெறுக்கிறோம். ஆனால், நமது உளச்செயல்களில் பெரும்பாலானவை மனவெழுச்சிச் சார்புகளாலோ அல்லது நாம் முன்பு விவரித்த சிக்கல்களாலோ தோற்றுவிக்கப் படுகின்றன. அறிவோடு மட்டுமே நிற்றல் என்ற நமது இலட்சியத்திற்கு இந்த எண்ணம் ஒவ்வாததாக இருக்கிறது. எனவே, அதை ஏற்காது ஒரு கற்பனையான அறிவியல் செயலை அதற்குப் பதிலாக (Substitute) கொண்டு அந்த குறிப்பிட்ட சிந்தனையோ அல்லது செய்கையோ முறையானது எனவும், இயற்கையான முறையில் எழுந்தது எனவும் நம்பும்படி நம்மையே நாம் தூண்டிக்கொள்கிறோம். அரசியல்வாதியிடம் நாம் கண்ட காரணங்கற்பித்தல் நடத்தை இவ்வாறுதான் எழுகிறது. இந் நடத்தையின் விளைவுகள் பற்றிய இன்னும் பல எடுத்துக்காட்டுகளை இயல்பானோர் உளவியலிலும் பிறழ்வு உளவியலிலும் (Abnormal Psychology) நெடுகக் காண்போம்.

மனித சிந்தனை, செயல் என்பன உருவாகுவதில் அறிவே முக்கியமான பங்கு வகிக்கிறது என்ற தவறான நம்பிக்கை காணப்படுவதற்கு, 'காரணங்கற்பித்தல்' பரவி நிற்றலே காரணமாகும். உண்மையில் பெரும் பாலான சிந்தனைகளும் செயல்களும், நமது இயல்பூக்கங்கள் (Instincts) அனுபவம் என்பனவற்றினின்று பிறக்கும் சிக்கல்களால் உருவாக்கப்படுகின்றன. அறிவு இதில் இடம் பெறுவதில்லை. ஆனால், அறிவோடு நிற்றல் வேண்டும் என்னும் நமது அவாவை நிறைவேற்றும் படியாக, அறிவு என்பது பின்னர் தயாரிக்கப்பட்டு, புகுத்தப்படுகிறது.

நமது ஒழுக்க நடத்தைத் துறையில்தான் காரணங்கற்பித்தல் என்னும் உளநுட்பச்செயல் அதிகமாகக் காணப்படுகிறது. சில சமயக் கொள்கைகளையும் அறக்கொள்கைகளையும் நனவு நிலையில் கைப்பற்றுவதால் நம் நடத்தை எழுகிறது என நாம் கூற முற்படுகிறோம். ஆனால், இந்த செயல்களில் பெரும்பாலானவை பழக்கங்களின் காரணமாகவும், நமது வகுப்பினரின் மரபுகளுக்கு நாம் பணிவதாலும், இவை போன்ற இன்ன பிற காரணங்களாலும் ஏற்படுவதுடன் அவை இயல்பூக்கத்தால் உடனடியாகச் செய்து முடிக்கப்படுகின்றன. நம் நடத்தை எவ்வாறு தோன்றிற்று என விளக்க நேரிடும்போதுமட்டும் பொதுவான கொள்கை என்பதைத் தோற்றுவித்துக் கொள்கிறோம். நம்முடைய கொள்கையும் செயலும் சரிவர ஒத்து வராதபோது, இன்னும் காரணங்கற்பித்தலில் ஈடுபட்டு நம் கொள்கையை மாற்றிக்கொள்கிறோம். நம் நடத்தையை விளக்கத் தகுந்ததாக மாறும் வரையில் கொள்கை காரணங்கற்பித்தலால் திரிக்கப்படுகிறது. மேலும் இதன் மூலமாக நமது அறிவோடு மட்டுமே நிற்றல் என்ற இலட்சியமும் பாதுகாக்கப்படுகிறது. சாதாரணமாக வாய்மையின் இருப்பிடமாக விளங்கும் ஒரு மனிதர் ஒரு சிறிதும் மனக்கலக்கம் இன்றி அரசாங்கத்தைச் சூறையாடு

வதையோ அல்லது இரயில்வே இலாகாவை ஏமாற்றுவதையோ நாம் காணலாம். இவர்களது கொள்கைகளுக்கும் நடத்தைக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை நாம் சுட்டிக்காட்டுவோமாயின், உடனே இவர்களிடமிருந்து காரணங்கற்பித்தலால் வரும் எண்ணிறந்த கூற்றுக்கள் உடனடியாகக் கிளம்பும். ஒரு நிறுவனத்தையும் தனிமனிதரையும் ஒப்பிடுவது சரியில்லை எனவும், நிறுவனத்தை சூறையிடுவதால் தனிப்பட்ட எந்த நபருக்கும் அதனல் நஷ்டமில்லை என்று சமாதானம் கூறவும் முற்படுவர். அதுபோலவே, இரயில்வே கட்டணமும், அரசினரின் வரிகளும் நீதியற்ற முறையில் திணிக்கப்பட்டிருக்கின்றன எனவும், எனவேஅவற்றைத் தராமல் ஏமாற்றுவது நியாயமான செயலே எனவும் கூற முற்படுவர். உளச்செயல்களில் உண்மையான காரணங்களுக்கும் வெளிப்படையாகத் தோன்றும் காரணங்களுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டைக் கீழ்வரும் உதாரணம் அழகாகச் சித்தரிக்கிறது. ஒருவர் நீதிபதி பதவிக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட போது, அவருக்குக் கீழ்வரும் அறிவுரை வழங்கப்பெற்றது. 'உன்னுடைய தீர்ப்பைக் கூறு. பெரும்பாலும் அது சரியானதாக இருக்கும். ஆனல், உன்முடிவுக்குரிய காரணங்களைத் தராதே, ஏனெனில் பெரும்பாலும் அவை தவறுகவே இருக்கும்.

ஒரு மனிதனின் செயலில் உள்ளீடாக அடங்கி நிற்கும் உண்மையான காரணங்களைத் தெரிந்துகொள்ளும் பொருட்டு, அம் மனிதனிடம் அவன் ஏன் குறிப்பிட்ட செயலில் ஈடுபடுகிறுன் என வினவுவது அதிகப் பயன் தராது என்பது இப்போது தெளிவாகும். எவ்வளவு தான் உண்மையோடு நாம் அகக் காட்சியில் (Introspection) ஈடுபட்டாலும், நனவின் மேல்வாரியான நிலைகளைத் தவிர உள்ளானவற்றை அதனல் வெளியிட முடிவதில்லை. ஒரு செயல் ஏற்படுவதற்குரிய உண்மையான காரணத்தை அறிவதை நோககாகக் கொண்டு அகக்காட்சி இயங்குமாயின், பெரும்பாலும் அதனல் முடிவைப் பெற முடிவதில்லை. இல்லையேல் முடிவைப் பெற முடியா வண்ணம் காரணங் கற்பித்தல் என்னும் நுண்செயல் தடுத்துவிடுகிறது. இயல்பான உள்ளங்களை மட்டும் ஆராய முற்படும் உளவியல் அறிஞனுக்குக்கூட, இந்த உண்மை அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பிறழ்வுத்துறையில் ஆராய்ச்சிகளை நடத்த முற்படும் அறிஞனுக்கு இந்த உண்மை அளவிட்டுக் கூற முடியாதபடி பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. சிக்கல்களின் செயல்களை நாம் விளக்கும்பொழுது இந்த உண்மையின் முக்கியத்துவம் நன்கு புலப்படும்.

உளச்செயல்கள் ஏற்படுவதற்கு உண்மையான காரணங்களாக விளங்கும் சிக்கல்களைக் கண்டுகொள்ளவும், அவற்றைக் காணும் முயற்சியில் உள்ள கடினங்களைத் தவிர்ப்பதற்குமாக, பல விவரமான முறைகள் உள்ளன. இவற்றைப் பயன்தரும் முறையில் பயன்படுத்த பெரும்பாலும் ஆழ்ந்த அறிவும் அனுபவமும் தேவையாகின்றன. மேலும் இச் சிறு நூலில் அம்முறைகளைப் போதுமான அளவில் விவரிக்கவும் இயலாது. இங்கு நம் பாதையினின்று சிறிது விலகி பரிசோதனை உளவியல் (Experimental Psychology) துறையை சிறிது ஆராய்வதுடன்,

யூங் (Jung) வெளியிட்டுள்ள ஒரு சுவையான முறையையும் சிறிது விளக்கு கிறோம். யூங்கின் இம் முறை உளவியல் ஆராய்ச்சிகளில் பெருந்தொண்டு ஆற்றி யுள்ளது.

ஒரு பட்டியலிலிருந்து வார்த்தைகள் ஒவ்வொன்றாக நோயாளிக்குப் படித்துக் காட்டப்படுகிறது. ஒரு வார்த்தையைக் கேட்டதும் நோயாளியின் உள்ளத்தில் தோன்றும் முதல் வார்த்தையைக் கூறுமாறு நோயாளி கேட்டுக்கொள்ளப்படுகிறார். படித்துக் காட்டப்படும் வார்த்தையைத் தூண்டற்சொல் (Stimulus word) எனவும், நோயாளி பதிலாகத் தரும் சொல்லை எதிர்வினைச்சொல் (Reaction word) எனவும் கூறுவர். பெரும்பாலும் நோயாளி தரும் எதிர்வினைச் சொல் தூண்டற்சொல்லோடு எளிய வகையான இயைபுத் தொடர்புடையதாகக் காணப் படுகிறது. உதாரணமாக 'மேஜை' என்னும் தூண்டற்சொல்லிற்கு 'நாற்காலி' என்பது எதிர்வினைச்சொல்லாகத் தரப்படலாம்; இல்லையேல் இதேபோன்ற தன்மை கொண்ட எளிய இயைபுச்சொல் தரப்படலாம். தூண்டற்சொல்லைப் படித்தபோதினின்று நோயாளி பதில் தரும் வரையிலும் ஆகும் நேரத்தை எதிர்வினைக்காலம் (Reaction time) என்பர். இதனை நிறுத்துகடிகாரத்தின் (Stop-watch) துணை கொண்டு, மிகக் கவனமாக அளவிடுவர்.

ஒரு தூண்டற்சொல் ஏதேனும் ஒரு சிக்கலைச் செயலில் ஈடுபடுத்துகிறதா இல்லையா என்பதைப் பொறுத்து அதற்குரிய எதிர்வினை பெருமளவில் வேறு பட்டு அமையும் என யூங் கண்டார். ஒரு சிக்கல் ஒன்று தூண்டப்படுமானால், எதிர்வினைக்காலம் அதிகரிப்பதுடன், எதிர்வினைச் சொல்லிலும் பல்வேறு வினோதங்கள் காணப்பட்டன. யூங்கும், பீட்டர்சனும் (Peterson) தந்துள்ள கீழ்வரும் உதாரணம், இத்தகைய சில உண்மைகளை விளக்கும்.

| | தூண்டற்சொல் | எதிர்வினைச்சொல் | எதிர்வினைக்காலம் (வினாடிகளில்) |
|---|---|---|---|
| 1. | தலை | மயிர் | 1·4 |
| 2. | பச்சை | புல்வெளி | 1·6 |
| **3.** | **தண்ணீர்** | **ஆழம்** | **5·0** |
| 4. | தடி | கத்தி | 1·6 |
| 5. | நீளம் | மேஜை | 1·2 |
| **6.** | **கப்பல்** | **மூழ்கும்** | **3·4** |
| 7. | கேள் | பதில் | 1·6 |
| 8. | கம்பளிநூல் | பின்னு | 1·6 |
| 9. | பகைமையுடைய | நட்பார்ந்த | 1·4 |
| **10.** | **ஏரி** | **தண்ணீர்** | **4·0** |
| 11. | நோய் | நலம் | 1·8 |
| 12. | இங்கி (Ink) | கறுப்பு | 1·2 |
| **13.** | **நீந்து** | **நீந்தமுடியும்** | **3·8** |

மேற்கண்ட எதிர்வினைச் சொற்களைத் தந்த நோயாளி, அண்மையில் அவர் உளச்சோர்வுக்கு உள்ளாகியிருந்த வேளையில், தண்ணீரில் மூழ்கித் தற்கொலை புரியத் திட்டமிட்டிருந்தார். நாம் கோடிட்டுக் காட்டியுள்ள அவரது இயைபுகளில் இச் சிக்கல் வெளியிடப்பட்டுள்ளது. 3, 6, 10, 13 என்பனவற்றில் எதிர்வினைக் காலம் அதிகரித்திருப்பதைக் காண்க. மேலும் 13ல் தரப்பட்ட எதிர்வினைச் சொல்லும் விநோதமாக இருக்கிறது.

ஒரு மனிதனின் உள்ளத்திலுள்ள முக்கியமான சிக்கல்களைப்பற்றிய விவரத்தை இயைபுச் சோதனையின் மூலம் காணமுடியும் எனத் தமது சோதனைகளின் வாயிலாக யூங் கண்டார். இவரது இம் முறை இன்று இன்னும் திருத்தப்பெற்று விரிவாக்கப் பட்டுள்ளது. ஒரு நோயைப்பற்றிய முதல் ஆராய்ச்சிகளில் இம் முறை பெரிதும் உதவுவதாக இருக்கிறது. மேலும் மேற்கொண்டு நடைபெற வேண்டிய பகுப்பாய்வு (analysis) எந்தத் திக்கில் மேற்கொள்ளப்படின் அதிகப் பயன் தரும் என்பதையும் இது பெரும்பாலான வேளைகளில் காட்டுகிறது.[1]

இனி மீண்டும் நமது பழைய ஆராய்ச்சியைத் தொடர்ந்து, எண்ணங்களும் செயல்களும் உருவாதலில், சிக்கல்களின் செயல்கள் எவ்வாறு வெளியிடப் படுகின்றன எனக் காண்போம்.

நாம் கூறிய புகைப்பட நிபுணர், அரசியல்வாதி என்னும் உதாரணங்களில் சிக்கல் தன்னை நேரடியாகவே வெளியிட்டுக் கொள்கிறது. அதாவது புகைப்படச் சிக்கலின் காரணமாக ஒரு மனிதர் 'புகைப்படச் சார்புச் சிந்தனையில்' ஈடுபடுகிறார். அதுபோல அரசியல் சிக்கல் ஒருவரை அரசியல் சார்ந்த சிந்தனையில் ஈடுபடுத்துகிறது. ஆனால், பெரும்பாலான வேலைகளில், முதன் முறை காணும் போது முற்றிலும் வேறுபட்ட தன்மைகொண்ட ஏதேனும் வெளியீடாக, சிக்கல் தன்னை மறைமுகமாக வெளியிடுகிறது. இக் கூற்றின் பொருளைக் கீழ்வரும் உதாரணம் மூலம் விளக்க முற்படுகிறோம். என்னுடைய நோயாளிகளில் ஒருவர், முன்னாளில் ஓய்வுநாள் பாடசாலை (Sunday School) ஆசிரியராக இருந்து, பின்னர் நாத்திகத்தை (atheism) உறுதியாக நம்புபவராக மாறியவர். தாம் பல நாள் கவனமாகச் சிந்தித்த பின்னரே இம் முடிவுக்கு வந்ததாக அவர் உறுதியுடன் கூறினார். உண்மையில், சமயக் கோட்பாடுகளைப்பற்றி அவர் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தார். ஆதியாகமத்தில் (Genesis) தரப்பட்டுள்ள ஆதாரங்களை விவரமாக அலசி ஆராய்ந்தார். இதற்கென மிகத்திறமையான முறையில் தம் வாதங்களைக் கையாண்டார். இதன் மூலம் கோர்வையானதும் அறிவோடு அமைவதுமான விவாதத்தைக் கையாண்டார். மீண்டும் தொடர்ந்து நடத்தப்பட்ட உள பகுப்பாராய்ச்சிகள் அவர் நாத்திகரானதற்குக் காரணமாக

---

1 நோயாளிகளை உளவழியில் பகுப்பாய்வதற்கு இயைபுச் சோதனை பெரும்பயனுடையதாக இருக்கும் என்று எதிர்பார்த்தல் பின்னாளில் வீணாயிற்று. இன்றும் பரிசோதனை ஆராய்ச்சிகளில் இது சுவையான பங்கு வகிக்கிறது. ஆனால், நடைமுறையான மருத்துவ சிகிச்சையில் இது சில வேலைகளில் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

இருந்த உண்மையான சிக்கலை வெளிப்படுத்தின. இவர் திருமணம் செய்வது என ஏற்பாடாகியிருந்த பெண், இவரது நண்பர் ஒருவரோடு ஓடிவிட்டாள். அந்த நண்பர் ஓய்வு நாள் பாடசாலை வேலையில் மிகவும் உற்சாகமாகப் பங்கு பெறுபவர். இங்கு தன் காதலியைக் கடத்திச் சென்றவன் மீது ஏற்பட்ட வெறுப்பு என்னும் சிக்கல், முன்பு அவனோடு நட்புக்கொள்ளுவதற்குக் காரணமாக இருந்த நம்பிக்கைகளை மறுப்பதன் மூலமாகத் தன்னை வெளியிட்டுள்ளது. இவர் கையாண்ட விவாதங்கள் அவரது சமய ஆராய்ச்சி, ஆதாரங்காட்டி விவாதித்தது என்பன அனைத்தும் வெறும் காரணங்கற்பித்தல் நடத்தையேயாம்.

மறைமுகமான முறையில் சிக்கல் ஒன்று தன்னை வெளியிடுவதற்கு மற்றொரு உதாரணத்தையும் ஈண்டுத் தருகிறோம். சில நாட்களாக இந் நோயாளியும் அவரது தந்தையும் சுமுகமான உறவு கொண்டிருக்கவில்லை. ஆயினும் இந் நோயாளி தமது தந்தையிடம் உண்மையான பற்றுடையவராகவே இருந்தார். இவரது தந்தையோடு இவர் மீண்டும் சுமுகமான உறவை ஏற்படுத்திக்கொள்ள முயன்றார். ஆனால், இவரது தந்தை இவரது முயற்சிகளை ஏற்காதது, இவரது உள்ளத்தில் பெருவேதனை தருவதாக நின்றது. ஒருநாள் அசாதாரணமான முறையில் மிகவும் மனம் சோர்ந்தவராக இந்நோயாளி என்னிடம் வந்தார். வெளி நாட்டினர் இருவர் இழிவான முறையில் நடத்தப்பட்டதைத் தாம் அன்று காலையில் கண்டதாகவும், அந் நிகழ்ச்சி தமக்கு, பெரு அதிர்ச்சி ஊட்டுவதாக இருந்ததால், தாம் அந் நாள் முழுவதும் மனம் வெதும்பி இருந்ததாகவும் அவர் கூறினார். அவரது உள்ள நிலையைப்பற்றி நான் சரிவர அறிந்தேன். எனவே அவரிடம் காணப்பட்ட உள்ளச் சோர்வை அவர் குறிப்பிட்ட நிகழ்ச்சி தோற்றுவித்திருக்க முடியாது என உணர்ந்தேன். எனவே, இதைப்பற்றிச் சரிவர அறிய, அவரை முழுவதாக ஆராய்ந்தேன். இதன் மூலமாக அவரது அப்போதைய மனநிலையைத் தோற்றுவித்திருந்த உண்மையான சிக்கலைக் கண்டுகொண்டேன். அன்று காலையில் இந் நோயாளி தமது தந்தையிடமிருந்து ஒரு கடிதத்தைப் பெற்றிருந்தார். வழக்கமான குற்றச்சாட்டுகளையும் கண்டனங்களையும் அது தாங்கி வந்திருந்தது. தந்தை அவரைத் துன்புறுத்தும் முறையில் நடத்தியதுவே, அவரிடம் உளச்சோர்வு தோன்றியதற்குரிய உண்மையான காரணமாகும். வெளிநாட்டினர் இருவர் பெற்ற தொல்லைகள், காரணங் கற்பித்தலுக்கு அவருக்கு நன்கு உதவின.

அறிஞர் யூங் குறிப்பிட்டுள்ள ஒரு உதாரணத்தையும் இங்குத் தருகிறோம். சிக்கல் தன்னை மறைமுகமாக வெளியிடும் என்பதை விளக்கும் ஒரு எளிய ஆனால், நல்ல உதாரணமாக இது காணப்படுகிறது. ஒருவர் தமது நண்பரோடு ஒரு கிராமத்தின் அருகே நடந்துகொண்டிருந்தார். அப்போது கோவில் மணிகள் ஒலித்துக்கொண்டிருந்தன. அவர் இதனால் திடீரென மிகவும் எரிச்சலுற்றார். அவற்றின் ஒலி கேட்பதற்குக் கோரமாக இருப்பதாகவும், மனத்திற்கு ஒவ்வாத முறையில் சீற்று இருப்பதாகவும் கூறினார். இது அவரது நண்பருக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. ஏனெனில் அக்கோயில் மணிகள் அவை எழுப்பும் இன்னிசை நாதத்திற்குப் புகழ் பெற்றவை. எனவே, தனது தோழன் இத்தகைய

மனப்பான்மை கொண்டிருப்பதன் உண்மையான காரணத்தை அறிய அவர் முற்பட்டார். எனவே, இதைப்பற்றிக் கவனமாகக் கேள்விகளைக் கேட்க முற்பட்டார். கோவிலின் மணிகளின் ஒலியைப் போலவே, அக் கோயிலின் குரு எழுதும் கவிதைகளும் மிகவும் கோரமானவை என்னும் கருத்தை அந் நண்பர் வெளியிட்டார். அவரது நடத்தையைத் தூண்டிய சிக்கல் இப்போது வெளியாயிற்று. மணி ஓசையைப் பழித்த அம் மனிதரும் கவிதை எழுபவரே; அண்மையில் அவர் எழுதும் கவிதைகள் குருவானவரின் கவிதைகளோடு ஒப்பிட்டு, குருவானவரின் கவிதைகளே சிறந்தன என்னும் கருத்து வெளியிடப்பட்டிருந்தது. இவ்வாறு தோன்றியிருந்த போட்டிச்சிக்கல் (Rivalry Complex) ஒரு பாவமும் அறியாத அக் கோயில் மணிகளை பொருந்தாத முறையில் சாடுவதாக, மறைமுகமாக வெளியாகி இருந்தது. இதனை நேரடியாக வெளியிடுவதாக இருப்பின், இம் மனிதர் அக்குருவையோ அல்லது அவரது கவிதைகளையோ பழித்திருக்க வேண்டும்.

அந் நண்பர் இம் மனிதரது நடத்தையைப் பகுத்து ஆராயாது இருந்திருப்பின் அவரது நடத்தை விளக்க முடியாததாக இருந்திருக்கும். இல்லையேல் 'எரிச்சல்', 'சினமுற்ற மனநிலை', இன்னபிற பொருந்தாத காரணங்களால் விளக்கப் பட்டிருக்கும். மிகச் சிறு நிகழ்ச்சிகள் அதீதமான முறையில் மனவெழுச்சிகளைத் திடீரென கிளர்ந்தெழச் செய்யுமாயின், பெரும்பாலும் அந் நடத்தைகள் மேற்கூறிய முறையாக் விளக்கப்படக் கூடியனவாகவே இருக்கும். மேலும் திட்டவட்டமான, போதிய காரணங்களால் அவை தோன்றுகின்றன என்பதையும் நிரூபிக்கமுடியும். புரிந்துகொள்ளமுடியாத எதிர்வினைகள் போன்று காணக்கிடைக்கும் இவை, உண்மையில் மிகத் திட்டவட்டமான காரணிகளினின்று பிறக்கும் இயல்பான நிகழ்ச்சிகளாகும்.

நம் ஆராய்ச்சியில் நாம் இப்பொழுது எந்த நிலையை அடைந்திருக்கிறோம் என்பதைக் காணவும், உளக்கோளாறு பற்றிய உண்மைகளை அறிந்துகொள்ள நமக்கு உதவத்தக்க அனுமானங்களைப் (inferences) பெறுவதற்கெனவும், நம் ஆராய்ச்சியை இவ்விடத்தில் சிறிது நிறுத்துவது பயன்தரும். (1) இயல்பான உள்ளத்தின் சில செயல்கள், காரணங்களாலோ அல்லது 'சிக்கல்களாலோ' ஒரளவேனும் தோன்றுகின்றன. ஆனால், இக் காரணங்கள், சிக் கல்கள் என்பனவற்றின் செயல்களைப்பற்றி அம் மனிதன் ஒரு சிறிதும் தெரிந்துகொள்ளாமல் இருக்கலாம். இரண்டாவதாக, இச் சிக்கல்களின் செயல்கள் மறைமுகமாகவே வெளியிடப் படலாம். இதன் காரணமாக நனவுநிலையில் தோன்றியுள்ள செயலுக்கும் அவற்றைத் தோற்றுவதற்குக் காரணமாக இருந்தவற்றிற்கும் தொடர்பற்றிருப்பதாகத் தோன்றலாம். மூன்றுவதாக, அம் மனிதன் தன் சிந்தனைகளும் செயல்களும் வேறு காரணங்களினின்று பிறந்தவை என நம்பக்கூடும். உண்மையில் இச் செயல்கள் தோன்றுவதில் இவ்வேறு காரணங்கள் என்பன பங்கு பெறவே இல்லை பின்னர் ஏற்படும் காரணங் கற்பித்தல் என்பதின் விளைவுகளே அவையாகும்.

ஒரு மனிதனின் எண்ணங்கள், செயல்கள் என்பனவற்றின் உண்மையான காரணங்களை அம் மனிதரும் அவரை ஆராய்வோரும் கண்டுகொள்ளாவண்ணம், இப் பல்வேறு நுட்பச் செயல்கள் மறைக்கலாம். நடத்தையைத் தோற்றுவிப்ப தற்குக் காரணமாக அமையும் காரணங்கள் உள்ளத்தில் மேலெழுந்த வாரியாக இருப்பதில்லை. உள்ளத்தின் ஆழத்தில் நிற்கும் இவற்றினை துல்லியமான உளவியல் பகுப்பாய்வின் மூலம் மட்டுமே காணமுடியும். இதுபோன்ற உள நுட்பச் செயல்கள் பித்து (insanity) அறிகுறிகளைத் தோற்றுவிப்பதில் பங்கு கொள்ளக்கூடும் என இப்பொழுது நாம் தெரிந்துகொள்கிறோம். மேலும் இந்த அறிகுறிகள், மறைந்து கிடக்கும் சிக்கல்கள் தம்மை மறைமுகமாகவும் உருமாற்றியும் வெளியிடுவதாகவும் இருக்கமுடியும் என்பதும் புலனாகிறது. எனவே, இந்த அறிகுறிகளைப் புரிந்துகொள்ளமுடியாது துன்புறுவது, அவற்றிற் குரிய சிக்கல்களைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளாமல் இருப்பதால் நேருகிறது. இச் சிக்கல்களை நாம் தெரிந்துகொண்ட அளவில் இத் துன்பம் நீங்குகிறது. அழுங்கு நோயாளி (Melancholic patient) பொருத்தமற்றதும், தகாததுமான ஒரு எண்ணத்தால் மிகையான துயரத்திற்கு உள்ளாகி இருப்பதுபோல் தெரிகிறது. ஆனால், வேறு திறன்மிக்க காரணங்களாலேயே அவனது துயரம் தோன்றியுள்ளது என நம்மால் நிரூபிக்க முடியும்போது, அந்த எண்ணம் நாம் கருதியதுபோன்று பொருத்தமற்றதோ அல்லது உகாததோ அன்று எனத் தெரிந்துகொள்வோம். யூங் உதாரணங்காட்டியுள்ள நோயாளியிடம் கோயில் மணிகளின் இன்னிசை எரிச்சலூட்டியது முதலில் புலனாகாமல்தான் இருந்தது. ஆனால், அம் மனிதனின் உள்ளத்தின் அடித்தளத்தில் புதைந்து நின்ற உளச்செயல்களை நாம் கண்டபோது நோயாளியின் நடத்தையை நம்மால் விளக்கமுடிந்ததன்றோ? இதுபோன்றே நமது நோயாளிகள் சிலர் வெளியிடும் திரிபுணர்ச்சிகள் (delusions) விசித்திர மானவையாகவும், அடிப்படையின்றி அமையும் அபத்தங்களாகவும் தோன்றலாம். ஆனால், உள்ளத்தின் ஆழத்தில் நிற்கும் உளச்செயல்களைக் காண்போமாயின் அவற்றையும் நாம் புரிந்துகொள்ளமுடியும். உள்ளடங்கியுள்ள உளச்செயல்கள் மறைமுகமாகத் தம்மை வெளியிடுவதுவே இத் திரிபுணர்ச்சிகளாக இருக்கலாம். காரணங் கற்பித்தல் நடத்தையாகவும் இது இருக்கலாம். மேலும் உள்ளடங்கி நிற்கும் இவ்வுள்ளச் செயல்களும், காரணத்தோடும் தொடர்போடும் அமைவன வாகவே காணப்படும்.

சித்தம் கலங்கிய உள்ளம், மேலெழுந்த வாரியாகக் காணும் ஆராய்ச்சியாளன் எண்ணுவதுபோல வெறும் குழப்பத்தின் இருப்பிடம் அல்ல எனவும், உள்ளத்தின் ஆழத்தில் நின்று, சிதைவுற்று நிற்கும் அறிகுறிகளைப் பொருளுடைய ஒன்றாக இணைக்கும் உளச்செயல்களை நாம் அறியாதிருப்பதன் காரணமாகவே பித்தனின் உள்ளம் குழம்பிக்கிடப்பதுபோலத் தோன்றுகிறது எனவும் கூற முற்படும் கருதுகோள் (Hypotheses) கருத்தேற்றுவதாகவும், நம் சிந்தனையைத் தூண்டுவ தாகவும் இருக்கிறது. அண்மையில் நடந்துள்ள உளவியல் ஆராய்ச்சிகள் இக்கருதுகோள் ஏற்கத்தகுந்ததெனக்காட்டி அவற்றைப் பெருமளவில் வலியுறுத்தி இருப்பதைப் பின்வரும் அதிகாரங்கள் காட்டும். பித்தனின் எண்ணங்

களும் செயல்களும் பொருளற்றனவோ அல்லது புரிந்து கொள்ளமுடியாத குழப்பமோ அல்லவெனவும் நாம் நிரூபிக்க முற்படுவோம். மேலும் இயல்பான மனிதனின் உள்ளத்திலுள்ளதைப் போன்றே, புரிந்து கொள்ளமுடியாதது போல வெளியில் தோன்றும் பித்தனின் உள்ளத்திலும் காரணம் - விளைவு என்பன குறிப்பிடத்தக்க வகையில் பங்கு வகிக்கின்றன. பித்தனின் உள்ளத்தில் நிலவும் உளச்செயல்களை உளவிதிகளைக்கொண்டு விளக்கமுடியும். இதே விதிகள் இயல்பான மனிதனின் உள்ளத்திற்கும் பொருந்தும். நம்மைக் கலக்கமுறச் செய்வன போன்ற தொல்லைகளுடனேயே, பித்தனும் போராடுகிறன். நம்மைப் போன்றே, பித்தனும் எண்ணங்கள், விருப்பங்கள், பேரவாக்கள் (ambitions) என்பனவற்றை வெளியிட முயற்சிக்கிறன்.

# 6. உளப்போராட்டம்

இயல்பான மக்களது உள்ளத்திலும் பித்தரது உள்ளத்திலும் அடிக்கடிச் செயலுறும் சில உளவிதிகளைச் சென்ற அதிகாரத்தில் விவரித்துள்ளோம். இவ் விதிகள் இயங்கும் நிகழ்ச்சிகளைக் கவனமாக ஆராய்வோமாயின் நாம் அடைந்துள்ள நிலையை இறுதியானது எனக் கொள்வதற்கில்லை எனக்காண்போம். இந்நிலையில் புதிய சில நிகழ்ச்சிகள் தோன்றுகின்றன. தன் எண்ணங்களையும் செயல்களையும் நிர்ணயிக்கும் சிக்கல்களை ஒரு மனிதர் சில வேளைகளில் உணர்வதேன்? பிறவேளைகளில் உணராதிருப்பதேன்? ஒரு சிக்கல் சில வேளைகளில் எளிய முறையிலும் நேரடியாகவும் தன்னை வெளியிடுவதேன்? பிற வேளைகளில் நாம் 'மறைமுகமானது' எனக் குறிப்பிட்ட சுற்றுவழிகளைப் பின்பற்றுவதேன்? தம் தந்தையின் கடிதத்தைப் பெற்றபோது தன் தந்தை தன்னை நடத்தும் முறையை எண்ணி வருந்தாது, வெளி நாட்டினர் இருவர் நடத்தப்பட்ட முறையை எண்ணி எனது நோயாளி வருந்தியது ஏன்? இக் கேள்விகளுக்கு நாம் விடை காணவேண்டுமாயின், 'போராட்டம்' (Conflict), 'ஒடுக்குதல்' (Repression) என்ற இரு உளவியல் கருத்துகளை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இக்கருத்துகள் அடிப்படையான முக்கியத்துவம் வாய்ந்தன. எனவே, இவற்றை விவரமாகக் காண்பது அவசியமாகிறது.

ஒரு சிக்கல், ஏதேனும் ஒரு காரணத்தினால் உள்ளத்தோடு இசைவற்று நிற்கிறது எனக்கொள்வோம். ஒருக்கால், சிக்கல் இயல்பாகவே துயரார்ந்ததாக இருப்பதால் இது நேர்ந்திருக்கலாம்; இல்லையேல் தனியவனின் பொதுக்கருத்துகளுக்கும் கொள்கைகளுக்கும் ஒவ்வாத செயல்களில் அவனை ஈடுபடுமாறு அச்சிக்கல் தூண்டுவதால் நேர்ந்திருக்கக்கூடும். இத்தகைய இசைவற்ற நிலையில், உளப்போராட்டநிலை காணப்படுகிறது. இது சிக்கலுக்கும் ஆளுமைக்கும்[1] நடுவே எழும் போராட்டமாக அமைகிறது. இவ்விரு சக்திகளும்

[1] இங்கு 'ஆளுமை' என்னும் சொல் எண்ணங்கள், மனவெழுச்சிகள், நினைவுகள், விருப்பங்கள் என்னும் எல்லா உளச்செயல்களையும் குறிப்பதாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இச் செயல்கள் அச் சிக்கலால் எழுவன அன்று. அதாவது ஆளுமை என்பது நாம் இப்போது ஆராயும் சிக்கலைத்தவிர, பிறவகையில் முழு உள்ளத்தையும் குறிப்பிடுகிறது. திட்டவட்டமாக விவரிப்பதற்காகவே இவ்வாறு உள்ளத்தை இரு பகுதிகளாகப் பாகுபடுத்துகிறேம். உதாரணமாக, இம்மனிதன் வென்றான், தோற்றான் என்பதும், விருப்பம், இச்சை என்பதும் இத்தகைய பாகுபாடுகளே.

ஒன்றையொன்று தடைப்படுத்த முற்படும். இதனால் உள்ளம் தனக்கெதிராகவே பிளவுபடும். இதனால் செயலில் ஈடுபடமுடியாத ஒரு நிலை ஏற்படும். முன்னர் நாம் கூறியுள்ள காதலன் உதாரணத்தை ஒரு சிறிது மாற்றி அமைத்து உளப்போராட்டம் என்னும் இக் கருத்தை விளக்குவோம். ஏற்கெனவே வேறொருவரது மனைவியாக இருக்கும் ஒரு பெண்ணே இம் மனிதனின் வேட்கைப் பொருள் எனக்கொள்வோம். இப்பொழுது இக் காதலனின் உள்ளத்தில் எதிராகவும் முரணான முறையிலும் இயங்கும் இரு சிக்கல்கள் காணப்படும். இவற்றுள் ஒன்று அப் பெண்ணிற்காக ஏங்கும்; மற்றொன்று ஒழுக்க நெறியாலும் பின்விளைவுகள் பற்றிய அச்சத்தாலும் உருவாகி எதிர்முறையில் இயங்கும். இத்தகைய நிலையில் இவை இரண்டாலும் உரிய செயலின்மூலம் தடையின்றித் தம்மை வெளியிடமுடிவதில்லை. இதனால் போராட்டநிலை தோன்றுகிறது. இப் போராட்ட நிலையில் மகிழ்வற்ற மனவெழுச்சிகொண்ட விறைப்பு (tension) காணப்படுவது குறிப்பிடத்தக்கது. இந் நிலையில் மாறுபட்ட இரண்டு நடத்தைகளில் எதில் ஈடுபடுவது எனத்தெரியாமல் அம் மனிதர் தயங்குகின்றார். அவரால் இவ்விரு நடத்தைகளில் எதிலுமே ஈடுபடமுடியாது. ஏனெனில் ஒன்றில் ஈடுபடமுடியாவண்ணம் ஏனையது எதிர்த்து நிற்கிறது.

போராட்டத்தில் மனவெழுச்சி விறைப்புடன், முடிவெடுக்க முடியாத நிலையும் செயல் தடைப்பட்டு நிற்றலும் காணப்படும். இத்தகைய நிலையில் போராட்டம் கால வரையறையின்றி நீடிப்பதற்கில்லை. மேலும் இத் தொல்லைக்கு ஒரு முடிவு காணவேண்டும் என்பது உடலியல் தேவையாக இருக்கிறது. தேவையாகும் இம் முடிவினைப் பல வழிகளில் அடைதல் கூடும். உதாரணமாக, இனியும் ஆளுமையோடு முரண்பட்டு நிற்காவண்ணம் சிக்கலை மாறுதலடையலாம். இல்லையேல், சாத்தியமாகும் இரு முடிவுகளையும் பெறுதல் முடியாது என்பதை உள்ளம் உணர்ந்து, இரண்டு முடிவுகளையும் நன்கு சீர்தூக்கி ஆராய்ந்து, ஒன்றை நீக்கி மற்றொன்றைத் தேர்ந்தெடுக்க உள்ளம் நனவு நிலையில் முடிவு செய்யலாம்.

நம்முள்ளே சமரில் ஈடுபட்டுள்ள சக்திகளை நாமே கண்டு கொள்வதும், நனவு நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட நடத்தையில் உணர்ந்து ஈடுபடுவதும் சிக்கலைத் தவிர்ப்பதற்குரிய அறிவான முறை எனவும், இலட்சிய முறை எனவும் கருதலாம். உண்மையாகக் கூறின், சிக்கலைத் தவிர்ப்பதற்குரிய வழியை இம் முறை மட்டுமே தருகிறது எனலாம். நாம் இப்பொழுது விவரிக்க இருக்கும் பிற முறைகளில் எல்லாம், உள்ளம் தன்னிடமுள்ள மனவெழுச்சி விறைப்பையும் செயலிழப்பையும் நீக்குவதற்கென இறுதிமட்டும் போரிடுவதில்லை. மாறாக, சிக்கலையே முற்றிலும் தவிர்க்கும் செயலின் மூலமாக இவ்வாறு செய்துகொள்கிறது. இங்கு சண்டையிடும் இரு சிக்கல்களும் ஒன்றையொன்று சந்திக்க உள்ளம் இடம் தருவதில்லை. இதனால் இப்போரில் எழும் அழுத்தம், தொல்லை என்பனவற்றினின்று உள்ளம் தப்பித்துக் கொள்கிறது.

இவற்றுள் முதல் முறையில், உள்ளத்தில் காணப்படும் எதிர்மாறுன இரு எண்ணக் குவியல்களும் பாதுகாக்கப்படுகின்றன. அதே வேளையில் அவற்றி னிடையே தொடர்போ அல்லது இடைவினையோ (interaction) ஏற்படுவது மிகக் கவனமாகத் தவிர்க்கப்படுகிறது. இவை ஒவ்வொன்றும் அடுத்த எண்ணத்திற்கு முரணுக இருப்பதைப்பற்றிக் கவலை கொள்ளாது, தன் வழியில் தொடர்ந்து செல்லவும், வளரவும் அனுமதிக்கப்படுகிறது. இத்தகைய நிகழ்ச்சி காணப்படும் உள்ளத்தை ஒரு இசைக்குழுவில் (orchestra) பிறர் ஏற்படுத்தும் சீரான இசையைக் கலைப்பதைப் பற்றிக்கவலை கொள்ளாது, தன் விருப்பப்படி தனக் கிசைந்த இசையை எழுப்பும் கலைஞனுக்கு ஒப்பிடலாம். இதுவே 'தாழிட்ட தனியறை' (Logic-tight Compartment) எனப்படுவதும் சாதாரணமாகக் காணக்கிடைப்பதுமான உளநுட்பச் செயலாகும். இதைப்பற்றி 'உளச்சிதைவு' (Dissociation) என்னும் அதிகாரத்தில் ஏற்கெனவே கண்டுள்ளோம். இதன் மூலமாகவே தனது சொந்த வாழ்வில் நெறியோடு நிற்கும் மனிதன், தனது வணிக ஈடுபாடுகளில் நெறியற்றவனுக இருக்கமுடிகிறது. இவ்விரு துறைகளிலுள்ள நடத்தையும் உள்ளத்தால் அவை சிறிதும் கலந்துவிடாவண்ணம் தனித்தனியே வைக்கப்படுகிறது. கொள்கை ஒன்றுகவும் நடத்தை வேறொன்றுகவும் இருப் பதை இது விளக்குகிறது. தம் சமயத்தை வாயால் புகழ்ந்து தமது நடத்தையால் இகழுபவர்களாகவும் 'படிப்பது இராமாயணம் இடிப்பது கோயில்' என்னும் வகையில் வாழும் பெருவாரியான மக்கள் திட்டமிட்டுச் செயலுறும் போலி வேடதாரிகள் (Hypocrites) எனவும் தவறுகக் கொள்ளப்படுகின்றனர். இவர்களைச் சரிவரப் புரிந்து கொள்ளவும் இக் கருத்து உதவுகிறது.

தன் காதல் நங்கையிடம் தெளிவாகக் காணப்படும் குறைபாடுகளை அக் காதலர் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதையும், அதே உளநுட்பச்செயல் விளக்கும். அவரது உள்ளம் அக் குறைபாடுகளைக் காண மறுப்பதால், அவரால் அவற்றைக் கண்டுகொள்ள முடிவதில்லை. உகாத இந்த உண்மைகளும், அவற்றினின்று பிறக்கும் எண்ணங்களும் அவரது வேட்கையோடு தொடர்பு கொள்ளல் அனுமதிக்கப்படுவதில்லை. இதே வகையில்தான் குழந்தைப் பருவத் தில் நாம் பெற்றுள்ள சம்பிரதாயமான நம்பிக்கைகள், அவை என்னதான் தவறென நமது பிற்கால அனுபவங்கள் நிரூபித்திருப்பினும், நிலை நிறுத்தப்படு கின்றன. இந்த நம்பிக்கைகளும், நடைமுறை உண்மைகளும் நம் உள்ளத்தில் தனித்தனியான தாழிட்ட தனியறைகளில் உறைவதால், அவற்றிடையே போராட் டம் எழுவதில்லை. மேலும் நனவு நிலையில் அவை ஒன்றை ஒன்று காணுவதும் ஒருபோதும் அனுமதிக்கப்படுவதில்லை.

ஒன்றையொன்று தவிர்த்தல் என்னும் எளிய செயல் மூலமாக முரணுன உளக்காரணிகளைச் சமாளிக்கும் முறைக்கு, நடைமுறை வாழ்விலிருந்து வேண்டிய மட்டும் எடுத்துக்காட்டுகளைத் தருவது எளிதாகவே இருக்கிறது. உண்மையான முறையில் வாசகர் அகக்காட்சியில் (introspection) ஈடுபடுவாராயின், அவரது உள வாழ்விலிருந்தே பெருமளவில் உதாரணங்கள் கிட்டும் என்பது திண்ணம்

ஆனால், அக் காட்சியில் ஈடுபடுவது வாசகருக்கு மிகவும் கடினமானதாக இருப்பின் அவரைச் சுற்றிலுமுள்ளவர்களின் உள்ளத்தில் இந்த உளநுட்பச் செயல் இயங்குவதை எளிதில் காணலாம்.

பிறழ்வுத்துறை இங்கு எவ்வாறு உள்ளது என்பதை நாம் காணவேண்டும். அதன்மூலம் பித்துப்பிடித்துள்ள நிலையில் இந்த உண்மை காணப்படுகிறதா எனவும், காணப்படின் எந்த அளவில் காணப்படுகிறது எனவும் நாம் தெரிந்து கொள்ள முற்படல் வேண்டும் இத்தகைய நிகழ்ச்சிகளில் இவ் வுண்மை மிகப் பெரும் பங்கு வகிப்பதுடன், பித்தருக்கே உரிய விநோதமான சிறப்பியல்புகள் எனக் கருதப்படும் பல உண்மைகளையும் நாம் புரிந்து கொள்ளவும் உதவுகிறது. தானே ராணி என நம்பும் அதேவேளையில் தனக்கிடப்பட்டுள்ள அறைகளைச் சுத்தப்படுத்துதல் என்னும் வேலையை மகிழ்வோடும் உளநிறைவோடும் செய்பவளான நோயாளி, தனது நம்பிக்கைக்கும் நடத்தைக்கும் இடையேயுள்ள முரண் பாட்டினால் அவதியுறுவதில்லை. நனவுக் களத்தில் அவை இரண்டும் ஒன்றையொன்று காணமுடியாதவாறு இருத்திவைக்கப்பட்டிருப்பதன் மூலம் அவற்றிற் கிடையே உள்ள போராட்டம் தவிர்க்கப்படுகிறது. நடைமுறை உண்மைகள் அதனைப் பாதியாத வண்ணம், திரிபுணர்ச்சி தாழிட்ட தனியறையில் வைத்துப் பாதுகாக்கப் படுகிறது. இதன் மூலமாக திரிபுணர்ச்சிக்கு உள்ளீடான சிக்கல்கள், உள்ளத்தின் பிறபகுதிகளில் இவற்றிற்கு எதிரான செயல்கள் இருப்பினும் கூட, தம்மை வெளியிட்டுக்கொள்ள முடிகிறது. திரிபுணர்ச்சிக்கு உள்ளீடான சிக்கல்களைப்பற்றிப் பின் வரும் வேறொரு பகுதியில் விவரமாகக் காண்போம். அதைப்போன்றே நான்காம் அதிகாரத்தின் இறுதியில் நாம் தந்துள்ள நோய் வரலாறுகள் தன்னுடையவும் தனது குடும்பத்தினரதும் உண்மையான பழைய வரலாற்றை அப்பொழுது அறிந்திருந்தும் தானே மூன்றும் ஜார்ஜ் மன்னரின் மகன் என நம்பும் நோயாளியும், தான் சர்வ சக்திவாய்ந்தவன் எனக்கூறி, ஆனால், அதே வேளையில் சிறிது புகையிலை தருமாறு இரக்கும் நோயாளியும் — தாழிட்ட தனிமுறை உளநுட்பச் செயலுக்கு உதாரணங்களாகும். இந்த எல்லா வரலாறுகளிலும் முரண்பட்ட எண்ண அமைப்புகள் உள்ளத்தில் உள்ளன. ஆனால், அவற்றிற்கு முரணான எண்ணம் அல்லது உண்மை என்பனவற்றுடன் தொடர்புகொள்ளாவண்ணம் அவை பாதுகாக்கப்பட்டு சுதந்திரமாக வளர்வதற்கு ஒவ்வொரு எண்ண அமைப்பும் அனுமதிக்கப்படுவதன் மூலம் போராட்டம் தவிர்க்கப்படுகிறது.

இந்த எடுத்துக்காட்டுகள், நான்காம் அதிகாரத்தில் உளச்சிதைவிற்கு உதாரணங்களாகத் தரப்பட்டன என்பது உங்களுக்கு நினைவிருக்கும். எனவே, நாம் இப்பொழுது நமது ஆராய்ச்சியில் ஒருபடி முன்னேறி இருப்பதுடன், உள்ளச்சிதைவு எந்த உள நுட்பச் செயலைச் சார்ந்து நிற்கிறது என்பதையும் கண்டு கொண்டோம். முரணானதும் தமக்குள் ஒவ்வாதனவுமான உளச்செயல்கள் ஒன்றினின்று ஒன்று பிரிக்கப்படுவதால் அவற்றினிடையே இருக்கக்கூடிய

போராட்டம் தவிர்க்கப்படுகிறது. இதனால் உள்ளம் தன் சீரான ஒருமையை இழந்து ஏறத்தாழ தனித்தனியாக நிற்கும் உளச்செயல்கள் கொண்டதாக மாற்றப்படுகிறது. இவ் வுளச்செயல்கள் ஒவ்வொன்றும் தம்முடன் இருக்கும் பிற உளச் செயல்களால் பாதிக்கப்படாது தம் வழியே சுதந்திரமாக இயங்குகின்றன. முரண்பட்ட இரு உளச்செயல்களின் நடுவேயுள்ள வேற்றுமையை நீக்க முடியாமல் போனதால், உள்ளம் சிதைவுறுகிறது. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு தாழிட்ட தனியறையில் புகுந்து கொள்வதை அனுமதிக்கும் உபாயத்தின் மூலமாக, பிற வழிகளில் தவிர்க்கமுடியாத போராட்டமும் தவிர்க்கப்படுகிறது. இப்பொழுது நாம் அடைந்துள்ள நிலையினின்று நாம் ஒரு கொள்கையை வெளியிடக்கூடும். அதாவது ஒருசில நோய் வரலாறுகளிலேனும் உள்ளச்சிதைவு என்பது போராட்டத்தினின்று எழுகிறது. மேலும் தவிர்க்க முடியாத வகையில் போராட்டம் தோற்றுவிக்கும் மகிழ்வற்ற மனவெழுச்சி விறைப்பு, செயல் இழப்பு என்பனவற்றை உள்ளம் தவிர்க்கப் பயன்படுத்தும் ஒரு முறையே உள்ளச்சிதைவாகும். உடனடியாக இக் கருதுகோளினின்று வேறு சில கருத்துகளும் தோன்றுகின்றன. உள்ளச் சிதைவின் எல்லா நிலைகளும் நான்காம் அதிகாரத்தில் நாம் விவரித்துள்ள துயில் நடத்தை (Somnambulism), இரட்டை ஆளுமைகள் (Double Personalites), பீடிப்புகள் (Obsessions), இல்பொருட்காட்சிகள் (hallucinations), திரிபுணர்ச்சிகள் என்பனவும் இத்தகைய உள நுட்பச் செயலாலேயே தோன்றுகின்றன போலும். எனவே, உளச்சிதைவு எப்பொழுதும் உள்ளப் போராட்டம் இருப்பதைக் காட்டும். முரண்பட்ட இரு எண்ணங்களை உள்ளம் எதிர்கொள்ளும்போது உள்ளம் கொள்ளும் ஒரு தற்காப்பு எதிர்வினையின் (defensive reaction) முக்கியத்துவத்தினையும் உள்ளச் சிதைவு பெறும். பலதரப்பட்ட பெருவாரியான உள்ளச் சிதைவுகளை இக் கருதுகோள் மூலமாக விளக்கிவிட முடியும் எனவும், இக் கருதுகோளுக்குச் சாதகமான ஆதாரங்கள் மிக உறுதியூட்டுவன எனவும் பின்னர்க் காண்போம். ஆயினும் தற்காலிகமாக, நாம் ஒரு சிறிது பின்செல்வதும், நாம் ஏற்கனவே தந்துள்ள சில உண்மைகளை ஒரு சிறிது மாற்றிக்கொள்வதும் தேவையாகிறது.

எதிரான ஒரு எண்ண அமைப்புகள் தமது முரணான போக்கின் காரணமாக ஒன்றையொன்று பாதிக்காவண்ணம் செய்வதற்கும், இதன் காரணமாக அவை ஒவ்வொன்றும் தம் வழியே செல்வதற்கும் வழி வகுக்கவும் உளச்சிதைவு முறை உதவுகிறதெனவும், இது போராட்டத்தைத் தவிர்ப்பதற்குப் பயன்படும் ஒரு சாதாரண முறை எனவும் நாம் கூறியுள்ளோம். போராட்டத்தைத் தவிர்க்க இயல்பான உள்ளமும் பிறழ்வான உள்ளமும் இம்முறையைப் பின்பற்றுகின்றன. இம் முறையை விளக்குவதற்காகச் சில உதாரணங்களையும் நாம் கண்டோம். அவற்றில் எதிரான உண்மையோ அல்லது கருத்தோ உட்புகாவண்ணம் ஒவ்வொரு சிக்கலும் தாழிட்ட தனியறையாக ஒதுக்கிவைக்கப்படுகிறது எனவும் கூறியுள்ளோம். அதாவது தனக்கு ஒவ்வாத உண்மை அல்லது எண்ணத்தின் முக்கியத்துவத்தினை ஏற்காது, சிக்கல் போராட்டத்தினின்று தன்னைத் தப்ப

வைத்துக்கொள்கிறது. முரணுன உளச்செயல்களுள் தொடர்பும் அனுமதிக்கப் படுவதில்லை. சில வரலாறுகளில் மேற்கூறிய உண்மை அவ்வாறே காணப்படு கிறது. ஆனல், பல நோய் வரலாறுகளில் இது அவ்வளவு எளிதாக நடைமுறை யில் காணப்படுவதில்லை. நாம் விவரித்துள்ளதுபோல, இரு மாறுன எண்ண அமைப்புகளிடையே தொடர்பு ஒரு சிறிதும் இன்றிக் கத்தரித்துவிடுவதற்கில்லை. எனவே, மாறுன அமைப்புகளுக்கிடையே தொடர்பு ஏற்படுவதுண்டு. ஆனல் இங்கும் ஒரு ஊடகத்தின் (medium) மூலமாக இவற்றிடையே தொடர்பு ஏற்படு கிறது. இந்த ஊடகம் தொடர்பு ஏற்படுவதை உருமாற்றிக் காட்டுவதால், அம் முரண்ன சக்திகளின் உண்மையான முக்கியத்துவம் மறைக்கப்படுகிறது. இதனல் முரணுனவை தன்னிடம் இடம் பெறுவதை உள்ளத்தால் அறிந்து கொள்ள முடிவதில்லை. காரணங் கற்பித்தல் என்னும் உள நுட்பச் செயல் இவ்வாறு திரித்துக் காட்டும் ஊடகமாக இயங்குகிறது. காரணம் கற்பித்தல் என்னும் உள நுட்பச் செயலை விளக்கும் உதாரணங்களை நான்காம் அதிகாரத்தில் நாம் கண்டுள்ளோம். சிக்கலுக்கு முரணுக அமையும் உண்மைகளை திரை யிட்டுக் காணுமாறு உள்ளத்திற்குக் காரணங் கற்பித்தல் உதவுவதால், அவற்றிற்கு இடையே நிலவும் வேறுபாடு முழுவதும் மறைக்கப்பட்டுவிடுகிறது எனலாம். எதிர்மாறுன இரு எண்ணத் தொகுப்புகள், அவற்றை உருமாற்றிக் காட்டும் கார ணம் கற்பித்தல் என்னும் ஊடகத்தின் மூலமாக மட்டுமே, தம்முள் தொடர்பு கொள்ள அனுமதிக்கப்படுவதை சில திட்டவட்டமான உதாரணங்கள் இன்னமும் தெளிவாக்கும். தன் தனி வாழ்வில் பயன்படுத்தும் அறநெறியினின்று வேறுபட்ட நெறியைத் தன் வர்த்தக வாழ்வில் பயன்படுத்தும் மனிதன் தனி வாழ்வில் பயன் படும் நெறி வணிகத்துறைக்குப் பொருந்தாது என நம்புமாறு தன்னைத்தானே தூண்டிக்கொள்கிறுன். ஒரு பொருளின் விலையை மும்மடங்காக்கி விற்பதைக் கொள்ளையடிப்பது எனக் கருதமுடியாது என நம்புகிறுன். ஒரு மனிதன் தான் வாழவும் தனது மனைவி மக்களைக் காக்கவும் பொய் சொல்வது நெறி தவறுவது அன்று எனவும் தன்னை நம்பச் செய்கிறுன். இவ்வாறு நமது செயல்கள் நமது அறநெறிக் கொள்கைகளுக்கும் மாறுக அமையும்போதெல்லாம், அச் செயல்கள் தனிப்பட்டவை, அவற்றைப் புரிந்த சூழ்நிலையில் நாம் செய்தது சரியே எனக் காட்டுவதற்காக குறிப்பிட்ட காரணங்களை உண்டுபண்ண முற்படுகிறேம். இரயில்வே நிறுவனத்தையும் அரசாங்கத்தையும் தன் நேர்மைக்கும் பழுதின்றிச் சுரண்டும் வாய்மையான மனிதனின் உதாரணத்தை ஐந்தாம் அதிகாரத்தில் கண்டோம். இப்பொழுது நாம் விளக்க முற்பட்டுள்ள உளச்செயலுக்கு இது மிகச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இந்த வரலாறுகளிலெல்லாம் முரணுன எண்ண அமைப்புகள் தம்முள் தொடர்பு கொள்ளுவது அனுமதிக்கப்பட்டுள்ளது ஆனல், இவற்றைத் தொடர்புபடுத்தும் காரணங் கற்பித்தல் இந்த எண்ண அமைப்புகளின் சொந்த முக்கியத்துவத்தினைத் திரித்துக்காட்டுவதால், இவற்றிற் கிடையே எழக்கூடிய போராட்டம் சிறந்த முறையில் தவிர்க்கப்படுகிறது. தான் வளரும் உள்ளப்பகுதியில் சிக்கல் அடையுண்டு இருப்பினும், பிற எண்ணங் களோடு தொடர்புகொள்ளா வண்ணம் தடுக்கப்படுவதில்லை. இவ் வறையினுள்

எதிரான எண்ணங்களும் உள்ளே வர அனுமதிக்கப்படுவதுண்டு. ஆனால் காரணம் கற்பித்தல் என்னும் செயலினால் அவற்றின் பொருள் முக்கியத்துவம் திரிக்கப்பட்ட பின்னர் மட்டுமே அவை உள்ளே வர அனுமதிக்கப்படுகின்றன.

பிறழ்வுத் துறையிலும் காரணம் கற்பித்தல் என்னும் உளநுட்பச் செயல் மிக நுட்பமான பங்கு வகிப்பதை நாம் காண்கிறோம். ஒரு திரிபுணர்ச்சி கொண்டிருக்கும் நோயாளி, தன் திரிபுணர்ச்சிக்கு முரணான உண்மைகளை யெல்லாம் கூடியவரையிலும் தவிர்க்க முற்படுகிறார். அவற்றைத் தவிர்க்கமுடியாது போகும்போது, அவற்றின் உண்மையான முக்கியத்துவம் திறம்பட மறைந்து போகும் வகையில் காரணம் கற்பித்தலில் ஈடுபடுகிறார். உதாரணமாக, தன் மனைவி தன்னைக் கொலைசெய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளாள் என உறுதியாக நம்பும் நோயாளி, நடைபெறும் எல்லா நிகழ்ச்சிகளின் பொருளை தன்னுடைய தலையாய திரிபுணர்ச்சிக்கு ஒத்துவரும் வகையில் அவை அமையும் வரையிலும் அவற்றைத் திரிக்கிறார். தன்னுடைய வாதம் அறிவோடு ஒட்டியது எனக்காட்டவும் முற்படுகிறார். அவரது மனைவி அவரது நலத்தில் அக்கறை காட்டினால், தன்னுடைய உண்மையான நோக்கத்தை மறைக்கும் பொருட்டு இவ்வாறு நடந்து கொள்கிறாள் என்பர். அவரது மனைவி அவரிடம் கடுமையாக நடந்து கொண்டால் அவளுடைய நோக்கம் இப்பொழுது தெளிவாகத் தெரிகிறது என்பர். அவள் அவருக்கு உணவு தந்தால், அவள் தன்னை நஞ்சிட்டுக் கொல்லத் திட்டமிடுகிறாள் என்பர். அவள் உணவு தரவில்லையாயின், வாழ்க்கைக்குத் தேவையனவற்றைத் தனக்குத் தராது இருப்பதன் மூலம் தன் உடல் நலத்தைச் சீர்கெடுக்க அவள் திட்டமிடுகிறாள் என்பர். அவரோடு நாம் வாதிட்டு, அவரது நம்பிக்கை உண்மைகளுக்குப் புறம்பாக இருக்கிறது எனக் காட்டுவோமாயின், நம்முடைய அறியாமையை அவர் எள்ளி நகையாடுவர்; இல்லையேல், நாம் அவரது மனைவியின் கைக்கூலிகள் என ஐயுறவும் கூடும்.

வழிநிலைத் திரிபுணர்ச்சிகள்' (secondary delusions) எனப்படுவதும், பெருவாரியாகக் காணப்படுவதுமான ஒரு வகைப் பித்து நிகழ்ச்சி ஏற்படுவதற்குக் காரணமாக அமைகிறது. வழிநிலைத் திரிபுணர்ச்சிகள் தவறான நம்பிக்கைகளாகும். நோயாளியின் முதனிலைத் திரிபுணர்ச்சிக்கும் (primary delusion) தனது அனுபவத்தில் அவன் காணும் உண்மையான நிகழ்ச்சிகளுக்கும் இடையேயுள்ள முரண்பாட்டை மறைப்பதற்கென அவனது உள்ளம் வழிநிலைத் திரிபுணர்ச்சிகளில் ஈடுபடுகிறது. உதாரணமாக, தான் ஒரு கோடீசுவரன் என நம்பும் நோயாளி, தன்னிடம் ஒரு காசுகூட இல்லாமல் இருப்பதற்கு, தனது எதிரிகள் தன் சொத்தை யெல்லாம் கொள்ளையிட்டிருப்பதே காரணம் என மற்றொரு நம்பிக்கையையும் தோற்றுவித்துக் கொள்கிறான். பெரும்பாலும் மேனிலைத் திரிபுணர்ச்சிகளோடு (delusions of grandeur) துன்புறு திரிபுணர்ச்சிகளும் (delusions of persecution) காணப்படுகின்றன. தான் மேலான பதவியும் நிலையும் கொண்டவன் என்று கூறுவதை, தனது சூழ்நிலையில் (Environment)

காண்பதற்கில்லை என்ற உண்மையை நோயாளி தன்னிடமிருந்து மறைப்பதற்கில்லை. அவன் கண்டுகொள்ளும் இந்த உண்மையை, தன்னிடம் விரோதமும் பொறாமையையும் கொண்டுள்ள எதிரிகளின் செயலினாலேயே தனக்கு இழிவுநிலை ஏற்பட்டிருக்கிறது எனக் காரணம் கற்பித்து, அதனைத் தான் நம்பும்படி செய்து கொள்கிறான். இதன் காரணமாக அவனது திரிபுணர்ச்சிகளின் அமைப்பே புதிராக மாறலாம். தனது முதனிலை நம்பிக்கைக்கு மாறான ஆதாரங்களை அவன் காணுந்தோறும், தனக்கு இன்னும் புதிய புதிய தொல்லைகளைத் தன் எதிரிகள் தருவதாக அவன் நம்புகிறான்.

# 7. ஒடுக்குதல்

சென்ற அதிகாரத்தில் உளப்போராட்டம் என்பதைப்பற்றிப் பொதுவாக ஆராய்ந்தோம். மேலும் உளப்போராட்டத்தின்போது தோன்றும் தவிர்க்க முடியாத அழுத்தத்தையும் (Stress), அதனோடு தொடர்ந்து காணும், ஒவ்வாத மனவெழுச்சி விறைப்பையும் தவிர்ப்பதற்காக உள்ளம் பயன்படுத்தும் ஒரு முறையையும் கண்டோம். உள்ளத்தில் 'தாழிட்ட தனியறைகளைத்' தோற்று வித்துக்கொள்வதே இம் முறையின் சிறப்பியல்பாகும். நடைமுறை வாழ்வில் காணப்படும் பல நிகழ்ச்சிகளை இம் முறையின்மூலம் விளக்க முடிவதோடு, பித்துநிலையில் காணப்படும் சில வழிநிலை நிகழ்ச்சிகளுக்கும் இம் முறையே காரணம் எனவும் கண்டோம்.

ஆயினும், சில வேளைகளில் போராட்டத்தைத் தவிர்க்க, இம் முறையை உள்ளத்தால் பயன்படுத்த முடிவதில்லை. அத்தகைய நிலைகளில், போராட்டத்தி லின்று எழும் அழுத்தங்களினின்றும், அமுக்கங்களினின்றும் (Strains) தன்னை விடுவித்துக் கொள்வதற்காக, உள்ளம் வேறு சில சுற்றுவழிகளைப் பின்பற்ற முற்படுகிறது. இவற்றுள் பெரும்பாலானவை 'ஒடுக்குதல்' (Repression) என்னும் பொதுவான கருத்தினுள் அடங்கும். இக் கருத்தையும், அதனைக் கொண்டு விளக்கத்தக்க பல்வேறு நிகழ்ச்சிகளையும் நாம் இப்போது காண முற்படலாம்.

எத்தகைய திட்டவட்டமான நிலைகளின்போது, 'தாழிட்ட தனியறை' உள நுட்பச் செயலைப் பயன்படுத்த முடியாமல் போகிறது என்பது இன்று வரையிலும் சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை. ஆனால், அதில் முக்கியமான பங்கு வகிக்கும் காரணிகளை (factors), கீழ்வரும் இரு குழுக்களுள் அடக்கி விடக்கூடும். முதலாவதாக, ஒன்றோடொன்று போரிடும் சிக்கல் ஒவ்வொன்றும் இயல்பான (intrinsic) முக்கியத்துவமும், வன்மையும் கொண்டனவாக இருக்கலாம். அத்தகைய நிலையில், அவை ஒவ்வொன்றையும் தம் வழியில் சென்று வளர்ச்சியடையவிடும் எளிய செயலின் மூலமாக அவற்றினிடையே நிலவும் போராட்டத்தை உள்ளத்தினிடமிருந்து மறைத்துவிட முடியாது. இரண்டாவதாக, உள்ளம் கூருணர்ச்சியுடையதாக இருக்குமாயின், இச் செயலில் உள்ள குறை பாட்டை அது உடனடியாகக் கண்டுகொள்ளும். அதாவது, தெளிவான சுய

திறனாய்வில் (self criticism) ஈடுபடும் திறன்கொண்ட வாகு (constitution) பெற்றதாக உள்ளம் இருக்கலாம். அங்நிலையில் தாழிட்ட தனியறை என்னும் சுலபமான நுட்பச் செயலின்மூலம் தன்னை ஏமாற்றிக்கொள்ள அதனால் முடிவதில்லை. மேலும், அந் நுட்பச் செயல் பயன்படுத்தும் மிகத் தெளிவான காரணம் கற்பித்தலும் அதற்கு ஆறுதல் தருவதில்லை. மேற்கூறிய நிலைகளில், ஒன்று உள்ளப் போராட்டத்தை நேருக்கு நேர் எதிர்கொண்டு, ஏற்கெனவே நாம் விவரித்துள்ளபடி, அதனோடு இறுதிவரையிலும் போரிடவேண்டும். இல்லையேல் 'ஒடுக்குதல்' என்னும் கருத்தினுள் அடங்குவனவும், போராட்டத்தைத் தவிர்க்க உதவுவனவுமான சுற்றுவழிகளை மேற்கொள்ளவேண்டும்.

தாழிட்ட தனியறை என்னும் முறையில், எதிர்மாறான சிக்கல் ஒவ்வொன்றிக்கும், நனவுக் களத்தில் ஓர் இடம் தரப்படுகிறது. ஆனால், ஒடுக்குதல் என்னும் நுட்பச் செயலில், மாறான எண்ணங்களில் ஒன்று இனிமேல் தன்னை இயல்பான முறையில் வெளியிட முடியாவண்ணம் நனவினின்று அகற்றப்படுகிறது. இதர எண்ணம் மட்டுமே நனவில் இடம் பெறுகிறது. இவ் வழியில் போராட்டம் தவிர்க்கப் படுகிறது. நனவில் தோன்ற முடியாவண்ணம் ஒரு சிக்கலை அகற்றும் செயலே ஒடுக்குதல் என்னும் உளநுட்பச் செயலின் அடிப்படையான சிறப்பியல்பாகும். ஓர் எளிய உதாரணத்தை ஆராய்வதன்மூலம் அதன் தன்மையை நாம் நன்கு புரிந்துகொள்ளலாம். தாம் முன்னாளில் புரிந்த ஏதேனும் ஒரு செயலை எண்ணி, ஒரு மனிதர் இப்போது உள்ளம் கூசுகிறார் என்போம். இதனால் அச் செயல் பற்றிய எண்ணங்கள் அவர் நினைவில் எழும்போதெல்லாம், துன்பம் பயக்கும் கழிவிரக்க உணர்ச்சிகள் அவரிடம் தோன்றுகின்றன. அவரது உள்ளத்து நிலையை உளவியல் அடிப்படையில் கூற முயற்சிப்போம். தமது முன்னாள் செயலைப் பற்றிய நினைவு இம் மனிதரிடம் ஒரு சிக்கலைத் தோற்றுவிக்கிறது. இது அவரது ஆளுமைக்கு ஏற்றதாக உள்ளது. எனவே, அவரது ஆளுமைக்கும் சிக்கலுக்கும் இடையே போராட்டம் தோன்றுகிறது. இத்தகைய நிலையில், கழிவிரக்க உணர்ச்சிகளைத் தன்னிடமிருந்து அகற்ற அம் மனிதர் முற்படலாம். இதற்கென, வேதனை பயக்கும் நினைவுகளைத் தம் உள்ளத்திலிருந்து ஓட்டவும், தம் எண்ணங்களில் அவை இடம் பெறுவண்ணம் கவனமாக இருக்கவும், கூடிய வரையிலும் அவை இருப்பதையே ஏற்காதிருக்கவும் அவர் முயற்சி செய்வார். அதாவது, தனக்கு வேதனை பயக்கும் சிக்கலை 'ஒடுக்குவதன்' மூலமும், அதனை நனவுக் களத்தினின்று மறைப்பதன் மூலமும் அவர் போராட்டத்தைத் தவிர்க்க முற்படுவர் எனலாம். நம் மன அமைதியைப் பெருமளவில் குலைப்பனவும், துன்பம் பயப்பனவுமான உண்மைகள் நம்மிடம் இருப்பதை நமக்கு நாமே மறுப்பதன் மூலம் மன அமைதியைப் பெறும் இம் முறை, நம் ஒவ்வொருவருக்கும் பழக்கமானதாகவே இருக்கும். நம் வாழ்வில் ஏற்படும் பெரும்பாலான 'மறதி' நாம் எண்ணுவதுபோல காலப்போக்கால் ஏற்படும் சீரழிவால் தானாக ஏற்படுவது அன்று. மாறாக ஒடுக்குதல் என்னும் முயற்சியால் தோன்றுவதாகும். இங்கு வேதனை பயக்கும் நினைவு, நம் நனவுக் களத்தினின்று திட்டமிட்டு நீக்கப் படுகிறது.

ஒடுக்குதல் வெற்றி பெறுமாயின், சிக்கல் உள்ளத்தில் எஞ்சியுள்ள பகுதியி னின்று அகற்றப்படுவதுடன், ஆளுமையோடும் தொடர்பற்றதாக ஆக்கப்படும் மேலும், நனவுக்களத்தினின்றும் அது நீக்கப்படுவதால், ஐந்தாம் அதிகாரத்தில் நாம் விவரித்துள்ளபடி அதனால் இயல்பான முறையில் நனவுக்களத்தில் தன்னை வெளியிட முடியாது. அதாவது, சிக்கலால் தனக்குரிய எண்ணங்கள், மன வெழுச்சிகள், செயல் தொடர்கள் என்பனவற்றை இனிமேல் நனவில் நேரடியாகப் புகுத்தமுடியாது.

நனவுக்களத்தில் தன்னை வெளியிட முடியாதவண்ணம் சிக்கல் தடுக்கப் படினும், அது இதனால் உள்ளத்தினின்று மறைந்து விடுவதில்லை என நாம் கொள்ள வேண்டியதிருக்கிறது. அதற்குரிய காரணம் இப்போது விளங்கும். சிக்கல் தனது இயல்யான செயல்களை இழந்து அடையுண்டு கிடக்கிறதே தவிர, அழிக்கப்பட்டு விடவில்லை. இந் நிலையில் அது உள்ளத்தின் அடித்தளங்களில் புதையுண்டு கிடக்கிறது. அது மேல் தளத்திற்கு வந்துவிடாதவாறு ஒடுக்குச் செயல் தொடர்ந்து எதிர்த்த வண்ணமாக இருக்கிறது.

போராட்டத்தைத் தவிர்க்க 'தாழிட்ட தனியறை' முறையைவிட ஒடுக்குதல் என்பது இன்னமும் கடுமையான முறை என்பது தெளிவாகும். எனவே, உள்ளத்தின் சீரான தன்மையையும், ஒருமைப்பாட்டையும் உலைவுறுத்துவதில் இதன் செயல்திறன் இதர முறையை விட அதிகமாகவே இருக்கும். எனவே, ஒடுக்குதல் என்பது எளிய நிலைகளில் நமது நடைமுறை வாழ்வில் சாதாரணமாகக் காணக்கிடைப்பினும், அது தீவிரமாகத் தன்னை வெளியிடுவதைக் காண, திட்டவட்டமான பிறழ்வுத் துறையையே நாம் ஆராயவேண்டும். ஒடுக்குதல் தன் விளைவுகளை அதிகமாக வெளிக்காட்டும் உதாரணங்களை உடனடியாகக் காண்பதன் மூல,ம் அதன் செயல்களை நாம் தெளிவான முறையில் நன்கு புரிந்து கொள்ளமுடியும். துயில் நடத்தை (Somnambulism), இரட்டை ஆளுமை (Double Personality) என்னும் தலைப்புகளின் கீழ், நாம் மூன்றும் அதிகாரத்தில் தந்துள்ள வரலாறுகள் இதற்கு உதாரணங்களாக அமையும்.

நாம் இப்போது பெற்றுள்ள கருத்துகளின் அடிப்படையில், மூன்றும் அதிகாரத்தில் நாம் கண்ட ஐரீன் என்ற நோயாளியின் வரலாற்றை ஆராய்வோம். அவளது தாய் நோயுற்று இறந்த காலந்தொட்டே ஐரீனின் உள உலைவுகள் ஆரம்பமாயின என்பதை வாசகர்கள் நினைவு கூருவீர்கள். சாவு நேர்ந்த சூழ்நிலை, தனிப்பட்டமுறையில் துன்பம் பயப்பதாக இருந்தது. தாயின் சாவு ஐரீனின் உள்ளத்தில் பெரும் அதிர்ச்சியையூட்டியது. அவள் தன் தாயிடம் மிகவும் பற்றுதல் உடையவளாக இருந்தாள். ஐரீனின் எண்ணங்கள், பேரவாக்கள், செயல்கள் ஆகிய அனைத்திலும் அவளது தாய் தலையான இடம் பெற்றிருந்தாள், எனவே, அவளது தாயின் மறைவு அவளுக்குப் பெருந் துயரத்தைத் தந்ததுடன், அவளது பேரவாக்கள், செயல்கள் என்பனவற்றின் முக்கியமான குறிக்கோளையும், அவற்றின் நோக்கத்தையும் இழக்கச்செய்தது. அவளது உளநிலையை உளவியல்

அடிப்படையில் காண்போம். அவளது தாயின் நோய், சாவு என்பனபற்றிய எண்ணங்கள், அவளது முழு ஆளுமைக்கும் வெறுப்பூட்டுவதும் மிகையான அளவில் வேதனை தருவதுமான சிக்கலை ஏற்படுத்தின. இதன் காரணமாக, மனவெழுச்சி அழுத்தமும் விறைப்பும் நிரம்பிய ஒரு போராட்டம் அச் சிக்கலுக்கும் அவளது ஆளுமைக்கும் இடையே ஏற்பட்டது. இந்தப் போராட்டத்தைத் தவிர்ப்பதற்காக, உள்ளம் ஒடுக்குதல் என்னும் உளநுட்பச் செயலில் ஈடுபடுகிறது. இவ்வாறு வேதனை பயக்கும் அச் சிக்கல் உள்ளத்தின் எஞ்சிய பகுதிகளினின்று அகற்றப்படுவதுடன், அதில் இடம் பெறும் எண்ணங்களும் மனவெழுச்சிகளும் நனவில் இனிமேல் இடம்பெறுவதும் தடைசெய்யப் படுகிறது. இதனால்தான் ஜரீன் துயில் நடத்தையில் ஈடுபட்ட வேளைகளைத்தவிர பிற வேளைகளில், தன் தாயின் சாவுபற்றிய எண்ண அமைப்பு முழுவதையும் மறந்திருந்தாள். தன் தாய்க்கு ஏற்பட்ட நோய், இதனால் நேர்ந்த சாவு என்பன வற்றையும் அவளால் நினைவுகூர இயலவில்லை. தன் வாழ்வின் சுருதியைக் கலைத்துவிடும் வகையில் எதுவும் நிகழ்ந்துவிடாதது போல அவளால் அமைதியாகத் தன் தாயைப்பற்றிப் பேசவும் முடிந்தது. இதிலிருந்து ஒடுக்குதல் என்னும் உளச்செயல் தமது நோக்கத்தில் வெற்றிபெற்றிருந்தது என்பதை நாம் காண்கிறோம். எதிர்மாறான சிக்கல்களில் ஒன்று நனவின் களத்தினின்று அறவே அகற்றப்பட்டிருந்ததால், போராட்டமும் அதனால் விளையும் வேதனை நிரம்பிய மனவெழுச்சிகளும் தவிர்க்கப்பட்டன.

ஆனால், இவ்வாறு ஒடுக்கப்படும் சிக்கல் அறவே ஒழிக்கப்படுவதில்லை எனவும், அது உள்ளத்தின் அடித்தளங்களில் வாழவே செய்கிறது எனவும் ஏற்கெனவே கூறியிருக்கிறோம். ஜரீனது வரலாற்றில் மேற்கூறிய கருதுகோள் உண்மைதான் என்பதற்குரிய காரணங்கள் வெள்ளிடை மலையென காணக்கிடக்கின்றன. ஜரீன் மிகத்திறம்பட ஒடுக்கியுள்ள சிக்கல் திடீரெனக் கிளர்ந்து எழுவதன்மூலமும், சிறிது காலம் நனவின் களத்தை முழுவதாக ஆக்ரமித்துக் கொள்வதன் மூலமும், தான் இன்னும் இருந்துகொண்டிருப்பதைக் காட்டுகிறது. அவளிடம் துயில் நடத்தை தோன்றும் காலங்களில் எல்லாம் இதுவே நேருகிறது. இந் நிலையில் அவளது தாயின் நோய்பற்றிய எண்ண அமைப்புத் திடீரெனத் தன்னை வெளிக்காட்டுகிறது. இதன் காரணமாக ஜரீன் மீண்டும் அத் துயர் மிகுந்த நிகழ்ச்சியில் பங்கு பெறுகிறாள்.

துயில்நடத்தை நடைபெறும்போதும் ஒடுக்குதல் என்ற உளநுட்பச்செயல் திறம்படவே இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நாம் கவனமாகத் தெரிந்து கொள்ளவேண்டும். இந் நிலையில் முன்பு ஒடுக்கப்பட்டிருந்த சிக்கல் இப்பொழுது நனவுக் களத்தில் முழுவதாக இடம் பெற்றிருக்கிறது. இதர எண்ணங்கள் அனைத்தும் தற்காலிகமாக அதினின்று நீக்கப்பட்டிருக்கின்றன. துயில் நடத்தை நடைபெறும் நிலையில் ஜரீனுடைய உள்ளம் அவளது உருவெளித்தோற்றத்தி லேயே (**Phantasy**) முழுவதாக ஈடுபட்டுள்ளது. அந் நிலையில் அவள் தன்னுடைய

உண்மையான சூழ்நிலையை அறியாதவளாகவும், தன்னைச் சுற்றிலும் நடைபெறுவனவற்றைத் தெரிந்து கொள்ளாதவளாகவும் இருக்கிருள். எதிர் மாருன சிக்கல்களுக்கு இடையே முற்றிலும் சிதைவு காணப்படுவதே ஒடுக்குதலில் காணும் முக்கியமான நிகழ்ச்சியாகும். அது இப்பொழுதும் காணப்படுகிறது. அவற்றைப் பிரித்து நிறுத்தும் எதிர்ப்பும் முன்பு போலவே வன்மையுடன் காணப்படுகிறது. முன்பு மறைந்துகிடந்த சிக்கலால் இப்பொழுது தன்னைத் தங்கு தடையின்றி வெளியிட முடிகிறது, இதற்கு எதிர்மாருன சிக்கல் — அதாவது ஆளுமையின் எஞ்சிய பகுதி — நனவின் களத்தினின்று நீக்கப்படுவதால் மட்டுமே முன்பு மறைந்துகிடந்த சிக்கல் இவ்வாறு இயங்க முடிகிறது.

ஒடுக்குதல் என்ற கருத்து, நான்காம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள மற்ருெரு உளச்சிதைவு வகையையும் விளக்க உதவுகிறது. துயில் நடத்தைகளில் சிதைவுண்ட அமைப்புக்கு உள்ளீடாகும் சிக்கல் ஒடுக்குண்ட நிலையில் இருக்கிறது. உள்ளத்தின் எஞ்சிய பகுதியோடு தனது வழக்கமான தொடர்பைக் கொள்ள முடியாதவாறு அது தடுக்கப்படுகிறது. எனவே, நனவின் எஞ்சிய பகுதியில் இடம்பெற முடியாத எண்ணங்களையும் உருக்களையும் (image) உண்டு பண்ணிக் கொள்வதன் மூலம் மட்டுமே அதனுல் நனவுக்களத்தில் தன்னை வெளியிட்டுக் கொள்ள முடிகிறது. சிக்கலின் செயலால் எழும் எண்ணங்கள் முற்றிலும் பிரிந்து நிற்கும் அல்லது சிதைவுற்ற குழுவாகத் தம்மை அமைத்துக் கொள்கின்றன எனவும் கூறலாம்.

'இரட்டை ஆளுமை' எனப்படும் நிலை துயில் நடத்தையினின்று தரத்தில் மட்டுமே வேறுபடுகிறது என்று நான்காம் அதிகாரத்தில் நாம் குறிப்பிட்டுள்ளோம். இரண்டும் உள்ளத்தின் எஞ்சிய பகுதிகளினின்று முற்றிலும் சிதைவுற்று நிற்கும் எண்ண அமைப்புகளைப்பற்றியனவே. ஆனுல், இரட்டை ஆளுமையில், சிதைவுற்ற அமைப்பு இன்னும் குலைந்து காணப்படுவதுடன் முழுஅமைப்புப் பெற்றதாகவும் இருக்கிறது. இதனுல் சிதைவுற்ற அமைப்பு இயங்க ஆரம்பிக்கும் போது அம் மனிதனுல் தன் சூழ்நிலைக்கு ஏற்ப தன்னைத் தக அமைத்துக்கொள்ள முடிகிறது. மேலும் துயில்நடத்தையினைப் போன்று இரட்டை ஆளுமையின் உண்மை உலகை முற்றிலும் மறந்திருப்பதும் இல்லை.

இவை இரண்டிற்கும் இடையே ஒற்றுமை காணப்படுவதால், துயில் நடத்தைகளுக்கு நாம் தந்த விளக்கம் இரட்டை ஆளுமைகளுக்கும் பொருந்தலாம். இவ் வகை உளச்சிதைவுகளும் துயில்நடத்தையில் உள்ளதுபோன்றே ஒடுக்குதல் செயலின் மூலமாகத் தவிர்க்கப்படுவதும், மாருன சிக்கல்களுக்கிடையே பிறப்பதுவுமான போராட்டத்தினுல் எழுவதாகவும் இருக்கலாம். உண்மையில், பல்வேறு நோய் வரலாறுகளில் இந்த விளக்கம் பயன்தரும் முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளது, இச் சிறுநூலில் அவ் வரலாறுகளைப் போதுமான அளவில் விவரிப்பதற்கில்லை.

துயில் நடத்தைகளையும் அவற்றை ஒட்டிய நிகழ்ச்சிகளையும் கொண்ட உளச் சிதைவு வகைகள், ஒடுக்குதல் என்னும் நுட்பச்செயல் இயங்குவதைத் தெளிவாகவும், திட்டவட்டமான வடிவிலும் காட்டுகின்றன எனக் கூறியுள்ளோம். ஆயினும் ஒடுக்குதல் என்பது இன்னும் பலவழிகளில் தன்னை வெளியிடுவதுண்டு. நாம் விவரித்துள்ள வகைகளிலுள்ளது போலத் தெளிவாகவும் தீவிரமாகவும் இல்லையெனினும், நடைமுறை வாழ்வை ஆராய்வோர் பிற வகைகளில் அது தன்னை வெளியிடுவதையும் அறிவர். இவ்வாறு ஒடுக்குதல் தன்னை வெளியிடும் பிற வகைகளை அடுத்த அதிகாரத்தில் காண்போம்.

# 8. ஒடுக்குண்ட சிக்கல்கள் தம்மை வெளியிடல்

ஒரு சிக்கல் ஒடுக்கப்படும்போது, அது இயல்பான முறையில் தன்னை வெளியிடும் திறனும் அதனிடமிருந்து நீக்கப்படுகிறது என்பதை சென்ற அதிகாரத்தில் விளக்கியுள்ளோம். அதாவது, அதனுல் தன்னைச் சார்ந்த எண்ணங்களையும் மனவெழுச்சிகளையும் நனவினுள் நேரடியாக இனியும் செலுத்தமுடியாது. அதுபோன்றே, தனது நோக்கங்களை அடையும் வகையில் நனவின் போக்கை மாற்றவும் இனிமேல் அதனுல் முடிவதில்லை. சிக்கல் தனது இயல்பான முறையில் இயங்க முடியாவண்ணம் ஒருவகை எதிர்ப்பு (Resistance) இருப்பதனுலேயே இவ் விளைவுகள் தோன்றுகின்றன. இந்த எதிர்ப்பினை உளவியலார் கண்டனை (Censure) என்பர். கண்டனை என்னும் கருத்தை நாம் புரிந்துகொள்ளக் கீழ்வரும் படங்கள் உதவும். ஆயினும் இப் படங்கள் இக் கருத்தை விளக்குவதற்காக மட்டுமே பயன்படுவன என்பதை மனத்திற் கொள்க.




முதற்படம் ஒரு சிக்கலின் இயல்பான செயலைக் காட்டுகிறது. S என்பது நமது நனவு ஓட்டத்தைக் குறிக்கும். நமது உள்ளத்தின் மேல்தளத்தில் மாறி மாறி இடம்பெறும் எண்ணங்கள், மன வெழுச்சிகள், முடிவுகள் (volitions) என்பன இதில் இடம்பெறும். சாதாரண அகக் காட்சியில் (Introspection) தென்படும் உள்ளத்தையே S குறிக்கிறது. C என்பது சிக்கலாகும். சிக்கல் தூண்டப்பட்டவுடன் அது நனவில் புகுத்தும் பல்வேறு எண்ணங்கள், இன்ன பிற என்பனவற்றை d குறிக்கும். தூண்டப்பட்ட நிலையில் சிக்கல் எவ்வாறு இயங்குகிறது என்பதனை ஐந்தாம் அதிகாரத்தில் விளக்கியுள்ளோம்.

சிக்கல் ஒடுக்கப்படுமாயின் ஏற்படும் நிலையினை இரண்டாம் படம் விளக்கும். இங்கு சிக்கல் இயல்பான முறையில் இயங்க முடியாவண்ணம் R என்னும் எதிர்ப்பு உள்ளது. இதன் காரணமாக முதலாவது படத்தில் காட்டப்பட்டிருப்பது போன்று, சிக்கலைச்சார்ந்த எண்ணங்களை நனவு ஓட்டத்தில் இனியும் நேரடியாகப் புகுத்தமுடியாது. துயில் நடத்தைகளுக்கு இடையே உள்ள வேளைகளில் ஐரீனின் உள்ளம் இருந்த நிலையை, இரண்டாவது படம் காட்டுகிறது. இந்த உதாரணத்தில், C என்பது அவளது தாயின் நோய் - சாவு என்பனவற்றோடு தொடர்புடைய சிக்கலைக் குறிக்கும். R என்னும் எதிர்ப்பு இருப்பதினால், இச் சிக்கலைச் சார்ந்த எல்லா எண்ணங்களும் நனவு ஓட்டத்தினின்று முற்றிலுமாக அகற்றப்படும். இடைவேளைகளில் ஐரீனிடம் நாம் கண்ட தேர்ந்தெடுத்த மறதி இதன் காரணமாகவே தோன்றுகிறது.

ஒடுக்கப்பட்ட சிக்கல்கள் இயல்பான முறையில் தன்னை வெளியிட முடியாதவாறு இவ் வகையில் செய்யப்படினும், அது அழிந்துவிடுவதில்லை என சென்ற அதிகாரத்தில் கூறியுள்ளோம். அது இருப்பதுடன், தன்னை வெளியிடவும் செய்கிறது. ஆனால், அது இயல்பான முறையிலோ அல்லது நேரடியாகவோ வெளியிட முடிவதில்லை. ஐரீனது உதாரணத்தில், அவளது துயில் நடத்தைகளில் அது தன்னை வெளியிட்டுக்கொண்டது. ஆனால், அது நனவு ஓட்டத்தைத் தடைசெய்து உட்புகும் நனவுப்பகுதி, அத் துயில் நடத்தைக்கு முன்னரும் பின்னரும் இருந்த நனவுப் பகுதிகளில் இடம் பெறவில்லை. ஆயினும் பெரும்பாலான வேளைகளில், ஒடுக்குண்ட சிக்கல் இவ்வளவு தீவிரமான முறையில் தன்னை வெளியிடுவதில்லை. சாதாரண நிலைகளில் அது தன்னை வெளியிடும் வகையை மூன்றாவது படம் காட்டும். ஒடுக்குண்ட சிக்கல் இயல்பானதும் நேரடியானதுமான முறையில் நனவைப் பாதிக்கமுடியாது. ஆயினும் மறைமுகமான சுற்றுவழிகளின் வாயிலாக நனவைப் பாதிக்க அது முற்படுகிறது. இத் தகைய அதன் செயலை S என்ற அறிகுறி குறிப்பிடும். R என்னும் எதிர்ப்பைச் சமாளிக்கும் அளவில், சிக்கல் மறைமுகமான சுற்றுவழியைப் பின்பற்றும். எதிர்ப்பின் வலிமை அதிகரிப்பதற்கு ஏற்ப, சிக்கல் தன்னை வெளியிடுவதும் இன்னும் மறைமுகமானதாக மாறும்.

ஒரு எடுத்துக்காட்டை ஆராய்வோமாயின் மூன்றும் படத்திலுள்ளது போன்ற உண்மைகள் தெளிவாகும். இதற்கென டாக்டர் யூங் தந்துள்ளதும், ஐந்தாம் அதிகாரத்தில் நாம் விவரித்துள்ளதுமான உதாரணத்தைத் தேர்ந்தெடுக்கலாம். குறைகூற முடியாத கோவில் மணியோசையை ஒருமனிதர் கடினமாகத் தாக்குகிறார். ஆராயும்போது, இம் மனிதருக்கும் அக் கோயில் குருவுக்கும் கவிதை எழுதுவதில் போட்டி உண்டு என்பது தெரியவருகிறது. அவரிடம் எரிச்சலைக் கிளப்புவதற்குக் காரணமாக இருந்த சிக்கல், கவிதைத் துறையில் வெற்றியடைந்திருந்த தமது எதிரியிடம் அவர் கொண்டிருந்த பொறாமையிலிருந்தே தோன்றியது என்பது தெளிவு. ஆனால், இத்தகைய பொறாமை என்னும் மனவெழுச்சி நம்மிடம்

இருப்பதை நாம் ஏற்க மறுக்கிறோம். நாம் கூட இதனை நம்ப மறுக்கிறோம். இதனால் எழும் சிக்கலைப் பெரும்பாலும் நம்மால் முடிந்தவரையில் ஒடுக்கிவிடு கிறோம். இச் சிக்கல் நனவின் களத்தில் தோன்றிவிடாவண்ணம் ஓர் எதிர்ப்பு தடைசெய்கிறது. இதன் காரணமாக எதிர்ப்பிடமிருந்து தப்பத் தனக்கு உதவும் ஒரு மறைமுகமான வழியைப் பின்பற்றித் தன்னை வெளியிடும் கட்டாயத்திற்குச் சிக்கல் உள்ளாகிறது. நாம் கூறிய வரலாற்றில் தமது எதிரியான கோவில் குருவோடு நெருங்கிய தொடர்புடைய கோயில் மணிகளைப் பொருந்தாத முறையில் குறைகூறுவது, சிக்கல் பின்பற்றும் மறைமுகமான வழியாக உள்ளது. இதன் வாயிலாக சிக்கல் தன்னை வெளியிடமுடிந்தது. ஆனால், முற்றிலும் வேறான காரணத்தாலேயே தாம் கோவில் மணிகளைக் குறைகூறியதாக நம்பவும் அவருக்கு உதவியது. ஏற்றுக்கொள்ளப்படாத சிக்கல் நேரடியாகத் தன்னை நனவில் வெளியிடா வண்ணம், எதிர்ப்பு நனவைப் பாதுகாத்தது ; தோன்றியிருக்கக்கூடிய போராட்டமும் இதனால் தவிர்க்கப்பட்டது.

அயல் நாட்டினர் இருவர் துன்புறுத்தப்பட்டதைக்கண்டு மிகவும் மனம் உலைந்த நோயாளியின் உதாரணத்தையும் ஐந்தாம் அதிகாரத்தில் கண்டோம். அதற்கும் இவ்வகையான விளக்கம் பொருந்தும். தன் தந்தை, தன்னை அன்பாக நடத்தவில்லையே என்ற எரிச்சல்தான் அந்த நோயாளியிடம் உள உலைவு தோன்றுவதற்குக் காரணமாக இருந்த சிக்கலாகும். ஆனால், அவர் தம் தந்தை. யிடம் கொண்டிருந்த ஆழ்ந்த அன்பிற்கு இச் சிக்கல் முரணாக இருந்தபடியால் அது ஒடுக்கப்பட்டது. மேலும் இச் சிக்கல் ஒடுக்கப்படாது இருப்பின், துன்பம் பயக்கும் போராட்டம் கட்டாயமாக அவரிடம் தோன்றியிருக்கும். எனவேதான், நாம் விவரித்துள்ள முறையில், உண்மையான காரணத்தோடு மேலெழுந்தவாரி யாகத் தொடர்புடைய ஒரு வெளிநிகழ்ச்சியோடு தனது மனவெழுச்சியைத் தொடர்பு படுத்துவதன் மூலம், தன்னை மறைமுகமாக அச் சிக்கல் வெளியிடுகிறது. சிக்கல் தன்னை மறைமுகமான வழியில் வெளியிடுவதை விளக்க நான்காம் அதி காரத்தில் தரப்பட்டுள்ள பிற உதாரணங்களையும் இவ் வழியில் விளக்கமுடியும்.

ஒரு சிக்கல் சில வேளைகளில் மட்டும் தன்னை நேரடியாகவும் எளிய முறையிலும் வெளியிடுவதேன் ? பிறவேளைகளில் ' மறைமுகமானது ' எனப்படும் சுற்றுவழிகளை அது தேர்ந்தெடுப்பதேன் ? என்னும் கேள்விகள் ஆறாம் அதிகாரத்தின் துவக் கத்தில் எழுந்தன. அவற்றிற்கு இப்பொழுது நாம் பதில் தரமுடியும். ஒடுக்கு தலுக்கு உள்ளதாக நிலையில் ஒருசிக்கல் தன்னை நேரடியாக வெளியிடமுடியும் மாறாக, ஒடுக்கப்பட்ட ஒருசிக்கல் மறைமுகமான வழியின் மூலமாக மட்டுமே நனவு ஓட்டத்தைப் பாதிக்கமுடியும். ' கண்டனை ' எதிர்ப்புத் தெரிவிப்பதே இதற்குக்காரணமாகும். இந்த எதிர்ப்பின் காரணமாக, வெளியீடு வேண்டாத சிக்கலினின்றுதான் பிறக்கிறது என்ற உண்மை அம் மனிதனுக்குத் தெரியா வண்ணம் சிக்கலின் வெளியீடும் திரிக்கப்படுதல் வேண்டும். எனவே, ஒரு சிக்கல் தன்னை மறைமுகமாக வெளியிடுவதை நாம் காண்போமாயின், முரணானதும்

போராடுவனவுமான எண்ணஅமைப்புகள் உள்ளத்தில் உள்ளன எனவும், அச் சிக்கல் ஓரளவு ஒடுக்குதலுக்கு உள்ளாகி இருக்கிறது எனவும் நாம் துணிபு (assumption) கொள்ளலாம்.

ஒடுக்குதல் என்னும் உளநுட்பச் செயலின் மூலமாக உளப்போராட்டத்தைத் தவிர்க்க முற்படுவதே, உள்ளம் சாதாரணமாகப் பயன்படுத்தும் ஓர் உபாயமாகும் நடைமுறை வாழ்வில் அடிக்கடிக் காணும் பல நிகழ்ச்சிகள் ஏன் தோன்றுகின்றன என்பதை இது விளக்கும் என்பது ஒருபுறமிருக்க, பிறழ்வு நிலையில் காணப்படும் பல வகையான பிறழ்வு அறிகுறிகள் எவ்வாறு உதயமாகின்றன என்பதை அறிந்து கொள்ளவும் இவை நமக்கு உதவுகின்றன. எனவே, இந்த உளநுட்பச் செயல் பற்றி ஓரளவு விரிவாகவே காண்பது தேவையாகிறது.

இவ் வதிகாரத்தில் தரப்பட்டுள்ள விளக்கப் படங்கள், ஒடுக்கப்பட்ட சிக்கல் உள்ள நிலையில் எழும் நிகழ்ச்சிகள் இரு வகைப்படும் எனக் காட்டுகின்றன. ஒன்று, இந் நிகழ்ச்சிகள் சிக்கலின் மறைமுகமான வெளியீடாகவே இருக்கக்கூடும் இல்லையேல், எதிர்ப்பு அல்லது 'கண்டனை' சிக்கல் இயல்பானதும் நேரடியான முறையிலும் தன்னைவெளியிட முடியாவண்ணம் தடுப்பதால் எழும் நிகழ்ச்சிகளாக இருக்கலாம். உண்மையில் ஒடுக்குதல் என்னும் உளநுட்பச் செயலால் எழும் பெரும்பாலான அறிகுறிகளை மேற்கூறிய இரு வகைகளுள் ஏதேனும் ஒன்றின் மூலமாகத் தெளிவாக விளக்கமுடியும் என நாம் காண்போம். இப்பொழுது நாம் ஆராயும் நிகழ்ச்சியின் தன்மையையும், நாம் இப்பொழுது தோற்றுவித்துள்ள இருவகைப் பாகுபாட்டையும் எளிய ஓர் உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம். திருமணமாகாத ஒரு வயோதிக மாதிடம் 'பால் சிக்கல்' [பால் (sex) சார்ந்த எல்லா இயல்பூக்கங்களும் (Instincts) இப்பதத்தினுள் அடங்கும்] இயல்பான முறையில் தன்னை வெளியிட முடியாதுபோய், இறுதியில் ஒடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய நிலையில் ஒடுக்குண்ட சிக்கல் இருப்பதை, சாதாரணமாகக் காணக் கிடைக்கும் இருவகை நிகழ்ச்சிகள் காட்டும். சிக்கல் தன்னை இயல்பான முறையில் வெளியிடுவதைத் தவிர்க்கும் எதிர்ப்புமிகையான, நல்லொழுக்கமாகக் காணப் படலாம். உகாத சிக்கலை நனவினின்று மறைக்க இது நன்றாக உதவுவதால், கண்டனையின் செயலை நிறைவேற்றிவிடுகிறது. ஆயினும், ஏதேனும் மறைமுகமான வகையில் தன்னை வெளியிடவே சிக்கல் முயலும். உதாரணமாக, பிறப்பு, திருமணம், அவதூறு (scandal) என்பனவற்றில் பித்து நிலையான விருப்பம் காட்டுவதாக, சிக்கல் தன்னை வெளியிடலாம்.

சிக்கல் தன்னை மறைமுகமான முறையில் வெளியிடுவதால் எழும் நிகழ்ச்சி களும், கண்டனை இருப்பதால் எழக்கூடிய நிகழ்ச்களும், பொதுவாக ஒன்றாகவே தோன்றுகின்றன. ஆனால், ஒரு வேளையில் முதலில் உள்ளதும், மற்றொரு வேளையில் இரண்டாவதும் மற்றதை விட முக்கியத்துவம் வாய்ந்து காணப்படலாம் இரண்டு குழுவையும் தனித்தனியே விளக்குவதே, நமது விளக்கத்தைத் தெளி வாக்கும். மேலும் இரண்டாவது குழுவை முதலில் ஆராய்வதே நன்று எனவும் நாம் காண்போம்.

கண்டனையால் எழுவன என கூறத்தக்க அறிகுறிகளின் அடிப்படையான இயல்பு, அவை எதிர்ப்புச் செயலுக்கு உதவி, விரும்பத்தகாத சிக்கலைத் திறம்பட ஒடுக்க உதவுகின்றன என்பதாகும். இவ் வதிகாரத்தில் தரப்பட்டுள்ள விளக்கப் படங்களில் R குறிப்பிடப்பட்டுள்ள ஒடுக்கல் செயலுக்குத் துணைபுரியும் சாதனங்களாக இந்த அறிகுறிகள் அமைவதுடன், சிக்கல் நனவின் களத்தில் புகா வண்ணமும் இவை காவல் புரிகின்றன. பெருவாரியான வரலாறுகளில் நாம் மிகையான நல்லொழுக்கம் என்ற உதாரணத்தில் கண்டதுபோன்று, அச் சிக்கலுக்கு நேர்மாறான இயல்புகள் மிகையான அளவில் உள்ளத்தின் மேல்வாரியான படிவங்களில் காணப்படுவதாக இவை அமைகின்றன. சமூகத்தில் பழகுவதற்குத் தயக்கமும் வெட்கமும் கொள்ளும் மனிதர், அவற்றை மறைத்து அளவு மீறிய கலகலப்புடன் பிறரோடு நட்புறவு கொள்ள முற்படுவதை நாம் சாதாரணமாகக் காணலாம். பித்துநிலையிலும் மூன்றும் அதிகாரத்தில் நாம் கண்ட வீறு நிலைகளில் (Manic States) சில தோன்றுவதற்கும், இதே போன்றதொரு உளநுட்பச் செயலே காரணமாக இருக்கிறது. உதாரணமாக, டாக்டர் டேவைன் (Devine) தந்துள்ள வரலாற்றைக் காண்போம். இந் நோயாளி குணப்படுத்த முடியாத ஒரு புற்றுநோயால் (Cancer) அவதியுற்றாள். முதலில் இவள் நோய் தந்த வலியினாலும், தன் கணவனும் குழந்தைகளும் தன் மறைவினால் அல்லலுறுவரே என்ற எண்ணத்தினாலும் மிகவும் உள்ளம் சோர்ந்திருந்தாள். ஆயினும் பின்னர் கிளர்ச்சியின் (excitement) அறிகுறிகள் தோன்றலாயின. இறுதியில் திட்டவட்டமான வீறு நிலையை அவள் அடைந்தாள். இதனால் அவளை உள மருத்துவ மனையில் (mental hospital) சேர்ப்பது அவசியமாயிற்று. இந் நிலையில் அவள் பிறழ்வான முறையில் அதீத மகிழ்வும் உள உந்தலும் கொண்டு காணப்பட்டாள். எப்பொழுதும் ஏதேனும் செய்த வண்ணமாக இருந்தாள். அவளது வாய் கிறித்தவ கீதங்களை இசைத்தது. வெளிப்படையாக மகிழ்வின் மெய் மறந்த நிலையில் அவள் காணப்பட்டாள். தன்து நோய் முற்றிலும் நீங்கி தான் முழு நலம் பெற்று விட்டதாக அவள் கூறினாள். இவ் வரலாற்றிற்குரிய உளவியல்விளக்கம் வெள்ளிடைமலையெனத் தெரிகிறது. நோயின் முதல் நிலையில் நோயாளியின் உள்ளத்தில் பெரும் துயருட்டும் போராட்டம் காணப்படுகிறது. அவளது உள்ளம் மிக விரும்பிப் போற்றிய அவளது பேரவாக்கள், ஆசைகள் என்பனவற்றிற்கும் அப்போதைய அவளது அவலமான நம்பிக்கை சிறிதும் அற்ற உண்மை நிலைக்கும் இடையே காணப்படும் இப்போராட்டம், ஒடுக்குதல் செயலினால் நீக்கப்படுகிறது. இங்கு உண்மைகள் நனவினின்று அகற்றப்படுகின்றன. அவை மீண்டும் நனவில் நுழைந்துவிடா வண்ணம் ஏற்பட்டுள்ள எதிர்ப்பும், அதே வேளையில் நனவில் தோன்றியுள்ள பிறழ்வான மகிழ்வும் உந்தலும் சேர்ந்து வீறுநிலையைத் தோற்றுவிக்கின்றன. 'அணையும் சுடரொளி' (Spes Phthisica) என்னும் நிலைக்கும் இத்தகைய ஒரு உளநுட்பச்செயலே காரணமாக இருக்கிறது போலும். குறிப்பாக, நுரையீரல் காசநோயின் (Pulmonary Consumption) இறுதிக் கட்டங்களில் அடிக்கடி காணப்படும் அதீத நம்பிக்கையும், பெருமகிழ்வும் வியப்பூட்டுவனவாக உள்ளன.

உள்ளத்தைத் துன்பம் அரிக்கும்போது அதை மறைத்து மகிழ்ச்சியோடு இருப்பதுபோல வெளியே காட்டிக் கொள்கிறேம். இது கண்டனை இயங்கு வதைக் காட்டும் சாதாரணமாகக் காணக்கிடைக்கும் நிகழ்ச்சியாகும். எப்பொழு தும் கேலியும் கிண்டலுமாக இருக்கும் மனிதனின் உள்ள ஆழத்தில் துன்பம் பதுங்கிக் கிடப்பதையும் சாதாரணமாக நாம் காணுகிறேம். உண்மையாகக் கூறின் நமது வாழ்வில் துன்பங்களிலிருந்து நம்மைக் காக்கும் ஒரு பெரும் புக லிடமாக விளங்குவது நகைக்சுவை உணர்வாகும். இந்த உணர்வு அற்றவனுக, ஆனல் கூருணர்ச்சி (Sensitive) உடையவனுக விளங்கும் மனிதன் தன் அனு பவங்களினின்று பிறக்கும் கசப்பினை அவ்வாறே பெறுகிருன். ஆனல், நகைச் சுவையுடைய மனிதன் துன்பம் பயக்கும் அனுபவங்களை வேடிக்கை செய்வதன் மூலம் அவ் வனுபவங்களின் கசப்பை நீக்கிவிடுகிருன். துன்பம் பயக்கும் பல போராட்டங்களின் கொடுமையினின்று இவ்வாறு நாம் தப்பித்துக்கொள்ள முடியும். பிறழ்வு உளவியலின் களத்திலும் இந்த முறை இடம் பெற்றிருப் பதை நெடுநாள் குடியனின் (Chronic alcoholic), 'குடிபோதை நகைச் சுவையில்' காணலாம். வாழ்வில் மிக முக்கியமானவற்றைக்கூட முக்கிய மானவையாகக் கருதமுடியா வண்ணம் செய்து விடுவதாக, இந் நிலையில் காணப்படும் மேலெழுந்தவாரியான நகைச்சுவை அமைகிறது. ஓர் இன்பத் திரைக்குள் மறைந்து கொள்வதன் மூலம் தான் இழைத்துள்ள தீச் செயல்கள், வறுமை, தான் இழந்த தொழில் என்பனவற்ருல் எழும் விளைவுகளையும், தனது குடும்பத்தினரின் துன்பத்தையும் குடிகாரன் மங்கச் செய்கிருன். மிகைப்படுத்தப்பட்டுள்ள அவனது தன்னிறைவு உணர்வையும் இவை கலைக்க முடிவதில்லை. இடுக்கண் பயக்கும் போராட்டங்களினின்று அவன் இவ்வாறு தன்னை தப்பிவித்துக் கொள்வதுடன், மேலெழுந்தவாரியான மன அமைதியையும் இம் முறையின் மூலம் அவனல் பெறமுடிகிறது.

வேதனை பயக்கும் சிக்கலை அதற்கு நேர்மாருன தன்மையை மிகையான அளவில் நனவில் தோற்றுவித்து ஒடுக்குதல் முடியும் என்பதனைக்கொண்டு, சில பீடிப்புகள் (Obsessions) எவ்வாறு தோன்றுகின்றன என்பதையும் நாம் புரிந்துகொள்ளமுடியும். கீழ்வரும் எடுத்துக்காட்டு, இச் செயலுக்கு ஓர் உதாரண மாக அமையும். சிறுவனுக இருந்தபோது சொற்ப அளவுகளில் பணத்தைத் திருடுவதை வழக்கமாகக் கொண்டிருந்த ஒரு மனிதன் பின்னுளில் மிகையான வாய்மையை (honesty) தோற்றுவித்துக் கொண்டான். மிக அற்பமான தொகையை அதிகமாகப் பெற்றிருப்பானுயின் அதைக் கொடுப்பதற்கென அதிக வேளையைச் செலவிடுவதுடன் அதற்கென தன்னைச் சிரமத்திற்குள்ளாக்குவான். ஏதேனும் கடன் கொடுக்கப்படாமல் இருப்பின் இடையருது அவன் இதைப் பற்றிக் கவலை கொள்வதுடன், தன்னையும் நிந்தித்துக்கொள்வான். இப் பிறழ்வான நேர்மை எவ்வாறு தோன்றியுள்ளது என்பதை, இப்பொழுது நாம் ஆராயும் உளநுட்பச் செயல் விளக்கும். இளம் பருவத்தில் தான் செய்த தவறுகள் பற்றிய நினைவு அவனிடம் வேதனை பயக்கும் சிக்கலாக மாறியுள்ளது.

முதிர்ச்சியடைந்துள்ள அம் மனிதனின் நனவிற்கு இது மிகவும் வெறுப்பூட்டுவதாக இருக்கிறது. எனவே, அச் சிக்கல் இருப்பதை மறைக்கவும் அதைத் தனது உள்ளத்தினின்று ஓட்டவும் செய்வதற்கென, சிக்கலுக்கு எதிர்மாறான தன்மையை தன் உள்ளத்தில் மிகையான அளவில் தோற்றுவித்துக் கொள்கிறான். ஒரு தன்மையை மட்டும் மிகையான அளவில் நனவில் ஏற்றிக் கொள்வதே பீடிப்பின் ஆதாரத் தன்மை என மூன்றும் அதிகாரத்தில் கூறப்பட்டிருப்பதை வாசகர்கள் நினைவுகூறுவீர்கள். சிலரிடம் இத்தகைய பீடிப்புகள் தொடர்ந்தமைவதுடன் மிகைப்பட்டும் காணப்படலாம். இது அம் மனிதனது மனச் சமனத்தைக் (mental stability) குலைப்பதாகவும், அவனது நடத்தையைத் திட்டவட்டமான வகையில் பிறழ்வானதாக மாற்றுவதாகவும் அமையலாம். 'கையலம்பும்வெறி' இதற்கு நல்லதோர் உதாரணமாகும். இதில் அழுக்கைக் கண்டும், நோய் தொற்றுவது பற்றியும் மிகையான அச்சம் இருப்பதுடன், ஒரு நாளில் முழுநேரமும் கையலம்பிய வண்ணமாகவே இருக்கவேண்டும் என்னும் தவிர்க்கமுடியாத விருப்பமும் காணப்படுகிறது. ஒழுக்க ரீதியில் வெறுக்கத்தக்க பழக்கத்தைக் கொண்டிருப்பவரிடமே இவ் வெறி பெரும்பாலும் காணப்படுகிறது. அப் பழக்கம் நோயாளியின் உள்ளத்தில் கழிவிரக்க உணர்ச்சியை சதா தோற்றுவித்த வண்ணமாகவே இருக்கிறது. ஒழுக்க ரீதியில் அழுக்கானது எனத், தான் கருதும் சிக்கலுக்கு எதிர்வினை தர முற்படும் ஆளுமை (personality) இதற்கென, மிகக்கருத்தோடு கூடியதும் மிகைப்படுத்தப்பட்டதுமான சுத்தத்தைக் குறியீடாகத் (Symbolic) தோற்றுவித்துக்கொள்கிறது.

நாம் இதுவரையிலும் கண்ட உதாரணங்களுள் பெரும்பான்மையும் தொல்லை தரும் சிக்கலின் குணத்திற்கு நேர்மாறான குணத்தை நனவில் மிகையான அளவில் தோற்றுவிக்கும் வழியில் கண்டனை தன்னை வெளியிடுவதாக அமைந்தது. ஆனால், நனவில் தோற்றுவிக்கப்படும் குணம் எப்பொழுதும் எதிர்மாறானதாகத்தான் இருந்தாகவேண்டும் என்பதில்லை. சிக்கலை ஒடுக்குவதற்காகவே கண்டனை தோற்றுவிக்கப்படுகிறது. எனவே, சிக்கலை அது மறைத்து விடக் கூடுமாயின் ஒடுக்குதல் செயலைத் திறம்பட செய்துவிடமுடியும். வாழ்வில் எழும் தவிர்க்க முடியாத போராட்டங்களைச் சமாளிக்கச் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் குறைகூறுதலை (cynicism) இதற்கு உதாரணமாகக் கூறலாம். இங்கு இம் மனிதர், எழுந்துள்ள சிக்கல் அல்லது அதை எதிர்க்கும் சக்திகள், பொருட்டானவை அல்ல எனவும், உண்மையானவை அல்ல எனவும் நம்புமாறு தன்னைத்தானே தூண்டிக்கொள்ள முற்படுகிறார். செயற்கையான முறையில் எழுச்சியூட்டும் மது, அபின், பிற மருந்துச் சரக்குகள் என்பனவும் இவ் வகையிலேயே இயங்குகின்றன. போராட்டங்களை அடக்கிவிட வேண்டும் என்பதே இச் சரக்குகளை உட்கொள்வதன் முக்கியமான நோக்கமாகும். மதுவுக்கு அடிமையாதலைத் (Alcoholism) திறம்படக் குணப்படுத்த விரும்பும் எவரும், இந்த ஆதார உண்மையை மறந்துவிடலாகாது. 'மதுவுக்கு' அடிமையாதல் என்பது பாவமான அல்லது பிழையான செயல் எனவோ, இல்லையேல் ஒரு நோய் எனவோ என்றுமட்டுமே பெரும்பான்மையான மக்களால் கருதப்படுகிறது. ஆனால், உண்மையில் இது ஓர் உள தேவைக்குத்

தரப்படும் ஒரு துலங்கலாகும் (response). விரும்பத்தக்கன என அவன் அறிந்துள்ளவற்றிற்கும் அவன் உண்மையில் பெற அனுமதிக்கப்படுவனவற்றிற்கும் இடையே துன்பம் பயக்கும் போராட்டம் எழுகிறது. இத் துன்பத்தைத் தவிர்த்து உள்ளத்திற்கு அமைதி ஊட்டும் அருமருந்தாக மதுவும், இன்னபிற சரக்குகளும் அம் மனிதனுக்கு அமைகின்றன. அவை தீயவையாக இருக்கலாம்; ஆனால், அவனைப் பொறுத்தவரையிலும் அவை திறம்பட இயங்கி அமைதி தருவனவாக உள்ளன. சிறிது காலத்திற்கு மட்டுமே ஆயினும், உண்மை என்னும் சிறைக் கோட்டத்தினின்று இன்பநிலைக்கு அவனை இட்டுச்செல்கின்றன.[1]

ஒரு தொல்லைதரும் சிக்கலை நனவு, எதிர்த்து, மற்றொரு வழியிலும் தன்னை வெளியிடுவதுண்டு. ஏதேனும் ஒரு செயலில் ஓய்வு ஒழிச்சலின்றி அம் மனிதர் ஈடுபடுவதாக இது அமையும். நனவின் களத்தில் வேறு எண்ணங்களையும் செயல்களையும் புகுத்துவதன் மூலம் ஒடுக்குண்ட சிக்கல் அதில் இடம் பெறு வண்ணம் செய்வதே இதன் நோக்கமாகும். 'தன் துன்பங்களை உள்ளத்தினின்று ஓட்டுவதற்காக', ஏமாற்றமடைந்துள்ள மனிதன் ஏதேனும் கடினமான விளையாட்டு களிலோ அல்லது தனது தொழிலிலோ முழு மூச்சாக ஈடுபடுவதை உதாரணமாகக் கூறலாம். நமது அன்றாட சமூகவாழ்வில் பல வேளைகளில் இந்த உளநுட்பச் செயல் இடம் பெறுவதை நாம் காணலாம். ஒரு மனிதருக்கு வேதனை பயப்பதாக அமையும் ஒரு பொருள் தற்செயலாக உரையாடலில் இடம் பெறும்போது, அதனால் தான் பாதிக்கப்படுவதை மறைப்பதற்காக அம் மனிதர் உரையாடலை வேறு ஒரு பொருள்பற்றியதாக மாற்றி அதைப்பற்றிச் சரமாரியாகக் கருத்துகளைப் பொழிய ஆரம்பிக்கிறார். இந் நிகழ்ச்சியினை 'பேச்சை மாற்றுதல்' (Press of Conversation) என்கிறோம். பிறழ்வு நிலையில் காணப்படும் சில அறிகுறிகளிலும் இதே வகையான எதிர்வினையே, ஆனால் மிகையான தரத்தில், தரப்படுகிறது. உதாரணமாக நோயாளி ஏதேனும் சிக்கலைக்கொண்டிருந்து, அதனை ஒடுக்கும் முயற்சிகளில் ஈடுபடும் நிலையில் பெரும்பாலும் 'பிதற்றல்' (YORBEIREDEN) என்னும் அறிகுறி காணப்படுகிறது. இந் நிலையில் நாம் கேட்கும் கேள்விகளுக்கு நோயாளி சரியான முறையில் பதிலிறுப்பதில்லை. கேள்விகளுக்குச் சிறிதும் பொருத்தமில்லாத பதில்களைத் தர முற்படுகிறார். இவை முரணான வகையில் பொருத்தமற்று அமைவதுடன், அவரது உரையாடலையும் பொருளற்றதாகவும், தொடர்பற்றதாகவும் மாற்றுகிறது. ஒரு நோயாளியினது வாழ்வில் குமாரி பச்சை என்பவர் முக்கியமான இடம் பெற்றிருந்தார். அவரிடம் 'உங்களுக்கு குமாரி, பச்சையைத் தெரியுமா?' என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர், 'பச்சை, அதாவது பச்சை, அதாவது நீலம், தண்ணீர் நீல நிறமானது எனக் கருதுகிறீர்களா?' எனப் பதிலிறுத்தார். நோயாளி சில வேளைகளில் கேள்வியை அதிலுள்ள சொற்கள், எழுத்துகள் என்பனவாகப் பிரித்தெடுத்து அவை ஒவ்வொன்றிற்கும் தொடர்பற்ற வகையில் இயைபுகளைத் தருவதுண்டு. இதன் மூலம் கேள்விக்கு நேரடியான முறையில் பதில் தருவதைத் தவிர்க்கிறார். அவரிடம் மறைந்துள்ள

1. W. Trolter, Instincts of the Herd in Peace and War (London, 1916).

சிக்கலைத் தூண்டுவதாக அமையும் கேள்விகளைத் தவிர, பிற கேள்விகளுக்கு எல்லாம் நோயாளி இயல்பானமுறையில் பதில் தருவதைப் பெரும்பாலான வேளைகளில் நாம் காணமுடியும். சிக்கலைத்தூண்டும் கேள்வி கேட்கப்படும்பொழுது, நாம் விவரித்துள்ள வகையில் தொடர்பற்ற பதில் தரப்படுகிறது. இவ் வகையான எதிர்வினை ஒடுக்குதலைக் கலைப்பதில்லை. மேலும் சிக்கலோடு தொடர்புடைய எண்ணங்களை, தூண்டுதல் இயல்பான முறையில் நனவில் தோற்றுவித்துவிட முடியாதபடியும் இது காக்கிறது.

'ஊமைநிலை' (Mutism) எனப்படும் வேறொரு பிறழ்வு அறிகுறியும் உண்டு. இது மேலே விவரித்துள்ள அறிகுறிக்கு எதிர்மாறானது போல வெளிப்படையாகத் தோன்றும். ஆனால் இதுவும் மேலேயுள்ள அறிகுறியின் நோக்கத்துடனேயே இயங்குகிறது. இந் நிலையில் நோயாளி வாய்மூடி மௌனியாக இருக்கிறார். நமது கேள்விகளுக்கு எத்தகைய பதிலும் கிடைப்பதில்லை. சில நோயாளிகள் எல்லா நேரமுமே ஊமையராக இருத்தல் உண்டு. பல மாதங்கள் தொடர்ச்சியாக நோயாளி ஒரு வார்த்தை கூடப் பேசாது இருத்தலும் உண்டு.

ஒடுக்குண்ட சிக்கல் உடனுறைந்து, அது தானே தன்னை மறைமுகமாக வெளியிடுவதனால் தோன்றும் பல நிகழ்ச்சிகளை இனிக் காண்போம். இந்த அதிகாரத்தின் முற்பகுதியிலேயே இவற்றிற்கான பல உதாரணங்களைத் தந்துள்ளோம். இவ் வுளநுட்பச்செயல் தீவிரமாமக் காணப்படுவதும், திட்ட வட்டமாகப் பிறழ்வானது என்னும் வகையிலுள்ளதுமான வெளியீட்டு வகைகளை இங்குக் காண்போம்.

பீடிப்பு வகையினுள் அடங்கும் சில கட்டாயச் செயல்களை இங்குக் கூறலாம். மூன்றாம் அதிகாரத்தில் தரப்பட்டுள்ள ஒரு நோய் வரலாறு இதற்கு மிகச் சிறந்த ஒரு உதாரணமாக அமையும். இந்நோயாளி தம்மிடம் வரும் ரூபாய்நோட்டுகளில் பொறித்துள்ள எண்களைக் காணவேண்டும் என்னும் தவிர்க்க முடியாத கட்டாயத்திற்கு உள்ளாகி யிருந்தார். ஓர் உளப்பகுப்பாய்வில் (Psycho analysis) இந் நோயாளியின் வரலாறு ஆராயப்பட்டது. இந்த ஆராய்ச்சி விவரங்களை நாம் தெரிந்து கொள்ளும்போது, இவரிடம் இக் கட்டாயச் செயல் எவ்வாறு தோன்றியது என்பது தெளிவாகிறது. சிறிது நாட்களுக்கு முன்னர் ஒரு ஹோட்டலில் சந்தித்த மனிதர் ஒருவரிடம் இப்பெண் காதல் கொண்டாள். ஒரு நாள் அம் மனிதரிடம் ஒரு நாணயத்தைக் கொடுத்து அதற்கு சில்லறை மாற்றித் தருமாறு அவரை வேண்டிக்கொண்டாள். அதற்கு இசைந்த அம் மனிதர் அந்த நாணயத்தைத் தமது சட்டைப்பையினுள் இட்டுக்கொண்டு, தாம் அந்த நாணயத்தை யாருக்கும் தருவதில்லை என்று கூறினார். அவரும் தன்னிடம் காதல் கொண்டுள்ளார் என இந் நிகழ்ச்சி அவளை நம்பவைத்தது. அம் மனிதர் தன் சொற்படி நடப்பாரா என்பதைத் தெரிந்துகொள்ள அப் பெண் விரும்பினாள், அவள் ஒவ்வொரு முறை பணம் பெற்றபோதும், ஹோட்டலில் நேர்ந்த நிகழ்ச்சியையும் அதனோடு இயைபுடைய மனவெழுச்சிகள், விருப்பங்கள் என்பனவற்றையும் அவள் நினைவுகூர்ந்தாள். ஆனால், இதற்குமேல் எத்தகைய தொடர்

யையும் அப் பெண்ணோடு ஏற்படுத்தாது அம் மனிதர் வேறிடத்திற்குச் சென்றார். தன் நம்பிக்கைகள் நடைபெறா என்பதனை அப் பெண் இறுதியில் உணர்ந்தாள். இதனால் எழுந்த போராட்டம் ஒடுக்குதல் செயலினால் சமாளிக்கப்பட்டது. வேதனை பயத்த இந் நிகழ்ச்சிகளை தன் வாழ்வினின்று நீக்கவும், அவற்றோடு இயைபு கொண்ட விருப்பங்கள் இருந்தன என்பதை மறக்கவும் அப் பெண் முயன்றாள். இந்த ஒடுக்குதல் செயல் வெற்றிகரமாக அமைந்தது. இயல்பான வாயில்களின் மூலமாகச் சிக்கல் நனவில் தோன்றுவது முடியாதுபோயிற்று. ஆயினும், அவளது கைவசம் வந்த பணத்தில் எல்லாம் அவளது கருத்து மிகையான அளவில் பதிவது தொடர்ந்து நின்றது. சிக்கல் தன்னை முறைமுகமாக வெளியிட்டுக் கொள்வதற்கு உதவும் ஒரு வாயிலாக இது உதவியது. சிக்கலின் இவ் வகையான மறைமுக வெளியீடு, ரூபாய் நோட்டுக்களின் எண்களில் மிகையான கருத்துச் செலுத்துவதாக மாறி, இந் நோயாளியிடம் காணப்பட்ட தலையாய அறிகுறியாகவும் அமைந்தது.

சிக்கலின் மறைமுகமான வெளியீட்டிற்கு இதுவரையிலும் நாம் கண்டுள்ள எல்லா வரலாறுகளிலும், கண்டனையின் எதிர்ப்பைத் தவிர்க்கும் வகையிலான மறைமுகமான வழியின் மூலமாகவே சிக்கல் தன்னை வெளியிடுகிறது என்பதுவே இச் செயலின் ஆதாரமான தன்மை என்பது தெளிவாகத் தெரிகிறது. நனவில் தோன்றும் எண்ணங்கள் எங்கிருந்து பிறக்கின்றன என்பது அம் மனிதனுக்குச் சிறிதும் தெரியாவண்ணம், சிக்கல் தன்னை வெளியிடும் வகை போதிய அளவில் மறைமுகமானதாக இருத்தல் வேண்டும். அதாவது, ஒடுக்குண்ட சிக்கல் நனவில் செல்வாக்குப் பெறவேண்டுமாயின், அது போதிய அளவிற்குத் திரிக்கப்பட வேண்டும்.

தேவையாகும் இத் திரிபை அடையப் பயன்படுத்தப்படும் முறைகள் எண்ணிறந்தனவாகும். இந்த முறைகள் அனைத்தும் நனவில் தோன்றியுள்ள எண்ணங்கள் எங்கிருந்து பிறந்துள்ளன என்பதை மறைக்க உதவுகின்றன என்பதைத் தவிர, அவற்றினுள் வேறு ஒற்றுமைகளைக் காணமுடிவதில்லை. இவற்றுள் பல முறைகளைப்பற்றி நாம் ஏற்கெனவே தெரிந்துகொண்டுள்ளோம். எஞ்சிய வகைகளை இவ் வதிகாரத்தின் இனி வரும் பகுதிகளிலும், அடுத்த முழு அதிகாரத்திலும் காண்போம். மறைமுக வெளியீடு என்னும் உளநுட்பச் செயலின் முக்கியத்துவத்தினை அளவிட்டுக் கூறுவது இயலாததாகும். இதன் செயலின் மூலமாகப் பெருவாரியான பிறழ்வு அறிகுறிகளை விளக்கிவிடமுடியும் என்பதில் ஐயமில்லை. மேலும் இவ் வறிகுறிகளில் பொருளற்றதாகவும் புரிய முடியாததாகவும் வெளிப்படையாகக் காணப்படும் தன்மையைச் சரிவர விளக்கவும் இது உதவும். நமது ஆராய்ச்சியில் பின்வரும் நிலையில் இப் பொதுவான கூற்றின் உண்மை இன்னும் தெளிவாகும். வேறு சில விவரங்களையும் தெரிந்துகொண்டபின்னர், நாம் இதை ஆராய்வது நலம் பயக்கும்.

ஒடுக்குண்ட சிக்கலை வெளியிடுவதற்கெனத் தேவையாகும் திரிபினைப் பெறும்பொருட்டுக் குறியீடுகளைப் (Symbolism) பயன்படுத்துவது முக்கியமான ஒரு முறையாகும். உதாரணமாக, திருமணமாகாத வயோதிக மாதரிடம் தாய்மை ஆக்கங்கள் (maternal instincts), நாய், பூனை போன்ற பிராணிகளிடம் மிகையான அன்பு கொள்வதாகத் திரிபடைந்த நிலையில் வெளியிடப்படலாம். உண்மையான காரணங்களாக அமையும் எண்ணங்களை மனிதனின் நனவினின்று மறைப்பதே, குறியீடுகளின் முக்கியமான செயலாகும். நாம் முக்கியமானவர்கள் என்ற உணர்ச்சிகளை நடைமுறை வாழ்வில் நேரடியான முறையில் வெளியிட முடியாவண்ணம் சமூக நடத்தைபற்றிய மரபுகள் (traditions) தடைசெய்கின்றன. குறியீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் இவை பெரும்பாலும் வெளியிடப்படுகின்றன. பகட்டான முறையில் உடுத்தல், பெருமித நடை, பண்டிதமொழி, உரையாடலின்போது கூடியவரையிலும் ஓரிரு வார்த்தைகளில் மட்டுமே பதிலிறுத்தல், பட்டைகள் தீட்டி அலங்கரித்து எழுதுதல் என்பனவற்றை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம். பித்து நிலையிலும் குறியீடுகளை மேற்கொள்ளல் முக்கியமான பங்கு வகிக்கிறது. நாம் மேலே கூறியுள்ள எடுத்துக்காட்டுகள் மிகையான அளவில் காணப்படுகின்றன. புனைசொற்கள் கூடியதும் செயற்கையானதுமான சொற்றொடர்கள், இன்னும் இதுபோன்ற விநோதமான செயற்கைச் செயல்கள், சலிப்பூட்டும் தனிப்பழக்கங்கள் (mannerisms) என்பனவற்றைக் குமரப் பருவத்துப் (Adolescent) பித்தர்களிடம் நிரம்பக் காணலாம்.

'படிவார்ப்புச் செயல்கள்' (Stereotyped actions) எனப்படும் பல விநோதமான நிகழ்ச்சிகள் தோன்றுவதையும், குறியீடேற்றல் என்னும் உளநுட்பச் செயலின் மூலம் விளக்கமுடியும். இந் நிகழ்ச்சிகளுக்கு மூன்றும் அதிகாரத்தில் பல உதாரணங்களைத் தந்துள்ளோம். டாக்டர் யூங் தந்துள்ள ஒரு வரலாற்றினை இங்கு தருகிறோம். பல ஆண்டுகளாகவே மருத்துவ மனையில் தங்கியிருந்த ஒரு வயோதிக பெண் நோயாளி, தன் காலம் முழுவதையும் ஒரேவொரு படிவார்ப்பான செயல் புரிவதிலேயே செலவிட்டாள். அவள் பேசி யாரும் கேட்டதில்லை. அவளைச் சுற்றி நடைபெறும் நிகழ்ச்சிகளில் அவள் ஒரு சிறிதும் அக்கறை காட்டுவதில்லை. நாள் முழுவதும் குனிந்தே இருந்து செருப்புகளைத் தைக்கும் செம்மான் செய்வது போல கைகளையும், புஜங்களையும் அசைத்த வண்ணமாகவே இருப்பாள். அவள் விழித்திருந்த வேளையில் எல்லாம் இச் செயலே அவளது முழுக் கவனத்தையும் கவர்ந்தது. சலிப்பூட்டும் இச் செயலில் அவள் தொடர்ந்து பல ஆண்டுகளாக ஈடுபட்டிருந்தாள், அவளது வரலாறு ஆராயப்பட்டபோது, அவள் இளங்குமரியாக இருந்தபோதே அவளுக்கு நிச்சயதார்த்தம் நடந்திருந்து அது திடீரென முறிவுண்டது தெரியலாயிற்று. இந் நிகழ்ச்சி அவளுக்குப் பெரும் மன அதிர்ச்சியை ஊட்டிற்று. மிக விரைவில் பித்து அவளைப் பற்றிக்கொண்டது. அவளது வாழ்வின் எஞ்சிய காலமெல்லாம் இப் பித்துநிலை தொடர்ந்து நின்றது. மேலும் இப் பெண்ணைக் கைவிட்ட கயவன் செம்மான் தொழில் புரிவன் என்பதும் தெரியலாயிற்று.

இப் பெண்ணைப்பற்றிய மேற்கூறிய விவரங்களைத் தெரிந்துகொண்டுள்ள நிலையில், அப் பெண் நோயாளி வெளியிட்ட அறிகுறிகளைத் தோற்றுவிப்பதற்குக் காரணமான உளச்செயலினை நாம் எளிதில் கண்டுகொள்ளமுடியும். திடீரென நிச்சயதார்த்தம் முறிந்தது உலைவூட்டும் போராட்டம் ஒன்றைத் தோற்றுவித்தது. இறுதியில், ஒடுக்குதல் செயலின் மூலம் இப் போராட்டம் தவிர்க்கப்பட்டது. உண்மைக்கு முரணாக அமைந்த காரணத்தால், நோயாளியின் உள்ளத்தில் முக்கியமான இடம்பெற்றிருந்த எழுச்சிகளும் (affections), விருப்பங்களும் ஒடுக்கப்பட்டன. அவை திரிந்தநிலையில் மறைமுகமான வடிவில் மட்டுமே தம்மை வெளியிடுவது அனுமதிக்கப்பட்டது. இத் தகைய மறைமுகமான வெளியீடாகவே நோயாளியிடம் காணப்பட்ட படிவார்ப்புச்செயல் அமைந்தது. நோயாளியைப் பொறுத்தமட்டில் அவள் இழந்துபோன காதலனோடு தொடர்புடைய எண்ணங்கள், மனவெழுச்சிகள் என்பனவற்றின் முழு அமைப்பையும் குறியிடுவதாகவே படிவார்ப்புச் செயல் நின்றது. உண்மை உலகினின்று அவள் ஏன் பிரிந்து நின்றாள் என்பதையும், தன் சூழ்நிலைக்கு (environment) ஏற்ப அவள் ஏன் எதிர்வினை தராது இருந்தாள் என்பதையும், அவளிடம் காணப்பட்ட பிற அறிகுறிகளையும் பின் வரப்போகும் மற்றொரு பகுதியில் தெளிவாகப் புரிந்து கொள்வோம். இதனைப் பதினோராம் அதிகாரத்தில் முழுவதாக விளக்குவோம்.

ஒடுக்குண்ட சிக்கல் மறைமுகமாகத் தன்னை வெளியிட அடிக்கடிப் பயன் படுத்தும் முறைக்குத் துணைசெய்வதாகப் ‘ புறத்தெறிதல் ’ (projection) என்னும் உளநுட்பச்செயல் அமைகிறது. இம் முறை மிக முக்கியமானதாதலாலும், இது பலதிறப்பட்ட வடிவுகளில் தோன்றுவதாலும், இதனை ஓரளவு விரிவாகக் காண்பது அவசியமாகிறது. எனவே, இதனை ஆராய்வதையே நோக்கமாகக் கொண்டு அடுத்த முழு அதிகாரமும் அமையும்.

# 9. புறத்தெறிதல்

ஒரு சிக்கல் ஒடுக்கப்படுவதால் தோன்றும் நிகழ்ச்சிகளை, இரு குழுக்களுள் அமைவனவாக சென்ற அதிகாரத்தில் பிரித்தோம். அவற்றுள் ஒரு வகைச் சிக்கல் தன்னைத் தானே மறைமுகமாக வெளியிடுவதால் எழுவது. ஏனையது, சிக்கல் தனது விளைவை நேரடியானதும் இயல்பானதுமான முறையில் ஏற்படுத்த முடியா வண்ணம் அமையும் எதிர்ப்புச் சக்தியினாலோ அல்லது கண்டனையாலோ எழுவது. இதுவரையிலும் நாம் ஆராய்ந்த உதாரணங்களில் காணப்பட்ட அறிகுறிகளை, மேற்கூறிய ஏதேனும் குழு ஒன்றினுள் அடங்குவனவாகக் காணமுடிந்தது. இதனை ஓரளவு எளிதாகவும் செய்யமுடிந்தது. ஆயினும் நமது மேற்கூறிய பாகுபாடு பெருமளவில் செயற்கையானது என்பதுடன், ஒவ்வொரு அறிகுறி தோன்றுவதிலும் மறைமுக வெளியீடு, எதிர்ப்பு என்னும் இருவகைக் காரணி களும் (factors) பங்கு பெறுகின்றன. உண்மையில், வெளியிடப்படும் அறிகுறி மேற்கூறிய இரு காரணிகளுக்கும் ஒத்தமையும் ஒன்றாகவே அமைகிறது. சிக்கல் தன்னை வெளியிடுவதற்கெனப் போரிடுகிறது. எதிர்ப்புச் சக்தியோ இதனைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டு இயங்குகிறது. இவ் விரு எதிர்ச் சக்திகளுக்கும் ஒரு இணைப்பாக (compromise) அறிகுறி இறுதியில் தோன்றுகிறது. சென்ற அதிகாரத்தில் தரப்பட்ட உதாரணங்களில் எல்லாம் இவ் விரு காரணிகளில் ஏதேனும் ஒன்று, தோன்றும் ஒத்தமைப்பில் தலையாய பங்கு பெற்றிருந்ததால் தான், அறிகுறியை அதற்குரிய குழுவினுள் வகைப்படுத்த முடிந்தது.

இப்பொழுது நாம் 'புறத்தெறிதல்' என்னும் உளநுட்பச் செயலினால் எழும் அறிகுறிகளின் தொகுப்பை ஆராயப்போகிறோம். இதில் முன்பு கூறிய உதாரணங் களில் இருந்ததுபோல் ஒரு காரணி, தலையாய பங்குவகிப்பதில்லை. எனவே, இதனால் எழும் நிகழ்ச்சிகளை, மாறான இரு சக்திகளும் ஏறத்தாழ சமமான அளவில் பங்குபெற்று ஏற்படும் ஒத்தமையும் அமைப்பிற்கு எடுத்துக்காட்டுகள் எனக் கொள்வதே சாலச் சிறந்தது.

உள்ளத்தில் ஒடுக்கப்பட்ட சிக்கல் ஒன்று இடம்பெற்றிருப்பதற்கு எதிராக, உள்ளம்தரும் ஒரு விநோதமான எதிர்வினையே 'புறத்தெரிதல்' எனலாம். இடம் பெறும் சிக்கலையோ அல்லது அதனது வினைவுகளையோ இனியும் தன்னைச் சார்ந்தது என ஆளுமைகொள்ளாது, வேறொரு மனிதர் (இவர் உண்மையில் இருப்பவ ராகவோ, கற்பனையில் இடம்பெறுபவராகவோ இருக்கலாம்) தோற்றுவிப்பது எனக் கருத முற்படுகிறது. சில எளிய உதாரணங்களின் மூலம் இவ் வரையறை யின் பொருளைத் தெளிவாக்குவோம். தம்மிடம் சில குறைகள் அல்லது பற்றுக் குறை இருப்பதை எண்ணி நாணும் மக்கள், அதே குறைகள் அல்லது பற்றுக்

குறை பிறரிடம் காணப்படும்போது அவற்றை ஒரு சிறிதும் பொறுத்துக்கொள்வதில்லை. உதாரணமாக, தான் சமூக அந்தஸ்து இல்லாதவன் என்று தன் மனத்தின் ஆழத்தில் உணரும் புதுப்பணக்காரன், எப்பொழுதும் தன்னைச் சுற்றிலும் அவன் காணும் இழிந்த மனிதர்களைப்பற்றியே பேச முற்படுகிறான். எதையும் தெளிவாகச் சிந்திக்கும் திறனற்ற மனிதனால், அத் தகைய பிற மனிதர்களைக் காணச் சகிப்பதில்லை. ஏதேனும் தீவிரமான சார்பெண்ணம் (Prejudice) உடைய ஒரு மனிதரை நாம் காண்போமாயின், பெரும்பாலும் அம் மனிதரிடம் அதே குறையோ அல்லது அதை ஒட்டிய மற்றொரு குறையோ காணப்படும் என்று கருத இடமிருக்கிறது. இந் நுட்பச் செயலுக்கான சீரிய ஓர் எடுத்துக்காட்டை ஹாம்லட் (Hamlet) நாடகத்தில் காணலாம்.[1] போலி ராணியின் (நாடக பாத்திரம்) உள்ளத்தில் இரண்டாம் திருமணம் செய்துகொள்ளவேண்டும் என்ற இரகசிய விருப்பம் இருக்கும்போதே, அவள் தனக்கு இரண்டாம் திருமணம் நடப்பதைக் குறித்து மிகையான வெறுப்பைத் தெரிவிக்கிறாள்.

மறுமணந் தன்னில் மனத்தைச் செலுத்தல்
பிழைப்பில் வைக்கும் பீழை மதிப்பே!
காதல் அதற்கோர் காரண மன்றாம்.
வாழ்வில் ஓர்முறை விதவை யாகினன்
மறுமுறை இல்லறம் ஏற்றிடில் மேதினி
உண்டி யளிக்கா தொழிக! வானும்
ஒளியைத் தாரா தொழிக! பகலும்
இரவும் இதயங் களிக்கும் ஆடலும்
அமைதியும் தாரா தொழிக! என்றும்
கனவும் நனவும் கருகிக் சாம்பி
கடைநிலை யதனில் கவலுறச் செய்க!
சிறையிடைப் பட்ட துறவியின் மகிழ்வே
எனக்கும் எய்துக! இன்பந் துடைக்கும்
எல்லா எதிர்ப்பும் ஒன்றாய் இணைந்து
நன்றாய் அடைவதை இன்றாய்ச் செய்க!
இங்கும் இதைவிட் டேகும் எங்கும்
எதிர்ப்பும் தொல்லையும் என்னைத் தொடர்கவே!

---

1 The instances that second marriage move
Are base respects of thrift, but none of love...
Nor earth to me give food, nor heaven light.
Sport and repose lack from me day and night
To desperation turn my trust and hope
An anchor's cheer in prison be my scope,
Each opposite that blanks the face of joy
Meet what I would have well, and it destroy,
Both here and hence pursue me lasting strife,
If, once a widow, ever I be wife.

இதைக்கேட்ட உண்மையான ராணி, அப் பெண் இரண்டாம் திருமணம் பற்றி அளவு மீறியே எதிர்ப்புத் தெரிவிக்கிருள் என நினைக்கிறேன், என்கிருள். இது ஷேக்ஸ்பியரும் புறத்தெறிதல் என்னும் உளநுட்பச்செயலை அறிந்திருந்தார் என்பதைக் காட்டுகிறது.

இந்த எடுத்துக்காட்டுகளில் அடங்கியுள்ள உளச்செயல்களை நாம் கீழ்வரும் ரீதியில் விளக்கலாம். அவரிடமுள்ள குறை ஆளுமை முழுமைக்குமாக வெறுப் பூட்டுவதாக அமையும் சிக்கலைத் தோற்றுவிக்கிறது. இச் சிக்கல் இருப்பதன் காரணமாக, 'தன் கண்டனை' (self-reproach) எனப்படும் ஒரு வகைப் போராட்டத்தைத் (conflict) தோற்றுவிக்கிறது. ஆனல், உலைவூட்டும் இந்தச் சிக்கலை மற்றொருவர்மீது புறத்தெறிவதன் மூலம், ஆளுமை இப் போராட்டத்தைத் தவிர்த்துவிடுகிறது. இவ்வாறு பிறரிடம் புறத்தெறிந்த நிலையில் அதனைத் திறம்பட பழித்துரைக்கவும் முடியும். நம்மிடம் இக் குறையைக் காணும்போது தோன்றும் வேதனையூட்டும் மனவெழுச்சிகளும் காணப்படுவதில்லை. அதாவது, தன்னிடமுள்ள அதே குறைகள் பிற மக்களிடம் காணப்படுவதை மிகையான அளவில் ஆளுமை கடிந்துகொள்கிறது. இதன் மூலம் தன்னிடமுள்ள வெறுப் பூட்டும் சிக்கலுக்கு எதிர்வினை தந்துவிடுகிறது. இவ்வாறு பிணத்தைத் தன் பெட்டகத்திலேயே பூட்டிவிடுகிறது. தன்கண்டனையில் ஈடுபடுவது துன்பம் பயக்கிறது. இதற்குப் பதிலாக மாற்றாரிடம் சாடுவது எளிதானதன்றோ? பிற வகைகளான ஒடுக்குதலில் உள்ளது போன்றே, புறத்தெறிதலும் போராட்டத்தைத் தவிர்த்து, மேலெழுந்தவாரியான மன அமைதியைப் பெறுவதையே நோக்கமாகக் கொண்டு அமைகிறது.

பிறழ்வுத் துறையிலும் புறத்தெறிதல் என்னும் உளநுட்பச் செயல் முக்கிய மான பங்கு வகிக்கிறது. இத் துறையில் காணப்படும் பெருவாரியான அறிகுறிகள் இதன் செயலாலேயே தோன்றுவனவாகும். குடிப்பழக்கத்திற்கு அடிமையாதல் என்பது போராட்டத்தின் அழுத்தத்தினின்று தப்ப, மனித குலத்திற்கு வழி வகுப்பது என சென்ற அதிகாரத்தில் விவரித்துள்ளோம். இது புறத்தெறிதலுக்கு மிகச் சிறந்த பல உதாரணங்களைத் தருகிறது. நீண்டகாலமாக குடிப்பழக்கத்திற்கு அடிமையான மனிதன் தன் மனைவி அல்லது நெருங்கிய சுற்றத்தினரது நடத்தை யைப்பற்றி அடிக்கடி திரிபுணர்ச்சிகளுக்கு உள்ளாகுபவனுக இருக்கிருன். இத்தகைய என்னுடைய நோயாளிகளில் ஒருவர் தன்னுடைய மனைவி ஒழுக்கக் கேடானவள், குடிகாரி, பணத்தை வீணடிப்பவள் என்றும், அவள் தன்னையும் தன் குழந்தைகளையும் புறக்கணிக்கிருள் என்றும், தங்கள் இல்லம் சீரழிவதைப் பற்றிக் கவலைகொள்ளாதவளாக இருக்கிருள் என்றும் கூறினர். இதை ஆராய்ந்தபோது, இந்த எண்ணங்கள் அனைத்தும் அவரது திரிபுணர்ச்சியில் எழுந்தனவே என்பதும், இவற்றிற்கு உண்மையில் ஒரு சிறிதும் ஆதாரமில்லை என்பதும் காணப்பட்டது. இங்கு உணமையான குற்றவாளி அந்த நோயாளியே; அவரது ஒவ்வொரு கூற்றும் அவருக்குப் பொருந்தியதே தவிர, அவரது மனைவிக்குப் பொருந்தவில்லை. அவரது திரிபுணர்ச்சிக்குரிய உளவியல் விளக்

கத்தை, புறத்தெறிதல் என்னும் உளநுட்பச் செயலில் காணலாம். இந்த நுட்பச் செயலின் மூலமாக, தன்னிடமிருந்த வெறுத்தொதுக்கத்தக்க சிக்கலை, அது ஏதோ தன்னோடு சிறிதும் தொடர்புடையது அல்ல என்னும் வகையில் நோயாளி யின் ஆளுமையால் கொள்ளமுடிந்தது. இவ்வாறு வேதனையின் பிடியினின்று தப்பி, செயற்கையான தன்னிறைவையும் பெற முடிகிறது. இத் தகைய வரலாறு களில் குடிப்பழக்கம், போராட்டத்தினின்று விடுதலைபயத்தல் என்னும் தன் நோக்கத்தை அடைந்துவிட்டது. ஆனால், இதற்காக அம் மனிதர் தன் உளச் சேர்க்கையையும், தன்னிடம் வாய்மையாக இருப்பதையும் இழக்க நேருவதுடன், உளமருத்துவ மனையிலுமன்றோ இடம்பெற வேண்டிய திருக்கிறது ?

'துன்புறு திரிபுணர்ச்சிகள்' (**Delusions of Persecution**) எனப்படுவதில் பல நிகழ்ச்சிகளையும், புறத்தெறிதல் என்பதன் மூலம் விளக்கமுடியும். இங்கு நோயாளியின் ஆளுமைக்கு வெறுப்பூட்டுவதாக அமையும் இரகசிய விருப்பங்கள் நோயாளியிடம் இடம்பெற்றுள்ளன. இவை அம் மனிதனின் பொதுவான கொள்கைகளுக்கும், சிந்தனைப்போக்கிற்கும் முரணாக உள்ளதால் ஆளுமைக்கு வெறுப்பூட்டுகின்றனபோலும். இதன் காரணமாக அவ் விருப்பம் தன்னிடம் உள்ளது என்று ஏற்க உள்ளம் மறுத்து, அதனை வேறு யாதேனும் மனிதர்மேல் ( இவர் உண்மையானவராகவோ, கற்பனையில் எழுபவராகவோ இருக்கலாம் ) புறத் தெறிகிறது. இவ்வாறு அம் மனிதர் நோயாளிக்குக் கேடுபயக்க முனையும் எதிரியாக மாற்றப்படுகிறார். நாம் ஒழுக்கக்கேடாக நடந்துவிடும்போதெல்லாம் அவற்றிற்கெனச் சமாதானங்களைத் தந்து, அதன் மூலம் நம் ஒழுங்கீனத்தைக் குறைக்கப் பல வேளைகளில் முயலுகிறோம். இங்கு எளிய நிலையில் இவ் வுளச் செயல் காணப்படுகிறது. நாம் தவறிழைத்ததற்குக் காரணம் நமது ஆசைகளும், பேரவாக்களுமே என நமக்கு நாமே ஏற்காதிருக்கிறோம். இதன் பழியை அண்டை அயலாரிடம் திணிக்க முற்படுகிறோம். விபச்சாரம் புரியும் மனிதரெல்லாம் விலை மகளே தம்மை ஆசைகாட்டிக் கெடுத்துவிட்டதாகக் கூற முற்படுகின்றனர். சில வகையான பித்துநிலைகளில் இவ் வகையான புறத்தெறிதல் இன்னும் மிகைப்பட்ட நிலையில் காணப்படுகிறது. உதாரணமாக, 'வயோதிகக் கன்னியர்பித்து (**Old maid's insanity**) எனப்படும் நோயைக் கூறலாம். இங்கு தன் ஒழுக்க நடத்தையால் சிறந்து விளங்குபவளும், மூப்பு நிலையை அடைந்தவளுமான ஒரு மாது, தனக்குத் தெரிந்த ஆடவன் ஒருவன் காமக் கண்கொண்டு தன்னைக் காண்ப தாகப் பழிகூறத் தலைப்படுகிறாள். அம் மனிதர் தன்னை மணம் புரிந்துகொள்ள ஆவலாய் இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது எனவும் அம் மனிதர் தன்னையே சுற்றிச்சுற்றி வருகிறார் எனவும் கூறுகிறாள். சிறுசிறு நிகழ்ச்சிகளைக் கொண்டு அம் மனிதர் வலுக்கட்டாயமாகத் தன்னைத் தூக்கிச் செல்லத் திட்டமிடு கிறார் எனத் தீர்மானிக்கிறாள். இதனால் தனது வெறுப்பைக் காட்டி அம் மனிதருக்கு அவள் கடிதம் எழுதுகிறாள். இல்லையேல், இதுபற்றிப் போலீசாரிடம் முறையிடு கிறாள். விசாரணை தொடர்கிறது. அம் மனிதர் ஒரு பாவமும் அறியாதவர் என்பதுடன் அவர் அப் பெண்ணிடம் அக்கறை காட்டியதே இல்லை என்றும்,

அப்படி ஒரு பெண் இருக்கிறுள் என்று அவருக்குத் தெரியுமா என்பதே ஐயத்திற் கிடமானது என்பதும் தெளிவாகிறது. இதனுல், அப் பெண் 'துன்புறு திரிபுணர்ச்சியால்' அவதியுறுகிருள் என்று முடிவுசெய்யப்பட்டு மருத்துவ மனைக்கு அனுப்பிவைக்கப்படுகிருள்.

நாம் இப்பொழுது அறிந்துள்ள உளவியல் விதிகளின் துணைகொண்டு, தொடர்புடைய மேற்கூறிய நிகழ்ச்சிகளை எளிதில் விளக்கிவிடலாம். நோயாளியினது பால் ஊக்கம் (sex instinct) இயல்பான முறையில் வெளியிடப்படுவது அனுமதிக்கப்படாதிருந்ததுடன், இறுதியில் கடுமையாக ஒடுக்கப்பட்டிருந்தது. மேலும் இதற்கு நேர் எதிர்மாறுன பண்பு மிகையான அளவில் அவரது நனவில் வளர்ச்சியுற்றிருந்தது. இத் தகைய நோயாளிகளிடம் அடிக்கடி காணப்படும் போலி நன்னடத்தையை இதுவே தோற்றுவிக்கிறது. இது தோன்றும் விதத்தை ஏற்கெனவே ஒரு அதிகாரத்தில் அறிந்துள்ளோம். ஆயினும் ஒடுக்கப்படும் இயல்பூக்கங்கள் (Instincts) புறத்தெறிதல் என்னும் உளச்செயலின் மூலமாகத் தம்மை மறைமுகமாக வெளியிட்டுக் கொள்கின்றன. இவ்வாறு தோன்றும் ஆசைகளை அம் மனிதர் கிளர்ந்தெழச் செய்கிருர். அப் பெண் அவரிடம் காதல் கொள்கிருள் என்பதுவே உண்மையாக அங்கு நடைபெறும் நிகழ்ச்சியாகும். ஆனுல், உள்ளத்தில் ஒடுக்குதல் இடம் பெற்றிருப்பதால், இந்த எண்ணங்களையும் மனவெழுச்சிகளையும் தனது என உள்ளம் ஏற்பதில்லை. விருப்பங்களின் பொருளைத் திரித்து, அவற்றைத் தோற்றுவிக்கும் பொருளின் மேலேயே அவற்றைப் புறத்தெறிவதன் மூலம் போராட்டத்தையும் உள்ளம் சமாளிக்கிறது. வெறுப்பூட்டும் சிக்கலைத் தாங்கி நிற்பவர், ஆளுமைக்கு உகாதவராகவும் வலுவந்தச் செயலில் ஈடுபடுபவராகவும் காட்சியளிக்கிருர். இதன் மூலம் துன்புறு திரிபுணர்ச்சிகள் பூரணமாகத் தோன்றுகின்றன.

நாம் இப்பொழுது விவரித்தது போன்ற நோய்வளர்ச்சியுடைய பல துன்புறு திரிபுணர்ச்சி வரலாறுகளில் கற்பனையில் மட்டும் அமையும் ஒரு மனிதரிடத்து விருப்பங்கள் புறத்தெறியப்படுவதுண்டு. அகத்தே யுற்ற போராட்டத்தினின்று விடுதலை பெறுவதற்கென அலைபாயும் நோயாளியின் உள்ளம், மற்ருெரு மனிதனின் நடத்தையை மட்டும் கற்பனை செய்துகொள்வதுடன் நிற்காது, அத் தகைய ஒரு மனிதரையே கற்பனையில் தோற்றுவித்துக் கொள்வதுண்டு. இத் தகைய சிக்கலான புறத்தெறிதல் வகைகள் சாதாரணமாகக் காணக் கிடைப்பனவாகும். கற்பனை மனிதரால் வலிந்து காதல் புரியப்படும் பெண் நோயாளிகளை எல்லா உளமருத்துவ மனைகளிலும் காணலாம்.

மற்ருெரு வகையான புறத்தெறிதலும் உண்டு. இதில் சிக்கல் மட்டும் புறத்தெறியப்படுவது மட்டுமின்றி, அச் சிக்கலால் எழும் குற்றச்சாட்டுகளும் புறத்தெறியப்படுகின்றன. முன்பு உள்ளத்தைப்போன்றே, இவ் வகைப் புறத்தெறி

தலிலும் போராட்டத்தைத் தவிர்ப்பதுவே உயிரின் நோக்கமாக அமைகிறது. எந்த இரு எதிர்ச் சக்திகளின் போராட்டத்திஞல் தன்னைக் கடிந்துகொள்வது தோன்றுகிறதோ, அவற்றைத் தனித்தனியே பிரித்து விடும்போது இத் தகையு கடிந்துகொள்ளலால் ஏற்படும் வேதனைபயக்கும் அழுத்தம் நீக்கப்படுகிறது என்பது தெளிவு. இந்த எதிர்ச் சக்திகளில் ஒன்றை புறத்தெறிவதன் மூலமும் அவற்றை இதே போன்று பிரித்துவிடமுடியும். நாம் இப்பொழுது காண இருக்கும் வகையில் நோயாளி தம்மைக் கடிந்துரைப்பதில்லை. மாருக, பிறமக்கள் தன்னைக் கடிந்துரைப்பதாகக் கற்பனை செய்துகொள்கிருர். இத் தகைய மாதிரியான ஓர் இயல்பான நிகழ்ச்சியை நாம் நன்கு அறிவோம். குற்றமுள்ள நெஞ்சினன் தன்னை எல்லோரும் குற்றம் சாட்டுவதைப்போல உணருவதைத்தான் குறிப்பிடுகிருேம். இதற்கு ஒருபடி அடுத்து அமைவதுதான் 'சுட்டுத்திரிபுணர்ச்சிகள்' (**delusions of reference**) என்பனவாகும். இந் நிலையில் நோயாளி மிகையாக ஐயுறுகிருர். தன் நண்பர்களில் இரண்டு அல்லது மூன்றுபேர் கூடிப் பேசுவதை அவர் காண்பா ராகில், அவர்கள் தன்னைப்பற்றித்தான் பேசுகிருர்கள் என்று அவர் கற்பனை செய்து கொள்கிருர். தற்செயலாக அவர் காணும் மாற்ருன் ஒருவனைத் தனக்கு எதிராகச் சதியில் ஈடுபட்ட எதிரியென அவர் கொள்கிருர். இறுதியில், முழு உலகமும் தன்னை அழிக்கத் தனக்கு எதிராகச் சதியில் ஈடுபட்டிருப்பதாகக் கருதும் அவர், நடை பெறும் ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியையும் கூட இவ்வாறு தொடர்புபடுத்திக் காண முற்படுவர். இத் தகைய நோயாளிகளிடம் இல்பொருட்காட்சிகள் (**Hallucinations**) தோன்றுவது மிகச் சாதாரணமான நிகழ்ச்சிகளாகும். இவர்கள் கடிந்துரைகளைத் தம்மைச் சுற்றிலுமுள்ளவர்களது செயல்களில் காண்பதுடன் நின்றுவிடுவதில்லை. அவர்கள் கற்பனையில் மட்டுமே எழுந்துள்ள துன்புறுத்தும் மனிதர்களிடமிருந்தும் அவற்றைப் பெறுகின்றனர். இந் நோயாளியின் உள்ளத்தில் ஆளுமையால் சிதைக்கப்பட்டு, தனது என்று ஏற்க மறுக்கப்படும் பகுதி, இல்பொருட்காட்சியான குரல் வடிவில் மீண்டும் தலையெடுக்கிறது. தாம் வாழ்ந்த வகையினுல் தம்மையும் தம் குடும்பத்தையும் சீரழித்த நோயாளி ஒருவர் தம் பழைய அனுபவங்களை, நமக்கு வெறுப்பூட்டத்தக்க வகையில், தன்னிறைவோடு கூறினுர். ஆயினும் தாம் துன்புறுத்தப்பட்ட வகையைப்பற்றி மிக வருந்தி முறையிட்டார். தம் அறையின் மேல் தளத்திலும் தன் கட்டிலின் கீழும் பலர் மறைந்திருந்து தன் மீது வசைமாரி பொழிந்து எச்சரித்தனர் எனவும், இதனுல் வாழ்வதே முடியாதது போன்ற நிலை தோன்றிற்று எனவும் விளக்கினுர். இத் தகைய இல்பொருட்காட்சிகளை, மனச்சாட்சியின் குரல் ஒடுக்குதலால் திரிக்கப்படுவதற்கு நேரடியான உதாரணங்கள் எனலாம். இத் தகைய நோயாளி கழிவிரக்கத்தின் கொடுமையினின்று சிறந்த முறையில் தப்பித்துக்கொள்கிருர். ஆனுல், இது குட்டிச்சாத்தானைவிட்டுப் பேயை அணைத்தது போன்றதன்ருே ? இதனை அடைவ தற்காக இந் நோயாளி தம் உள ஒருமையைத் தியாகம் செய்து அடிக்கடி துன்புறுத்தும் மற்ருெரு நிலையையன்ருே அடைந்துள்ளார் ?

இல்பொருட்காட்சிகளையும், அவை வெளியிடும் எண்ண அமைப்புகளையும் நோயாளியினது சொந்த நனவினின்று (consciousness) சிதைந்த (dissociated) பகுதிகள் என்றே கொள்ளவேண்டும் என நான்காம் அதிகாரத்திலேயே சுட்டிக் காட்டியுள்ளோம். இத் தகைய சிதைவு ஏன் ஏற்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளும் நிலையில் நாம் இப்பொழுது இருக்கிறோம். இத் தகைய எண்ண அமைப்புகள் ஏதோ சில காரணங்களினால், நோயாளியினது ஆளுமை முழுமைக்கும் முரணாக இருக்கின்றன. இவை இயல்பாக நிகழ்ச்சிகளில் நனவில் தோன்றுமாயின், போராட்டமும், வேதனை பயக்கும் அழுத்தமும் தோன்றும். இப் போராட்டத்தைத் தவிர்க்கும் ஓர் உபாயமாக ஒடுக்குதல் பயன்படுத்தப்படுகிறது. இந் நிலையில் ஒடுக்குண்ட சிக்கல்கள் புறத்தெறிதல் மூலமாக மட்டும் மறைமுகமான ரீதியில் தம்மை வெளியிட முடியும். எனவே, புறத்தெறிதலால் எழும் நிகழ்ச்சிகள் ஆளுமையினின்று பிரிக்கப்படுகின்றன. இவை சிதைவுண்ட அமைப்புகளாகத் தம்மை வெளிக்காட்டுகின்றன.

# 10. பித்தரின் பேதமை

பித்துப்பிடித்த நோயாளிகளிடம் பேதமைக் குணம் காணப்படுகிறது. இதுவே அவர்களிடமுள்ள மிகப் பொதுமையானதும், மிக வெளிப்படையாகக் காணப்படுவதும் மிகத் தலையோங்கிக் காணப்படுவதுமான குணமாகும். அவனது திரிபுணர்ச்சிகள் தவறான நம்பிக்கைகள் என்பதும், அவனது இல்பொருட்காட்சிகள் உண்மையில் இல்லாதன என்பதும், அவனது அப்போதைய நிலையில் உளச்சோர்வு அல்லது இறும்பூது நிலை என்பன முற்றிலும் பொருந்தாதவை என்பதும் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. மேலும் அவனது அனுபவங்கள் சுட்டும் முரணான தன்மைகளை ஒரு சிறிதும் புரிந்து கொள்ள முடியாதவனாகவும், நாம் மிகத் திறமையுடன் தரும் விவாதங்களையும், நிருபணங்களையும் புரிந்து கொள்ள முடியாத அளவில் மடமையானவனாகவும் இருக்கிறான். இவற்றையெல்லாம் மேலெழுந்தவாரியாகக் காணும் ஒருவர், நோயாளி ஆராயும் திறனை இழந்துவிட்டிருப்பதே இதற்கெல்லாம் மூல காரணம் எனவும், சிந்திக்கும் திறனை உள்ளம் இழந்துவிட்டிருப்பதன் காரணமாகவே விசித்திரமான அவ் வறிகுறிகள் தோன்றியுள்ளன என்றும் முடிவு செய்வர். இத் தகைய ஆராய்வாளரைப் (observer) பொறுத்த மட்டிலும் அம் மனிதனின் அறிவாற்றல் திறன்கள் அனைத்தும் நோயுற்றுள்ளன; இதனால் அம் மனிதனின் உள்ளம் எத்தகைய சிந்தனையையும், அவை எவ்வளவு மடமையாகவும், ஆதாரமற்றனவாகவும் இருப்பினும், பகுத்தறியும் திறனற்றதாக உள்ளது.

ஆனால், இதனை நாம் கவனமாக ஆராயும்போது பெறும் உண்மைகள் இக் கருத்திற்கு ஒவ்வாதனவாக இருத்தலைக் காண்போம். பல நோயாளிகளிடம் அவர்களது சிந்தனைகள் அவர்களிடமுள்ள திரிபுணர்ச்சி அமைப்புகளோடு உடனடியாகத் தொடர்பு கொண்டிராத நிலையில், அவர்களது சிந்தனைத் திறன்கள் மிகத் திறம்பட இயங்குகின்றன. உதாரணமாக, தாம் மூன்றாம் ஜார்ஜ் மன்னரின் மகன் என உறுதியாக நம்பும் நோயாளி மிகக் கடினமான கணக்குகளைப் போடும் திறனுடையவராக இருக்கலாம். அவருக்கு மருத்துவ மனையில் தரப்பட்டுள்ள பணிகள், சிறந்த முடிவுத் திறனையும் பாகுபடுத்தி அறியும் திறனையும் வேண்டுவன வாக இருப்பினும் அவற்றை அவர் மிகச் சிறந்த முறையில் செய்து முடிக்கவும் கூடும். நோயாளியின் குடும்ப ஆராய்ச்சியில் இறங்காத வரையிலும் அவர்களுடைய சிந்தனைத் திறன்கள் இயல்பாகவும், திறம்படவும் இயங்குகின்றன எனவும், அத் தகைய ஆராய்ச்சி துவங்கப்பட்டவுடன் உள்ளம் சிடீரென நோய் வாய்ப்பட்டு அறிவைத் துறந்து பயனற்ற வகையில் விந்தையான எண்ணங்களைத்

தோற்றுவித்துக் கொள்கிறது எனவும் நாம் துணிபு (assumption) கொள்ள லாமா? இல்லையேல் அந்த மேல்வாரியான ஆய்வாளரின் கொள்கை பொருந் தாது, சிந்தனைத் திறன்கள் நோயுறுவதால் இந் நிலை தோன்றுவதில்லை எனக் கொள்ளலாமா?

இந் நூலில், முன்னைய அதிகாரங்களில் நாம் பெற்றுள்ள முடிவுகள், மேற் கூறிய இரண்டினுள் இரண்டாவது உள்ளதையே ஆதரிக்கின்றன. அறிவுத் திறன்கள் உலைவுறுவதால் இப் பிறழ்வான உளச் செயல்கள் தோன்றுவதில்லை. மாருக, அறிவுத்திறன்களுக்கு எத் தகைய எண்ணங்கள் தரப்படுகின்றன என்பதைப் பொறுத்தே இது அமையும். அந் நோயாளி, தமது சிந்தனைத் திறனை இழந்து விட்டதன் காரணமாகத் தாம் மூன்றும் ஜார்ஜ் மன்னரின் மைந்தன் என நினைப்பதில்லை. ஆனால் இக் கருத்து உண்மையாக இருக்கக்கூடும் என்னும் நிலையிலும் அதுவே சரியான முடிவு என்னும் வகையிலும் அவரது உள்ளத்திற்குத் தரப்படுவதன் காரணமாகவே அவர் இவ் வெண்ணத்தை ஏற்றுக் கொள்கிருர் ஆராய்வாளர் அம் மனிதரிடம் அம் முடிவு தோன்றுவதற்குக் காரணமாகக் கோவை யாக இருக்கும் உளச் செயல்களைக் காண்பதில்லை. வெறும் முடிவை மட்டுமே காண்கிருர். எனவே தான் அம் முடிவு எத்தகைய ஆதாரமும் அடிப்படையுமின்றி தனித்து நிற்கும் நிகழ்ச்சிபோல் காணப்படுகிறது. எனவே, அந் நோயாளி வெளிப்பார்வைக்கு மட்டுமே பேதமையானவர் எனக் கொள்ள வேண்டியதிருக்கிறது.

மறைந்து வதியும் ஓர் உளச்செயல் தன்னை மறைமுகமாக வெளி யிடுவதே நோயாளியிடம் காணப்படும் திரிபுணர்ச்சியாகும். எனவேதான் இத் திரிபுணர்ச்சி மடமையானது போன்று வெளிப்படையாகக் காணப்படுகிறது. அவ் வுளச்செயலை நாம் தெரிந்து கொள்வோமாயின் அது பொருளுடையதாகவும், புரிந்து கொள்ளக் கூடியதாகவும் காணப்படும். ஆனால், அது மறைந்துள்ள வரையிலும், அத் திரிபுணர்ச்சி அடிப்படை இல்லாதது போன்றும், பிறவற்ருேடு தொடர்பற்றதாகவும் காணப்படவே செய்யும். சென்ற அதிகாரங்களில் அடங்கி யுள்ள ஆராய்ச்சி உண்மைகள், இக் கூற்றின் உண்மையை விளக்க உதவும். ஒரு மனிதன் அற்பக் காரியத்திற்காக கடும் சினம் கொள்வதை நாம் புரிந்து கொள்ள முடியாது இருக்கிருேம். ஆனால், உண்மையில் அச் சினம் வேறு போதிய காரணத்தால் தோன்றுகிறது என நாம் அறியும்போது அத் திகைப்பு மறைகிறது. அதைப் போன்றே, திரிபுணர்ச்சிகள் தோன்றுவதற்குக் காரணமான உளச் செயல்களின் கோவையை நாம் கண்டுகொள்ளும்போதெல்லாம், அவற்றைப் புரிந்துகொள்ளமுடியாது என்னும் நிலை மறைகிறது என முன்னரே கண்டோம்.

பித்து நோயாளியிடம் அவனது திரிபுணர்ச்சிகளைப்பற்றி விவாதிப்பது பயனற்றது எனப்படுகிறது. இதன் காரணத்தையும் நாம் புரிந்துகொள்ளலாம். நமது விவாதங்கள் திரிபுணர்ச்சியைத் தோற்றுவிக்கும் மறைந்துறையும் உண்மைக்

காரணத்திற்கு எதிராகத் தரப்படாது, மேலெழுந்தவாரியான அதன் வெளியீட்டிற்கு எதிராகத் தரப்படுவதால் அவை பயனற்றுப்போகின்றன என்பது வெளிப்படை. நோயாளியைக் 'காரணம் கற்பித்தலில்' (rationalization) ஈடுபடத் தூண்டுவதே அவற்றால் விளையும் பயனாகும். அதாவது உள்ளுறையும் சிக்கலால் உண்மையில் தோன்றியுள்ள அத் திரிபுணர்ச்சிகளுக்கு வேறு அறிவியல் சாரும் பொய்யான காரணங்களைக் காண அவை அவனைத் தூண்டும்.

விவாதங்களைச் சமாளிக்கப் பயன்படும் இம் முறை பித்தர்களிடம் மட்டும் விநோதமாகக் காணப்படுவதன்று. இம் முறை பயன்படுத்தப்படுவதற்கு உதாரணங்களை நம்மைச் சுற்றிலும் காணலாம். 'தன் எண்ணத்திற்கு எதிரானதை நம்பச் (வலுவந்தம்) செய்யப்படும் மனிதன், இன்னும் தன் எண்ணத்திலேயே நிலைத்து நிற்கிறான்' என்பது வழக்கிலுள்ள மொழியாகும். இதனை உளவியல் ரீதியில் கூற முயல்வோம். 'அம் மனிதன் தோற்றுவிக்கும் காரணங்கற்பித்தல் ஒவ்வொன்றும் அறிவியலுக்குப் பொருத்தாதவை என நம் வாதங்களால் ஒருக் கால் காட்டக்கூடும். இவ்வாறு இனியும் வேறுகாரணம் கற்பித்தலைத் தர இயலாத ஒரு நிலையை அம் மனிதன் அடையலாம். ஆனால், அவன் அந்நிலையை அடைவதற்கு உண்மையான காரணமான சிக்கல் ஒரு சிறிதும் அகற்றப்படாது இருப்பதால், அது தன் விளைவைத் தோற்றுவித்துக்கொண்டே இருக்கிறது. எனவே, அம் மனிதன் தன் முன்னைய கருத்திலேயே நிலைத்து நிற்கிறான்.' சிக்கல் தோற்றுவிக்கும் எண்ணங்களுக்கு எதிராக அறிவியலை ஆயுதமாகப் பயன்படுத்துவது ஒரு சிறிதும் பயனற்றது. ஓர் அரசியல் கட்சியில் அபரிமிதமான பற்றுடைய அரசியல்வாதியின் நம்பிக்கைகளையும், அபரிமிதமான சமயப் பற்றுடையவருடைய நம்பிக்கைகளையும் மாற்றிவிடமுடியும் என நாம் எண்ணுவதில்லையே? அதே காரணங்களுக்காகவே உளமருத்துவரும் (psychiatrist) பித்தனின் திரிபுணர்ச்சிகளுக்கு எதிரே விவாதம் புரிவது பயனற்றது எனக் கருதுகிறார். இவ் விரு நிலைகளிலும் அம் மனிதர்கள், அவ் விவாதங்கள் தம்மிடம் உள்ளுறையும் சிக்கல்களுக்கு ஒத்தமைகின்றனவா அல்லது எதிர்க்கின்றனவா என்பதற்கேற்ப எளிதில் நம்புகிறவர்களாகவோ, இல்லையென குருட்டுத்தனமாக மறுப்பவர்களாகவோ மாறுகின்றனர்.

ஆர்வம் மிகுந்த அரசியல்வாதியும், சமயவாதியும் ஏன் நம் விவாதங்களைப் புரிந்து கொள்ளமுடியாமல் இருக்கிறார்கள் என வினவுவோமாயின், அவர்களது அறிவுத்திறன்கள் நோய்வாய்ப்பட்டுள்ளதால் என நாம் கருதமாட்டோம். ஆயினும் அந் நிலையில் அவர்களது உளச்செயல்கள், அறிவியல் விதிகளுக்கு முரணான வகையில் அறிவற்ற வகையிலேயே உள்ளன. ஆதாரங்களைச் சார்பின்றி ஆராயாததினாலே நம் அரசியல்வாதி அத் தகைய முடிவுகளைப் பெறுகிறார். அவரது சிந்தனை முன்னுள்ள உண்மைகளினின்று படிப்படியாக அறிவியல் ரீதியில் பெறப்படுவதில்லை. மாறாக, அவர் பெறும் முடிவு அவரிடமுள்ள 'அரசியல் சிக்கலினின்று' எழுவதாக உள்ளது. சார்பற்ற முறையில் அறிவியல் உண்மைகளை அவர் பயன்படுத்துவாரெனின், அந்த ஆதாரங்களினின்று, அவர்

பெற்றுள்ள முடிவுக்கு நேர்மாருன முடிவினை அவர் பெறக்கூடும். அவரது 'அரசியல் சிக்கல்' பங்கு வகிக்கும் நிலைகளிலெல்லாம், அவரது அறிவுத்திறன்கள் தமக்கு இயல்பான முறையில் இயங்க அனுமதிக்கப்படாதிருப்பதால், அவ் வரசியல்வாதியால் அறிவு நிலையினின்று சிந்திக்க முடிவதில்லை என்ற முடிவுக்கே நாம் வரவேண்டியதிருக்கிறது. தமது சிந்தனைகள் அறிவுக்குப் பொருந்தா வண்ணம் அமைந்துள்ளன என்பதை அவரே தெரிந்துகொண்டிருப்பதில்லை. தனது சிந்தனைகள் மிகத் தெளிவாகவும், ஐயத்திற்கு இடமின்றியும் அமைந்திருப்பனவாகவே அவருக்குத் தோன்றுகின்றன. இந்த உண்மைகளைக்கொண்டு மற்ரெரு ஆராய்வாளர் எவ்வாறு வேரெரு முடிவிற்கு வரமுடியும் என்பதை அவரால் புரிந்துகொள்ள முடிவதில்லை. 'உண்மைகளைப் புரிந்துகொள்ள முடியாத தன்மையும், பொதுச் சிக்கல்களுக்குத் தரக்கூடிய ஒரே வகையான முடிவுகளை ஏற்கமுடியா திருப்பதுவுமே லிபரல் (Liberal) கட்சியினரிடம் காணப்படும் வியப்பூட்டும் தன்மை என கன்சர்வேட்டிவ் (Conservative) கட்சியினன் கருதுகிருன்.' 1

சென்ற பத்தியில் அடங்கியுள்ள உண்மைகள் இன்னும் இத் துறையில் ஆராய்ச்சி தேவையாகிறது எனக் காட்டுகின்றன. இந்த ஆராய்ச்சிகள் பித்தரின் உளச்செயல்களை இயல்பான மக்களிடம் காணப்படும் உளச் செயல்களோடு இன்னும் சரிவர ஒப்பிட்டுக் காண உதவுவதோடு, பித்தரது உள்ளத்தின் அகவயப் (Subjective) பகுதியைப் பற்றிய உட்காட்சியைப் (insight) பெறவும் உதவும். அதாவது, நோயாளிக்கு அவனது பிறழ்வான உளச் செயல்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்ற உட்காட்சியைத் தரும்.

உண்மையாகக் கூறுவதாயின், இயல்பானவரின் உள்ளத்தில் காணப்படும் பெரும்பாலான உளச்செயல்களிலும் அவ் விரு பண்புகளும் — அறிவுக்குப் பொருந்தாத மூல காரணம், உடனடியான அகவயக் கண்ணேட்டம் என்பன — காணப்படுகின்றன. அரசியல்வாதி, சமயவாதி என்பவருடைய வரலாறுகளில் இதனைத் தெளிவாகக் கண்டோம். ஆதார இயல்பூக்கங்களின் (Primary instincts) நேரடி விளைவாகத் தோன்றும் எண்ணங்களும், செயல்களும் இவற்றின் மிகச் சாதாரணமான எடுத்துக் காட்டுகளாகத் துலங்குகின்றன. குறிப்பாக, தற்காப்பு (Self-preservation), ஊட்டம் (Nutrition), பால் (Sex) என்னும் இயல்பூக்கங்களின் நேரடி விளைவுகளைக் கூறலாம். வில்லியம் ஜேம்ஸ் (William James) என்னும் அறிஞர் இவற்றைப் பற்றிக் கீழ்வருமாறு கூறியுள்ளார்.

'அறிவியல் இவற்றைக்கண்டு, ஆராய்ந்து இவற்றுள் பல பயனுடையவை எனக் காணலாம். ஆனல், இவற்றின் பயனுக்காக நாம் அவற்றைப் பின்பற்றும் வேளையில் அவற்றைச் செய்வது மட்டுமே சரியானதெனவும் இயல்பானதெனவும் நாம் உணர்வதால் மட்டுமே நாம் அவ்வாறு செய்கிருேம். உணவு உண்ணும் வேளையில் கோடியில் ஒருவர் கூட, பயனைப் பற்றி எண்ணுவதில்லை. அவ் வுணவு

1 W. Trotter, Instincts of the Herd in Peace and War (London, 1916).

சுவையாக இருப்பதாலும், இன்னும் உண்ணவேண்டும் என்ற அவாவை அது ஊட்டுவதாலுமே அதனை உண்ணுகிறார். அதே வகையான சுவையுடைய பொருளை இன்னும் ஏன் அதிகமாக உண்ண விரும்புகிறார் என அவரைக் கேட்பீர்களாகில் உங்களை ஒரு தத்துவ ஞானி என அவர் போற்றமாட்டார். மாறாக, உங்களை ஒரு மடையன் எனக் கருதி எள்ளி நகையாடுவர். இன்பச் சுவைக்கும்; அது அவரிடம் தூண்டும் செயலுக்கும் இடையே உள்ள தொடர்பு, அவரைப் பொறுத்தவரையிலும் முழுமையானது; அனுபவத்தினின்று எழும் ஓர் ஒப்பற்ற உண்மை; அது நடைபெறுகிறது என்பதைத் தவிர, இதற்கு வேறு எந்த விதமான ஆதாரமும் தேவையில்லை. நாம் மனநிறைவோடு உள்ளபோது, கடுகடுக்காது, இன்முகம் காட்டுவதேன்? ஒரு நண்பரிடம் உரையாடுவதுபோல, ஒரு கூட்டத்தினரிடம் ஏன் நம்மால் உரையாட முடிவதில்லை? ஒரு குறிப்பிட்ட கன்னி நம் சிந்தையைச் சிதறடிப்பதேன்? என்னும் கேள்விகள் உண்மையின் உண்மையைத் தேடும் ஞானியின் (Meta physician) உள்ளத்தில் மட்டுமே தோன்றக் கூடியன. 'நாம் இன்முகம் காட்டத்தான் செய்கிறோம்,' 'கூட்டத்தைக் கண்ட மாத்திரத்தில் நம் குலை நடுங்கவே செய்கிறது', 'எழிலும் வடிவும் தாங்கி இதயத்தைத் துடிக்க வைக்கும் தெய்வ மங்கையைக் காதலிக்காது நாம் வேறு என்ன செய்யமுடியும்' என்று மட்டுமே ஒரு சாதாரண மனிதன் கூறக் கூடும். குறிப்பிட்ட சில பொருட்கள் உள்ள நிலையில், குறிப்பிட்ட வகையான செயல் புரிய முற்படும் ஒவ்வொரு விலங்கும் இவ்வாறுதான் உணருகிறது போலும். அடைகாக்கும் கோழிக்கு, கூண்டிலுள்ள முட்டைகளை விட மிகக் கவர்ச்சியானதும், ஒப்பற்ற செல்வமும் உட்கார்ந்து இருப்பதற்கு இதைவிடச் சிறந்த சாதனமும் உண்டு என கருதக் கூடிய ஒரு பிராணி இவ் வுலகில் இருக்க முடியும் என்ற எண்ணமே பயங்கரமாக இருக்கும்?

மேலே நாம் தந்துள்ள பகுதி, டிராட்டர் எழுதியுள்ள 'மந்தை உணர்வு இயல்பூக்கம்' (Herd instinct) என்னும் கட்டுரைகளினின்று எடுக்கப்பட்டதாகும். இக் கட்டுரைகள் அரிய கருத்தாழமும் சுவையும் மிக்கன. மேலே கூறப்பட்ட அகவயத்தன்மை கொண்ட உளச்செயல் குழுக்கள் எண்ணிறந்த அளவில் உள்ளன எனவும், ஆயினும் அவை முதல்நிலை (Primary) இயல்பூக்கங்கள் என சாதாரணமாகக் கருதப்படும் மூன்று இயல்பூக்கங்களினின்று தோன்றுவன அல்ல எனவும் காட்டியுள்ளார். உதாரணமாக, சமயம், அரசு, குடும்பம், நீதி, நேர்மை, மானம், தூய்மை, பழிச்செயல் என்பனவற்றைப்பற்றிய பெருவாரியான எண்ணங்கள் பல துணிபுகளைச் (assumptions) சார்ந்துள்ளன. அனுபவத்தினின்று பிறக்கும் சிறந்த உண்மைகளில் காணப்படும் அகக் காட்சித் தன்மை (Introspectual quality) இவற்றில் காணப்படுகின்றன. இவை யாவும் ஒரு நான்காம் இயல்பூக்கத்தினின்று பிறப்பவை எனவும், இந்த வெளியீடுகள் கூடிவாழும் உயிரினங்களின் உளவியல் உண்மைகளில் ஆதார முக்கியத்துவம் வாய்ந்தவை எனவும் டிராட்டர் விளக்குகிறார். இதனையே அவர் 'மந்தை உணர்வு

இயல்பூக்கம்' என்கிறார்.[1] தனியவனின் நடத்தை முழுச் சமுதாயத்தின் (Community) நடத்தைக்கு இசைந்த முறையில் அமைய, மந்தை உணர்வு இயல்பூக்கம் கண்காணிக்கிறது. இது செயலுறுவதன் காரணமாகவே, ஒவ்வொரு மனிதனும் தன் இனத்தவரிடம் அப்பொழுது நிலவியுள்ள நம்பிக்கைகளை மறுப்பின்றி ஏற்க முற்படுகிறான். மந்தையின் ஏற்பைப் பெற்றுள்ள நடத்தை விதிகளைத் தயக்கம் எதுவுமின்றிப் பணிய முன்வருகிறான். சராசரி மனிதனைப் பொறுத்தவரையிலும் அவனது ஒழுக்க விதிகளையும், அவனிடம் காணப்படும் எல்லா நம்பிக்கைகளையும் கருத்துகளையும் (சிறப்பான தனி அறிவினால் எழாதன) நிர்ணயிக்கும் சக்தி இம் மந்தை உணர்வு இயல்பூக்கமாகும். தன் தோழர்கள் சில வாழ்க்கை விதிகளைப் பின்பற்றுகிறார்கள் என்பதால், அவனும் அவ் விதிகளைப் பின்பற்றுகிறான். அவன் வாழும் சூழ்நிலையில் (enviornment) அவனைச் சுற்றிலும் வாழும் அனைவரும் சிலவற்றை நம்புகிறார்கள் என்பதால், அவனும் அவற்றை நம்புகிறான். அவனது நடத்தை, கருத்துகள் என்பன எங்ஙனம் அவனிடம் எழுகின்றன என்று அவனை நாம் கேட்போமாயின், நாம் ஐந்தாம் அதிகாரத்தில் விவரித்துள்ள வகையான காரணங் கற்பித்தல்களை அவன் உடனடியாகத் தோற்றுவித்துக்கொள்வான் என்பது நிச்சயம். மேலும் தன் நடத்தைக்குரிய உண்மையான காரணங்கள், தன் காரணங் கற்பித்தல்களில் தான் காணும் காரணங்களே என தன்னையும் நம்பச் செய்துகொள்வான். ஆனால், முதலில் பிறர் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதும், இரண்டாவதாக மந்தை உணர்வு இயல்பூக்கம் அவனிடம் இயங்குகிறது என்பனவுமே அவனது நடத்தையைத் தோற்றுவிக்கும் உண்மையான காரணங்களாகும். பின்னரே காரணங் கற்பித்தல் தோற்றுவிக்கப்படுகிறது. தான் அறிவியல் அடிப்படையில் மட்டுமே இயங்குவதாக நம்பவேண்டும் என்னும் தேவை இம் மனிதரிடம் மிகையாக உள்ளது.

ஒரு சராசரி மனிதனின் உள்ளத்தில் இடம் பெற்றுள்ளனவற்றை நாம் ஆராய்வோமாயின், அதில் எண்ணிறந்தனவும், சிக்கல் வாய்ந்தனவும், கடினமானவையுமான பல வகைப்பட்ட பொருட்களைப்பற்றிப் மிகத் திட்டவட்டமான எண்ணிறந்த முடிவுகள் (judgements) இடம் பெற்றிருத்தலைக் காண்போம். அண்டம் எவ்வாறு தோன்றிற்று, அதன் தன்மை யாது என்பன பற்றி ஓரளவு நல்ல முடிவுகளுக்கு வந்திருப்பதுடன் அதன் பொருள் யாது எனவும் புரிந்து கொண்டிருப்பான். சாவின்போதும் அதற்குப் பின்னரும் தனக்கு நேரப்போவது பற்றியும், ஒழுக்கம் என்றால் என்ன, ஒழுக்கத்தின் அடிப்படையாக அமைய வேண்டுவது யாது என்பனபற்றியும் முடிவுகளைக் கொண்டிருப்பான். நாட்டை

[1] உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டினர் (Psycho analytical School) டிராட்டரின் மந்தை உணர்வு இயல்பூக்கத்தை ஓர் உளவியல் உண்மை என ஏற்பதில்லை, அது உளப்பகுப்பாய்விற்குச் சிக்காத ஒரு உடலியல் கருத்து என்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையிலும், டிராட்டரின் மந்தை உணர்வு இயல்பூக்கம் என்பதால் விளக்கும் நிகழ்ச்சிகள் பிற இயல்பூக்கச் சக்திகள் தோற்றுவிப்பனவாகும், குறிப்பாக, வளரும் தனி மனிதனுக்கும் அவன் பெற்றோருக்கும் இடையே தொடர்பு ஏற்படுத்தும் இயல்பூக்கங்களே இதற்குக் காரணமாகும்.

எவ்வாறு அரசோச்சவேண்டும் எனவும், அது ஏன் இன்று இழிநிலையில் உள்ள தெனவும் அவன் புரிந்துகொண்டிருப்பான். அதுபோன்றே, ஒரு சட்டம் ஏன் நன்மை பயப்பது என்பதையும், மற்றொன்று ஏன் தீமை பயக்கிறது என்பதையும் தெரிந்துகொண்டிருப்பான். மேலும் இராணுவ, கடற்படைத் தந்திரங்கள், வரி விதிக்கவேண்டிய முறைகள், அம்மைகுத்துதல், மதுவகைகள் என்பனவற்றைப் பயன்படுத்தவேண்டிய வகை, காய்ச்சலைக் குணப்படுத்தும் முறை, நீருறல் எழும் பீதியைத் தவிர்க்கும் உபாயம், நகராண்மையினர் விற்பனைகளில் ஈடுபடல், கிரேக்க மொழியைப் போதிக்கும் முறை, கலையில் புகுத்தப்படக்கூடியன, இலக்கியத்தில் மனநிறைவு தருவன, அறிவியலில் நம்பிக்கை ஊட்டுவன என்பன பற்றியும் திட்டவட்டமான கருத்துகளைக் கொண்டிருப்பான்.

இக் கருத்துகளில் பெரும்பான்மையானவை அறிவியல் ஆதாரங்கள் எவையு மின்றி எழுவனவாகவே இருந்தாகவேண்டும். ஏனெனில் இவற்றுள் பல இன்னும் முடிவு காணப்படவில்லை என நிபுணர்களே கூறுவனவாக உள்ளன. சாதாரண மனிதன் பெற்றுள்ள அனுபவமும் பயிற்சியும் பிறவற்றைப் பற்றியும் அவன் கருத்துகளைக் கொள்வதற்கு எள்ளளவும் அவனைத் தகுதியாக்குவதில்லை. அறிவியல் முறையைப் போதிய அளவில் அவன் பயன்படுத்துவானெனின், இக் கேள்விகளுள் பெரும்பாலானவற்றிற்குத் தான் முடிவு எடுக்காமல் இருப்பதுவே தான் கொள்ளக்கூடிய ஒரே மனப்பான்மை என அவன் தெரிந்துகொண்டிருப்பான்.[1]

அறிவியல் சாராத மேற்கூறிய எல்லா எண்ணங்களும் நம்பிக்கைகளும் அவற்றைக் கொண்டிருப்பவருக்கு உண்மை தெளிவாகவும், உடனடியாகவும் தெரியும் கூற்றுக்கள் போன்றும், அவற்றின் உண்மையை ஐயுறுவது மடமையானது போன்றும் தோன்றும். ஆயினும் ஒரு தனிப்பட்ட மனவெழுச்சி எழுச்சியோடும் உண்மையானவை என இயல்பூக்க உறுதியோடும் அவை கொள்ளப் படுகின்றன. இம் மனவெழுச்சி எழுச்சியையும் இயல்பூக்க உறுதியையும் வரையறுப்பது கடினமாகும். ஆனால், சுய அகக்காட்சியில் இறங்கும் திறனை ஓரளவு கொண்டுள்ள எவருக்கும் அவற்றின் தன்மை உடனடியாகப் புலனாகும். காணப் படும் உண்மைகளை அறிவியல் ரீதியில் பகுப்பதால் தோன்றும் உண்மை அறிவு, இவற்றைப் போன்று தோற்றமளிப்பதில்லை. அறிவியல் சாராத உண்மைகளில் காணப்படும் எழுச்சியின்றி, அது ஓரளவு சப்பென்றும் காணப்படுகிது. அவற்றின் உண்மையைப் பிறர் சோதிக்க முனையும்போது, நாம் எரிச்சலடைவதில்லை. மாறாக, அது எந்த அடிப்படைகளின்மேல் நிற்கிறது என்பதை இன்னும் ஆராயவே நாம் தூண்டப்படுகிறோம். ஒரு பெண்ணைத் துன்புறுத்துபவன் கயவன் என்னும் கூற்று பற்றியும், உலகம் பகலவனைச் சுற்றிச் சுழல்கிறது என்ற கூற்று பற்றியும் தனது மனப்பான்மைகளை, அகக்காட்சி நிலையினின்று, வாசகர் ஒப்பிட்டு நோக்குவாராயின், இவ் விரு வகை உளச்செயல்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு உடனடியாகத் துலங்கும்.

1 W. Trotter, Instincts of the Herd in Peace and War (London, 1916).

சென்ற சில அதிகாரங்களில் விளக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் இவ் விவரங்களை ஆராம்வோமாயின், அறிவியல் சாராத நம்பிக்கைகளும் கருத்துகளும் சிக்கல்களின்று எழுவன என்பதும், 'தனிப்பட்ட எழுச்சி என நாம் விவரித்தது இச் சிக்கல்களின் செயல்களை எப்பொழுதும் தொடரும் மன வெழுச்சித் தன்மையே என்பதும் உடனடியாகப் புலனாகும். இத்தகைய நம்பிக்கைகளைக் கொண்டிருப்போரிடம், சிக்கல் ஏதேனும் தற்காப்பு எதிர் வினைகளைக் கொண்டு தன்னைக் காத்துக்கொள்ளும் என்போம். அவர் நமது விவாதங்கள் மடமையானவை என்றோ அல்லது தீய நோக்கத்தோடு கூறப்படுவன என்றோ கூறி அவற்றை நிராகரிப்பர். இல்லையேல் எண்ணிறந்த அளவில் காரணங் கற்பித்தலைத் தோற்றுவித்துக் கொள்வர். அவை, அவரிடமுள்ள நம்பிக்கை இயல்பான ஒன்றே என்று அவரை முழுமையாக நம்பச் செய்வனவாக அமையும்.

பித்தரிடம் காணப்படும் திரிபுணர்ச்சிகளின் உண்மையான தன்மைகளும் இவையேயாம். அவையும் அறிவியல் சாராது, சிக்கல்களினின்றே பிறக்கின்றன. அவற்றிலும் ஒரு தனி வகையான மனவெழுச்சி ஆழுச்சியும், அவை உண்மையானவை என்ற இயல்பூக்கம் சார்ந்த உறுதியும் காணப்படுகின்றன. மேலும், அவற்றின் உண்மை உடனடியாகப் புலனாவது போன்றும், மறுக்க முடியாத உண்மை போன்றும் நோயாளிக்குத் தோன்றும். தனது முடிவுகள் மறுக்க முடியாத உண்மைகள் என்பதையும், தனது முடிவுகள் மட்டுமே சரியானவை, முடிவாகத் தோன்றக் கூடியன என்பதை எவ்வாறு பிறர் புரிந்து கொள்ளாது இருக்க முடியும் என்பதையும் அவனால் புரிந்து கொள்ள முடிவதில்லை.

ஒரு திரிபுணர்ச்சியின் அகவய நிலை (Subjective aspect) நமக்கு எங்ஙனம் தோன்றுகிறது, அதாவது, அதைக் கொண்டிருக்கும் நோயாளிக்கு அத் திரிபுணர்ச்சி எவ்வாறு தென்படுகிறது என்ற கேள்வி முன்பு ஒரு பக்கத்தில் எழுந்தது. அதன் விடை சென்ற பத்தியின் கடைசி வரியில் அடங்கியுள்ளது. அது அப்பட்ட மான உண்மை என நோயாளிக்குத் தோன்றுகிறது. அதன் உண்மையைக் கிறுக் கர்கள் தவிர மற்றவரும் ஐயுறமாட்டார் எனவும், அத்தகைய தெளிவான உண் மையைத் தாக்குவது பயன் தராததும், மடமையானதும் அல்லது விஷமமானது மான செயல் மட்டுமே என்றுதான் நோயாளிக்குத் தோன்றும்.

பித்து நிலையிலுள்ள நோயாளியின் சிந்தனைத் திறன்கள் இயல்பான மனிதர் களது சிந்தனைத் திறன்களினின்று வேறுபடுவன அன்று. எனவே, பித்து நோயினன் அறிவியலுக்கு ஒவ்வாது நிற்பவன் என்று நாம் முடிவு செய்யலாகாது. அவனிடமுள்ள சில உளச்செயல்கள் அறிவியலுக்கு ஒவ்வாத மூலத்தினின்று தோன்றுகின்றன என்பது உண்மைதான். ஆனால், இயல்பான மக்களிடமுள்ள பெரும்பாலான எண்ணங்களும் நம்பிக்கைகளும் அதே வகையில்தானே தோன்றுகின்றன ? எனவே, இக் காரணத்தைக் கொண்டு மட்டும் பித்து பிடித்த வர் விநோதமான வகையில் அறிவியல் சாராதவர் எனக் கருதமுடியாது.

எனவே, நமக்கு இப்பொழுது மற்றொரு சிக்கல் எழுகிறது. அறிவியல் சாராத தன்மை பித்துநோயினது தலையாய அறிகுறி அல்ல என நாம் இந்த அதிகாரத்தில் கூற முற்பட்டிருப்பது சரியாயின், பின்னர் பித்தனை இயல்பான மனிதனிடமிருந்து வேறுபடுத்தும் அடிப்படையான தன்மைகள்தான் என்ன? இன்று நாம் பெற்றுள்ள அறிவைக் கொண்டு இக் கேள்விக்கு மிகப் பொருத்தமான விடையைத் தருவது அரிது என்பதை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால், இத் தோல்வி ஏற்படுவதற்கு, நமக்குத் தரப்பட்டுள்ள சிக்கல் திட்டவட்டமின்றியும் பெருமளவில் பொருளற்றதாகவும் இருப்பதுவே, ஓரளவேனும் காரணமாக அமைகிறது. இங்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பதங்களுக்கு (terms) திட்டவட்டமான முக்கியத்துவம் இல்லை. அத்தகைய பதங்களுக்கு அடிப்படையான தன்மைகள் என எவற்றையும் கூறுவதற்கில்லை. பித்துநோய் என்பது, காசம் (Tuberculosis), நச்சுக்காய்ச்சல் (Scarlet Fever) என்பனவற்றைப் போன்று திட்டவட்டமான ஒரு நோய் அன்று. மாறாக, சீரற்றனவான குழு நிகழ்ச்சிகளுள் ஒன்றினைக் குறிக்கவே இச் சொல் பயன்படுத்தப்படுகிறது. இந் நிகழ்ச்சிகளுக்கிடையே பொதுவானவையாக உள்ளன அதிகமில்லை. மேலும், அக் காலங்களில் பரவி நிற்கும் கருத்துகளுக்கு ஏற்ப, இந் நோயின் எல்லைகளும் காலத்திற்குக் காலம் மாறியுள்ளது. இடைக்காலத்தில் மதிப்போடும் பக்தியோடும் போற்றப்பட்ட பலர், இன்று எத்தகைய தயக்கமும் இன்றி உளமருத்துவமனைக்கு இட்டுச் செல்லப்படுவர் என நாம் முதலாம் அதிகாரத்தில் படித்தது வாசகர்களுக்கு நினைவிருக்கும்.

இவற்றையெல்லாம் காணுமிடத்து, தெளிவில்லாத சில வேறுபாடுகளை மட்டும் கூறுவது மட்டுமே நாம் இச் சிக்கலுக்குத் தரக்கூடிய ஒரே முடிவு போன்று தோன்றுகிறது. இந்த வேறுபாடுகளில் எவற்றையும் அடிப்படையானது என்பதற்கில்லை. ஆனால், அவற்றை மொத்தமாகக் காணும்போது, அவை பித்து நிலையையும் இயல்பான நிலையையும் சுமாரான அளவில் வேறுபடுத்தி அறிய உதவுகின்றன.

உள நிகழ்ச்சி எவ்வளவு தீவிரமாகக் காணப்படுகிறது என்பது ஒரு பாகுபாடாகும். பித்து நிலையில் காணப்படும் அறிகுறிகள் (1) உளச் செயல்களின் விளைவால் எழுவன என்றும், இவை இயல்பான உள்ளத்தில் இருப்பது போன்றே பித்தரிடமும் உள்ளன எனவும் நிரூபிக்க சென்ற அதிகாரங்களில் நாம் முயன்றுள்ளோம். ஆனால், பித்து நிலையில் இச் செயல்கள், இயல்பான நிலையில் உள்ளத்தைவிடத் தீவிரமான நிலையில் இயங்குகின்றன. இவை இயல்பானது எனக் கருதப்படும் வரம்பிற்கு மிஞ்சியனவாக இருக்கின்றன. திறமை குறைந்த தொழிலாளி தன்னுடைய கருவிகளில் குறை கண்டு, தன்னுடைய முதலாளி பாரபட்சத்தோடு தன்னை நடத்துகிறார் எனவும் தன் தோல்விக்குக் காரணம் கற்பிக்க முயலும்போதும் நாம் அவரை இயல்பானவர் என்றே கொள்கிறோம். ஆனால், பிறர் திட்டமிட்டுத் தன்னை ஒதுக்கி வருத்துகிறார்கள் எனப் போலீசாரிடம் முறையிடும் மனிதனோ, 'துன்புறு திரிபுணர்ச்சியால்' அல்லலுறுபவன் என

முடிவு செய்யப்பட்டு, மருத்துவ மனையில் அனுமதிக்கப்படுகிறன். மேற்கூறிய இரண்டு மனிதர்களிடமும் ஒரே வகையான உளநுட்பச் செயலே இயங்குகிறது. ஆனால், இரண்டாமவரிடம் அச் செயல் வரம்பு மீறிக் காணப்படுகிறது.

இயல்பான நிலைக்கும் பித்து நிலைக்கும் இடையே காணப்படும் இரண்டாவது வேறுபாடு இவ் விரு வகைகளிலும் காணப்படும் நடத்தை (conduct) வேறுபாடாகும். உளச்செயல் வரம்பு மீறி அமைவதே முதல் பாகுபாடு என்றோம். அதனோடு இது நெருங்கிய தொடர்புடையதாகும். மேலும் இயல்பான நிலையையும் பித்து நிலையையும் பாகுபடுத்துவனவற்றுள் இதுவே மிக முக்கியமானது எனவும் கூறலாம். பெரும்பாலும், பித்தரின் நடத்தை சமூக எதிர்ச்செயலாக (Anti-social act) அமைகிறது. இதனையே 'தனக்கும் பிறர்க்கும் ஆபத்தானவன்' எனச் சட்டம் வரையறுக்கிறது. இந்த நடத்தையைக் கொண்டே ஒரு நோயாளி உள மருத்துவ மனைக்கு இட்டுச் செல்லப்பட வேண்டாமா என்பது நிர்ணயிக்கப்படுகிறது. பெரும்பாலும் பித்தர்களிடம் காணப்படும் சமூக எதிர்ச்செயல் தன்மை நேர்நிலையானதாகவோ (Positive) அல்லது எதிர்மறையானதாகவோ (Negative) இருக்கலாம். இவ்வாறு நேர்நிலையில் அமைந்து, துன்புறு திரிபுணர்ச்சி கொண்டுள்ள நோயாளியின் நிலை பிறருக்கு அபாயம் விளைவிப்பதாக இருக்கலாம்; தன் உயிரைப் பறிக்க அவனைத் தூண்டுவதாகவும் இருக்கலாம். மாறாக, சமூக இயக்கத்தில் திறம்பட அவன் பங்குபெற முடியாவண்ணம் அவன் நடத்தையை அமைப்பதாகவும் சமூக எதிர்ச்செயல் அமையலாம். இத்தகைய எதிர்மறையான சமூக எதிர்ச்செயல் கொண்டமையும் பித்து பலவகைப்படும். இதனை நாம் 'மனவெழுச்சிக் கிறுக்கு' (Emotional dementia) என்றுள்ளோம்.

பிற பாகுபாடுகள், நோயாளியிடம் காணப்படும் அறிகுறிகளைத் தோற்றுவிப்பதற்குக் காரணங்களாக அமையும் உள நுட்பச் செயல்களின் தன்மையைச் சார்ந்து காணப்படுகின்றன. அன்றாட வாழ்வில் சாதாரணமாகக் காணப்படும் பல உளச்செயல்களும், பித்துநிலைக்கே உரியன எனக் கருதப்படும் சில அறிகுறிகளும் ஒடுக்குண்ட சிக்கல்கள் மறைமுகமாகத் தம்மை வெளியிடுவதால் தோன்றுகின்றன என நாம் ஏற்கெனவே கண்டோம். ஆயினும் இரண்டாவதாக உள்ள குழுவில் சிக்கலின் வெளியீடு தீவிரமான நிலையில் மறைமுகமாக இருப்பதுடன், அதன் காரணமாக மிகையாகத் திரிக்கப்பட்டும் இருக்கிறது. இதனோடு இயைபுடைய மற்றொரு பாகுபாடும் உண்டு. அதாவது பித்து நிலையில் தோற்றுவிக்கப்படும் காரணங்கற்பித்தல்கள், அன்றாட வாழ்வில் காணப்படும் காரணங்கற்பித்தல்களைவிட மிக வெளிப்படையாகத் தெரிவதுடன், அவை இருக்கக் கூடாதன என்பதும் தெரிவனவாக இருக்கின்றன.

பித்தனின் திரிபுணர்ச்சிகள், இயல்பான மக்கள் கொண்டிருக்கும் பல நம்பிக்கைகளையும் கருத்துகளையும் ஒத்திருக்கின்றன. ஏனெனில் இருவரது உளச்செயல்களுமே அறிவியல்சாராத மூலங்களினின்று பிறக்கின்றன, ஆயினும், பிற வழிகளில் பெருமளவில் தம்முள் வேறுபடுவதால் காணப்படும்

அறிகுறி இவ் விரு வகையினுள் எதைச் சேர்ந்தது என்பதை நாம் பெரும்பாலும் எளிதாகக் கண்டுகொள்ள முடிகிறது. இயல்பான மக்களது நம்பிக்கைகள், அவை உண்மையாக அல்லது தவருக இருப்பினும் பொதுவாக அவர்கள் வாழும் குழுவின் ஆதாரவைப் பெற்றதாகவும், மந்தை இயல்பூக்கம் இயங்குவதால் எழுவனவாகவும் அமையும். இதற்கு மாருக, பித்தனின் திரிபுணர்ச்சிகள் குழுவினரின் ஆமோதிப்பைப் பெருதிருப்பதுடன், மந்தை இயல்பூக்கத்திற்கு எதிராக இயங்கும் காரணங்களைச் சார்ந்து எழும் தனியாள் கோளாறுகளாகவும் இருக்கின்றன. இவற்றுள் இரண்டாவதாக நாம் கூறியுள்ள வேறுபாடு மிக முக்கியமானது. அதனைப் பன்னிரெண்டாம் அதிகாரத்தில் மேலும் ஆராய்வோம். மேலும், இயல்பான மக்களது நம்பிக்கைகள், பல வேளைகளில், உண்மைகளுக்கு முரணுக இருத்தலுமுண்டு. ஆனல், அனுபவத்தால் மிகத் தெளிவாக மறுக்கப்படும் நம்பிக்கை, நீண்டநாள் நிலைத்திருப்பதில்லை. உதாரணமாக, கையிலே காசு இல்லாத இயல்பான மனிதன், தான் கோடீசுவரன் என நம்புவது முடியாததாகும். ஆனல், பித்தனிடமோ, அனுபவத்திற்கு முற்றிலும் முரணுன இந் நிலை நீடித்துக் காணப்படுகிறது. மேலும், இயல்பான மனிதர்களிடம் தீவிரமான மனவெழுச்சிச் சார்பெண்ணங்களால் (emotional prejudices) தோற்றுவிக்கப்படும் நம்பிக்கைகள், பிறரது விவாதத்தால் போக்கிவிட முடியாதனபோன்று தோன்றினும், நடைமுறை அனுபவம் காட்டும் தீவிரமான முரண்பாடுகளால் நீக்கப்படாதன எனத் தோன்றினும், அவை முழுமையாக நீக்கக் கூடாதன அன்று. இந் நம்பிக்கைக்கு எதிரான சக்திகள், சிறிது சிறிதாக அதனை அரிக்க முற்படுகின்றன. காலப்போக்கில் இந் நம்பிக்கை உரு மாறுகிறது; ஒருக்கால் முற்றிலும் நீக்கப்படவும் கூடும். ஆனல், பித்தனின் திரிபுணர்ச்சிகளோ நிரந்தரமானவையாகவும், எதிர்செயல்களால் பாதிக்கப் படாதனவாகவும் காணப்படுகின்றன. எதிர்ப்புச் செயல்கள் இயங்குமாயின், அத் திரிபுணர்ச்சியைச் சுற்றிலும் அமையும் பாதுகாப்புச் செயல்கள் இன்னும் வலுப்படுத்தப்படுகின்றன. கடைசியில் கூறப்பட்ட இப் பாகுபாடுகள் அனைத்தும் உளச்சிதைவு (dissociation) என்னும் தலையாய காரணியைச் சார்ந்து நிற்கின்றன. பித்தனிடம், இயல்பான சிந்தனைக்கும், நடத்தைக்கும் முற்றிலும் முரணுன நிலையில் உளச்சிதைவு தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எனவே, அனுபவ உண்மைகள் சுட்டும் முரண்பாடுகளை ஒரு சிறிதும் அலட்சியப் படுத்தாமல் இயங்க, அவனது உளச்செயல்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன.

# 11. உருவெளித்தோற்றம்

செயலைத் தோற்றுவிப்பதே, ஒரு சிக்கலின் இயல்பான விளைவாகும். சிக்கலின் செயல்திறனுக அமையும் விருப்பங்களையும், போக்குகளையும் அடைவதையே தனது நோக்கமாகக் கொண்டமையும் ஒரு செயல்தொடர் இயக்கப்படுகிறது. தனது நோக்கங்களை இவ்வாறு அடைவதன் மூலம் சிக்கல் தன்னை முழுமையாக வெளியிட்டுக்கொள்கிறது. ஆயினும், மற்றொரு வகை வெளியீட்டின் மூலம் பல வேளைகளில் சிக்கல் நிறைவு பெறுவதுண்டு. ஆனல், இவ் வகையில் பெறும் நிறைவு குறைபாடுடையதாகவும், முழுமையற்றும் அமையும் உருவெளித் தோற்றத்தை (Phantasy) அமைத்துக்கொள்ளலே இவ் விரண்டாம் வகை வெளியீடாகும். பெரும்பாலானேர், இதனை பகற்கனவுகாணல் (day dreaming) என்பர். உருவெளித்தோற்றத்தில், நம் சிக்கலுக்கு உண்மை உலகில் நிறைவு தர நாம் முற்படுவதில்லை. மாருக, சிக்கல்கள் கற்பனையான வகையில் நிறைவு பெறும் வண்ணம், மகிழ்வான கற்பனைக் காட்சிகளை மனத்தில் எழுப்புவதன் மூலம் திருப்தி அடைகிறோம்.

செயலின் மூலமாக நேரடியாகவும் முழுமையாகவும் சிக்கல் தன்னை வெளியிடுவதற்கும், உருவெளித்தோற்றத்தின் மூலமாக அரைகுறையாக வெளியிடுவதற்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை 'தன்னுதிக்க சிக்கல்' (self-assertion complexes) எனப்படுவன தோற்றுவிக்கும் விளைவுகளில் தெளிவாகக் காணலாம். தான் சிறந்தவனுக விளங்கவேண்டும், தன் நண்பர்களின் இடையே சிறப்போடு விளங்கவேண்டும் என்னும் உளப் போக்குகளையே இங்கு தன்னுதிக்கச் சிக்கல்கள் எனக் குறிப்பிடுகிறோம். இவற்றைப் 'பேரவா' (ambition) என ஓரளவு கருதலாம். முன்னேறுவதற்காகத் தனி மனிதன் சலியாது உழைத்தலும், பிறரது பாராட்டையும் மதிப்பையும் பெறும் பதவியை அடைய முயலலும் இவற்றின் நேரடியான, இயல்பான விளைவுகளாகும். இவ்வாறு செயலின் மூலமாக இவை தம்மை வெளியிடுவதுடன், தமது சக்தியில் ஒரு பகுதியை உருவெளித்தோற்றங்களை உருவாக்குவதிலும் இவை செலவிடுகின்றன. இவ்வாறு தோற்றுவிக்கப்படும் உருவெளித்தோற்றங்களே, சாதாரணமாகக் காணப்படும் 'பகற்கனவுகள்' எனப்படும் நிகழ்ச்சிகளாகும். இவை எல்லா வயது நிலைகளிலும் காணப்படினும், குமரப்பருவத்திலேயே (Adolescense) இவை மிகையாகக் காணப்படுகின்றன. இப் பருவத்திலுள்ள இளைஞன் வியப்பூட்டும் வகையான கற்பனை நிகழ்ச்சிகளில் திளைக்கிருன். இவற்றில் அவன், உள்ளத்தைக்

கொள்ளைகொள்ளும் பெரும் சாகசச் செயல்களில் ஈடுபடுகிறன்; பிற மக்கள் கைதட்டி அவனைப் பாராட்டியவண்ணமாகவே இருக்கின்றனர். இவற்றில் எல்லாம் அவனே வீரனுகத் திகழ்கிறன் என்பதைக் கூறத் தேவையில்லை.

இத்தகைய கற்பனைகளைத் தோற்றுவிப்பதில் நாம் மேலே குறிப்பிட்டுள்ள சிக்கல்களுடன், பால் சிக்ககல்களும் (sex complexes) சேர்ந்துகொள்கின்றன. இவ் விரு குழுக்களினின்று தோன்றும் விளைவுகள் இணைந்து அமைகின்றன. அந்த வீரன் நாடும் அழகி கண்டு பாராட்டும் வகையிலேயே சாகசச்செயல்கள் பெரும்பாலும் (கற்பனையில்) நிகழ்த்தப்படுகின்றன.

இத்தகைய பகற்கனவுகளைப் பற்றி நாம் அதிகம் கேள்விப்படுவதில்லை. ஏனெனில், தமது இத்தகைய படைப்புகளைப்பற்றிக் கூற, அவற்றைப் படைப்பவர் கூசுகிறார். அதாவது, நாம் முன்னர் விவரித்துள்ள ஒடுக்குதல் செயலுக்கு இவை ஓரளவு உள்ளாக்கப்படுகின்றன. இக் கற்பனைப் படைப்புகள் அளவுமீறிப் போகுமாயின், தீங்கு பயக்கும். ஏனெனில் இச் சிக்கல்களிலுள்ள சக்தி, பயன் தரும் செயலாக மாற்றப்படாது, உருவெளித்தோற்றங்களை உண்டுபண்ணுவதில் செலவிடப்படுகிறது. இதனை மனத்தில் கொண்டே வில்லியம் ஜேம்ஸ் (William James) கீழ்வருமாறு கூறியுள்ளார்.

'வெளியே தன் வண்டிக்காரன் கடுங் குளிரில் நடுங்கிச் செத்துக்கொண் டிருக்கும்போது, தான் காணும் நாடகத்திலுள்ள கற்பனைப் பாத்திரங்களுக்காக கண்ணீர் சிந்தும் செல்வச் சீமாட்டியின் செயலையொத்த நிகழ்ச்சிகளை எங்கும், ஆனல் ஓரளவு குறைந்த செறிவுடன், காணலாம். உண்மையில் இசைக் கலைஞராக இல்லாதோரும், அதில் லயித்துவிடும் அளவில் இசைஞானம் இல்லாதவரும் இசையில் மிகையாக ஈடுபடும் பழக்கம் அவர்களது குணத்தைத் த்ளர்வடையச் செய்கின்றன போலும்! வழக்கமாகவே செயலைத் தோற்றுவிக் காதனவான மனவெழுச்சிகளையே ஒருவர் பெறுவதால், செயல் தோன்றாத மன நிலையே நீடிக்கிறது. ஒரு கச்சேரியின்போது எழும் உணர்ச்சிகளை, பின்னர் ஏதேனும் உண்மையான வகையில் வெளியிடுவதே இதைத் தவிர்க்கும் உபாய மாகும். இத்தகைய வெளியீடு, தன் அத்தையிடம் இன்முகத்துடன் பேசுதல் அல்லது குதிரை வண்டியில் தமது இடத்தை மற்றவருக்கு விட்டுத்தருதல் போன்ற மிகச் சிறிய செயலாகக்கூட இருக்கலாம். ஆனாலும் அது நடை பெறட்டும்.'

பகற்கனவில் ஈடுபடுதல் பெருங்கேடு பயக்கக் கூடியதாக இருத்தலை, பகற்கனவை ஒரு புகலாக (Refuge) — அதாவது உண்மையினின்று ஒளியும் புகலாக — பயன் படுத்தும்போது, இன்னமும் தெளிவாகத் தெரிகிறது. நாம் முன்னர் விவரித்த இளைஞன், ஒரு வேலையையும், மதிப்பையும் பெறும் முயற் சியில் தோல்விகளையும். எதிர்ப்புக்களையும் பெறுவானாயின், இவற்றை நீக்குவதற்கெனக் கடுமையாக முயற்சியாது, தனது சிக்கல்களை உருவெளித் தோற்றங்களை அமைத்து அவற்றின் மூலம் தம்மை வெளியிட அனுமதிக்கும்

படி அவன் தூண்டப்படக் கூடும். அவன், வாகை சூடி முன்னேறுவது போன்றும், அவனது எதிரிகள் தம் முழங்காலில் நின்று ஆற்ருமையுடன் அவனைக் காண்பது போன்றும் கற்பனையான இன்பம் பயக்கும் கனவுகளில் ஈடுபட்டு அவன் தன்னைத் தேற்றிக்கொள்ளக் கூடும். இத்தகைய இன்பமான உலகில் சிறிதுகாலம் வாழ்ந்தபின்னர், மீண்டும் உண்மையான நிலையோடு தன்னை ஈடுபத்திக் காண்பது அவனுக்கு அரிதாக இருக்கலாம். உளவியல் வாரியாக இதனைக் கூறுவதாக இருப்பின், தனது சிக்கல் உண்மையான சூழ்நிலைக்கு (environment) முரணுக இருப்பதையும், தன் சிக்கலுக்கும் உண்மைக்கும் இடையே போராட்டம் இருப்பதையும் அவன் காண்கிருன் எனலாம். இவ் விரு எதிர்ச்சக்திகளையும் இணைக்க இனியும் முற்படாது, வாழ்வோடு அவன் கொண்ட போராட்டத்தைக் கைவிட்டு, சிக்கல் கசப்பான உண்மைகளோடு மோதாமல் தன் விருப்பம்போல இயங்க அனுமதிக்கும் கற்பனை உலகில் தற்காலிகமாக இடம்பெற்று இந்த உலைவுக்கு முடிவுகாண அவன் முற்படுகிருன்.

மேற்கூறிய நிகழ்ச்சி மிகச் சாதாரணமானதாகும். நம்மிலும் பலர், உண்மை உலகில் நமது பேரவாக்கள் தோல்வியுறும்போது, இத்தகைய இன்பமான கற்பனைகளின்மூலம் பலவேளைகளில் நம்மைத் தேற்றிக் கொள்வதில்லையா ? ஆனல், இச் செயல் பித்து நிலைகளுக்கு எளிதில் நம்மை இட்டுச்செல்வ தாகும். நாம் இப்பொழுது ஆராய்ந்த உளச்செயல்கள் உளமருத்துவ மனை களில் நாம் காணும் பல அறிகுறிகளை விளக்க உதவும்,

இயல்பான மக்கள் பகற்கனவில் ஈடுபடும்போது இதை உணருவதுடன், உண்மை உலகையும், அறவே மறந்து விடுவதில்லை. அவரது நண்பர்கள் அவர் 'மறதி உள்ளவர்' எனவும், தம் எண்ணங்களிலேயே மூழ்கிக் கிடப்பவர் எனவும், அவரைச் சுற்றிலும் நடப்பனவற்றில் அவர் அக்கறை காட்டுவதில்லை எனவும் கூறலாம். ஆனல், தேவை எழுமாயின், அவர் வலிந்து உண்மையான சூழ்நிலையோடு தொடர்பு ஏற்படுத்திக்கொள்ளமுடியும். அவர் இவ்வாறு செய் வதற்கு அதிக முயற்சி எடுக்கவேண்டியதிருக்கலாம். அதாவது, நடைமுறை வாழ்வின் உண்மைகளினின்று ஓரளவு தொடர்பற்று இருக்கிருர். ஆனல், இச் சிதைவு ஓரளவானதாகவும், முழுமையற்றதாகவும் தற்காலிகமானதாகவும் உள்ளது. ஆயினும், இச் செயல் திட்டவட்டமாக நோய்நிலை (morbid) அளவில் வளர்ச்சி பெறுமாயின், இச் சிதைவு இன்னும் தீவிரமானதாகவும், நிரந்தரமான தாகவும் மாறும். இந் நிலையிலுள்ள மனிதரை நோயாளி எனலாம். இந் நிலையி லுள்ளவர் உண்மை உலகினின்று தம்மை முழுமையாக நீக்கி, தம் உளச்சக்தி அனைத்தையும் பகற்கனவுகளில் ஈடுபடுவதிலேயே செலவிடுகிருர். தானே எழுப்பிக்கொள்ளும் உலகில் அவர் நிரந்தரமாக வாழ்கிருர். இவ் வுலகில் அவரது சிக்கலைச் சார்ந்த எல்லா விருப்பங்களும் பேரவாக்களும் மிகச் சிறப்பான முறையில் நிறைவேறுகின்றன. இரு வகைப் பித்துநோய்களில் காணப்படும்

அறிகுறிகளைத் தோற்றுவிப்பதற்கு இவ் வுளநுட்பச்செயலே காரணமாகிறது. இவ் விரு வகைகளும் ஒன்றையொன்று நெருக்கமாக ஒத்துக் காணப்படினும், அவற்றை விவரிப்பதற்கென சுமாராக வேறுபடுத்தக் கூடியனவாகும்.

முதல் வகையினை, பகற்கனவுகளில் இயல்பாக ஈடுபடுவதின் மிகையாக்கப் பட்ட நிலை எனலாம். 'மனவெழுச்சிப் பித்து' என்ற தலைப்பின் கீழ், மூன்றும் அதிகாரத்தில் தரப்பட்ட வரலாறுகள் பல இவ் வகையினுள் அடங்கும். வெளிப் படையாக, வாழ்வில் எல்லா சுவைகளையும் இழந்தவராக நோயாளி காணப்படு கிறார்; அவர் எத்தகைய விருப்பங்களையும், பேரவாக்களையும் வெளியிடுவதில்லை; எத்தகைய வேலையில் ஈடுபடவும் முற்படுவதில்லை; நாள் தவறாது மருத்துவமனை அறை மூலையில் சோம்பி, சலனமற்று உட்கார்ந்துகொண்டிருக்கிறார். அவர் முகம் உணர்ச்சியற்றதாகவும், சூன்யமாகவும் காணப்படுகிறது. அவரைச் சுற்றி லும் நடைபெறுவன ஒன்றையும் கவனியாதவர்போல அவர் காணப்படுகிறார். அவரிடம் பேச முற்படின், ஒரே வார்த்தையைமட்டும் அவர் உதிர்க்கக்கூடும். அவரது உணர்வின்மை (apathy) யிலிருந்து அவரை எழுப்புவது இயலாததாகும். உணவு கொள்ளும்போது எத்தகைய உள அமைதியோடு இருப்பாரோ, அதே உள அமைதியுடன் தன் பெற்றோரின் மரணச் செய்தியையும் செவி மடுப்பார். தற் செயலாக அந் நோயாளியைக் காண்பவருக்கு, அவர் தமது உளச்செயல் அனைத் தையும் இழந்து நிற்பதுபோன்று தோன்றும். ஆனால், அவரது உள்ளத்தை நாம் இன்னும் நெருங்கி நோக்கி, அதன் உறையுண்ட பகுதிக்குக் கீழே உற்று நோக்குவோமாயின், அவரிடம் உளச்செயல்கள் இருப்பதைக் காண்போம். ஆனால், அவை வெளிப்படையாக வெளியீடுகள் தராவண்ணமும், நடைமுறைப் பயனுள்ள வகையில் இயங்க முடியாவண்ணமும், திருப்பிவிடப்பட்டிருத்தலைக் காண்போம். நாம் ஏற்கனவே விவரித்துள்ள வகையான இன்ப உருவெளித் தோற்றங்களைச் சமைப்பதில் அவரிடமுள்ள சக்தி அனைத்தும் செலவிடப் படுகிறது. நோயாளி முழுமையாக பகற்கனவுகளின் உலகில் புகுந்துகொள்ளு கிறார். அவரைப்பொறுத்தமட்டில், உண்மை வாழ்வின் உண்மைகள் அனைத் தும் ஒரு சிறிதும் பொருளற்றனவாகவும், சுவையற்றனவாகவும் காணப்படு கின்றன.

இரண்டாம் வகையில், நோயாளி தமது கற்பனை உலகில் இன்னும் சிறப்பாகவும், திறம்படவும் மூழ்கிக்கிடக்கிறார். அவரது உள்ளம் சமைத்த உரு வெளித்தோற்றம், உண்மையின் தன்மையைப் பெறுகிறது. தாமே வாகை சூடும் வீரன் என்றோ அல்லது கோடீசுவரன் என்றோ நம்ப முற்படுகிறார். முன்பு அவர் கற்பனையில் தோற்றுவித்துக்கொண்ட இன்பமான காட்சிகள் இப்போது வாழ்வு உண்மைகளாகிவிட்டன. இயல்பான மனிதனிடம் அவனது பகற்கனவுகளையும், அவனது துயிலில் தோன்றும் கனவுகளையும் பிரிக்கும் அந்தத் தடையைக் (barrier) கடந்து நோயாளி நிற்கிறார். சோம்பியிருந்த வேளையில் தோற்று விக்கப்பட்ட இன்பமான கற்பனை, இப்போது பித்தனின் திரிபுணர்ச்சியாக

(delusions) மாறிவிட்டது. சிதைவு இன்னும் ஒரு படி அதிகரித்துள்ளது. அவனது சிக்கல்களோ, அவனது அனுபவம் எங்கணும் காட்டும் தீவிரமான முரண்பாடுகளால் பாதிக்கப்படாமல், மிகச் சிறப்பான முறையில் தம்மை வெளியிட்டுக் கொள்கின்றன.

இந்த உளச்செயலை 'விருப்ப நிறைவேற்றம்' (wish fulfilment) என்பதுவு முண்டு. பித்திநிலையின் பெருவாரியான வெளியீடுகளுக்கு, உளவியல் விளக்கம் தருவதாக இது அமைகிறது. இதன் செயலுக்கு மிகச் சாதாரணமான ஒரு உதாரணமாக 'திருமணப் பிதற்றலைத்' (betrothal delirium) கூறலாம். காதலித்துக் கைவிடப்பட்ட பெண்களிடம், சில வேலைகளில் இதனைக் காணலாம். இதுவரையிலும் இவர்களது வாழ்வின் நடுநாயகமாகத் திகழ்ந்த விருப்பங்களும்' பேரவாக்களும், உண்மைக்கு முரண்பட்டனவாகத் திடீரென மாறிவிட்டன. இந்தப் போராட்டம் (conflict) தோற்றுவிக்கும் தீவிரமான மனவெழுச்சி அழுத் தத்தால், ஒரு பித்துநிலை தோன்றுகிறது. இதில் கனவில் நடப்பது போன்ற பிதற்றல் தோன்றுகிறது. இப் பிதற்றலில் முறிவுக்கு (frustrated) உள்ளான சிக் கல்கள், கற்பனையாக நிறைவுபெறுகின்றன. இப் பிதற்றலில், தம் காதலனோடு மீண்டும் தாம் சமரசம் செய்துகொண்டதாகவும், திருமணத்திற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும், மணமகன் வந்து இறங்குவதாகவும், திருமணம் நடை பெறுவதாகவும் நோயாளி நம்புகிறார். இந்தக் கனவுநிலை திருமணத்திற்குப் பின்னுள வாழ்வுபற்றிய காட்சிகளாக வரம்பின்றித் தொடரப்படுகிறது. ஒவ்வொரு காட்சியும் நோயாளியால் உண்மையானதுபோன்று நடிக்கப்படுகிறது.

இத்தகைய பிற வரலாறுகளில், அறிகுறிகள் இத்துணை சிறப்புற்று அமைவ தில்லை. ஆனால், அவற்றின் தோற்றக் காரணமும் அடிப்படையில் இதுபோன்றே அமைகிறது. நோய்நிலையான உளச்செயல்களின் அமைப்பு ஒன்று தோன்றி, உண்மை உலகில் அவை வெளியிடுவது தடைசெய்யப்பட்ட சிக்கல்கள் திரிபான முறையில் நிறைவுபெறுகின்றன. தம்மைக் கைவிட்ட காதலி மீண்டும் தம்மிடம் வந்து சேர்ந்துவிட்டதாகவோ அல்லது அவர் தமது மனைவியாகிவிட்டதாகவோ நோயாளி நம்புகிறார். இந்த நம்பிக்கைகள் உண்மைவாழ்வுக்கு வெளிப்படை யாகவே முரணாக இருப்பது, பொருத்தமான காரணங் கற்பித்தல்களைத் தோற்று வித்துக் கொள்வதன் மூலமும், நாம் ஏற்கெனவே ஆறும் அதிகாரத்தில் விளக்கி யுள்ள வகையான வழிநிலைத் திரிபுணர்ச்சிகளைத் (sccondary delusions) தோற்றுவித்துக் கொள்வதன் மூலமாகவும் மூடி மறைக்கப்படுகிறது.

நீண்ட நாட்களாக மருத்துவ மனைகளில் இருப்போரில் பெரும்பான்மையான வரிடம் காணப்படும் சிக்கல் வாய்ந்தனவும், விநோதமானவையுமான திரிபுணர்ச்சி அமைப்புகளைத் தோற்றுவிப்பதற்கும் இத்தகைய மற்றொரு உள நுட்பச்செயலே காரணமாக இருக்கிறது. இவ்வாறு எனது நோயாளிகளில் ஒரு பெண், தாம் எலிசபெத் ராணியின் மரபில் வழிவந்தவள் எனவும், இங்கிலாந்தின் ராணியாக

இருப்பதற்குத் தானே உண்மையில் உரிமையுடையவள் எனவும் கூறுகிறாள். தான் 'பிரிட்டனை ஆள்பவள்' என்ற பட்டம் உடையவள் எனவும், தனது ஆணையின் கீழ் பல போர்ப்படைகள் (armies) உள்ளன எனவும் நம்புவதுடன், தற்சமயம் ஐரோப்பிய நாடுகளின்மீது ஒன்றுகூடித்தாக்குதல் நடத்துமாறு தனது தானைத்தலைவர்களுக்கு(Generals) ஆணைகள் பிறப்பித்துக்கொண்டிருப்பதாகவும் கூறுகிறாள். ஆயினும் திரு குல்ஃ (Mr. Guelph) என்பவர் தனக்கு எதிராகச் சதியில் இறங்கியிருப்பதால் தான் இயங்குவது தடைச்செய்யப்பட்டிருப்பதாகவும், தன்னை ஓர் உள மருத்துவ மனையில் சிறைவைப்பதில் அவர் வெற்றிபெற்றுள்ளதாகவும், தனது பதவிக்குரிய சலுகைகள் அனைத்தையும் தன்னிடமிருந்து பிடுங்கிவிட அவர் முயற்சிசெய்வதாகவும் அவள் மனம்நொந்து முறையிடுகிறாள்.

பித்துநோய்வாய்ப்படுவதற்கு முன்னர், இப் பெண் கடுமையாக உழைக்கும் பணிப்பெண்ணாக இருந்தாள், இவள் வாழ்வில் தொல்லைகளே தொடர்ந்து வந்தன. அவள் வெளியிடும் பெருமிதத் (Grandiose) திரிபுணர்ச்சிகளில், இழிவான சிருங்கார இலக்கியத்தில் திளைக்கும் இனத்தவரின் பகற் கனவுகளைக் காண்கிறோம். இப் பகற்கனவுகள் சிதைவுச்செயலின்மூலமாக ஓர் உண்மையான நம்பிக்கையாக வளர்கின்றன. உண்மைக்கு முரணாக இருப்பினும்கூட, தாழிட்ட தனியறையில் அவை பாதுகாப்புடன் தம்வழியே இயங்கிக்கொண்டிருக்கின்றன. உண்மை அனுபவத்தின் கட்டுப்படுத்தும் செல்வாக்கினின்று இவ்வாறு பாதுகாக்கப்படும் தன்னுதிக்கச் சிக்கல்கள், தொடர்ந்தமையும் விரிவான பெருமித உருவெளித் தோற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம், சிறப்பான முறையில் தம்மை வெளியிட முயல்கின்றன. இதற்கு மாறாக, சதிச்செயல் பற்றிய துன்புறு எண்ணங்களை (Persecutory ideas), வழிநிலைக் திரிபுணர்ச்சிகள் என்றே கொள்ளல் வேண்டும். இத்தகைய வரலாறுகளில் காரணங்கற்பித்தல் என்னும் உளச் செயல்களாக அவை தோன்றுகின்றன.

மேற்கூறிய எல்லா வரலாறுகளிலும் போராட்டத்தின் முடிவாகவே, இறுதியில் பித்து நிலை தோன்றுகிறது. அவனது சூழ்நிலையில் தவிர்க்க முடியாத தடைகள் உள்ளதன் காரணமாகவோ அல்லது அவனது விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய திறனற்றவனவாக அவன் இருப்பதன் காரணமாகவோ, நோயாளி தனது பேரவாக்களை அடைய முடியாதவனாக இருக்கிறான். அதாவது அவனது சிக்கலுக்கும் உண்மை நிலைக்கும் (reality) இடையே ஒரு போராட்டம் காணப்படுகிறது. உருவெளித் தோற்றங்களை அமைப்பதன்மூலம் சிக்கல் தன்னை ஓரளவு வெளியிடுவது அனுமதிக்கப்படுவதால், இந்தப் போராட்டம் தவிர்க்கப்படுகிறது; உரிய அளவில் சிதைவைத் தோற்றுவிப்பதன் மூலம், உண்மை உலகிலுள்ள முரணான தன்மையும் மூடிமறைக்கப்படுகிறது. இத்தகைய நிலைகளில் உண்மைநிலை ஒடுக்கப்படுவதுடன், சிக்கலும் நனவின் மேல்தளத்தில் தடையின்றி இயங்குகிறது.

இத்தகைய நிலைகளில் மற்றொரு முறையின் மூலமும் போராட்டத்தைத் தவிர்க்கமுடியும். இம் முறையும் மேற்கூறிய முறையைப் போன்றே, தனது குணத்திலும் விளைவுகளிலும் நோய்நிலைகொண்டு காணப்படும். தனது சிக்கலை உண்மைஉலகில் நிறைவேற்றமுடியாது என நோயாளி காண்பானுயின், அச் சிக்கலைத் தனது வாழ்வினின்றே அகற்றிவிட நோயாளி முயற்சிக்கலாம். தான் அந்த விருப்பங்களைக் கொண்டிருந்ததை மறந்து, அவை தன்னிடம் இல்லை என்ற முறையில் அவன் நடந்துகொள்ளலாம். அதாவது, அவன் உண்மைநிலையோடு தொடர்புகொண்டிருக்கிறான்; ஆனால், தனது சிக்கலை ஒடுக்க முனைகிறான்.

பொறுக்கமுடியாத போராட்டத்தைத் தவிர்க்கப் பயன்படும் இவ் விரு முறைகளும், பல வேளைகளில் ஒரே நோயாளியிடம் காணப்படுவதுண்டு. அவ் விரு முறைகளும் கீழ்வரும் வரலாற்றில் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வரலாற்றை முதலில் யூங் விவரித்துள்ளார். 1

முப்பதிற்கும் நாற்பதிற்கும் இடையேயான வயதினரும் சீரிய நுண்ணறிவு கொண்டவரும், பழம்பொருளாராய்ச்சி (archaeology) வல்லுநருமான ஒருவர், தீவிரமான வீறுக்கிளர்ச்சி நிலையில் (maniacal excitement) மருத்துவ மனைக்குக் கொண்டுவரப்பட்டார். அவர் குட்டையாகவும், மெலிந்து நலிந்தவராகவும், அளவுமீறிய திக்குவாயராகவும் இருந்தார். இவர் சிறுவனாக இருந்தபோது வயதுக்கு மிஞ்சிய அறிவுத்திறனோடு காணப்பட்டார். பழம் பொருளாராய்ச்சியில் இளம்பருவத்திலேயே ஈடுபட்டு, 'பி' பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றிருந்தார். பட்டப்படிப்பு முடிந்ததும் அறிவியல் ஆராய்ச்சிகளில் முழுமூச்சுடன் ஈடுபட்டார். உலகினின்றும், தனது நண்பர்களினின்றும் சிறிது சிறிதாக நீங்கினார். இறுதியில் முற்றும்துறந்த ஞானி போல வாழ்வு நடத்தினார். சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு விடுமுறையின் போது, 'பி' பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தார். பெரும்பாலான விடுமுறையை அப் பட்டணத்தின் வெளிப்புறங்களில் உலவிவருவதில் செலவிட்டார். ஒருநாள் இவ்வாறு உலவி வந்த பின்னர் தமக்கு அமைதியற்ற நிலையும் தளர்ச்சி (nervous) உணர்வும் தோன்றுவதாகக் கூறினார். பின்னர் ஒரு கிளர்ச்சி (excitement) நிலை தோன்றியது. விரைவில் இந் நிலை தீவிர சன்னியாக மாறியது. இதனால் அவர் மருத்துவமனைக்கு எடுத்துவரப்பட்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர் பெரிதும் கலக்கமுற்றிருந்தார். தாம் இருக்கும் இடம் அவருக்குத் தெரியவில்லை. சிறு சிறு வாக்கியங்களில்மட்டுமே அவர் பேசினார். அதை ஒருவராலும் புரிந்துகொள்ள முடியவில்லை. பல வேளைகளில் தீவிரமான கிளர்ச்சி அவரிடம் காணப்பட்டது. அவ் வேளைகள் தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களை அவர் தாக்குவார், பல சிப்பந்திகள் ஒன்றாகக் கூடித்தான் அவரை அடக்கமுடியும். படிப்படியாக அவரிடமிருந்த சன்னி நீங்கியது. இத்தனை காலமும் ஏதோ ஒரு நீண்ட கனவில் ஈடுபட்டிருந்தவர்போன்று அவர் ஒரு நாள் திடீரென விழித்தெழுந்தார். விரைவில் தமது இயல்பான நிலையையும்

1 C. G, JUNG. DER Inhalt der Psychose (Vienna, 1908)

அடைந்தார். சிறிது காலத்திற்குப் பின்னர் மருத்துவமனையினின்று அனுப்பி வைக்கப்பட்டார். உடனடியாகவே அவர் தமது பழைய வாழ்வை மேற் கொண்டார். அடுத்த ஆண்டிலேயே முதல்தரமான பல நூல்களை வெளியிட்டார். அவரைத் தெரிந்தவர்கள் அவர் முன்னைவிட அதிகமாக மனித இனத்தை வெறுப்பவராகவும் (misanthrope) சன்னியாசியாகவும் மாறி விட்டிருப்பதாகக் கூறினர். மீண்டும் ஒரு முறை 'பி' பல்கலைக்கழகத்திற்கு வந்து, தொலைதூரம் உலவச் செல்வதிலேயே தம் நேரத்தைச் செலவிட்டார். ஒரு நாள் தெருவில் மயங்கி வீழ்ந்தார். இதனைத் தொடர்ந்து சன்னிநிலை ஏற்பட்டதால், இரண்டாம் முறையாக மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டார். ஆனால், இம் முறை காணப்பட்ட அறிகுறிகள், முதன் முறை காணப்பட்டனவற்றினின்று வேறுபட்டிருந்தன. அறையின் பல பகுதிகளில் நுணுக்கமான தேகாப்பியாசங்களில் அவர் ஈடுபட்டார். தன்னுடைய ஒப்பற்ற உடல்வலு பற்றியும், உடல் அழகு பற்றியும் உரையாற்றுவார். தாம் பெரிய சங்கீதமேதை என அறிவித்தார். தாமே இயற்றிய காதல்கவிதைகளைத் தொடர்ந்து பாடிக்கொண்டிருப்பார். சிறிது காலத்திற்குப்பின்னர் சன்னி தணிந்தது; அவரிடம் இப்பொழுது முன்னைவிட அதிகமாக உரையாட முடிந்தது. டாக்டர் யூங்கினால் இவரது நோயைப் பகுப்பாயவும் (analyse) முடிந்தது.

அப் பகுப்பாய்வில் வெளிவந்த உண்மைகளின் அடிப்படையில் நோயாளியின் வரலாற்றை நாம் இன்னும் நன்ருகப் புரிந்துகொள்வோம். நோயாளி 'பி' பல்கலைக் கழகத்தில் மாணவராக இருந்தபோது, அவர் ஒரு பெண்ணிடம் காதல்கொண்டார். அந் நகர்ப்புறங்களில் அவர்கள் தொலை தூரம் உலவச் செல்வது அவர்களது வழக்கமாகும். வெட்கமும் தாம் திக்குவாயர் என்ற அவமான உணர்வும் அப் பெண்ணிடம் தாம் கொண்ட காதலை எடுத்துக்கூற முடியாவண்ணம் தடைசெய்தன. மேலும் அவரது அப்போதைய பொருளாதார நிலையில் திருமணம் செய்துகொள்வதும் இயலாததாக இருந்தது. பட்டப்படிப்பு முடிந்ததும் அவர் 'பி' பட்டணத்திலிருந்து சென்றுவிட்டார். அதன்பின்னர் அப் பெண்ணையும் அவர் காணவில்லை. சில நாட்களுக்குப் பின்னர் அப் பெண் வேறு ஒருவரைத் திருமணம் செய்துகொண்டதாகக் கேள்வியுற்ருர். இந் நிலையில் அவர் சந்யாசிவாழ்வில் மூழ்கி, இந்த அனுபவங்களை மறக்க முற்பட்டார். அதாவது, உண்மைக்கு முரணுக இருந்ததால் வேதனை பயந்த அவரது சிக்கல் ஒடுக்கப்பட்டது. ஒரு சிக்கல் ஒடுக்கப்படுவதால், அது மறைந்துவிடுவதில்லைஎன நாம் அறிவோம். அது நனவினின்று மறைந்துவிடுகிறது ; உள்ளத்தின் சிந்தனைகளிலும் செயல்களிலும் அதன் இயல்பான முறையில் இயங்குவதும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆயினும் உள்ளத்தின் அடித்தளத்தில் அது தொடர்ந்துநிற்கிறது. விரைவில் ஏதேனும் ஒரு மறைமுகமான முறையின்மூலம் தன்னை வெளியிடுகிறது. இம் மறைமுக முறைகளை முன்னைய அதிகாரங்களில் நாம் கண்டுள்ளோம். நாம் இப்பொழுது விவரிக்கும் நோய் வரலாற்றிலும் இதுவே நிகழ்ந்தது.

சில ஆண்டுகள் கடுமையான உழைப்பிற்குப் பின்னர் நமது நோயாளி, 'பி' பட்டணம் திரும்பினார் என்றும், திருப்பிய ஒரு சில நாட்களுள் சன்னி முதன் முறை தோன்றியது எனவும் நாம் கண்டோம். இச் சன்னியின் தோற்றத்தை விளக்குவது எளிது. ஒடுக்கப்பட்டிருந்த சிக்கல் மேல்தளத்தில் குமுறி எழுந்ததுவே இதன் காரணமாகும். நோய்தாக்குதலின்போது, நோயாளியின் உள்ளத்தில் கீழ் வருவன இடம்பெற்றிருந்தன. ஒரு சீர்கேடான பெரும் கனவில் நோயாளி ஈடுபட்டிருந்தார். அக் கனவில் பெரும்போர்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. அவர் போர்க்களத்தின் மையத்தினின்று போரிட்ட வண்ணமிருந்தார். பல தீரச் செயல்களைப் புரிந்தவண்ணமாகவும், சேனைகளை மிகத் திறமையுடன் நடத்தியவண்ணமாகவும் அவர் இருந்தார். அவரது காதலி அவரை நோக்கியவண்ணமாக இருந்தாள். போரில் வெற்றி பெற்றால் அவள் பரிசாகக் கிடைப்பாள் என்பது தெரிந்தது. இக் காட்சியில் அவர் ஈடுபட்டிருந்தபோதே, அவர் தம்மைச் சுற்றிலும் இருந்தவர்களைக் கண்மூடித் தனமாகத் தாக்கியதுடன், தம்மை அடக்கமுயன்ற சிப்பந்திகளோடும் வெறி கொண்டு போரிட்டார். இறுதியில் வெற்றி கிட்டியது — அவரது காதலி அவரை நாடிவந்தாள். அவர் கனவினின்று விடுபட்டு, மீண்டும் உண்மை நிலைக்கும், சலுப்பூட்டும் அவரது வாழ்க்கை நியதிகளுக்கும் திரும்பி வந்தார். இந் நிலையில் அவரது சிக்கல் மீண்டும் ஒடுக்கப்பட்டது.

குமரப் பருவத்தினனின் பகற்கனவுகளை நாம் ஏற்கெனவே விவரித்துள்ளோம். சன்னியில் அடங்குவன குமரப் பருவத்தினனின் சாதாரணமான பகற் கனவுகளோடு மிகவும் ஒத்தமைவதைக் காணலாம். இவ் விரண்டிற்கும் உள்ள வேறுபாடு சிதைவின் தரத்தில் மட்டுமே காணப்படுகிறது. சன்னி நிலையில், சிக்கல் தன்னைத் திட்டவட்டமான இல் பொருட்காட்சி வடிவில் (hallucinatory form) வெளியிட அனுமதிக்கப்படுவதுடன், ஆளுமையின் (Personality) கட்டுப்பாட்டினின்றும் முற்றிலும் நீங்கி நிற்கிறது.

இரண்டாம் முறை ஏற்பட்ட நோய்தாக்குதலும் முதன் முறை ஏற்பட்டது போன்றே, 'பி' பட்டணத்திற்குச் சென்றபின்னரே தோன்றியது. ஆனால், இரண்டாம் தாக்குதலின்போது, நிகழ்ச்சிகளின் போக்கு ஓரளவு வேறுபட்டிருக்கிறது. இந் நிலையில் தம்மை வெளியிட்ட சிக்கல்கள், பால் சிக்கலோடு நெருங்கிய தொடர்புகொண்டிருந்தது என்பது தெளிவு எனினும், அவரது உடற் குறைபாடுகளின் காரணமாக எழுந்தன என்றே கூறுதல் வேண்டும். அவர் குன்றிய வளர்ச்சியுடையவராகவும், கவர்ச்சியற்றவராகவும் இருந்தார் என்பதையும், அவரது தசைநார்கள் நலிந்து மெலிந்திருந்தன என்பதையும், அவர் அளவுமீறி திக்கினார் என்பதையும் வாசகர்கள் நினைவுகூருவீர்கள். அவரிடம் இசைத்திறன் ஓரளவுகூட இல்லை. தடித்த குரலுடைய இம் மனிதரால், ஒரு வரியைக்கூட மெட்டோடு இசைக்கமுடியாது. இவையெல்லாம்கூடி, அவரிடம் உடல் பற்றிய அவமானம் என்னும் சிக்கலாக உருவெடுத்திருந்தது.

அப் பெண்ணை அவர் காதலித்துக்கொண்டிருந்தபோது, இச் சிக்கல் இயங்கியதைக் கண்டோம். இந்தக் குறைபாடுகள் அனைத்தையும் நீக்கிவிட முடியும் என்னும் தீவிரமான இரகசிய விருப்பமும் இதனோடு காணப்பட்டது என்பது உறுதி. இரண்டாம் தாக்குதலின்போது மேல் தளத்தில் தோன்றிய சிக்கல் இதுவே; தனது விருப்பங்கள் அனைத்தையும் கற்பனையாக நிறைவேற்றிக் கொண்டு இது தோன்றியது. நோய் தாக்கிய நிலையில் மிதமிஞ்சிய வலுவுடைய வராகவும், முதல்தரமான உடற்பயிற்சி நிபுணராகவும் கண்டார். எனவே அறை எங்கணும் நுணுக்கமான செப்பிடுவித்தைகள் புரிந்தார். மேலும் உலகின் தலைசிறந்த இசைக்கலைஞராகவும், ஒப்புயர்வற்ற மேடைப் பேச்சாளராகவும் தன்னைக் கண்டார். உண்மையில் அவர் கொண்டிருந்த குறைபாடுகள் ஒவ்வொன்றிற்கும் நேர் எதிரான சிறப்புக் குணத்தை இப்பொழுது அவர் பெற்றிருந்தார்.

இந் நோய் வரலாற்றின் உளவியல் விளக்கத்தை இனி தொடருவோம். அவரது சிக்கல் உண்மை நிலைக்கு முரணாக இருக்கிறது. அதனால் முரணான இவ் விரண்டையும் இணங்கவைக்கும் முயற்சியை நோயாளி கைவிடுகிறார். இடையிடையே அவர் உண்மை நிலையைத் துறந்துவிட்டு சிக்கலினுள் புகுந்து கொள்கிறார். அதாவது, உண்மை நிலையினின்று தப்பி நோயில் அடைக்கலம் புகுகிறார் எனலாம். சன்னி தோன்றுவதற்கு இடையேயுள்ள காலங்களில், போராட்டத்தைச் சமாளிப்பதற்கு வழியை அவர் பின்பற்றுகிறார். இந் நிலையில் வெளியுலகோடு தாம் கொண்டிருக்கும் தொடர்பை நிலைநிறுத்திக்கொள்கிறார். அதே வேளையில் சிக்கலை ஒடுக்குவதன்மூலம் போராட்டத்தைத் தவிர்க்கிறார். ஆனால், இதைச் செய்வதனால், மனவெழுச்சி வாழ்வின் ஒரு முழுப் பகுதியை நாசமாக்க வேண்டியதிருக்கிறது. இதன் காரணமாகவே அவர் மனித இனத்தை வெறுப்பவராகவும், சன்னியாசியாகவும் மாறுகிறார்.

பல தீவிரமான நோய்வரலாறுகளில், நடு நடுவே முரணான சிக்கல் திறம் பட ஒடுக்கப்படுவதால் எழும் சித்தநிலைப் பருவங்கள் (Periods of Sanity) என்பன இருப்பதில்லை. இத்தகைய வரலாறு ஒன்றினை இவ் வதிகாரத்தின் முற்பகுதியில் கண்டோம். இந் நிலையில் நோயாளி முற்றிலுமாகச் சிக்கலினுள் புகுந்துகொண்டு, தாமாகவே சமைத்துள்ள கற்பனை உலகில் நிரந்தரமாக வாழ்கிறார். அங்குச் சிக்கலோடு தொடர்புடைய எல்லா விருப்பங்களும் பேரவாக்களும் மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றப்படுகின்றன. இத்தகைய நிலைகளில், பெரும்பாலான வேலைகளில் சித்தல் ஒரு வகை மாற்றத்திற்கு உள்ளாவதுண்டு, இம் மாற்றத்தைச் 'சீர்கேடடைதல்' (degradation) எனலாம். தன்னை வெளிப்படுத்த சிக்கல் பயன்படுத்தும் சொற்றொடர் இன்னும் அதிக மாகத் திரிந்து, படிவார்ப்பானதாகவும் (Stereotype) மாறுகிறது. பெரும் பாலான வேளைகளில் இது பொருளற்ற வார்த்தைகளின் தாறுமாறான இணைப் பாகச் சீர்கெடும். மேலும் சிக்கலால் தோற்றுவிக்கப்படும் உளச் செயல்களும் மிகக் குறைவான அளவிற்குப் பொருந்துவனவாக அமையும். இறுதியான

நிலையில் நோயாளியின் முழு உளவாழ்வும், சீரழிந்த பழைய சிக்கலின் பிரதி நிதியாக அமையும் ஏதேனும் ஒரு படிவார்ப்பான செயலைச் செய்துகொண்டே இருப்பதாக மாறக்கூடும். கற்பனையான ஒரு செருப்பைத் தைப்பதிலேயே தன் வாழ்நாளெல்லாம் செலவிட்டுக்கொண்டிருந்தாள் என எட்டாம் அதிகாரத்தின் இறுதியில் விவரித்துள்ள நோயாளி, இந்த இறுதிநிலைக்கு மிகச் சிறப்பான உதாரணமாக அமைகிறாள்.

பேச்சும், உள்ளத்தில் உள்ளனவும் சீர்கேடடைவது ஓரளவு திட்டவட்டமான விதிகளை ஒட்டி அமைகிறது. இவ் விதிகளை யூங்கும், அவரைப் பின்பற்றுபவர்களும் வருந்தி உழைத்து ஆராய்ந்திருக்கிறார்கள். இச் சிறுநூலில் அவற்றை மேலும் விவரிக்க இயலாது. ஆயினும், இவ் விதிகளின் துணைகொண்டு, மிகக் குளறுபடியானதாகவும் பொருளற்றதாகத் தெளிவாகத்தெரியும் பேச்சிலும் கூடத் திட்டவட்டமான முக்கியத்துவம் உண்டு எனவும், அவற்றை உளவியல் பகுப்பாய்வின்மூலம் விளக்கமுடியும் எனவும் காட்டமுடியும்.

மற்றொரு உளச்செயலையும் இந்த அதிகாரத்தில் காண்பது பயனுடையதாக இருக்கும். ஏனெனில் அதுவும் நாம் இதுவரையிலும் ஆராய்ந்த உருவெளித் தோற்றங்களை அமைத்தல் என்பதோடு மிக நெருங்கிய தொடர்பு உடையதாக, இருக்கிறது. உளவியலில் 'ஒன்றுதல், (identification) எனப்படும் இச் செயல் பெரு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதுடன், அதனுடைய எளிய நிலைகளில் இயல்பான உள வாழ்விலும் அடிக்கடி காணப்படுகிறது. (உண்மையாகவோ அல்லது கற்பனையாகவோ உள்ள மற்றொரு மனிதரோடு நம்மை ஒன்றச்செய்து, அதன்மூலம் அவரது இன்பதுன்பங்களையும் விருப்பங்களையும் ஏதோ அவை நம்முடையன என எண்ணி அனுபவிப்பதே ஒன்றுதலாகும்.) ஒன்றுதல் நிலைநிற்கும் வரையிலும் அம் மனிதர் நம்முடைய ஆளுமையில் ஒரு பகுதி எனவும், நாம் நம் வாழ்வில் ஒரு பகுதியை அவரிடம் வாழ்வதாகவும் உணர்கிறோம். இயல்பினரது உளவியலிலும், பிறழ்வு உளவியலிலும், ஒன்றுதல் அடிக்கடி காணக்கிடைக்கிறது. பொதுவாக, 'ஒத்துணர்வு' (Sympathy) என்ற தலைப்பின்கீழ் அடக்கப்பெறும் பல நிகழ்ச்சிகள் ஒன்றுதலின்கீழ் அமையும். சில எடுத்துக்காட்டு உதாரணங்களை ஆராய்வதன்மூலம் இக் கருத்தின் பொருளை இன்னமும் தெளிவாக்கலாம். இரண்டாம் தர காதல் நவீனத்தைப் படிப்பவர், இதற்குச் சிறந்த ஓர் உதாரணமாக அமைகிறார். இந்த வாசகர் அந்த நவீனத்தின் தலைவனோடு ஒன்றுகிறார் என்பதும், அவனோடுகூடப் பல ஆச்சரியமான தீரச் செயல்களைப் புரிகிறார் என்பதும், அந் நவீனத்தின் தலைவியோடு காதல் கொள்கிறார் என்பதும், அதன்பின்னர் பல்லாண்டுகள் அவளோடு இன்பமாக வாழ்கிறார் என்பதுவுமே அந்தகைய நவீனம் படிப்பதற்குச் சுவையாக அமைவதற்குரிய விளக்கமாகும். பகற்கனவிலுள்ள சுவையை அனுபவிக்க அந்த நவீனம் (Novel) உதவுகிறது என்பதுடன், அதிலுள்ள கற்பனைகளை வாசகரே உருவாக்கவேண்டும் என்ற தேவையும் இருப்பதில்லை.

ஒரு சோக நாடகத்தைக் காண்பவர்கள் இதைவிடச் சிறந்த உதாரணமாக அமைகின்றனர். இத்தகைய நாடகம் நடந்துகொண்டிருக்கையில், அதனைக் காணும் மக்களைப் பார்த்திருப்பவர்கள், அவர்கள் மேடையில் நடக்கும் நிகழ்ச்சிகளோடு ஒன்றியிருத்தலைக் கண்டிருப்பீர்கள். மேலும் அவர்கள் எப்பொழுதும் கதாநாயகன் அல்லது நாயகியின் பாத்திரத்தில் மட்டுமே தங்களைக் காண்கிறார்கள். நாடகம் உண்மையானதுபோன்ற பொய்த்தோற்றம், நவீனத்தில் உள்ளதைவிட இன்னும் திறம்படப் பகற்கனவில் ஈடுபட உதவுகிறது. நாடகங்கள் மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கொள்ளைகொண்டிருப்பதற்கு இதுவே காரணமாகும். நாடகங்கள் பகற்கனவில் ஈடுபடுவதற்கு வாய்ப்புத் தர வேண்டும் என அவற்றைக் காண்பவர்கள் விரும்புவதன் காரணமாகவே, நாடகாசிரியர்கள் பல சீமான்களைப் பாத்திரங்களாகப் புகுத்துவதுடன், காட்சிகளையும் இன்பலோகக் காட்சிகளாக அமைக்க முற்படுகின்றனர்.

கலைத் துறையில் இன்னும் முன்னேறி முதல்தரமான நாடகம் அல்லது நவீனம் என்பனவற்றை ஆராய்வோமாயின், அங்கும் ஒன்றுதல் என்னும் உளநுட்பச் செயல் இயங்குவதைக் காண்போம். ஆனால், முன்னையதில் உள்ளது போன்று, எளிய வகையினதாக இருப்பதில்லை. இங்கு வாசகர் கதாநாயகனோடு மட்டும் ஒன்றுதல் இல்லை. ஒரே வேளையில் எல்லா பாத்திரங்களோடும் அவர் ஒன்றுகிறார். தன் உள்ளத்தில் இடம் பெற்றுள்ள சிக்கல்களும் அல்லது அரைகுறையான உளப்போக்குகளும் (tendencies) அங்கு சித்திரிக்கப்படுவதை அவர் காண்கிறார். நவீனத்தில் நடைபெறும் செயல்களில் தனது சொந்த வாழ்வில் தான் அனுபவிக்கும் போராட்டங்களையும் துன்பங்களையும் காண்கிறார். முதல் தரமான நவீனங்களைப்பற்றி நாம் கூறியுள்ளன, முதல் தரமான நாடகங்களுக்கும் பொருந்தும். ஆனால், இவற்றைக் காண்பவர்கள் அத்தகைய ஒன்றுதலைத் தோற்றுவித்துக்கொள்ளவேண்டுமெனின் அவர்களது உளச் செயல்கள் அதற்குரிய அளவில் நுணுக்கமுடையனவாக இருத்தல் வேண்டும். இதன் காரணமாகவே இத்தகைய படைப்புகள் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை மட்டுமே கவர்கின்றன. இதினின்று நவீனங்களும் நாடகங்களும் தோற்றுவிக்கும் உளச் செயல்கள் அனைத்தையும் இந்த ஒரு நுட்பச் செயலாக மட்டும் குறைக்க முற்படுகிறோம் என்று தவறாகப் புரிந்துகொள்ளவேண்டாம். மாறாக, இத்தகைய கலைப் படைப்புகள் விரும்பப்படுவதற்குரிய பல காரணிகளில், இதுவும் ஒன்றாகும்.

ஒன்றுதல் என்னும் உளநுட்பச் செயலினுள் பல முரணான செயல்கள் அமைகின்றன. இச் செயல்களின் உண்மையான மூலம் (origin) என்ன? என்பதை அவற்றைக் கொண்டிருக்கும் மனிதரே சிறிதும் தெரிந்திருப்பதில்லை. என்னுடைய நோயாளிகளில் ஒருவர், தமது மனைவிமீது தமக்குப் பழக்கமான

*

ஒருவர் தாக்கீது செய்திருந்த வழக்கு ஒன்றில், வெளிப்படையான காரணம் எதுவுமின்றி அளவுமீறிய ஆர்வம் காட்டினர். இதற்கென தமது தொழிலைப் புறக்கணித்தார். தனக்குத் தெரிந்திருந்த அம் மனிதருக்கு நிறையப் பண உதவி செய்தார். அவருக்கு வெற்றிகிடைக்க பல வழிகளில் அம் மனிதருக்கு உதவி னர். அவ்வாறு ஏன் அவர் நடந்துகொள்கிருர் என நான் வினவியபோது, அம் மனிதரிடம் தமக்குள்ள நட்பின் காரணமாகவும், தூய நீதிமேல் தமக்குள்ள பாசத்திலுமே தாம் அவ்வாறு நடந்துகொள்வதாக அவர் உறுதி கூறினர். இவரது கூற்றில், முன்னர் நாம் காரணங்கற்பித்தல் என விவரித்த செயல் இடம் பெற்றிருப்பதை வாசகர்கள் எளிதில் கண்டுகொள்வீர்கள் என்பது திண்ணம். இவரது கூற்றை ஆராய்ந்தபோது, இந் நோயாளிக்கு அம் மனிதரை ஒருசில வாரங் களாக மட்டுமே தெரியும் என்பதும், நீதியும் மிக வெளிப்படையாகவே அவரது மனைவி பக்கமே இருந்தது என்பதும் காணப்பட்டது. நோயாளி தமது மனைவி யிடம் ஒரு கடுமையான சச்சரவில் ஈடுபட்டிருந்ததே அவரது நடத்தைக்குரிய உண்மையான காரணம் என்பது உளவியல் பகுப்பாய்வில் தெரியவந்தது. எனவே, தன்னையொத்த நிலையிலிருந்த அந்த மனிதரிடம், எனது நோயாளி தம்மை அறியா மலேயே ஒன்றியிருந்தார். வெளிநாட்டவர் இருவர் துன்புறுத்தப்பட்டதைக் கண்டு உளஉலைவு பெற்ற நோயாளியின் உதாரணத்தை ஐந்தாம் அதிகாரத் தில் கண்டோம். அவரிடமும் இதே உளநுட்பச்செயல் இயங்குவதைக் காணலாம்.

முதல் நபர் நாடும் ஏதேனும் குணம் அல்லது சூழ்நிலையை இரண்டாம் நபர் பெற்றிருப்பதே, பெரும்பாலான வேளைகளில் முதல் நபரிடம் ஒன்றுதலைத் தோன்றுவிக்கும் தூண்டலாக இருப்பதைக் காணலாம். 'அப்பா' வாக நடிக்கும் குழந்தையின் விளையாட்டில் இதனை எளிய வடிவில் காணலாம். அப்பாவாகி விடுவதன் மூலம் அக் குழந்தை, வளர்வதால் உண்டாகும் மாய இன்பத்தைப் பெற்றுவிடுகிறது. இதே செயலில் இன்னும் நுணுக்கமான ஒருவகை, ஹிஸ் டீரியா (**Hysteria**) சார்ந்த பல அறிகுறிகளைத் தோற்றுவிப்பதில் தலையாய பங்கு வகிக்கிறது. இத்தகையவரிடம் காணப்படும் எண்ணிறந்த நோய்கள் பெரும் பாலும் மற்றொரு மனிதருடன் நனவிலி (**unconscious**) நிலையில் ஒன்றுவதால் தோன்றுவனவாகும். அந்த இரண்டாம் மனிதர் ஏதேனும் உடல் நோயால் வருந்துவதுடன், நோயாளி மிகவும் தீவிரமாக விரும்பும் ஏதேனும் பண்பையும் பெற்றிருப்பர். உதாரணமாக, என்னுடைய ஹிஸ்டிரியா நோயாளி ஒருவர், அடிக்கடி தீவிரமான மயக்கம் (**Vertigo**) வருவதால் வருந்தினர். இவரைப் பகுப்பாய்ந்த போது அவரிடம் காணப்பட்ட அறிகுறிகள் அனைத்தும் அவர் தம்மைத் தமது தந்தையோடு ஒன்றியதால் எழுந்தன என்பது தெரியவந்தது. இவரது தந்தை யிடம் கொடிய செவிநோய் இருந்தது. செவிநோய் மயக்கநோயோடு பெரும் பாலும் இணைந்து காணப்படுவதுண்டு.

இந்த அதிகாரத்தின் முன்பகுதியில் விளக்கப்பட்டுள்ள பகற்கனவில் ஈடுபடும் செயல்களோடு, ஒன்றுதல் நெருங்கிய தொடர்புடையது. மக்களால் விரும்பப்படும் வீரன் தெருவில் பவனி வருவதைப் பகற்கனவு காண்பவன் காணும்போது, அந்த வீரனில் தன்னைக் கண்டு, அவ் வீரனோடு தானும் ஆரவாரிக்கும் கூட்டத்தினரிடையே நடந்துசெல்கிறான். சாதாரணமாகக் காணக்கிடைப்பதும் எளியதுமான இந் நிகழ்ச்சியிலிருந்து, இதனையொத்த பல நிகழ்ச்சிகள் எழுகின்றன. இறுதியில் இவர்கள் தீவிரமான உளநோயாளிகள் வைக்கப்பட்டிருக்கும் மருத்துவ மனைப்பகுதிகளில் இடம் பெறுகின்றனர். இப் பகுதிகளில் மிகப் புகழ்வாய்ந்த பேரரசர்கள், தானைத்தலைவர், இன்ன பிற பெருமக்களின் பிரதிநிதிகள் என்பவரின் கூட்டத்தைக் காணலாம்.

# 12. போராட்டத்தின் முக்கியத்துவம்

இந் நூலில் நாம் ஆராய்ந்துள்ள களத்தை (field) இப்பொழுது மீள்நோக்கி, அக் களம் பற்றிய விவரங்களைக் காண்பதில் பயனுடையனவாக இருந்த சாதனங்களையும் (implements) கண்டுகொள்ள முற்படுவோமாயின், ஒவ்வொரு நிலையிலும் அத்தகைய இரு சாதனங்களை நாம் பயன்படுத்தியிருப்பதைக் கண்டு கொள்வோம். அவை உளச்சிதைவு, போராட்டம் என்னும் இரு கருத்துகளாகும். அவை மிகப் பயனுடையனவாக இருப்பதால், உள வாழ்வில் அவை வகிக்கும் இடம் பற்றி இன்னும் விவரமும் பொதுவான கண்ணோட்டமும் பெறுதல் நலம் பயக்கும்.

இல்பொருட் காட்சிகள், திரிபுணர்ச்சிகள் என்பனவற்றிலிருந்து, சென்ற அதிகாரத்தில் நாம் விவரித்துள்ள நுணுக்கம் மிகுந்த உருவெளித்தோற்ற அமைப்புகள் என்னும் எண்ணிறந்த வகையான பிறழ்வு நிகழ்ச்சிகளையும் உளச்சிதை விற்கு உதாரணங்கள் என்றே கொள்ளல் வேண்டும். இயல்பான ஆளுமையில் இலட்சியமானதாக அமையும் சீரான தன்மையை உள்ளம் இழந்திருப்பதுடன், ஓரளவு தனியாகவே இயங்கும் பகுதிகளாக உள்ளம் சீர்குலைந்திருக்கிறது. இப் பகுதிகள் முழு உள்ளத்தின் நலன் பற்றிய கவலையின்றி, ஒவ்வொன்றும் தத்தம் பாதையிலும் வளர்ச்சியிலும் இயங்குகின்றன.

மேலும் இச் சீர்குலைவு ஏற்படும்போதெல்லாம் ஒரு போராட்டம் கண்டிப் பாகக் காணப்படுகிறது என்றும் கண்டோம். தம்முள் முரணாக அமைவன உள்ளத்தில் இடம் பெறுவதனாலேயே, உள்ளத்தின் சீரான தன்மை மறைகிறது. தத்தமக்குள் எதிராக அமையும் உளப்பகுதிகள் போரிடுவதால் கண்டிப்பாகத் தோன்றக்கூடிய குழுறலையும் அழுத்தத்தையும் தவிர்க்கும் ஒரு முறையாக உளச்சிதைவும் தோன்றிவிடுகிறது. எனவே, உடலியல் அடிப்படையில் உளச் சிதைவு என்பது போராட்டத்தின் அழுத்தத்திலின்று தப்பும் ஓர் உபாயம் என்றும் வேறு வழிகளால் சமாளிக்கமுடியாத போராட்டங்களை இயற்கை சமாளிக்கும் முறை என்றுமே கொள்ளல் வேண்டும். எனவே, பிறழ்வான உள நிகழ்ச்சி களுக்குரிய காரணங்களை நாம் ஆராய முற்படுவோமாயின், இச் செயலில் உளச் சிதைவு என்பது முதல் படி மட்டுமே என்பதையும், நாம் அதைத் தாண்டி அதற் குப் பின்னர் எப்பொழுதும் இருக்கும் போராட்டத்தையும் காணுதல் அவசியம் என்பதையும் கண்டுகொள்வோம்.

எனவே, உளக்கோளாறுகளைத் தோற்றுவிப்பதில் போராட்டம் என்பது ஓர் அடிப்படையான காரணி எனத் தெரிகிறது. ஆகவே போராட்டத்தின் முக்கியத்துவத்தினைத் திட்டவட்டமாக நிர்ணயிப்பது உளவியலுக்கும், அறிவியலுக்கும் மிக முக்கியமான பிரச்சினையாகும். இன்று போராட்டத்தின் முழு முக்கியத்துவம் சரிவர அறியப்படவில்லை. இதன் காரணமாக அப் பொருள் பற்றிய எந்தப் பொது வான விவாதமும் பெருமளவில் நீண்ட நினைவுகளாகவே (Speculative) அமையும். ஆயினும், நாம் இதுவரையிலும் இதுபற்றிப் பெற்றுள்ள அறிவைக்கொண்டு பெறக்கூடிய முடிவுகளை ஆராய்வதும், இன்னும் எவ்வகையில் ஆராய்ச்சியைத் தொடர்ந்தால் பயன் தருவதாக அமையும் என்று காண்பதும் சுவை பயக்கும்.

இந் நூலின் முன்னைய அதிகாரங்களிலெல்லாம் ஏதேனும் ஒரு தனியான அறிகுறியை விளக்குவதே நமது பணியாக இருந்தது. எனவே, அதைத் தவிர வேறு வழியில் நோயாளியின் உள நிலையைத் துருவி ஆராய நாம் முற்படவில்லை. இதனால் பெரும்பாலான நோய் வரலாறுகளில் அறிகுறியின் உதயத்திற்கு உடனடியான காரணமாக இருந்த போராட்டம் ஓரளவு மிதமான தன்மையுடையதாகவும், அவற்றுள் இருந்த சிக்கல்கள் உள்ளத்தின் மேல்வாரியான தன்மைகளுடன் மட்டுமே தொடர்புடையனவாகவும் காணப்பட்டன.

ஆயினும் இன்னும் ஆழ்ந்த ஆராய்ச்சி செய்யப்பட்டபோதும், உள்ளத்தின் முழு நிலையின் தோற்றத்தை விளக்கும் வகையில் போதிய அளவில் ஆராய்ச்சி செய்யப்பட்டபோதும், இன்னும் அடிப்படையான தன்மைகொண்ட போராட்டம் இருப்பது காணப்பட்டது. இந்த அடிப்படையான போராட்டம் அவை தோற்றும் விளைவுகளுக்கு ஏற்றவண்ணம் முக்கியத்துவம்வாய்ந்த காரணிகளைக் கொண்டிருப்பதுடன் உள்ளத்தின் தலையாய இயக்கு சக்திகளாக விளங்கும் முதனிலையான பெரும் இயல்பூக்கங்களுக்கு (Great Primary Instincts) நம்மை இட்டுச் செல்வதாகவும் அமைகிறது. இவற்றுள் ஒரு முதநிலைஇயல்பூக்கம் மற்றொரு முதநிலை இயல்பூக்கத்திற்கு எதிராக அமைவதால் போராட்டம் எழலாம் என்றும், அல்லது இத்தகைய ஒரு இயல்பூக்கத்திநின்று எழும் விருப்பங்கள், உளப் போக்குகள் என்பன, நோயாளியின் சூழ்நிலை, வாழ்க்கை நிலை என்பனவற்றினின்று எழும் காரணிகளால் எதிர்த்துத் தடுக்கப்படும்போது போராட்டம் எழலாம் என்றும் நாம் கண்டோம். எனவே, உளக்கோளாற்றில் காணப்படும் எண்ணிறந்த நிகழ்ச்சிகளைத் தோற்றுவிப்பதற்குக் காரணமான அடிப்படையான காரணங்களை இவ் விருவகைப் போராட்டங்களில் காணமுடியலாம் என நாம் முடிவு செய்யலாம்.

சில வகை உளநோய்களைச் (mental diseases) சார்ந்த எல்லா நோய் வரலாறுகளின் மூல காரணத்தை, இப் பெரு இயல்பூக்கங்களில் ஒன்றான பால் இயல்பூக்கத்தோடு (Sex Instinct) தொடர்புடைய காரணிகளில் காணமுடியும் என பிராய்டு (Freud) கருதினர். பால் உந்துவின் அளவிடமுடியா வன்மையையும், அவற்றிற்கும் நாகரிகச் சமூகம் விதிக்கும் நடத்தை (Conduct) விதிகளுக்கும்

